Shakespeare's

# KING LEAR

# லீயர் அரசன்

மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகம்

---

தமிழாக்கம்: எஸ்.மகராஜன்

பழனியப்பா பிரதர்ஸ்

சென்னை - 14 | திருச்சி - 2 | சேலம் - 1

கோயமுத்தூர் -1 | மதுரை - 1

Shakespeare's

# KING LEAR

# லீயர் அரசன்

மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகம்

தமிழாக்கம்: எஸ்.மகராஜன்


| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| முதல் பதிப்பு | : | 1970 |
| பக்கம் | : | 362 |
| அளவு | : | டெம்மி 1 x 8 |
| தாள் | : | |
| பிரதிகள் | : | |
| வெளியீடு | : | பழனியப்பா பிரதர்ஸ்<br>சென்னை – 14 திருச்சி – 2<br>சேலம் – 1 கோயமுத்தூர் –1<br>மதுரை – 1 |
| அச்சாக்கம் | : | ஏஷியன் பிரிண்டர்ஸ், சென்னை–14. |
| விலை | : | ₹ 400/– |


# காணிக்கை

மறைந்து நானூறு ஆண்டுகள் ஆகியும்,
காலமும், மொழியும், இடமும் கடந்து
மானுடத்தின் வெற்றியெனத் திகழும்
அமர மகாகவி ஷேக்ஸ்பியருக்கு,
என்று முள தென் தமிழின் சார்பில்,
காணிக்கை.

# மதிப்புரை

அ. சீநிவாசராகவன்

முன்னுரை தருகிறேன் என்று சொல்லிய வாக்கைக் காப்பாற்றத்தான் வேண்டும். முன்னுரை அல்லது அறிமுகம் இல்லாமலேயே தங்கள் புத்தகங்களை வாசகருக்கு அறிமுகம் செய்யக்கூடிய தகுதிகொண்ட ஆசிரியர்களின் நூல்களுக்கு நான் முன்னுரை எழுதும் பழக்கத்தை நிறுத்தி விடுவது நலமென்று தீர்மானித்து சில நாட்கள் ஆகிவிட்டது. ஸ்ரீ மகராஜன் இத்தகைய முழுத் தகுதியுடைய ஆசிரியர்களில் ஒருவர். அவருடைய "ஹாம்லெட்" தமிழ் மொழி பெயர்ப்பு ஏற்கனவே தமிழ் மக்களுக்கு அறிமுகமாகி நன்கு பாராட்டப்பட்டிருக்கிறது.

ஒரு மொழியிலுள்ள ரத்தினம் ஒன்றை ஒளி குறையாமல் இன்னொரு மொழியில் பொருத்துவது எவ்வளவு கடினம் என்பதைப் பலமுறை நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஷேக்ஸ்பியரின் 'கிங் லீயர்' அவருடைய சோக நாடகங்களில் எல்லாம் தலைசிறந்த ஒன்று. ஆயினும் லீயர் நாடகத்தில் நமக்கு ஒரு சௌகரியம் என்னவென்றால், நம்முடைய மொழியில் வரும்போது அதன் இயல்பான அழகுகள் பலவும் நன்கு வெளிவரும் அம்சங்கள் பலகொண்ட ஒரு கதை அது. ஷேக்ஸ்பியரின் லீயர் நாடகம் ஒரு மகத்தான படைப்பு, ஆனால் கதையின் சோகம் ஆங்கிலேயச் சூழ்நிலையைச் சார்ந்து நிற்கிறது. என்றாலும் கதையில் பொதிந்துள்ள துராசைகளும் பாசங்களும் மனிதர் அனைவருக்கும் பொதுவான பாவச்சுமையும் துயரமும் ஆகும். ஸ்ரீ மகராஜனின் நூலைப் படித்ததன் பயனாக நம்முடைய கண்கள் கலங்கி, அந்தக் கண்ணீர், வினைப்பயனாக உள்ளங்களில் அமைந்து அல்லற்படுத்தும் துர்க்குணங்களைக் கழுவித் தீர்க்கும் என்பது என்னுடைய எண்ணம். சோகக் கதைகளின் நோக்கமே இதுதான்.

லீயருடைய புதல்வியரைப்போல அத்தனை கொடுமையும் இதயமற்ற தன்மையும் எந்த ஒரு மகளுக்காவது இருக்குமா என்று சகோதரிகள் சந்தேகிக்கலாம். துராசை என்பது மக்களை எவ்வளவு தூரம் கொண்டு தள்ளும் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள். இறைவன் நமது பெண்குலத்தை இத்தகைய பயங்கரப் பாவங்களிலிருந்து காப்பாற்றுவானாக; அம்பாளும் சீதையும் நம் அனைவருக்கும் எப்பொழுதும் காப்பும் காவலுமாக இருந்தருள்வார்களாக.

மகராஜன் அவர்களுடைய லீயர் நாடகம் தற்காலத் தமிழ்ப் படைப்புகளில் நல்ல மதிப்பும் ஸ்தானமும் பெற்ற ஒரு நூலாகும்.

**சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி**

சென்னை,
13–1–'65

# முன்னுரை

எஸ். மகராஜன்

நானூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர் நாடகாசிரியர் ஷேக்ஸ்பியர்; பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள இங்கிலாந்தில் பிறந்தவர். ஆனாலும் காலத்தாலும், இடத்தாலும் மானுடத்தாலும் நம்மோடு நெருங்கிய தொடர்புடையவர். மனித இதயமே அவருடைய நாடக மேடை. மனித இதயத்தில் துடிதுடிப்பு எதுவரையிலும் இருக்கிறதோ, அது வரையிலும் அவருடைய குரலுக்கு மனிதன் செவிசாய்த்து நிற்பான்.

மனித வாழ்க்கையின் அடிமுடியைத் தொடுவது எவ்வளவு அருமையோ அவ்வளவு அருமை ஷேக்ஸ்பியர். ஆனால், ஒருவகையில் கம்பர் செய்யாத காரியங்களையும் அவர் செய்து காட்டியிருக்கிறார். மனித வாழ்க்கையிலேயுள்ள சில்லறை விவகாரங்களில் நுழையாமல், அவற்றை அநாகரிகம் என்று ஒதுக்கிவிட்டு, பேருண்மைகளோடு விளையாடியவர் கம்பர். ஆனால், ஷேக்ஸ்பியர், வாழ்க்கையின் எந்தத் துறையையும் மட்டமானது என்று தள்ளவில்லை; சில்லறைக் காரியங்களிலும் துணிச்சலாடு புகுந்து, முக்குளித்து நிரந்தர தத்துவங்களைப் பொறுக்கி எடுத்தவர். லீயர் நாடகத்தில் வரும் எட்மன்ட் நெறி தவறிப் பிறந்தவன். அவனுடைய இதயத்தினுள் புகுந்து, நெறி தவறாது பிறக்கும் மக்கள் சமுதாயத்தை ஷேக்ஸ்பியர் பார்க்கும் முறையும் அவன்மூலமாக ஷேக்ஸ்பியர் நமக்குச் சூட்டுக்கோல் போடும் விதமும் மறக்க முடியாதவை.

நாடகப் படைப்பில் எப்படி ஷேக்ஸ்பியர் சிறந்து நிற்கிறாரோ, அப்படியே அவர் இயற்றிய சோக நாடகங்களில் மிகச் சிறந்து நிற்பது ‘லீயர் அரசன்’ என்ற நாடகம். கதை சாமானியமாக கதைதான்.

ஷேக்ஸ்பியர் கைக்கு வந்த பிறகு கதைக்கு புதிய ஓட்டம் பிறந்தது. பாத்திரங்களைப் புதிய வளர்ப்பிலே வார்த்தெடுத்தார் ஷேக்ஸ்பியர்; என்றுமில்லாத உணர்ச்சியையும் உயிர்ப்பையும் அந்தப் பாத்திரங்களுக்கு ஏற்றினார். ராமாயண பாத்திரங்களுக்குக் கம்பர் செய்த சேவையை, லீயர் நாடக பாத்திரங்களுக்கு ஷேக்ஸ்பியர் செய்தார். அதன் விளைவாக, உலக இலக்கிய தரத்தின் உச்ச வரம்பே உயர்ந்துவிட்டது.

ஆங்கில நாட்டு அரசன் லீயர் அரச தோரணையில் சிறந்து விளங்கினான். கிழட்டுப் பருவத்தில், அவனுக்கு முகஸ்துதியிலே அதிகப் பிரியம் ஏற்பட்டது; தற்பெருமையும், படபடப்பும் அதிகமாயிற்று. அவனுடைய மூன்று பெண் குழந்தைகளுள், மூத்த மக்கள், கானெரிலும், ரீகனும் பகட்டுக்காரிகள், உண்மையற்றவர்கள், வாயளவிலே அன்பு நிறைந்தவர்கள். ஆனால், கடைசி மகள் கார்டீலியா நற்குணங்களெல்லாம் ஒருங்கே வாய்ந்தவள்; இதயத்தை “வாய் வழியாகப் பிழிந்துகாட்டத்” தெரியாதவள்; உண்மை அன்பை, சொல்லிக்காட்டாமல், செய்து காட்டுகிறவள். ஆனால், அசட்டுத் தந்தையோ, கார்டீலியாவின் சீலத்தையும், அன்பையும் அறிந்துகொள்ளாமல், பசப்புக்காரிகளை நம்பி மோசம் போகிறான். தன் ராஜ்யத்தை இரண்டு பாகமாகப் பிரித்து, கானெரிலுக்கும், ரீகனுக்கும் கொடுத்துவிட்டு கார்டீலியாவை வெறுத்து ஒதுக்கிவிடுகிறான். சீதனமற்ற கார்டீலியாவின்

குண மேம்பாட்டை உணர்ந்த ப்ரெஞ்ச் அரசன் “நீயே எனக்குச் சீதனம்” என்று அவளை மனைவியாக ஏற்று, ப்ரான்ஸ் நாட்டுக்கு அழைத்துச் செல்லுகிறான். கொஞ்ச காலத்தில், கானெரிலும், ரீகனும் தந்தையைப் புறக்கணிக்கிறார்கள். அவர்களுடைய கொடுமையைத் தாங்கமாட்டாமல் அரசன் அவர்களைத் துறந்து, புயலில் அல்லலுற்று பைத்தியக்காரனாகி விடுகிறான். தந்தையைக் காப்பாற்ற, ப்ரெஞ்ச் படையோடு, கார்டீலியா இங்கிலாந்துக்கு வருகிறாள். போரில் ப்ரெஞ்ச் படை தோற்கிறது. லீயரும், காட்டீலியாவும் கைது செய்யப்படுகிறார்கள். கார்டீலியாவின் எல்லையற்ற அன்பையுணர்ந்த அன்புருவான காட்டீலியாவை மீண்டும் அடைந்து விட்ட உன்மத்தத்தில் சிறைச்சாலை போகிறோமே என்ற நினைப்பையும் மறந்துவிடுகிறான் லீயர். ஆனந்தக் களிப்பிலே காட்டீலியாவிடம் லீயர் பேசுகிறான்:

“வா, நாம் சிறைச்சாலைக்குப் போய்விடுவோம். கூண்டுக்குள்ளிருக்கும் பறவைகளைப்போல நாமிருவரும் தனித்திருந்து பாடுவோம். நீ என்னிடம் ஆசீர்வாதம் கேட்கும் போதெல்லாம், நான் மண்டியிட்டு உன்னிடம் மன்னிப்புக் கேட்பேன். தொழுதும், பாடியும், பழங்கதைகள் பேசியும், பசப்பும் வண்ணத்துப் பூச்சிகளைப் பார்த்து நகைத்தும், அரண்மனைச் செய்திகளைப் புல்லோர் சொல்லக் கேட்டும், யாருக்குத் தோல்வி, யாருக்கு வெற்றி, பதவியாருக்குக் கிடைத்தது, பதவியிழந்தவர் யார் என்று ஊர் வம்பு பேசியும் பேரண்டத்தின் அற்புதத்தையே நாம் மேற்கொண்டவர்களாய், இறைவனுடைய வேவுகாரர்களைப் போல் நாம் வாழ்க்கை நடத்துவோம்.”

இந்த எக்களிப்பில் சிறைச்சாலை போகும் லீயரையும் காட்டீலியாவையும் தூக்கிலிடும்படி கட்டளை போடுகிறான் சதிகார எட்மன்ட். க்ளாஸ்டர் என்ற பிரபுவுக்கு நெறி தவறிப் பிறந்தவன் எட்மன்ட். க்ளாஸ்டருடைய சொந்த மகன் எட்கார் மேல் வீண்பழி சுமத்தியும், தந்தை க்ளாஸ்டரைக் காட்டிக் கொடுத்தும் எட்மன்ட் பதவியேற்றம் பெறுகிறான். அவனிடத்தில் கானெரிலும், ரீகனும் கள்ளக்காதல் கொள்கிறார்கள். அதன்மூலம் அவர்களுக்கிடையில் பூசல் நிகழ்கிறது. மாறுவேடம் பூண்டுவரும் எட்கார் எட்மன்டுடைய சூழ்ச்சியை வெளியாக்கி, வாட்போரிட்டு அவனை வீழ்த்துகிறான். எட்காரின் சாகசங்களையும், தியாகத்தையும் உணர்ந்தபிறகு, எட்மன்ட் தன்னுடைய கட்டளையை ரத்துச் செய்து, லீயரையும் கார்டீலியாவையும் காப்பாற்றச் சொல்கிறான். எட்கார் அவனுடைய கட்டளையை நிறைவேற்ற விரைந்து செல்லுகிறான். அவன் போய்ச் சேர்வதற்குள் கார்டீலியா தூக்கிலிடப்பட்டு இறந்து போகிறாள். இதனால் லீயருக்குப் பைத்தியம் ஏறுகிறது. கானெரிலும், ரீகனும், கள்ளக் காதலன் எட்மன்டோடு ஒரு கணத்தில் சாகிறார்கள். கானெரிலுடைய கணவன் ஆல்பனி ராஜ்யத்தை லீயருக்குத் திரும்பிக் கொடுக்க விரும்புகிறான். ஆனால் சோக மேலீட்டால் லீயரும் இறக்கிறான்.

நாடகத்தில் இரண்டு கதைகளை ஷேக்ஸ்பியர் பின்னி முடிக்கும் விதம் அபூர்வமாக அமைந்திருக்கிறது. லீயருக்கு, அவனுடைய பெண் மக்களிடத்திலிருக்கும் உறவைப் பற்றிய கதையைப் பாவாகவும், க்ளாஸ்டருக்கும் அவருடைய ஆண்மக்களுக்கும் உள்ள உறவு பற்றிய கதையை ஊடாகவும் வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் செய்யும் நாடக நெசவு அற்புதமாக அமைந்திருக்கிறது. இரண்டு விதமான உறவுகளிலும் ஒரு பொதுத்தன்மையிருக்கிறது; கானெரிலும் ரீகனும் தந்தை லீயரிடம் காட்டுகிற கொடுமையோடு, எட்மன்ட் தன் தகப்பனிடம் காட்டுகிற கொடுமை போட்டி போடுகிறது. இந்தப் போட்டியின் மூலம் மனதிக்கொடுமையின் அகண்டாகாரத்தை எப்படியோ தொட்டுக் காட்டி விடுகிறார் ஷேக்ஸ்பியர். அதோடு நிற்கவில்லை. மனிதக் கருணையிருக்கிறதே, அது மனிதக் கொடுமையையும் வெல்ல வல்லது என்ற உண்மையையும், கல்நெஞ்சமும் உருகும் வண்ணம், நிலைநாட்டுகிறார்.

கருணையே வடிவெடுத்த காட்டீலியா அசோகவனச் சீதையை அடிக்கடி நினைவூட்டுகிறாள். நாடகத்தில் கார்டீலியா வரும் கட்டங்கள் மிகச் சில; கதைத் தொடக்கத்தில் ஒரு முறை வந்து போகிறாள். கதை முடிவில் இரண்டொரு தரம் காட்சியளிக்கிறாள், அவ்வளவுதான். நாடகத்தில் மிக மிக முக்கியமான பகுதிகளில் கார்டீலியா மேடையில் வருவதில்லை. ஆனாலும், ஷேக்ஸ்பியருடைய படைப்பு விசித்திரம் எப்படியிருக்கிறதென்றால், கார்டீலியா நம்முடைய கற்பனையிலே சதா வீற்றிருந்து, நாடகத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நடத்தித் தருகிறாள். அவளுடைய எல்லையற்ற அன்பும் அருளும், மெல்லிய பூங்காற்றைப் போல, நாடக மேடையிலே வீசிக் கொண்டேயிருக்கின்றன. அவளுடைய தெய்வீக அன்பு தொக்கி நிற்கிறது. புயலிலே தட்டுத் தடுமாறி, புலனும் மனமும் குழம்பி, லீயர் பித்துக் கொள்ளியாய் ஓலமிடும் போது, கார்டீலியாவின் இங்கிதமும், மென்மையும், பொறையும், அமைதியும் நினைவுக்கு வருகின்றன. இருளும், அவலமும், அலங்கோலமும் சூழ்ந்திருக்கும் போதெல்லாம் கார்டீலியாவின் கந்தர்வப் பேரொளி தன் பொன் கிரணங்களை வீசி மானுடத்தின் வெற்றியை வலியுறுத்துகிறது.

குற்றமற்ற கார்டீலியாவை ஈவு இரக்கமில்லாமல் ஷேக்ஸ்பியர் கொன்றுவிட்டாரே, அவளுடைய சாவினால் அறமே தோற்றுவிட்டதே, என்று சில ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் ஆற்றாமைப் படுகிறார்கள். கார்டீலியா கொலையுண்ட காரணத்தால் ஷேக்ஸ்பியரின் நாடகத் திறமையிலேயே ஒரு பழுது ஏற்பட்டு விட்டதாகவும் அவர்கள் குறை கூறுகிறார்கள். உண்மையில், குற்றம், குறை கூறுகிறவர்களிடம் தானிருக்கிறது. மனிதனுடைய ஆன்ம வரலாற்றிலே, சாவு என்பது மிகவும் அற்பமான நிகழ்ச்சியென்று கண்டவர் ஷேக்ஸ்பியர். கார்டீலியாவை உயிரோடு விட்டு வைத்திருந்தால், கொடுமையின் விஸ்வ ரூபத்தை வாசகர்கள் உணராமல் போய்விடுவார்கள். காட்டீலியா செத்தால்தான், வாசகர்களுடைய இதயத்திலே கொடுமையின் முத்திரை அழுத்தமாகப் பதியும்; அதன் விளைவாகப் பரிவுணர்ச்சியும் ஏற்படும். பரிவு ஏற்படும் போது, நம் இதயத்திலுள்ள மலம் நீங்குகிறது; நமக்குப் புனிதமான ஆன்ம உணர்வு ஏற்படுகிறது.

இந்த உண்மையை உணராமல் டேட் என்ற ஆங்கில நாடகாசிரியர், லீயர் நாடகத்தையே திருத்தி அமைத்தார். காட்டீலியாவுக்கும் லீயருக்கும் உயிர்ப்பிச்சை கொடுத்து, கார்டீலியாவை ஆங்கில நாட்டு அரசியாக்கி, நாடகத்தை மங்களமாக முடித்தார். ஷேக்ஸ்பியர் இறந்து சுமார் 20 ஆண்டுக்குள் நாடகம் இவ்வாறு திருத்தப்பட்டது. டேட்டின் நயங்கெட்ட சரக்கு ஷேக்ஸ்பியர் கவிதையோடு கலந்தது. இந்த அபத்த நாடகத்தையே சுமார் 150 ஆண்டுகளாக ஆங்கில மக்கள் கண்டு களித்தார்கள். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் தான் ஷேக்ஸ்பியர் எழுதிய அசல் லீயர் நாடகம் ஆங்கிலேயருக்கு மறுபடியும் கிடைத்தது. கலையுணர்வற்றவர்கள் பாடிச் சேர்த்த இடைச் செருகலால், கம்பனைப் போல், ஷேக்ஸ்பியரும் அல்லலுற்றார்.

டாக்டர் ஜான்ஸன் போன்ற ஆங்கிலப் புலவர்கள் ஷேக்ஸ்பியர் மேல் இன்னொரு குற்றத்தையும் சாட்டினார்கள். லீயர் நாடகத்தில் க்ளாஸ்டருடைய கண்களைப் பிடுங்கும் நிகழ்ச்சியொன்று நடக்கிறது. ‘‘ஆங்கில கிருஸ்தவ சமுதாயத்திலே இப்படி ஒரு கொடுமையும் நடக்குமா? இப்படி நடந்ததாக ஷேக்ஸ்பியர் சொல்லுவது கிறிஸ்துவ சமுதாயத்திலே இப்படி ஒரு கொடுமையும் நடக்குமா? இப்படி நடந்ததாக ஷேக்ஸ்பியர் சொல்லுவது அஞ்ஞானிகளாய், அநாகரிகமாய் இருந்த காலத்திலேதான் இப்பேர்ப்பட்ட கொடுமை நடந்திருக்கக்கூடும்‘‘ என்று இந்தப் புலவர்கள் சொல்லுகிறார்கள். ஹிரோஷிமாவில் அணுகுண்டு போட்ட கொடுமைக்கு ஈடாகாது ஒரு மனிதனுடைய கண்ணைப் பிடுங்கும் கொடுமை. கொடுமையென்பது எல்லாச் சமயங்களுக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொதுவானது;

காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கும் அநாதியான தத்துவம். அதைப் போலவே அநாதியாக இருப்பது கருணை. கொடுமையில்லையென்றால். கருணையின் பெருமையை நம்மால் உணர முடியாது. இரண்டு தத்துவங்களுக்கும் இடையே நடந்துவரும் போரில் கொடுமை தோல்வியடைகிறதே யொழிய, அழிந்து போவதில்லை. அழிந்து போயிற்று என்றால், கருணை, தன் வல்லமையைக் காட்ட வாய்ப்புக் கிடைக்காமல், ஏங்கியே செத்துவிடும். இந்த உண்மையையுணர்ந்தே, ஷேக்ஸ்பியர் அவருக்கேயுரிய துணிச்சலோடு நாடகத்தில் பல இடங்களில், கொடுமையின் உண்மை உருவத்தைப் பூதக் கண்ணாடி வைத்துக் காட்டியிருக்கிறார்.

ஷேக்ஸ்பியரைப் பற்றி ஆங்கில ஆராய்ச்சியாளர்கள் கத்தை கத்தையாய் எழுதியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் படிக்கும் போது, ஷேக்ஸ்பியரின் ஞான ஒளியை அவர்கள் முற்றிலும் கண்டு கொண்டார்களா என்ற சந்தேகம் பிறக்கிறது. அவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. தமிழர்களாகிய நாம் ஷேக்ஸ்பியரை உணர்ந்து அனுபவிப்பதற்குரிய பண்பாடும் அருகதையும் பெற்றிருக்கிறோம். திருமூலர், கம்பன் பரம்பரையில் வந்த நமக்கு ஷேக்ஸ்பியரின் ஆன்ம லக்ஷியங்கள் எளிதில் விளங்கிவிடும்.

கடைசியாக, மொழிபெயர்ப்பைப் பற்றி இரண்டொரு சொல். ஒரு மொழியிலுள்ள கவிதையை இன்னொரு மொழியில், அதுவும் வசனத்தில், எடுத்துச் சொல்வது முடியாத காரியம்; மொத்தத்தில், மொழிபெயர்ப்பு என்பதே, பொன்னைச் செம்பாக்கும் அரிய கலைதான். இருந்தபோதிலும், ஆங்கிலம் தெரியாத தமிழர்களுக்கு, ஷேக்ஸ்பியரின் மாபெரும் கலையையும், நாடகத் திறமையையும், உள்ளப் பாங்கையும், அறிவுப் பெருக்கத்தையும், ஒரு வகையாகவாவது காட்ட வேண்டும் என்ற ஆசையால் இந்த மொழி பெயர்ப்பில் ஈடுபட்டேன். மொழி பெயர்க்கும்போது, பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது. வாக்கிய அமைப்பு முறையிலே, ஆங்கிலமும் தமிழும் முற்றிலும் வேறுபட்டவை. தமிழ் மொழியமைப்பு இயல்பானது. 'நேற்று சென்னையிலிருந்து வந்த மனிதனை இன்று காலையில் பார்த்தேன்'' என்று தமிழில் சொல்லுவோம். முன் நடந்ததை முன்னும், பின் நடந்ததைப் பின்னும் வாக்கியம் சொல்லுகிறது. ஆனால், ஆங்கிலம் இப்படி இயல்பாகப் பேசாது. ''இன்று காலையில் பார்த்தேன், சென்னையிலிருந்து நேற்று வந்த மனிதனை'' என்றுதான் ஆங்கிலம், இயல்பு மாறிப் பேசும். ஆகவே, தமிழ் மொழி பெயர்ப்பிலே, ஆங்கில வாக்கியங்கள் முன்னால் சொல்வதைப் பின்னாலும், பின்னால் சொல்வதை முன்னாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. இதைப் போலவே, ஆங்கில மொழி மரபுக்கேயுரிய சில சொற்றொடர்களை, அப்படி, அப்படியே நேருக்கு நேர் தமிழில் கொடுத்தால், தமிழ் மொழி மரபு கெட்டுவிடும். கூடிய மட்டிலும், தமிழ் மரபுக் கெடுக்காமலும், அதே சமயத்தில், ஷேக்ஸ்பியருடைய கற்பனை விசித்திரங்களையும் மொழி வெளியீட்டு முறைகளையும், ஆங்கிலம் தெரியாத தமிழரும் ஓரளவு இனம் கண்டு கொள்ளும் வகையில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது.

மனைவி வேண்டும் என்று தவமிருக்கிறவன் முன் அவனுடைய இஷ்ட தேவதை தோன்றி ''உனக்கு அழகுள்ள மனைவி வேண்டுமா? அல்லது உண்மையுள்ள மனைவி வேண்டுமா? அழகிருந்தால் உண்மை இருக்காது, உண்மையிருந்தால் அழகிருக்காது'' என்று சொன்னால், அவனுக்கு எவ்வளவு திகைப்பு ஏற்படும்! அதே திகைப்பு மொழி பெயர்க்கிறவனுக்கும் ஏற்படுகிறது. மூலத்திலுள்ளதை உண்மையோடு மொழி பெயர்க்க முயலும் போது, அழகு குன்றி விடுகிறது; மொழி பெயர்ப்பை அழகுபடுத்த முயலும் போது, உண்மை மங்கி விடுகிறது. மூலத்திலுள்ள உண்மைக்கும் அழகுக்கும் அதிகச் சிதைவு ஏற்படாமல் பாதுகாப்பதற்காக நான் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. மொத்தத்தில், மூலத்திலுள்ள விஷயத்தில் 99 சதவிகிதமும்,

ஷேக்ஸ்பியருடைய உணர்ச்சி வளத்தில் 50 சதவிகிதமும், அவருடைய கவிதையின் நிழலில் 20 சதவிகிதமும், மொழி பெயர்ப்பினுள் இறங்கிவிட்டன என்று நம்புகிறேன்.

ஆங்கிலம் அவ்வளவாகத் தெரியாதவரும், ஆனால் தமிழறிவிலும் ரஸனையிலும் மிகச் சிறந்தவருமான எனது நண்பர் வித்வான் ல. ஷண்முகசுந்தரம் அவர்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பை நான்கு நாட்களாக நானே வாசித்துக் காட்டினேன். அவர்கள் ஷேக்ஸ்பியரின், கலை நுணுக்கங்களையும், மேதா விலாசத்தையும் மொழி பெயர்ப்பின் மூலம் உணர்ந்து பரவசம் அடைந்ததை நான் பார்த்த போது, மொழி பெயர்ப்பினால் கூட தமிழுக்குச் சிறந்த பணியாற்ற முடியும் என்று தெரிந்து கொண்டேன். மொழி பெயர்ப்பைக் கேட்டு ஒரு வாரத்துக்குப் பின் தென்காசியிலிருந்து வித்வான் ல. ஷண்முகசுந்தரம் ஒரு கடிதம் எழுதினார்கள். அதை அட்டையில் அச்சிட்டிருக்கிறது.

கடிதம் சொல்லுவதெல்லாம் பொருத்தமா இல்லையா என்பதைத் தமிழ் மக்கள் தீர்ப்புக்கு விட்டு விடுகிறேன். இந்த மொழி பெயர்ப்பால் மற்றவர்களுக்குப் பலன் ஏற்படுகிறதோ இல்லையோ, எனக்குக் கைமேல் பலன் கிடைத்திருக்கிறது.

ஷேக்ஸ்பியருடைய கையைப் பிடித்துக் கொண்டு 'இறைவனுடைய வேவுக்காரனை'ப்போல், நானும் பல மாதங்கள் மனித உலகத்தைச் சுற்றி வந்தேன்; மக்களுடைய சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும், செயல்களையும் சுண்டிப் பார்த்து அனுபவித்தேன். "மனிதன் என்ற தத்துவந்தான் என்ன வேலைப்பாடு நிறைந்தது! அவனுடைய பகுத்தறிவின் மாட்சிதான் என்ன! அவனுடைய அறிவுத்திறன் எப்படி எல்லையற்று நிற்கிறது! உருவத்திலும் இயக்கத்திலும் என்ன சிறப்பு! செயலிலே கந்தர்வனைப் போன்றிருக்கிறானே! உணர்விலே தெய்வத்தை ஒத்திருக்கிறானே! உலகத்திற்கோரழகு! மிருக இனத்தின் வெற்றி! என்ற ஷேக்ஸ்பியர் வாக்கை உணர்ந்தேன். இந்தப் பேறு ஷேக்ஸ்பியரை மொழி பெயர்த்ததால் எனக்குக் கிட்டியது.

மொழி பெயர்ப்பின் மூலம் நான் கண்ட உண்மைகள் பின் வருமாறு: ஒன்று, நிரந்தர தத்துவங்களைப் பற்றிச் சொல்லும் சக்தி ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழுக்கு அதிகமாயிருக்கிறது. ஆனால் வாழ்க்கையைப் பற்றிய சாமானிய உண்மைகளை, ஆங்கிலம் தமிழைக் காட்டிலும் அதிக நுணுக்கத்தோடு பேசவல்லது. தமிழ்ச் சொற்கள் பல ஆள்வார் அற்றுத் தூர்ந்து போய்விட்டன. இந்த அவல நிலைக்குக் காரணம், பிற்காலத் தமிழர்கள் ஆழ்ந்து சிந்திக்கும் தொழிலை

விட்டு விட்டார்கள்; அல்லது சிந்தித்தாலும், தங்கள் சிந்தனையை வளமான தமிழில் சொல்லிப் பழக மறந்து விட்டார்கள்.

மொழி பெயர்ப்பின் மூலம் நான் கண்ட இன்னொரு உண்மை பின் வருமாறு: ஷேக்ஸ்பியரைத் தமிழில் மொழி பெயர்ப்பவனுக்குத் தேவையான குணங்கள் மூன்று. முதலாவதாக. மொழி பெயர்ப்பவன் தமிழ் இலக்கியத்திலுள்ள அருமைகளையெல்லாம் தன்னை மறந்து அனுபவித்திருக்க வேண்டும், தமிழ்மரபையும் தெரிந்திருக்கவேண்டும் இரண்டாவதாக, ஷேக்ஸ்பிய நடைய கவி நலத்திலும், ஆங்கில இலக்கியத்திலும் ஊடாடித் திளைத்திருக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, ஷேக்ஸ்பியருடைய இதயத்தோடு ஒட்டி, அவரோடு அவருடைய பாத்திரங்களுக்குள் புகுந்து, "நான்" அற்ற அத்வைத நிலையை அடைய வேண்டும். அப்படிக் கரைந்து விட்டால், போதும். அதற்கு மேல் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. மொழி பெயர்ப்பவனுடைய உள் மனசு மற்ற காரியங்களைச் சாதித்துவிடும்; ஷேக்ஸ்பியருடைய பாவங்களைத் தமிழ் மொழியிலே பூர்ணமாகத் தேக்கிவிடும்; அவருடைய கவிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லைப்

பொறுக்கித் தந்துவிடும்; விண்ணுக்கும் மண்ணுக்கும் அவர் போடும் பாலத்துக்குச் சொல்லுவரும் கொடுத்துவிடும்.

சாமானிய மக்களுக்கு எட்டாக் கனியாக இருப்பது கவிதை. ஆகவேதான், விளையாட்டுக்காகக் கூட நான் கவிதை எழுதுவது கிடையாது. ஷேக்ஸ்பியரோ தம் நாடகத்தை முழுக்க முழுக்க கவியாகவே எழுதியிருக்கிறார் blank verse என்ற எளிய, அகவற்பாவைப் போன்ற பாவினத்தில் எழுதியிருக்கிறார். ஆனால், மொழி பெயர்ப்பை வசனத்திலேயே எழுதும்படி நேர்ந்துவிட்டது. அதற்குக்

காரணங்கள் பல. ஒன்று, கவிதையிடத்தில், அதிலும், ஷேக்ஸ்பியருடைய கவிதையிடத்தில், எனக்கிருக்கும் பக்தி; இரண்டு, இயல்பாகக் கவிதை எழுதும் ஆற்றல் எனக்கு இல்லை; மூன்று, ஆற்றல் இருப்பதாக வைத்துக் கொண்டாலும், எதுகைக்கும் மோனைக்கும் கட்டுப்பட்டுச் செய்யுள் எழுதும்போது, மூலத்தை விட்டு மொழி பெயர்ப்பு இன்னும் விலகிப் போய் விடுமே என்ற கவலை. விதிவிலக்காக, சிற்சில இடங்கிளில், ஷேக்ஸ்பியர் எழுதிய இசைப் பாடல்களை, பாடல் உருவத்திலேயே மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறேன். இப்பாடல்களில் பல சிறந்த ரஸிகரும் எனது அருமை நண்பரும் கவிஞருமான இராம. கோபிநாதன் அவர்கள் எழுதியவை. எஞ்சிய பாடல்களை எழுதிய குற்றம் என்னையே சார்ந்தது. என்னோடு கூடவே இருந்து, அச்சுப் பிழைகளைத் திருத்தியும், மொழி பெயர்ப்பிலேயே சில சிணுக்குகளைக் கண்டுபிடித்து நீக்கியும், தெம்மாங்கு, நொண்டிச் சிந்து மெட்டுகளில் சில அரிய இசைப் பாடல்களை எழுதி உதவியும், என்னையும் சில இசைப் பாடல்களை எழுதத் தூண்டியும் எனக்கு இடையறாது இலக்கியத் தோழமை நல்கிய நண்பர் கோபிநாதனுக்கு என் அன்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மொழி பெயர்ப்பைச் செய்யும்படி பல முறைகள் வற்புறுத்திய என் நண்பரும் திருப்பூர் வழக்கறிஞருமான திரு. ராஜம் அய்யர் அவர்களுக்கு என் நன்றி.

என்னுடைய 'ஹாம்லெட்' மொழி பெயர்ப்பைப் படித்துவிட்டு, ராஜாஜி, "இது ஒரு அரிய சாதனை" என்று சொல்லிப் பாராட்டியதோடு. "உங்கள் அடுத்த பதிப்புக்கு நானே மதிப்புரை எழுதுவேன்" என்று பரிவோடும் அன்போடும் சொன்னார்கள்.

சொன்னபடியே, "லீயர் அரசனு"க்கு மதிப்புரை தந்தருளியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய அஞ்சலி.

நூலை அரங்கேற்றுவதற்குக் கனிவுடன் இசைந்த நமது முதலமைச்சர், உயர்திரு எம். பக்தவத்ஸலம் அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

**எஸ். மகராஜன்**

Shakespeare's

# KING LEAR

## Persons Represented

| | |
|---|---|
| LEAR | King of Britain |
| King of France | |
| Duke of Burgundy | |
| Duke of Cornwall | |
| Duke of Albany | |
| Earl of Kent | |
| Earl of Gloster | |
| EDGAR | Son to Gloster |
| EDMUND | Bastard son to Gloster |
| Curan | A courtier |
| Old Man | tenant to Gloster |
| Physician | |
| Fool | |
| Oswald | Steward to Goneril |
| An Officer employed by Edmund | |
| Gentlemen attendant on Cordelia | |
| A herald | |
| Servants to Cornwall | |
| Goneril, Regan, Cordelia | Daughters to Lear |
| Knights attending on the King, Officers, Messengers, Soldiers and Attendants | |

Scene- Britain

# லீயர் அரசன்

மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றிய நாடகம்

## நாடகப் பாத்திரங்கள்

| | |
|---|---|
| லீயர் | ப்ரிட்டிஷ் அரசன் |
| ப்ரெஞ்ச் அரசன் (ப்ரான்ஸ்) | |
| பர்கண்டி கோமகன் | |
| கார்ன்வால் கோமகன் | |
| ஆல்பனி கோமகன் | |
| கென்ட் பிரபு | |
| க்ளாஸ்டர் பிரபு | |
| எட்கார் | க்ளாஸ்டர் பிரபுவின் மகன் |
| எட்மன்ட் | க்ளாஸ்டர் பிரபுவின் பரத்தை மகன் |
| க்யூரான் | ஆஸ்தானப் பிரபு |
| கிழவன் | க்ளாஸ்டர் பிரபுவின் பண்ணையாள் |
| மருத்துவர் | |
| கோமாளி | |
| ஆஸ்வால்ட் | கானெரிலின் காரியஸ்தன் |
| எட்மன்டிடம் வேலை பார்க்கும் அதிகாரி | |
| கார்டீலியாவுக்குப் பணிசெய்யும் கனவான் | |
| தூதன் | |
| கார்ன்வாலின் பணியாட்கள் | |
| கானெரில் ரீகன் கார்டீலியா | லீயரின் பெண் மக்கள் |
| லீயர் அரசனின் போர் வீரர்கள், அதிகாரிகள், ஏவலாளர்கள், படை வீரர்கள், பணியாட்கள் | |

களம் : ப்ரிட்டன்

## ACT I

SCENE I. King Lear's palace.
Enter KENT, GLOUCESTER, and EDMUND

**KENT :** I thought the king had more affected the Duke of Albany than Cornwall.

**GLOUCESTER** : It did always seem so to us : but now, in the division of the kingdom, it appears not which of the dukes he values most; for equalities are so weighed, that curiosity in neither can make choice of either's moiety.

**KENT :** Is not this your son, my lord?

**GLOUCESTER :** His breeding, sir, hath been at my charge : I have so often blushed to acknowledge him, that now I am brazed to it.

**KENT :** I cannot conceive you.

**GLOUCESTER :** Sir, this young fellow's mother
could : whereupon she grew round-wombed,
and had, indeed, sir, a son
for her cradle ere she had a husband for her bed.
Do you smell a fault?

**KENT :** I cannot wish the fault undone, the issue of it being so proper.

**GLOUCESTER :** But I have, sir, a son by order of law, some year





## அங்கம் I
## காட்சி 1

லீயர் : அரசன் அரண்மனை
[கென்ட், க்ளாஸ்டர், எட்மன்ட் வருகிறார்கள்]

**கென்ட்:** கார்ன்வால் கோமகனைக் காட்டிலும் ஆல்பனி கோமகனிடம் அரசருக்கு அன்பு அதிகம் என்று நினைத்தேன்.

**க்ளாஸ்டர்:** நமக்கும் அப்படியேதான் பட்டது. ஆனால், இப்போது அவர் நாட்டைப் பங்கு போடும் முறையைப் பார்க்கும்போது எந்தக் கோமகனை மேலாக மதிக்கிறார் என்று புலப்படவில்லை. சமன் செய்து சீர் தூக்கிச் செய்த இப்பிரிவினையில், பங்குக்குப் பங்கு இம்மிக்கூட வேறுபாடு இல்லை, ஓரவஞ்சகமும் இல்லை.

**கென்ட்:** பிரபு, இது உம்முடைய மகன் அல்லவா.

**க்ளா:** இவனை வளர்க்கும் பொறுப்பு என்னிடம் இருந்து வருகிறது. இவனை மகன் என்று கூறும்போதெல்லாம், கூசிக் கூசி, இப்போது கூச்சமே அற்றுப்போய் விட்டது.

**கென்ட்:** தங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லையே,

**க்ளா:** இந்தச் சின்னப் பையனுடைய தாயாருக்குப் புரியும் ஐயா........... விளைந்ததென்ன? அவளுடைய வயிறு உருண்டு பருத்தது; படுக்கைக்கு ஒரு புருஷன் கிடைப்பதற்கு முன், அவள் தொட்டிலுக்கு ஒரு பையன் கிடைத்துவிட்டான். குற்றத்தைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா?

**கென்ட்:** குற்றத்தின் விளைவு இவ்வளவு நேர்த்தியாக இருக்கும்போது, குற்றம் என்று அதைக் குறைகூறமாட்டேன்.

**க்ளா:** ஆனால், ஐயா, சட்டபூர்வமாகப் பிறந்த பையன் ஒருவனும்

elder than this, who yet is no dearer in my account : though this knave came something saucily into the world before he was sent for, yet was his mother fair; there was good sport at his making, and the whoreson must be acknowledged. Do you know this noble gentleman, Edmund?

**EDMUND :** No, my lord.

**GLOUCESTER :** My lord of Kent : remember him hereafter as my honourable friend.

**EDMUND :** My services to your lordship.

**KENT :** I must love you, and sue to know you better.

**EDMUND :** Sir, I shall study deserving.

**GLOUCESTER** : He hath been out nine years,
and away he shall
again. The king is coming.

Sennet. Enter KING LEAR,
CORNWALL, ALBANY, GONERIL,
REGAN, CORDELIA, and Attendants

**KING LEAR :** Attend the lords of France and Burgundy, Gloucester.

**GLOUCESTER :** I shall, my liege.







எனக்குண்டு. இவனைக் காட்டிலும் சுமார் ஓர் ஆண்டு மூத்தவன் அவன். ஆனால், இவனைக் காட்டிலும் எனக்கு உகந்தவன் என்று சொல்ல முடியாது. வாவென்று அழைப்பதற்கு முன் இந்த அயோக்கியன் கள்ளத்தனமாக உலகத்துக்குள் வந்து சேர்ந்து விட்டான். என்றாலும், இவனை உண்டாகும் போது நடந்த காதல் கேளிக்கைகள் மனோகரமாயிருந்தன; அப்போது இவன் தாயும் அழகாயிருந்தாள். ஆகவே, கள்ளப்பிள்ளையைச் சொந்தபிள்ளை யென்று ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். தன்மையில் மிக்க இந்தப் பிரபுவை உனக்குத் தெரியுமா?

**எட்மன்ட்:** தெரியாது, பிரபு.

**க்ளா:** இவர் கென்ட் பிரபு, என் அருமை நண்பர் என்று நினைவிலிருத்திக் கொள்.

**எட்ம:** அடியேன், பிரபு.

**கென்ட்:** நான் உன்னோடு பழகி உறவாட விரும்புகிறேன்.

**எட்ம:** தங்கள் அன்புக்கு பாத்திரனாக நடப்பேன், பிரபு.

**க்ளா:** ஒன்பது ஆண்டுகளாக வெளி நாடுகளில் இருந்தான். மறுபடியும் போகப் போகிறான், அதோ, அரசர் வருகிறார்.

[பணியாள் கிரீடத்தைத் தாங்கிவர, லீயர் அரசர்,
கார்ன்வால், ஆல்பனி, கானெரில், ரீகன்,
கார்டீலியா, ஏவலாளர் வருகை]

லீயர் : ப்ரான்ஸ் பிரபுவையும் பர்கண்டி பிரபுவையும் கவனித்துக்கொள், க்ளாஸ்டர்.

**க்ளா:** அப்படியே, அரசே.

Exeunt GLOUCESTER and EDMUND

**KING LEAR :** Meantime we shall express our
darker purpose. Give me the map there.
Know that we have divided
In three our kingdom : and 'tis our fast intent
To shake all cares and business from our age;
Conferring them on younger strengths, while we
Unburthen'd crawl toward death. Our son of Cornwall,
And you, our no less loving son of Albany,
We have this hour a constant will to publish
Our daughters' several dowers, that future strife
May be prevented now. The princes, France and Burgundy,
Great rivals in our youngest daughter's love,
Long in our court have made their amorous sojourn,
And here are to be answer'd. Tell me, my daughters,--
Since now we will divest us both of rule,
Interest of territory, cares of state,--
Which of you shall we say doth love us most?
That we our largest bounty may extend
Where nature doth with merit challenge. Goneril,
Our eldest-born, speak first.

**GONERIL :** Sir, I love you more than
words can wield the matter;
Dearer than eye-sight, space, and liberty;
Beyond what can be valued, rich or rare;
No less than life, with grace, health, beauty, honour;
As much as child e'er loved, or father found;
A love that makes breath poor, and speech unable;
Beyond all manner of so much I love you.





லீயர் : இனி, நமது உள்ளக்கிடக்கையை வெளியிடப் போகிறோம். நம் நாட்டின் படத்தைக் கொடுங்கள். நம் ராஜ்ஜியத்தை மூன்று பங்காகப் பிரித்திருக்கிறோம், தெரியுமா? கவலைகளையும், தொல்லைகளையும் நமது முதுமையினின்றும் உதறித் தள்ளிவிடத் தீர்மானித்திருக்கிறோம். இளமையில் முதுகிலே அவைகளைச் சுமத்திவிட்டு, சாவை நோக்கிக் கவலையற்று நாம் ஊர்ந்து செல்வோம்.

கார்ன்வால் மருமகனே, அன்பிலே அவருக்கு இளைக்காத ஆல்பனியே, நமது பெண் மக்களுக்குரிய சீதனத்திதை இப்போதே நிர்ணயம் செய்யப் போகிறோம், பிற்காலத்தில் சண்டை ஏற்படாவண்ணம். ப்ரான்ஸ், பர்கண்டி இளவரசர்கள் நமது கடைக்குட்டி மகளின் காதலைப் பெறுவதற்காக, போட்டி போட்டுக் கொண்டு, நமது அரண்மனையில் நெடுங்காலமாகத் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும் முடிவைத் தெரிவிக்க வேண்டும்.

அரசையும் நாட்டையும் அரசியல் கவலைகளையும் நாம் துறக்கப் போகிறோம். ஆகையால், மக்களே, உங்களில் நம்மிடம் மிகுந்த அன்பு கொண்டவள் யார் என்று சொல்லுங்கள். அன்பு வளத்திலே மிகுந்தவளுக்கே கொடை வளமும் கிடைக்கப்போகிறது. நமது மூத்த மகள் கானெரில் முதல் பேசட்டும்.

**கானெ:** அப்பா, தங்களிடத்தில் எனக்கு இருக்கும் அன்பு சொல்லினால் இயம்ப முடியாதது; கண்ணையம், விண்ணையும், வீடு பேற்றையும்விட விலை மதிப்புடையது; விலை கடந்து நிற்பது, அரியது, வளம் மிக்கது; அருளும், நலமும், அழகும், மானமும் நிறைந்த வாழ்க்கையிருக்கிறதே, அதன் தரத்துக்குக் குறைந்ததல்ல என் அன்பு. குழந்தை தந்தைக்கு எவ்வளவு அன்புகாட்ட முடியுமோ, அவ்வளவு அன்பையும் நான் உங்களிடம் வைத்திருக்கிறேன். தந்தைக்கு எவ்வளவு அன்பு கிட்டுமோ. அவ்வளவு அன்பும் தங்களுக்கு என் மூலம் கிட்டுகிறது. பேச்சையும், மூச்சையும் திணறடிக்கும் அன்பு எனதன்பு. எல்லாவற்றையும் கடந்து நிற்பது அது.

**CORDELIA :** [Aside] What shall Cordelia do?
Love, and be silent.

**LEAR :** Of all these bounds, even from this line to this,
With shadowy forests and with champains rich'd,
With plenteous rivers and wide-skirted meads,
We make thee lady : to thine and Albany's issue
Be this perpetual. What says our second daughter,
Our dearest Regan, wife to Cornwall? Speak.

**REGAN** : Sir, I am made
Of the self-same metal that my sister is,
And prize me at her worth. In my true heart
I find she names my very deed of love;
Only she comes too short : that I profess
Myself an enemy to all other joys,
Which the most precious square
of sense possesses;
And find I am alone felicitate
In your dear highness' love.

**CORDELIA** : [Aside] Then poor Cordelia!
And yet not so; since, I am sure, my love's
More richer than my tongue.

**KING LEAR :** To thee and thine hereditary ever
Remain this ample third of our fair kingdom;
No less in space, validity, and pleasure,
Than that conferr'd on Goneril. Now, our joy,
Although the last, not least; to whose young love
The vines of France and milk of Burgundy







**கார்டீ:** [தனக்குள்] காட்டீலியா என்ன செய்வாள்! அன்பைச் செலுத்துவாள், ஆனால் அதை விளம்பரப்படுத்தாமல், வாய்மூடி நிற்பாள்.

லீயர் : இதோ தெரிகிறதே, இந்த கோட்டிலிருந்து அந்தக் கோடுவரை, இவையிரண்டுக்கும் இடையிலே உள்ள நிழல் தரு வனங்களையும், வளம் நிறை வெளிகளையும், செழித்த ஆறுகளையும், பரந்த புல்லாந்தரிசுகளையும் உனக்கு நன்கொடையாகத் தருகிறேன்.

நமது இரண்டாவது மகளும், கார்ன்வாலின் மனைவியுமான நமது அன்புமிக்க ரீகன் என்ன சொல்லுகிறாள்? வாய்திறந்து பேசு.

**ரீகன்:** ஒரே வார்ப்பிலே வார்க்கப்பட்டவர்கள் அக்காளும், நானும்; அவளைப்போலவே என்னையும் மதியுங்கள். என்னுடைய இதயத்தின் அந்தரங்கத்திலிருக்கும் அன்புக்கே நாமரூபம் கொடுத்து அவள் வெளியிட்டுவிட்டாள். ஆனால், என் அன்பின் முழுமையையும் வெளியிடத் தவறிவிட்டாள். புலன்கள் தரும் அரிய இன்பங்கள் எல்லாவற்றிற்கும் எதிரி நான். ஆனால், அருமைத் தந்தையே, எனக்கு இன்பம் தருவது தங்கள் பால் வைத்திருக்கும் அன்பு ஒன்றே.

**கார்டீ:** [பராக்குப்பார்த்து] அப்படியானால், கார்டீலியா ஒரு ஏழை. ஏழையென்று சொல்வதற்குமில்லை, ஏனென்றால் என்னுடைய நாநலத்தைக் காட்டிலும் என் அன்பின் நலம் வளமானது.
லீயர் : உனக்கும், உனக்கு உற்றவர்களுக்கும் நமது வளநாட்டில் மூன்றில் ஒரு பங்கை பரம்பரைச் சொத்தாகக் கொடுத்திருக்கிறேன். கானெரிலுக்குக் கொடுத்த பங்கைக்காட்டிலும் உனக்குக் கொடுத்த பங்கு, விரிவிலோ, மதிப்பிலோ, எழிலிலோ குறைந்ததல்ல:

என் இன்பமே, நீ கடைக்குட்டி மகளாயிருந்தாலும், அன்பிலே கடைக்குட்டியல்லவே. உன் காதலைப் பெறுவதற்காக ப்ரான்ஸ் நாட்டின் திராக்ஷைக் கொடிகளும், பர்கண்டி நாட்டின் பாலும் போட்டி போடுகின்றனவே. உன் தமக்கையரைக் காட்டிலும்

Strive to be interess'd; what can you say to draw
A third more opulent than your sisters? Speak.

**CORDELIA :** Nothing, my lord.

**KING LEAR :** Nothing!

**CORDELIA :** Nothing.

**KING LEAR :** Nothing will come of nothing : speak again.

**CORDELIA :** Unhappy that I am, I cannot heave
My heart into my mouth : I love your majesty
According to my bond; nor more nor less.

**KING LEAR :** How, how, Cordelia! mend your speech a little,
Lest it may mar your fortunes.

**CORDELIA :** Good my lord,
You have begot me, bred me, loved me : I
Return those duties back as are right fit,
Obey you, love you, and most honour you.
Why have my sisters husbands, if they say
They love you all? Haply, when I shall wed,
That lord whose hand must take my plight shall carry
Half my love with him, half my care and duty :
Sure, I shall never marry like my sisters,
To love my father all.

**KING LEAR :** But goes thy heart with this?







வளமான பங்கை அடித்துக் கொண்டு போவதற்கு, நீ என்ன சொல்லப் போகிறாய்? பேசு.

**காட்டீ:** ஒன்றுமில்லை, பிரபு.

**லீயர் :** ஒன்றுமில்லையா!

**காட்டீ:** ஒன்றுமில்லை.

லீயர் : நீ "ஒன்றுமில்லை" யென்றால், உனக்கும் ஒன்றுமில்லைதான். மறுபடியும் சொல்.

**காட்டீ:** என் இதயத்தை வாய்வழியாகப் பிழியும் சக்தி எனக்கில்லை, வருந்துகிறேன். மன்னர் பிரானிடத்திலே அன்பு செலுத்துகிறேன். தந்தைக்குரிய அன்பு அது; கூடவுமில்லை, குறையவுமில்லை.

**லீயர் :** என்ன கார்டீலியா, என்ன? கொஞ்சம் எச்சரிக்கையாகப் பேசு; இல்லையென்றால், பெருஞ்செல்வத்தை இழந்துவிடுவாய்.

**காட்டீ:** நல்லது, பிரபு. நீங்கள் என்னைப் பெற்றெடுத்து, வளர்த்து, நேசித்து வருகிறீர்கள். அதற்காக உரிய முறையில் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்; தங்களுக்குக் கீழ்ப்படிவேன். வணக்கம் செலுத்துவேன், அன்பு காட்டுவேன். தங்கள் அன்பு முழுவதையும் உங்களுக்கே செலுத்திவிட்டதாகச் சொல்கிறார்களே, அப்படியானால், என் தமக்கைமார் எதற்காகக் கணவன்மாரைத் தேடுகிறார்கள்? நான் திருமணம் செய்துகொண்ட பிறகு, என்னைத் தொட்டுத் தாலிகட்டியவருக்கு என் அன்பில் பாதியைக் கொடுத்துவிடுவேன். என் பொறுப்பிலும், கடமையிலும் அவருக்கு ஒரு பாதியுண்டல்லவா. என் தமக்கையரைப் போல், நான் இல்லறம் நடத்தப் போவதில்லை, என் அன்பையெல்லாம் தகப்பனுக்குக் கொடுத்துவிட்டு,

**லீயர் :** நீ இதயத்திலிருந்து பேசும் பேச்சா இது?

**CORDELIA** : Ay, good my lord.

**KING LEAR :** So young, and so untender?

**CORDELIA :** So young, my lord, and true.

**KING LEAR :** Let it be so; thy truth, then, be thy dower :
For, by the sacred radiance of the sun,
The mysteries of Hecate, and the night;
By all the operation of the orbs
From whom we do exist, and cease to be;
Here I disclaim all my paternal care,
Propinquity and property of blood,
And as a stranger to my heart and me
Hold thee, from this, for ever. The barbarous Scythian,
Or he that makes his generation messes
To gorge his appetite, shall to my bosom
Be as well neighbour'd, pitied, and relieved,
As thou my sometime daughter.

**KENT :** Good my liege,--

**KING LEAR :** Peace, Kent!
Come not between the dragon and his wrath.
I loved her most, and thought to set my rest
On her kind nursery. Hence, and avoid my sight!
So be my grave my peace, as here I give
Her father's heart from her! Call France; who stirs?
Call Burgundy. Cornwall and Albany,
With my two daughters' dowers digest this third :
Let pride, which she calls plainness, marry her.





**காட்டீ:** ஆம், பிரபு.

**லீயர் :** இவ்வளவு இளமையில், இவ்வளவு மென்மையின்மையா?

**காட்டீ:** பிரபு, இவ்வளவு இளமையில், இவ்வளவு உண்மை.

**லீயர் :** நல்லது. அப்படியானால், உன் உண்மையே உன் சீதனமாக இருக்கட்டும். தந்தைக்குரிய பொறுப்பு, உனக்கும் எனக்கும் உள்ள உறவு, உறவினால் ஏற்பட்ட உடமை, எல்லாவற்றையும் இப்பொழுதே தொலைத்து முழுகிவிட்டேன். எனக்கும் என் இதயத்துக்கும் அந்நியமான உன்னை வேற்றாளாகக் கருதுகிறேன். சைத்தியக் காட்டுமிராண்டிகளும், பசி தீர்ப்பதற்காக மக்களைக் கொன்று தின்னும் நரமாமிச பக்ஷிணிகளும் என் ஆதரவுக்கும், பரிவுக்கும், அன்புக்கும் பாத்திரமாவார்கள், எனது மாஜி மகளைப் போல. பகலவனுடைய புனித ஒளி மேலாணை, இரவின் மேலாணை, ஹெக்கேட்டின் அற்புதங்கள் மேலாணை, எந்த விண்மீன்களின் ஆதிக்கத்தால், வாழ்க்கை காக்கப்பட்டு அழிக்கப்படுகிறதோ, அந்த விண்மீன்கள் சாட்சியாக ஆணையிடுகிறேன்.

**கென்ட்:** உத்தமப் பிரபு........

**லீயர் :** சும்மா இரு. கென்ட்! வேதாளத்துக்கும் அதன் வெஞ் சினத்துக்கும் இடையில் வராதே. அவளை அதிகமாக நேசித்தேன், அவள் அன்பிலே இளைப்பாறி அமையலாம் என்று கருதினேன். போ, என் மூஞ்சியில் விழிக்காதே!

அவள் தந்தையின் இதயத்தை அவளிடமிருந்து பறித்துக்கொண்டேன். இனி, சவக்குழியே எனக்கு அமைதி தரட்டும்.

ப்ரான்ஸைக் கூப்பிடு. ஏன் சும்மா இருக்கிறீர்கள்? பர்கண்டியைக் கூப்பிடுங்கள்.

I do invest you jointly with my power,
Pre-eminence, and all the large effects
That troop with majesty. Ourself, by monthly course,
With reservation of an hundred knights,
By you to be sustain'd, shall our abode
Make with you by due turns. Only we still retain
The name, and all the additions to a king;
The sway, revenue, execution of the rest,
Beloved sons, be yours : which to confirm,
This coronet part betwixt you.

Giving the crown

**KENT :** Royal Lear,
Whom I have ever honour'd as my king,
Loved as my father, as my master follow'd,
As my great patron thought on in my prayers,--

**KING LEAR :** The bow is bent and drawn,
make from the shaft.

**KENT :** Let it fall rather, though the fork invade
The region of my heart : be Kent unmannerly,
When Lear is mad. What wilt thou do, old man?
Think'st thou that duty shall have dread to speak,
When power to flattery bows?
To plainness honour's bound,
When majesty stoops to folly. Reverse thy doom;
And, in thy best consideration, cheque
This hideous rashness : answer my life my judgment,
Thy youngest daughter does not love thee least;







கார்ன்வால், ஆல்பனி, எனது இரு பெண்களுடைய சீதனத்தோடு இந்த மூன்றாவது பங்கையும் சேர்த்து அனுபோகம் செய்யுங்கள். உண்மையென்று அவள் சொல்லுகிற திமிர் இருக்கிறேதே, அதை அவள் திருமணம் செய்துகொள்ளட்டும். என்னுடைய கொற்றம், மாட்சி, அரச பரிவாரங்கள் எல்லாவற்றையும் உங்களுக்குக் கூட்டுக் கொடையாக அளிக்கிறேன். உங்கள் செலவில் நூறு வீரர்கள் கொண்ட பரிவாரத்தை நாம் வைத்துக் கொள்வோம். மாதம் ஒருவர் இல்லத்தில், முறைபோட்டு, நாம் உங்களோடு தங்குவோம். பெயரளவிலே, அரச பட்டத்தையும், பதவியையும் மாத்திரம் நாம் வைத்துக் கொள்வோம். அரச செல்வாக்கும், வருமானமும், நிர்வாகமும், அருமைக் குழந்தைகளே, உங்களுக்கே. இதை உறுதி செய்வதற்காக, இந்தக் கிரீடத்தை உங்கள் இருவருக்கும் கொடுத்திருக்கிறேன்.

[கிரீடத்தைக் கொடுக்கிறார்]

**கென்ட்:** லீயர் மன்னரே, தங்களை எப்போதும் அரசராகப் போற்றியிருக்கிறேன், தந்தையாக நேசித்திருக்கிறேன், எஜமானனாகப் பணிவிடை செய்திருக்கிறேன், ஆண்டவனாக சேவித்திருக்கிறேன்.

**லீயர் :** வில் வளைந்து, நாண் ஏற்றி, நிற்கும் நேரம் இது. அம்புக்கு விலகி நில்.

**கென்ட்:** பரவாயில்லை, அது விழட்டும். அதன் கவடு என் நெஞ்சில் பாய்ந்தால்தான் என்ன! லீயருக்குப் பைத்தியம் பிடித்த பிறகு, கென்ட் மரியாதை தவறிப் பேசினால், பாதகமில்லை. நீர் என்ன செய்து விடுவீர், கிழவரே? முகஸ்துதியைக் கேட்டு, அதிகாரம், தலைகுனியும் போது, அச்சத்தால், கடமை பேசாமலிருக்குமென்றா நினைக்கிறீர்? வேந்து, மடமையில் வழுக்கி விழும்போது, மானம், உள்ளது உரைத்தே தீரும். அரசை நீரே வைத்துக்கொள்ளும். இந்த அலங்கோலமான துணிச்சலை அடக்கிக்கொள்ளும். என்

Nor are those empty-hearted whose low sound
Reverbs no hollowness.

**KING LEAR :** Kent, on thy life, no more.

**KENT :** My life I never held but as a pawn
To wage against thy enemies; nor fear to lose it,
Thy safety being the motive.

**KING LEAR :** Out of my sight!

**KENT :** See better, Lear;
and let me still remain
The true blank of thine eye.



**KING LEAR :** Now, by Apollo,--

**KENT :** Now, by Apollo, king,
Thou swear'st thy gods in vain.

**KING LEAR :** O, vassal! miscreant!

Laying his hand on his sword

**ALBANY CORNWALL :** Dear sir, forbear.

**KENT :** Do
Kill thy physician, and the fee bestow
Upon thy foul disease. Revoke thy doom;
Or, whilst I can vent clamour from my throat,
I'll tell thee thou dost evil.





உயிர் போனாலும், என் கருத்தைத் தெரிவித்து விடுகிறேன். உங்கள் கடைசி மகள் உங்கள்பால் அன்பில் குறைந்தவள் அல்ல. ஆரவாரமில்லாத பேச்சு வெற்றிடத்திலே எதிரொலியை எழுப்பாது, ஆனால், அப்படி பேசுகிறவர்களுடைய நெஞ்சம் வெற்று நெஞ்சம் என்று நினைப்பது தவறு.

**லீயர் :** கென்ட், உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பினால், இனி பேசாதே.

கென்ட்: உம்முடைய பகைவர்களினின்றும் உம்மைக் காப்பாற்றுவதற்காக என் உயிரை ஒரு பணயமாகவே கருதி வந்திருக்கிறேன். உயிரை இழக்க அஞ்சவில்லை, உம்மைக் காப்பதே என் குறிக்கோள்.

**லீயர் :** என் பார்வையில் நில்லாதே, போ.
கென்ட்: லீயர், உமது பார்வை இன்னும் தெளிவாகட்டும். இன்னும் உம் பார்வைக்கு இலக்காக இருக்க விரும்புகிறேன்.



**லீயர் :** அப்போல்லோ சாட்சியாக.

**கென்ட்::** அரசே, அப்போல்லோ சாட்சியாகவா? வீணுக்கு ஏன் உம் கடவுள்களை இழுத்து ஆணையிடுகிறீர்?

**லீயர் :** ஏ, அடிமையே, கயவனே.

[வாளின்மேல் கையைப் போகிறார்]

**ஆல்பனி:**

**கார்ன்வால்:** ஐயனே, பொறுங்கள்.
**கென்ட்:** செய்யுங்கள், செய்யுங்கள்; உங்கள் வைத்தியனைக் கொன்று, அவனுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்தை, உங்களைப்பிடித்திருக்கும் பெருநோய்க்குக் கொடுங்கள்.

**KING LEAR :** Hear me, recreant!
On thine allegiance, hear me!
Since thou hast sought to make us break our vow,
Which we durst never yet,
and with strain'd pride
To come between our sentence and our power,
Which nor our nature nor our place can bear,
Our potency made good,
take thy reward.
Five days we do allot thee, for provision
To shield thee from diseases of the world;
And on the sixth to turn thy hated back
Upon our kingdom : if,
on the tenth day following,
Thy banish'd trunk be found in our dominions,
The moment is thy death. Away! by Jupiter,
This shall not be revoked.

**KENT** : Fare thee well, king : sith thus thou wilt appear,
Freedom lives hence, and banishment is here.

To CORDELIA
The gods to their dear shelter take thee, maid,
That justly think'st, and hast most rightly said!

To REGAN and GONERIL

And your large speeches may your deeds approve,
That good effects may spring from words of love.
Thus Kent, O princes, bids you all adieu;
He'll shape his old course in a country new.





உங்களையே அழிக்கப் போகும் உங்கள் தீர்ப்பை ரத்து செய்யுங்கள். இல்லையெல், இந்தத் தொண்டைக்குழியில் கூப்பாடு போடும் சக்தியிருக்கும் வரையில், 'நீர் தீங்கு செய்கிறீர்' என்று உம்மிடம் சொல்லிக் கொண்டேயிருப்பேன்.

**லீயர்** : நான் சொல்வதைக் கேள், துரோகி, ராஜவிஸ்வாஸம் உனக்கிருக்குமானால், கேள். சொன்ன சொல் என்றும் நாம் தவறியதில்லை. நம் சொல்லைக் குலைக்க நீ முயன்றாய். நமது அதிகாரத்துக்கும், நமது தீர்ப்புக்கும் இடையிலே நீ திமிருடன் குறுக்கிட்டாய். நமது குணத்துக்கும், பதவிக்கும் ஏற்காத குற்றத்தைச் செய்துவிட்டாய். இதை நாம் பொறுக்க முடியாது. நமது அதிகாரத்தை நிலை நாட்டுவதற்காக, உனக்குரிய பரிசை ஏற்றுக்கொள். உனக்கு ஐந்து நாள் தவணை கொடுக்கிறோம். அதற்குள்ளாக, உலகத்தின் இன்னல்களினின்றும் தப்புவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துகொள். ஆறாவது நாள் உன் அருவருக்கத்தக்க தலை இந்த நாட்டிலிருந்து மறைய வேண்டும். இன்று முதல் பத்தாவது நாள், நாடுகடத்தப்பட்ட உன் முண்டம் இந்த நாட்டில் எங்காவது தென்படுமானால், அந்தக் கணத்திலேயே நீ மடிவாய். ஒழிந்துபோ. ஜூப்பிட்டர் சத்தியமாக, இந்தக் கட்டளையை நான் மாற்ற போவதில்லை.

**கென்ட்:** போய் வருகிறேன், அரசே. உம்முடைய நிலை இப்படியிருக்கும்போது, சுதந்திரம் உம் நாட்டுக்கு அப்பால் வாழ்க! உம் நாட்டினுள் வாழ்பவர்களே உண்மையில் நாடு கடத்தப்பட்டவர்கள்.

[கார்டீலியாவைப் பார்த்து] பெண்ணே; உன் சிந்தனையில் நேர்மையிருக்கிறது. உன் சொல்லிலே உண்மையிருக்கிறது. தேவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள்.

[ரீகனையும், கானெரிலையும் பார்த்து] உங்கள் செய்கை; உங்கள் விண்ணாணப் பேச்சுக்கு ஒத்திருக்கட்டும்; உங்கள் இனிப்பான சொற்களிலிருந்து நன்மை விளையட்டும்.

Exit

Flourish. Re-enter GLOUCESTER,
with KING OF FRANCE, BURGUNDY, and Attendants

**GLOUCESTER :** Here's France and Burgundy, my noble lord.

**KING LEAR :** My lord of Burgundy.
We first address towards you, who with this king
Hath rivall'd for our daughter : what, in the least,
Will you require in present dower with her,
Or cease your quest of love?

**BURGUNDY :** Most royal majesty,
I crave no more than what your highness offer'd,
Nor will you tender less.

**KING LEAR :** Right noble Burgundy,
When she was dear to us, we did hold her so;
But now her price is fall'n. Sir, there she stands :
If aught within that little seeming substance,
Or all of it, with our displeasure pieced,
And nothing more, may fitly like your grace,
She's there, and she is yours.

**BURGUNDY :** I know no answer.

**KING LEAR :** Will you, with those infirmities she owes,
Unfriended, new-adopted to our hate,
Dower'd with our curse, and stranger'd with our oath,
Take her, or leave her?





இளவரசர்களே, கென்ட் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன். புதிய நாட்டில் இப்பழையவனுக்கு வாழத் தெரியும். [போகிறார்]

[எக்காளம் ஊதுகிறது. ப்ரான்ஸ், பர்கண்டி பணியாட்களோடு, க்ளாஸ்டர் மறுபடியும் வருகிறார்]

**க்ளாஸ்:** ப்ரான்ஸும் பர்கண்டியும் இங்கே இருக்கிறார்கள், பிரபு.

**லீயர் :** பர்கண்டிப் பிரபு, நம்முடைய மகளையடைய இந்த அரசனோடு போட்டியிட்டவராச்சே நீர், முதலில் உம்மைக் கேட்கிறோம், இவளோடு வாழ்வதற்கு குறைந்தபக்ஷம் எவ்வளவு சீதனம் எதிர்பார்க்கிறீர்? அல்லது காதல் வேட்டையையே விட்டுவிடுவீரா?

**பர்கண்டி:** அரசர்க்கரசே, நீர் கொடுத்ததைக் காட்டிலும் நான் அதிகமாக விரும்பவில்லை. நீரும் கொடுத்ததைக் குறைக்கப் போவதில்லை.

**லீயர் :** மாண்புமிக்க பர்கண்டியே, அவள் நமது அன்புக்குரியவளாக இருந்தபோது அவளிடத்தில் மிகுந்த மதிப்பு வைத்திருந்தோம். ஆனால், இப்பொழுதோ அவளுடைய விலை விழுந்து விட்டது. ஐயா, அதோ அவள் நிற்கிறாள்; நமது அருவருப்புக்குரியதான அந்த அற்பப் பொருளில் உமக்கு உகந்தது ஏதாவது இருந்தால் நீரே அவளை ஏற்றுக்கொள்ளலாம்.

**பர்கண்டி:** நான் என்ன சொல்வதற்கிருக்கிறது?

**லீயர் :** குற்றம் மலிந்த இவளை, நண்பனற்ற இவளை, நமது வெறுப்புக்குரிய இவளை, நமது சாபத்தையே சீதனமாகப் பெற்ற இவளை, அயலாள் என்று நம்மால் ஒதுக்கப்பட்ட இவளை, நீர்......

**BURGUNDY :** Pardon me, royal sir;
Election makes not up on such conditions.

**KING LEAR :** Then leave her, sir; for,
by the power that made me,
I tell you all her wealth.

To KING OF FRANCE

For you, great king,
I would not from your love make such a stray,
To match you where I hate; therefore beseech you
To avert your liking a more worthier way
Than on a wretch whom nature is ashamed
Almost to acknowledge hers.



**KING OF FRANCE :** This is most strange,
That she, that even but now was your best object,
The argument of your praise, balm of your age,
Most best, most dearest, should in this trice of time
Commit a thing so monstrous, to dismantle
So many folds of favour. Sure, her offence
Must be of such unnatural degree,
That monsters it, or your fore-vouch'd affection
Fall'n into taint : which to believe of her,
Must be a faith that reason without miracle
Could never plant in me.

**CORDELIA :** I yet beseech your majesty,--
If for I want that glib and oily art,
To speak and purpose not; since what I well intend,





**பர்கண்டி:** மன்னிக்க வேண்டும். அரசே, இந்தச் சூழ்நிலையில், இவளை ஏற்றுக் கொள்வதாவது, ஒன்றாவது!

**லீயர் :** அப்படியானால், அவளை விட்டு விடுங்கள், ஐயா, என்னைப் படைத்த இறைவன் ஆணையாக, அவளுக்குரிய சொத்து என்னவென்பதைச் சொல்லித் தீர்த்து விட்டேன். [ப்ரான்ஸைப் பார்த்து] பேரரசே, உமக்குச் சொல்ல வேண்டியது ஒன்றுண்டு; என் அன்பிற்குரிய உமக்கு, என் வெறுப்புக்குரியவளையா மணம் செய்து வைப்பது? இயற்கை அன்னையே இந்தப் பாவியைத் தன் மகள் என்று ஏற்கக் கூசுகிறாள். ஆகையால், இவளை ஒதுக்கிவிட்டு, இவளைக் காட்டிலும் தகுந்த பாத்திரத்துக்கு, உம் காதலைச் செலுத்தும். இதுவே என் வேண்டுகோள்.

**ப்ரான்ஸ்:** இது மிகவும் விநோதமாயிருக்கிறதே. கொஞ்சநேரத்துக்கு முன்வரையில் உமக்கு இங்கிதமான பொருளாக இருந்தாள், உமது பாராட்டுக்குரியவளாயிருந்தாள், உமது முதுமைக்கு அருமருந்தாக இருந்தாள், உம்முடைய செல்லக் குழந்தையாக இருந்தாள். அப்படியிருந்தவள் ஒரு நொடிப் பொழுதிலே உமது ஆதரவு முழுவதையும் இழந்துவிட்டாள். இவ்வாறு நேரிட அவள் என்ன பாதகம் செய்துவிட்டாள்? ஒன்று அவள் செய்த தவறு அவ்வளவு அபாண்டமாக இருக்க வேண்டும், அல்லது அவளிடத்திலே நீர் வைத்திருந்ததாகச் சொல்லும் அன்பு திறம்பிப் போயிருக்கவேண்டும். அவள்மேல் குற்றம் இருக்கிறது என்று என்னால் நம்பமுடியவில்லை. மாயஜாலங்களைக் கொண்டு அப்பேர்ப்பட்ட நம்பிக்கையையூட்டலாம். ஆனால் பகுத்தறிவினால் ஆராயும் என் இதயத்திலே அந்த நம்பிக்கையை ஊன்ற முடியாது.



**கார்டீ:** அரசே, உள்ளத்தில் நினைப்பதை, பேச்சில் காட்டுவதற்குமுன், செயலில் காட்டுகிறவள் நான். வெற்றுரை பேசும் விளக்கெண்ணெய்க் கலையை நான் பயின்றதில்லை. ஒன்றைப் பேசி மற்றொன்றைச் செய்வதில்லை. தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன், தங்கள் தயவை இழந்ததற்குக் காரணம் என்ன என்பதைத் தாங்கள் தெரியப்படுத்த வேண்டும்.

I’ll do’t before I speak,--that you make known
It is no vicious blot, murder, or foulness,
No unchaste action, or dishonour’d step,
That hath deprived me of your grace and favour;
But even for want of that for which I am richer,
A still-soliciting eye, and such a tongue
As I am glad I have not, though not to have it
Hath lost me in your liking.

**KING LEAR :** Better thou
Hadst not been born than not to have pleased me better.

**KING OF FRANCE :** Is it but this,--a tardiness in nature
Which often leaves the history unspoke
That it intends to do? My lord of Burgundy,
What say you to the lady? Love’s not love
When it is mingled with regards that stand
Aloof from the entire point. Will you have her?
She is herself a dowry.

**BURGUNDY :** Royal Lear,
Give but that portion which yourself proposed,
And here I take Cordelia by the hand,
Duchess of Burgundy.

**KING LEAR :** Nothing : I have sworn; I am firm.

**BURGUNDY :** I am sorry, then, you have so lost a father
That you must lose a husband.

**CORDELIA :** Peace be with Burgundy!







நான் குணக்கேடியா, கொலைகாரியா, கற்பில் தவறினேனா, நடை பிசகினேனா? இல்லை. கொஞ்சும் முகமும், பசப்புப்பேச்சும் என்னிடம் இல்லாத காரணத்தால் தங்கள் அன்பை இழந்தேன்; இநத் ஜாலங்கள் இல்லாத காரணத்தாலேயே, எனக்கு குணவளம் ஏற்பட்டிருக்கிறது. இதை நினைக்கும்போது நான் அகமகிழ்கிறேன்.

**லீயர் :** பிறந்து எனக்கு அதிருப்தியைக் கொடுத்தாயே, அதைவிட பிறக்காமலே இருந்திருக்கலாம் நீ.
ப்ரான்ஸ்: இதுதானா காரணம்? தாம் செய்ய விரும்புவதற்குக் காரணம் என்ன என்பதைச் சிலர் சொல்லாமல் விட்டு விடுகிறார்கள். மந்த புத்திதான் இதற்குக் காரணம். பர்கண்டிப் பிரபுவே, இந்தச் சீமாட்டியிடம் நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? அன்புக்குப் புறம்பான காரியங்கள் அன்பை பாதிக்குமானால், அதை அன்பு என்று சொல்லலாமா? அவளை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? அவளே ஒரு சீதனமாச்சே.

**பர்கண்டி:** லீயர் மன்னரே, தாங்கள் கொடுக்கச் சித்தமாயிருந்த பாகத்தைக் கொடுத்தால் போதும், நான் இப்பொழுதே கார்டீலியாவின் கரம்பற்றி, இவளை பர்கண்டியின் இளவரசியாக்கிக் கொள்கிறேன்.

**லீயர் :** முடியாது. நான் சத்தியம் செய்துவிட்டேன். என் உறுதியைக் குலைக்க முடியாது.

**பர்கண்டி:** வருந்துகிறேன்; நீ தந்தையை இழந்ததைப் போல, கவவனையும் இழக்க வேண்டியது தான்.

**கார்டீ:** பர்கண்டி வாழ்ந்து போகட்டும். பொருட்செல்வத்தைக் காதலிப்பவருக்கு நான் மனைவியாக மாட்டேன்.

**ப்ரான்ஸ்:** அழகிற் சிறந்த கார்டீலியா, பொருளற்ற காரணத்தாலேயே நீ செல்வச் சிறப்படைந்து விட்டாய், துறக்கப்பட்ட காரணத்தால், மனசுக்கினியவளாகி விட்டாய், இழித்தொதுக்கப்பட்ட

Since that respects of fortune are his love,
I shall not be his wife.

**KING OF FRANCE :** Fairest Cordelia, that art most rich, being poor;
Most choice, forsaken; and most loved, despised!
Thee and thy virtues here I seize upon :
Be it lawful I take up what's cast away.
Gods, gods! 'tis strange that from their cold'st neglect
My love should kindle to inflamed respect.
Thy dowerless daughter, king, thrown to my chance,
Is queen of us, of ours, and our fair France :
Not all the dukes of waterish Burgundy
Can buy this unprized precious maid of me.
Bid them farewell, Cordelia, though unkind :
Thou losest here, a better where to find.



**KING LEAR :** Thou hast her, France : let her be thine; for we
Have no such daughter, nor shall ever see
That face of hers again. Therefore be gone
Without our grace, our love, our benison.
Come, noble Burgundy.

Flourish. Exeunt all but KING OF FRANCE, GONERIL, REGAN, and CORDELIA

**KING OF FRANCE :** Bid farewell to your sisters.

**CORDELIA :** The jewels of our father, with wash'd eyes
Cordelia leaves you : I know you what you are;
And like a sister am most loath to call





காரணத்தால், அன்புக்குகந்தவளாகிவிட்டாய். உன்னையும், உன் நற்குணங்களையும் கையாலெடுத்து அரவணைத்துக் கொள்கிறேன். துறக்கப்பட்ட பொருளை நான் ஏற்றுக்கொள்வதில் நியாய விரோதம் ஒன்றுமில்லை.

தெய்வங்களே, ஏ, தெய்வங்களே, உங்கள் கொடிய உதாசீனத்தால், என் காதல் கனிந்து பக்தியாக மலர்ந்து விட்டது. அரசே, சீதனமற்ற உங்கள் மகள், எங்களுக்கும், எங்களவர்க்கும், எங்கள் அழகிய ப்ரான்ஸ் நாட்டுக்குமே அரசியாகிவிட்டாள். என் அருமைக் காதலியை, விலைமதிக்க முடியாத இந்த மரகதத்தை, இனியொருவரும் விலைக்கு வாங்க முடியாது; நீர்வளம் கொழிக்கும் பர்கண்டி நாட்டுப் பிரபுக்கள் ஒன்று கூடி வந்தாலும், இவளை விலைக்கு வாங்கிவிட முடியாது.

கார்டீலியா, அன்பற்றவர்களாயிருந்தாலும், இவர்களிடம் விடை பெற்றுக்கொள். இந்த நாட்டை நீ இழந்ததற்குக் காரணம், இதைக் காட்டிலும் சிறந்த நாட்டைப் பெறப் போகிறாய்.



**லீயர் :** ப்ரான்ஸ், நீர் ஏற்றுக்கொண்டீர், அதனால் அவள் உம்முடையவளாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், அவள் எனது மகள் அல்ல; இனி, ஒருக்காலும் அவள் மூஞ்சியைப் பார்க்கப்போவது இல்லை. நமது பரிவின்றி, அன்பின்றி, ஆசியின்றி, இந்த இடத்தை விட்டுப் போய்விடுங்கள்.

பெருமை மிக்க பர்கண்டியே, வாரும்.

[எக்காளம் ஊதுகிறது, ப்ரான்ஸ், கானெரில், ரீகன், கார்டீலியாவைத் தவிர எல்லோரும் போகிறார்கள்]

**ப்ரான்ஸ்:** உன் தமக்கையரிடம் விடைபெற்றுக்கொள்.

**கார்டீ:** நமது தந்தையின் அணிகலன்களே, கண்ணீர் மல்கக் கார்டீலியா உங்களை விட்டுப் பிரிகிறாள். நீங்கள் எப்படிப்பட்டவர்கள்

Your faults as they are named. Use well our father :
To your professed bosoms I commit him
But yet, alas, stood I within his grace,
I would prefer him to a better place.
So, farewell to you both.

**REGAN :** Prescribe not us our duties.

**GONERIL :** Let your study
Be to content your lord, who hath received you
At fortune's alms. You have obedience scanted,
And well are worth the want that you have wanted.

**CORDELIA :** Time shall unfold what plaited cunning hides :
Who cover faults, at last shame them derides.
Well may you prosper!

**KING OF FRANCE :** Come, my fair Cordelia.

Exeunt KING OF FRANCE and CORDELIA

**GONERIL :** Sister, it is not a little I have to say of what most nearly appertains to us both. I think our father will hence to-night.

**REGAN :** That's most certain, and with you; next month with us.

**GONERIL :** You see how full of changes his age is; the observation we have made of it hath not been little : he always loved our sister most; and







என்று எனக்குத் தெரியும். தங்கையென்ற நிலையில், உங்கள் குற்றங்களை வெளியாக்க நான் விரும்பவில்லை. நமது தந்தையை நன்றாக நேசியுங்கள். அன்பு நிறைந்திருப்பதாகச் சொல்லும். உங்களிடத்திலே அவரை ஒப்படைக்கிறேன். ஆனாலும் ஐயோ, பாவம், அவருடைய அன்பை நான் இழக்காமல் இருந்திருந்தால், உங்களைக் காட்டிலும் நல்ல இடத்திலே அவரை ஒப்படைத்திருப்பேன். நல்லது, உங்கள் இருவரிடமும் விடைபெற்றுக் கொள்கிறேன்.

**ரீகன்:** எங்கள் கடமையைப்பற்றி நீ எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

**கானெரில்:** விதிகொடுத்த பிச்சையாக உன்னை உன் கணவர் ஏற்றிருக்கிறார். அவரைத் திருப்தி செய்யக் கற்றுக்கொள். அல்லலை விரும்பித் தந்தையை மதிக்கத் தவறினாய். வேண்டியதுதான், இந்தத் தொல்லையெல்லாம் உனக்கு வேண்டியதுதான்.

**கார்டீ:** தந்திரத்தால் பின்னல்போட்ட காரியங்கள் எல்லாம் காலப் போக்கில் அவிழ்ந்து விடும்; குற்றத்தை மூடிவைப்பவர்கள் பின்னால் பழிக்கு ஆளாவார்கள். உங்களுக்கு நல் வாழ்வு கிடைக்கட்டும்.

**ப்ரான்ஸ்:** வா, என் அழகுக் கார்டீலியா.
[ப்ரான்ஸ், கார்டீலியா போகிறார்கள்]

**கானெரில்:** தங்கையே, நம்மிருவருக்கும் பொதுவான காரியங்களைப்பற்றி நிறையப் பேச வேண்டும். இன்றிரவு நம் தகப்பனார் இங்கிருந்து போய்விடுவார் என்று நினைக்கிறேன்.

**ரீகன்:** அது நிச்சயம். அவர் உன்னோடு வருவார்; அடுத்த மாதம் எங்களுடன்.

**கானெரில்:** முதுமைப் பருவத்தில் அவர் எவ்வளவு மாறுதல் அடைந்துவிட்டார்! கொஞ்ச நஞ்சமல்ல. அதைத்தான் பார்த்தோமே.

with what poor judgment he hath now cast her off appears too grossly.

**REGAN :** 'Tis the infirmity of his age : yet he hath ever but slenderly known himself.

**GONERIL :** The best and soundest of his time hath been but rash; then must we look to receive from his age, not alone the imperfections of long-engraffed condition, but therewithal the unruly waywardness that infirm and choleric years bring with them.

**REGAN :** Such unconstant starts are we like to have from him as this of Kent's banishment.

**GONERIL :** There is further compliment of leavetaking between France and him. Pray you, let's hit together : if our father carry authority with such dispositions as he bears, this last surrender of his will but offend us.

**REGAN :** We shall further think on't.

**GONERIL :** We must do something, and i' the heat.

Exeunt

## SCENE II.

The Earl of Gloucester's castle.
Enter EDMUND, with a letter





நம் தங்கையிடந்தான் எவ்வளவு பிரியம் வைத்திருந்தார்! காரணமில்லாமல் எப்படி அவளை ஒதுக்கித் தள்ளவிட்டார்! என்ன முரட்டுத்தனம்!

**ரீகன்:** எல்லாம் கிழட்டுப் பருவத்தால் ஏற்பட்ட குணக்கேடுதான். எப்பொழுதுமே, அவர் தன்னை நன்றாக அறிந்து கொண்டவரில்லை.

**கானெரில்:** நல்ல காலத்திலேயே, அவர் படபடப்பாக இருப்பார், முதுமையிலோ, படபடப்போடு தணிக்க முடியாத கோபமும், தடுமாற்றமும் சேர்ந்து கொண்டன; தள்ளாத காலத்தில் விளையும் இந்தக் குறைபாடுகளை நாம் எதிர்பார்த்து நடக்கவேண்டும்.

**ரீகன்:** கென்ட்டை நாடு கடத்தினாரே, இதைப் போல, நிலை தடுமாறிப் பல செயல்களை செய்வார்.

**கானெரில்:** ப்ரான்ஸ் மன்னனிடம் அவர் விடை பெற்ற அழகைப் பார்த்தாயா? நாம் இருவரும் மனமொத்துக் காரியங்களைச் செய்ய வேண்டும். இந்த மனப்பாங்கோடு அவர் அதிகாரம் செலுத்தப்போகிறார் என்றால், அவர் நமக்கு விட்டுக்கொடுத்திருக்கும் அரசு நமக்குத் தொல்லையைத்தான் தரும்.

**ரீகன்:** அதைப்பற்றி மேலும் சிந்திப்போம்.

**கானெரில்:** கட்டாயம் செய்யவேண்டும். அதுவும் விரைவில் செய்ய வேண்டும்.

[போகிறார்கள்]

## காட்சி 2

கிளாஸ்டர் பிரபுவின் அரண்மனை
[கடிதத்தோடு எட்மண்ட் வருகிறான்]

**EDMUND :** Thou, nature, art my goddess; to thy law
My services are bound. Wherefore should I
Stand in the plague of custom, and permit
The curiosity of nations to deprive me,
For that I am some twelve or fourteen moon-shines
Lag of a brother? Why bastard? wherefore base?
When my dimensions are as well compact,
My mind as generous, and my shape as true,
As honest madam's issue? Why brand they us
With base? with baseness? bastardy? base, base?
Who, in the lusty stealth of nature, take
More composition and fierce quality
Than doth, within a dull, stale, tired bed,
Go to the creating a whole tribe of fops,
Got 'tween asleep and wake? Well, then,
Legitimate Edgar, I must have your land :
Our father's love is to the bastard Edmund
As to the legitimate : fine word,--legitimate!
Well, my legitimate, if this letter speed,
And my invention thrive, Edmund the base
Shall top the legitimate. I grow; I prosper :
Now, gods, stand up for bastards!

Enter GLOUCESTER

**GLOUCESTER :** Kent banish'd thus!
and France in choler parted!
And the king gone to-night! subscribed his power!
Confined to exhibition! All this done
Upon the gad! Edmund, how now! what news?







**எட்ம:** இயற்கை தேவி, நீ என் தெய்வம். என் சேவை உன் நியதிக்குக் கட்டுப்பட்டது. அப்படியானால், பழக்கத்தின் கொடுமைக்கு நான் ஏன் கட்டுபட வேண்டும்? உலகத்தின் மூடக் கட்டுப்பாட்டால், நான் உரிமையை இழப்பானேன்? பன்னிரண்டு அல்லது பதினான்கு திங்கள்தான் அண்ணனுக்கு பிந்தியவன் நான். என்னைக் கள்ளப்பிள்ளையென்று கூறுவானேன்? இழிந்தவனா? யோக்கியப் பெண்மணியின் குழந்தையைப் போல, உடற்கட்டு எனக்கில்லையா? உள்ள நெகிழ்ச்சியில்லையா? தோற்றப்பொலிவு இல்லையா? எங்களுக்குச் சூட்டுக்கோல் போட்டு, இழிந்தவர்கள் என்று ஏன் நாமம் சூட்டுகிறார்கள்? இழிதகைமை? இழிமகன்மை? இழிவு? இழிவா?

உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடைநிலையிலே, மந்தமான, இலைச்சுப்போன, களைப்பு நிறைந்த படுக்கையிலே, குழந்தைகளைப் பட்டாளம், பட்டாளமாக உற்பத்தி செய்கிறார்களே, அக்குழந்தைகள் வீண் டம்பாச்சாரிகளாகத் தானிருப்பார்கள். ஆனால், இயற்கையன்னை, காமக்களிப்பிலே கள்ள நடை போடும்போதோ, அவள் வளம் நிறைந்தவளாக இருக்கிறாள்; அந்நிலையில் அவள் படைக்கும் குழந்தைகளும் மிடுக்கு நிறைந்த சுட்டிகளாய் அமைகிறார்கள். முறைப்படி பிறந்த எட்கார், உன்னுடைய நிலங்கள் என்னைச் சேரவேண்டும். நம்முடைய தந்தையின் அன்பெல்லாம் முறை தவறிப்பிறந்த எட்மன்டிடத்தில்தான். முறைப்படிஅடடா, நல்ல சொல் அது. அடேய், "முறைப்படி," இந்தக் கடிதம் இயங்கி, என்னுடைய சூழ்ச்சியும் வெற்றி பெற்றால், "முறையற்ற" எட்மன்ட், "முறைப்படியை" மிஞ்சிவிடுவான்; எனக்க உயர்வும் ஆக்கமும் கிடைக்கும். தெய்வங்களே, இழிமக்களுக்குத் துணையாக வாருங்கள்.
[க்ளாஸ்டர் வருகிறார்]

**க்ளாஸ்:** கென்ட் நாடு கடத்தப்பட்டார்! ப்ரான்ஸ் சீற்றத்தோடு சென்று விட்டான்! அரசரும் இன்றிரவே போய்விட்டார்! அதிகாரத்தை அவர் விட்டுக் கொடுத்துவிட்டாராம்! வெறும் பொம்மையாகி விட்டார்! எல்லாம் பரபரப்பில் செய்த காரியம்!

**EDMUND :** So please your lordship, none.

Putting up the letter

**GLOUCESTER** : Why so earnestly seek you to put up that letter?

**EDMUND** : I know no news, my lord.

**GLOUCESTER :** What paper were you reading?

**EDMUND :** Nothing, my lord.

**GLOUCESTER** : No? What needed, then,
that terrible dispatch of
it into your pocket? the quality of nothing hath
not such need to hide itself. Let's see : come,
if it be nothing, I shall not need spectacles.

**EDMUND** : I beseech you, sir, pardon me : it is a letter
from my brother, that I have not all o'er-read;
and for so much as I have perused, I find it not
fit for your o'er-looking.

**GLOUCESTER :** Give me the letter, sir.

**EDMUND** : I shall offend, either to detain or give it. The contents, as in part I understand them, are to blame.

**GLOUCESTER :** Let's see, let's see.

**EDMUND :** I hope, for my brother's justification, he wrote

எட்மன்ட், என்ன செய்தி**?**

**எட்ம:** ஒன்றுமில்லை, பிரபு**.** [கடிதத்தைப் பையில் திணித்துக் கொண்டு]

**க்ளாஸ்:** ஏன், கடிதத்தை அவ்வளவு அவசரமாக வைக்கிறாய்**?**

**எட்ம:** செய்தியொன்றுமில்லை, பிரபு**.**

**க்ளாஸ்:** எந்தக் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தாய்**?**

**எட்ம:** ஒன்றுமில்லை, பிரபு**.**

**க்ளாஸ்:** அப்படியானால், இவ்வளவு நடுக்கத்தோடு ஏன் அதைப் பைக்குள் போட்டாய்**?** ஒன்றுமில்லாத பொருளை மறைக்க வேண்டிய அவசியம் இல்லையே**.** பார்ப்போம், வா**.** அதில் ஒன்றுமில்லையென்றால், படிப்பதற்கு எனக்குக் கண்ணாடி தேவையுமில்லை**.**

**எட்ம:** மன்னிக்க வேண்டும், ஐயா**.** அது என்னுடைய அண்ணனிடமிருந்து வந்த கடிதம்**.** அதை இன்னும் முழுவதும் படிக்கவில்லை**.** அது தங்கள் பார்வைக்குத் தகுதியற்றது என்றும் தோன்றுகிறது**.**

**க்ளாஸ்:** கடிதத்தைக் கொடப்பா**.**

**எட்ம:** கடிதத்தைக் கொடுத்தாலும் தப்பு, கொடுக்காமல் இருந்தாலும் தப்பு**.** கடிதத்திலிருக்கும் விஷயத்தைத்தான் குற்றம் சொல்ல வேண்டும்**.**

**க்ளாஸ்:** பார்ப்போம், பார்ப்போம்**.**

**எட்ம:** அண்ணன்மேல் குற்றமில்லை**.** என் குணத்தைச் சோதிப்பதற்காகவே அவன் இதை எழுதியிருக்க வேண்டும்**.**

this but as an essay or taste of my virtue.

**GLOUCESTER :** [Reads] 'This policy and reverence of age makes the world bitter to the best of our times; keeps our fortunes from us till our oldness cannot relish them. I begin to find an idle and fond bondage in the oppression of aged tyranny; who sways, not as it hath power, but as it is suffered. Come to me, that of this I may speak more. If our father would sleep till I waked him, you should half his revenue for ever, and live the beloved of your brother, EDGAR.'
Hum--conspiracy!--'Sleep till I waked him,--you should enjoy half his revenue,'--My son Edgar! Had he a hand to write this? a heart and brain to breed it in?--When came this to you? who brought it?

**EDMUND :** It was not brought me, my lord; there's the cunning of it; I found it thrown in at the casement of my closet.

**GLOUCESTER :** You know the character to be your brother's?

**EDMUND :** If the matter were good, my lord, I durst swear it were his; but, in respect of that, I would fain think it were not.





**க்ளாஸ்:** [படிக்கிறார்] "முதுமைக்கு நாம் காட்டும் மரியாதை நம் இளமையைக் கசப்பாக்கி விடுகிறது. சொத்து நமக்குக் கிட்டுவதற்கு முன்பே, நாம் முதுமையடைந்து விடுகிறோம், சுகிக்கும் திறத்தையும் இழந்துவிடுகிறோம். முதுமை செலுத்தும் கொடுங்கோன்மையினால், நமக்கு வேண்டாத அடிமை நிலை ஏற்படுகிறது. இதற்குக் காரணம், முதியவர்களுடைய ஆற்றல் அல்ல, நம்முடைய சகிப்புத் தன்மைதான். நீ என்னிடம் வரவேண்டும்; வந்தபின் இதைப் பற்றி மேலும் பேசவேண்டும். நான் தட்டியெழுப்பும் வரை, நம் தந்தை உறக்கத்தில் இருப்பாரேயானால், அவருடைய வருவாயில் பாதிப் பங்கை நீ நிரந்தரமாக அனுபவிக்கலாம். உன்னுடைய அண்ணனுக்கு உகந்தவனாயும் வாழலாம். எட்கார்."

ஹூம், சதி! "நான் தட்டியெழுப்பும் வரை அவர் உறக்கத்திலிருப்பாரேயானால், அவருடைய வருவாயில் பாதியை நீ அனுபவிக்கலாம்."

என் மகன் எட்கார்! இப்படி எழுதவும் அவனுக்குக் கையிருந்ததா? இந்த யோசனையை வளர்ப்பதற்கு, ஒரு இதயமும், மூளையுமிருந்ததா? உனக்கு இது எப்போது வந்தது? கொண்டு வந்தது யார்?

**எட்ம:** பிரபு, அது என்னிடம் கொண்டுவரப்படவில்லை. அதில் தான் சூழ்ச்சி இருக்கிறது. என் அறையில் ஜன்னலிலே அது போடப்பட்டிருந்தது.

**க்ளாஸ்:** அண்ணனுடைய கையெழுத்து என்று உனக்குத் தெரியுமா?

**எட்ம:** உள்ளடக்கம் நல்லதாயிருந்திருந்தால், கையெழுத்து அவனுடையதே என்று பிரமாணம் செய்திருப்பேன். கடிதத்திலுள்ளதைப் பார்க்கும்போது, அது அவனுடைய

**GLOUCESTER :** It is his.

**EDMUND :** It is his hand, my lord; but I hope his heart is not in the contents.

**GLOUCESTER :** Hath he never heretofore sounded you in this business?

**EDMUND :** Never, my lord : but I have heard him oft
maintain it to be fit, that, sons at perfect age,
and fathers declining, the father should be as
ward to the son, and the son manage his revenue.

**GLOUCESTER :** O villain, villain! His very opinion in the
letter! Abhorred villain! Unnatural, detested,
brutish villain! worse than brutish! Go, sirrah,
seek him; I'll apprehend him : abominable villain!
Where is he?

**EDMUND :** I do not well know, my lord.
If it shall please
you to suspend your indignation against my
brother till you can derive from him better
testimony of his intent, you shall run a certain
course; where, if you violently proceed against
him, mistaking his purpose, it would make a great
gap in your own honour, and shake in pieces the
heart of his obedience. I dare pawn down my life
for him, that he hath wrote this to feel my
affection to your honour, and to no further
pretence of danger.





கையெழுத்தில் இல்லாமல் இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.

**க்ளாஸ்:** அவனுடையதுதான் அது.

**எட்ம:** பிரபு, அவனுடைய கைதான் எழுதியிருக்கிறது. ஆனால், அவனுடைய கைவழி அவன் இதயம் செல்லவில்லை என்று நம்புகிறேன்.

**க்ளாஸ்:** இந்தக் காரியம் பற்றி அவன் இதற்குமுன் உன்னை ஆழம் பார்த்ததில்லையா?

**எட்ம:** ஒருக்காலும் கிடையாது, பிரபு. ஆனால், அவன் சொல்லுவான், “மக்கள் பக்குவம் பெற்று, தந்தையர் வயோதிகம் அடைந்தபின், தகப்பன் மகனுடைய ஆளுகைக்கு உட்பட வேண்டும், மகனே சொத்தை ஆளவேண்டும்“ என்று அடிக்கடி சொல்லுவான்.

**க்ளாஸ்:** ஓ, அயோக்கியன், அயோக்கியன். அவனுடைய அதே கருத்துதான் இந்தக் கடிதத்தில்! ஒதுக்கப்படவேண்டிய கயவன்! இயல்பு திரிந்த, வெறுக்கத்தக்க, மிருகத்தனமான கயவன்! மிருகத்தைக் காட்டிலும் இழிந்தவன்! போ, அந்த அயோக்கியப் பயலைத் தேடிப்பிடி. அவன் எங்கே?

**எட்ம:** எனக்கு நன்றாகத் தெரியாது, பிரபு. அண்ணனுடைய நோக்கம் என்ன என்பதற்கு இதைக் காட்டிலும் நல்ல சான்று கிடைக்கும்வரை, தயவுசெய்து தங்கள் கோபத்தை அடிக்கிக் கொள்ள வேண்டும். அவன் கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, அவன் மீது ஆத்திரமாக நடவடிக்கைகள் எடுத்தால், உங்களுடைய மானத்துக்குப் பெருங்கேடு விளையும், அவன் உங்களிடம் வைத்திருக்கும் பயமும் பணிவும் தவிடு பொடியாகிவிடும்.

**GLOUCESTER :** Think you so?

**EDMUND** : If your honour judge it meet,
I will place you where you shall hear us
confer of this, and by an
auricular assurance have
your satisfaction; and
that without any further delay
than this very evening.

**GLOUCESTER** : He cannot be such a monster--

**EDMUND :** Nor is not, sure.

**GLOUCESTER** : To his father,
that so tenderly and entirely
loves him. Heaven and earth! Edmund, seek him
out : wind me into him, I pray you : frame the
business after your own wisdom.
I would unstate myself,
to be in a due resolution.

**EDMUND** : I will seek him, sir, presently :
convey the business as I shall find
means and acquaint you withal.

**GLOUCESTER :** These late eclipses
in the sun and moon portend
no good to us : though the wisdom of nature can
reason it thus and thus, yet nature finds itself
scourged by the sequent effects : love cools,







தங்களிடத்தில் நான் வைத்திருக்கும் அன்பைச் சோதிக்கவே இவ்வாறு அவன் எழுதியிருக்க வேண்டும். இதில், வேறு அபாயகரமான நோக்கம் இல்லை என்று நான் சொல்லுவேன். இதை உறுதிப்படுத்துவதற்காக என் உயிரையே அடகு வைக்கத் தயார்.

**க்ளாஸ்:** அப்படி நினைக்கிறாயா நீ?

**எட்ம:** இன்று மாலையே ஒரு ஏற்பாடு செய்கிறேன். நானும் அவனும் இது விஷயமாகக் கலந்து பேசுவோம். எங்கள் பேச்சை ஒட்டுக் கேட்பதற்கு வசதியான இடத்தில் தங்களை வைத்து விடுகிறேன். உங்கள் காதாலேயே எங்கள் பேச்சைக் கேட்டு நீங்கள் திருப்தி அடைந்து கொள்ளலாம். இப்படியே செய்யலாம் அல்லவா?

**க்ளாஸ்:** அவன் அப்படி ஒரு அரக்கனா?

**எட்ம:** இருக்காது, இருக்காது.

**க்ளாஸ்:** அவனை முழு மனதுடனும், இங்கிதமாகவும் நேசிக்கும் அப்பனுக்கா!
அட வானமே, பூமியே! எட்மன்ட், அவனை விரைவில் தேடிக் கண்டுபிடி. உன்னை அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக்கிக்கொள். உன்னுடைய ஆலோசனைப்படியே காரியத்தைச் சமாளி. சந்தேகத்துக்கு இடங்கொடுக்காமல், நான் நடந்து கொள்வேன்.

**எட்ம:** ஐயா, அவனை இப்பொழுதே தேடிக் கண்டுபிடிக்கிறேன். முடிந்த மட்டும், ரகசியமாகக் காரியத்தைச் சமாளித்து, உங்களுக்குத் தகவல் கொடுக்கிறேன்.

**க்ளாஸ்:** சூரிய கிரஹணங்களும் சந்திர கிரஹணங்களும்

friendship falls off, brothers divide : in cities, mutinies; in countries, discord; in palaces, treason; and the bond cracked 'twixt son and father. This villain of mine comes under the prediction; there's son against father : the king falls from bias of nature; there's father against child. We have seen the best of our time : machinations, hollowness, treachery, and all ruinous disorders, follow us disquietly to our graves. Find out this villain, Edmund; it shall lose thee nothing; do it carefully. And the noble and true-hearted Kent banished! his offence, honesty! 'Tis strange.

Exit



**EDMUND :** This is the excellent foppery of the world, that, when we are sick in fortune,--often the surfeit of our own behavior,--we make guilty of our disasters the sun, the moon, and the stars : as if we were villains by necessity; fools by heavenly compulsion; knaves, thieves, and treachers, by spherical predominance; drunkards, liars, and adulterers, by an enforced obedience of planetary influence; and all that we are evil in, by a divine thrusting on : an admirable evasion of whoremaster man, to lay his goatish disposition to the charge of a star! My father compounded with my mother under the dragon's tail; and my nativity was under Ursa





காலந்தாழ்ந்து வருவதைப் பார்க்கும்போது, நமக்குக் கெட்ட காலம் வரப்போகிறது என்று தெரிகிறது. காரண காரியங்களைக் காட்டி கிரஹணங்களை விளக்குகிறது விஞ்ஞானம். ஆனால், கிரஹணங்கள் எப்படியோ நம்மைப் பீடித்துத் துன்புறுத்துகின்றன; காதல் ஆறிப்போகிறது, நட்பு தடுமாறுகிறது, சகோதரர்கள் பிரிகிறார்கள்; நகரங்களில் கலகங்கள், நாடுகளில் குழப்பம், அரண்மனைகளில் துரோகம்; அப்பனையும் மகனையும் பிணைக்கும் அன்புக் கயிறு அறுந்து போகிறது. நான் பெற்ற கயவனும் இந்த உபாதைகளுக்கு ஆளாகிறான். தந்தையை எதிர்க்கும் தனயன், மதிகோணி மயங்கும் அரசன், பிள்ளையைப் பகைக்கும் தந்தை! நல்ல காலம் மலையேறி விட்டது. சூழ்ச்சியும், பொய்மையும், துரோகமும், குடி கெடுக்கும் குழப்பங்களும் நம்மைப் பீடித்து இடுகாட்டுக்கு அழைத்துச் செல்லுகின்றன.

எட்மன்ட், இந்த அயோக்கியனைக் கண்டுபிடி. அதனால் உனக்கு பாதகம் ஒன்றுமில்லை. எச்சரிக்கையோடு செயலாற்று.



கென்ட் பெருமான் ஒரு சத்திய வந்தன்; அவரை நாடு கடத்தியாகிவிட்டது! அவர் செய்த குற்றம்? யோக்கியனாயிருந்தது! எல்லாம் வேடிக்கைதான்.
[போகிறார்]

**எட்ம:** இந்த உலகத்தின் முட்டாள்தனம் எப்படி ஓங்கி வளர்ந்திருக்கிறது! நம்முடைய செய்கையால் நமக்கு அல்லல் ஏற்படுகிறது. இதற்கு, சூரியனையும், சந்திரனையும், விண்மீன்களையும் குற்றவாளிகளாக்குகிறோம்; வலுக்கட்டாயத்தினால் நாம் அயோக்கியர்களாகவும், களவாணிகளாகவும், துரோகிகளாகவும் மாறினது போலும், கிரஹங்களின் ஆதீனத்தால் குடிகாரர்களாகவும், பொய்யர்களாகவும், விபசாரிகளாகவும் திரிந்தது போலும், நம்மிடம் எத்தனை குற்றமிருக்கிறதோ, அத்தனைக்கும் இறைவனே பொறுப்பாளி போலும்! கெட்டிக்காரன் தான் இந்த மனிதப்பயல்! தன் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதிலே, மகா சமர்த்தன்! இந்த விலைமகள் நாயகனைப் பாராட்ட வேண்டியதுதான்! இந்த

major; so that it follows, I am rough and lecherous. Tut, I should have been that I am, had the maidenliest star in the firmament twinkled on my bastardizing. Edgar--

Enter EDGAR

And pat he comes like the catastrophe of the old comedy : my cue is villanous melancholy, with a sigh like Tom o' Bedlam. O, these eclipses do portend these divisions! fa, sol, la, mi.

**EDGAR :** How now, brother Edmund!
what serious
contemplation are you in?

**EDMUND :** I am thinking, brother,
of a prediction I read this other day,
what should follow these eclipses.

**EDGAR** : Do you busy yourself about that?

**EDMUND :** I promise you, the effects
he writes of succeed unhappily;
as of unnaturalness between the child
and the parent; death, dearth,
dissolutions of ancient amities;
divisions in state, menaces and
maledictions against king and nobles; needless
diffidences, banishment of friends, dissipation
of cohorts, nuptial breaches, and I know not what.





வெள்ளாட்டு மூளைக்குப் பொறுப்பு, விண்மீன்களாமே! ராகுவின் வாலடியிலே என் அப்பன் என் ஆத்தாளைப் புணர்ந்தான், நான் சிம்ம லக்னத்தில் பிறவியெடுத்தேன், ஆகையால் நான் ஒரு முரடனாகவும், விபச்சாரியாகவும் இருக்கிறேன்! சீச்சீ, கள்ளத்தனமாக என்தாய் என்னை உண்டானபோது, கற்பிற் சிறந்த நக்ஷத்திரமே கண்சிமிட்டியிருந்தாலும், இப்போது இருக்கிறபடியே தான் நான் இருந்திருப்பேன்.
[எட்கார் வருகிறான்]

திடீரென்று வருகிறானே இவன், பழைய ஹாஸ்ய நாடகங்களில் தொப்பென்று குதிக்கும் சோக நிகழ்ச்சியைப் போல, பெட்லமிலிருந்து வரும் பைத்தியக்கார டாம் போல நான் பாவனை செய்ய வேண்டும் முகத்தில் சோகத்தைத் தேக்கி, பெருமூச்சு விடவேண்டும்.

ஓ, இந்த கிரஹணங்கள் குழப்பத்தை அறிவிக்கும் அபசகுனங்கள். [பாடுகிறான்] பா, ஸோல், லா, மீ.

**எட்கார்:** என்ன, தம்பி, சிந்தனையில் ஆழ்ந்து போயிருக்கிறாயே, என்ன, எட்மன்ட்?

**எட்ம:** அண்ணா, இந்த கிரஹணங்களுக்குப் பின்னால், என்ன நேரிடப் போகிறது என்பதைப் பற்றி அன்றொரு நாள் படித்தேன். அதைப் பற்றிய சிந்தனையில் இருக்கிறேன்.

**எட்கார்:** இதையெல்லாம் நினைத்து நீ கவலைப்படுவதுண்டா?

**எட்ம:** அவன் சொன்ன ஜோஸ்யம் பலித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது வருந்துகிறேன். குழந்தைக்கும், பெற்றோருக்கும் இடையிலிருக்கும் இயல்பான உறவு திரிகிறது; சாவு, பஞ்சம், பழமையான நட்பின் அழிவு, ராஜியத்தில் குழப்பம், அரசனுக்கும் பிரபுக்களுக்கும் அபாயம், வேண்டாத அச்சம்; அன்பர்கள் நாடு கடத்தப்படுகிறார்கள்; சேனைகள் விரயமாகின்றன; தம்பதிகள்

**EDGAR :** How long have you been a sectary astronomical?

**EDMUND :** Come, come; when saw you my father last?

**EDGAR** : Why, the night gone by.

**EDMUND :** Spake you with him?

**EDGAR :** Ay, two hours together.

**EDMUND :** Parted you in good terms? Found you no displeasure in him by word or countenance?

**EDGAR** : None at all.

**EDMUND :** Bethink yourself wherein you may have offended him : and at my entreaty forbear his presence till some little time hath qualified the heat of his displeasure; which at this instant so rageth in him, that with the mischief of your person it would scarcely allay.

**EDGAR :** Some villain hath done me wrong.

**EDMUND :** That's my fear. I pray you, have a continent forbearance till the spied of his rage goes slower; and, as I say, retire with me to my lodging, from whence I will fitly bring you to hear my lord speak : pray ye, go; there's my key : if you do stir abroad, go armed.

பிரிகிறார்கள். இன்னும் என்னென்னவோ!

**எட்கார்:** இந்த வான சாஸ்திரப் படிப்பு எவ்வளவு காலமாக நடக்கிறது?

**எட்ம:** சரி, சரி, நீ கடைசியாக என் அப்பாவை எப்பொழுது பார்த்தாய்?

**எட்கார்:** ஏன், நேற்றிரவில் கூட.

**எட்ம:** அவருடன் பேசினாயா?

**எட்கார்:** ஆம். இரண்டு மணி நேரம் ஒன்றாக இருந்தோம்.

**எட்ம:** அன்போதுதானே இருவரும் பிரிந்தீர்கள்? சொல்லிலோ, முகக் குறியிலோ அவர் அதிருப்தியைக் காட்டினாரா?

**எட்கார்:** கிடையவே கிடையாது.

**எட்ம:** யோசனை பண்ணிப்பார். அவர் மனம் கோணும்படியாக ஏதோ செய்திருக்கிறாய். அவர் கோபம் ஆறும் வரை, அவரை நெருங்காதே. ஒரே கொதிப்பிலே இருக்கிறார். உன் முகத்தைக் கண்டால், கெட்டது காரியம்.

**எட்கார்:** எவனோ ஒரு அயோக்கியப் பயல் எனக்குக் கேடு செய்திருக்கிறான்.

**எட்ம:** எனக்கும் அந்தப் பயம்தான். அவர் கோபம் தணியும் வரையில் கொஞ்சம் பொறுத்துக் கொள். என்னோடு என் இருக்கைக்கு வா. அங்கிருந்து சமயம் பார்த்து உன்னை அப்பாவிடம் அழைத்துச் செல்லுகிறேன். போ, இதோ இருக்கிறது என் திறவு கோல். வெளியே போவதாக இருந்தால், ஆயுதபாணியாகப் போ.

**EDGAR :** Armed, brother!

**EDMUND** : Brother, I advise you to the best; go armed : I am no honest man if there be any good meaning towards you : I have told you what I have seen and heard; but faintly, nothing like the image and horror of it : pray you, away.

**EDGAR :** Shall I hear from you anon?

**EDMUND :** I do serve you in this business.
Exit EDGAR

A credulous father! and a brother noble,
Whose nature is so far from doing harms,
That he suspects none : on whose foolish honesty
My practises ride easy! I see the business.
Let me, if not by birth, have lands by wit :
All with me's meet that I can fashion fit.

Exit

## SCENE III.

The Duke of Albany's palace.
Enter GONERIL, and OSWALD, her steward

**GONERIL :** Did my father strike my gentleman for chiding of his fool?

**OSWALD :** Yes, madam.

**எட்கார்:** தம்பி, ஆயுதபாணியாகவா?

**எட்ம:** அண்ணா, உனக்கு நல்லது சொல்லுகிறேன், ஆயுதம் தாங்கியே போ. உன் நன்மையைக் கருதவில்லையென்றால், நான் ஒரு அயோக்கியன். நான் கண்டதையும், கேட்டதையும் உன்னிடம் சொன்னேன். முழு மூலத்தையும் சொன்னால், பதற்றமே ஏற்படும். விரைவில் போய்விடு.

**எட்கார்:** தகவல் கொடுப்பாயல்லவா?

**எட்ம:** இந்தக் காரியத்தில் உனக்கு வேண்டியதைச் செய்வேன்.
[எட்கார் போகிறான்]

**அப்பன் ஏமாளி:** அண்ணனோ பெருங்குணத்தவன், தான் கேடு நினைப்பதுமில்லை. மற்றவர்கள் தனக்குக் கேடு செய்வார்களென்று எதிர்பார்ப்பதுமில்லை. இந்த வெள்ளை மனத்தவனிடத்திலே, என் கைவரிசை எளிதில் பலிக்கும். நிலைமை இப்படி இருக்கிறது. பிறப்பினால் இல்லையென்றால், சூழ்ச்சியினால் சொத்தையடையப் போகிறேன். காரிய சாதனைக்காகப் பயன்படும் எதுவும் என் உள்ளத்துக்கு உகந்ததே.

## காட்சி 3

ஆல்பனி பிரபுவின் அரண்மனை
[கானெரிலும், அவளுடைய காரியஸ்தர்
ஆஸ்வால்டும் வருகிறார்கள்]

**கானெ:** அவருடைய கோமாளியைத் திட்டியதற்காக, என்னுடைய கனவானைத் தந்தையடித்தாரா?

**ஆஸ்வா:** ஆம், அம்மணி.

**GONERIL :** By day and night he wrongs me; every hour
He flashes into one gross crime or other,
That sets us all at odds : I'll not endure it :
His knights grow riotous, and himself upbraids us
On every trifle. When he returns from hunting,
I will not speak with him; say I am sick :
If you come slack of former services,
You shall do well; the fault of it I'll answer.

**OSWALD** : He's coming, madam; I hear him.

Horns within

**GONERIL :** Put on what weary negligence you please,
You and your fellows; I'll have it come to question :
If he dislike it, let him to our sister,
Whose mind and mine, I know, in that are one,
Not to be over-ruled. Idle old man,
That still would manage those authorities
That he hath given away! Now, by my life,
Old fools are babes again; and must be used
With cheques as flatteries,
when they are seen abused.
Remember what I tell you.

**OSWALD** : Well, madam.

**GONERIL :** And let his knights have
colder looks among you;
What grows of it, no matter; advise your fellows so :
I would breed from hence occasions, and I shall,







**கானெ:** இரவும், பகலும் அவரால் எனக்குத் தொல்லை. மணிக்கொரு தீங்கிழைக்கிறார். அது நம்மைத் தொல்லைக்குள்ளாக்குகிறது. என்னால் இதைப் பொறுக்க முடியாது. அவருடைய வீரர்களே கலகப் பிரியர்களாயிருக்கிறார்கள். சில்லறைக் காரியங்களுக்கெல்லாம் அவரும் நம்மைக் கண்டிக்கிறார். அவர் வேட்டையாடி விட்டுத் திரும்பியபின் நான் அவரோடு பேசப்போவதில்லை. எனக்கு உடல் நலம் இல்லையென்று அவரிடம் சொல்லிவிடு. இதுவரையில் நீ அவருக்குச் செய்துவந்த பணிவிடையைக் கொஞ்சம் மட்டுப்படுத்திக் கொண்டால் நல்லது. குற்றம் சொன்னால், நான் ஏற்றுக் கொள்கிறேன்.

**ஆஸ்வா:** அம்மணி, அவர் வந்து கொண்டிருக்கிறார். சப்தம் கேட்கிறது.

[உள்ளிருந்து கொம்பொலி வருகிறது]

**கானெ:** நீயும் உன் ஆட்களும் கூடிய மட்டும் அசட்டையாயிருங்கள். ஏன் என்று கேட்கட்டும், அவருக்குப் பிடிக்கவில்லையென்றால், தங்கை வீட்டுக்குப் போகட்டும். அவளும் நானும் இந்தக் காரியத்தில் மனமொருமித்தவர்கள். இவர் எங்களைப் படுத்த விடப் போவதில்லை. விட்டுக் கொடுத்த அதிகாரத்தை இன்னும் செலுத்தப் பார்க்கிறார் இந்த அசட்டுக் கிழடு.

உண்மையில் கிழட்டு முட்டாள்கள் மறுபடியும் சிறு குழந்தைகளாகிவிடுகிறார்கள். அவர்களைத் தாஜாப் பண்ண வேண்டும், மசியாவிட்டால், அவர்களை அடக்கி ஆளவேண்டும். சொன்னதை நினைவில் வைத்துக் கொள்.

**ஆஸ்வா:** நல்லது, அம்மணி.

**கானெ:** அவருடைய வீரர்களிடத்திலே அலட்சியமாய் நடந்து கொள்ள வேண்டும். அதனால் என்ன விளைந்தாலும் கவலையில்லை. உன்னுடைய ஆட்களிடத்திலும் இதைச்

That I may speak : I'll write straight to my sister,
To hold my very course. Prepare for dinner.

Exeunt

## SCENE IV.

A hall in the same.
Enter KENT, disguised

**KENT :** If but as well I other accents borrow,
That can my speech defuse, my good intent
May carry through itself to that full issue
For which I razed my likeness. Now, banish'd Kent,
If thou canst serve where thou dost stand condemn'd,
So may it come, thy master, whom thou lovest,
Shall find thee full of labours.

Horns within. Enter KING LEAR, Knights, and Attendants

**KING LEAR :** Let me not stay a jot for dinner; go get it ready.

Exit an Attendant

How now! what art thou?

**KENT :** A man, sir.

**KING LEAR** : What dost thou profess?
what wouldst thou with us?

**KENT**







சொல்லிவை. இனி, பல வாய்ப்புகளை உண்டாக்கிக் கொள்ளப் போகிறேன். மனசிலிருப்பதை விட்டுப் பேசவும் போகிறேன். இதைப் போலவே செய்யும்படி என் தங்கைக்கும் எழுதப்போகிறேன். சாப்பாடு தயாராகட்டும்.

## காட்சி 4

அதே அரண்மனையில் ஒரு மண்டபம்
[மாறுவேஷம் பூண்டு கென்ட் வருகிறார்]

**கென்ட்:** வேறொரு குரலை மாத்திரம் நான் இரவல் வாங்கக் கூடுமானால், என் சொந்தக் குரலை மறைத்துக் கொள்ளலாம். மாறுவேஷம் பூண்ட நோக்கத்தையும் சரிவர நிறைவேற்றலாம்.

நாடுகடத்தப்பட்ட கென்ட்டே! தண்டிக்கப்பட்ட இடத்திலிருந்து கொண்டே நீ சேவை செய்ய முடியுமானால், நீ விரும்பி நேசிக்கும் அரசன் உன் உழைப்பைக் கண்டு மகிழ்வான்.

[கொம்பு ஊதுகிறது. லீயர், வீரர்கள், பணியாட்கள் வருகிறார்கள்]

லீயர் : சாப்பாட்டுக்காகக் கொஞ்சங்கூடக் காத்திருக்க முடியாது. போ, விரைவில் தயார் செய்.

[பணியாள் போகிறான்]

என்னப்பா, நீ யார்?

**கென்ட்** ஒரு மனிதன், ஐயா,

**லீயர்** : என்ன வேலை பார்க்கிறாய்? உனக்கு என்னிடத்தில் என்ன வேலை?

**கென்ட்:** என் வெளித் தோற்றம் எப்படியோ, அப்படித்தான் என் உள்ளமும். என்னை நம்பினவர்களுக்கு உண்மையோடு

I do profess to be no less than I seem; to serve him truly that will put me in trust : to love him that is honest; to converse with him that is wise, and says little; to fear judgment; to fight when I cannot choose; and to eat no fish.

**KING LEAR :** What art thou?

**KENT** : A very honest-hearted fellow, and as poor as the king.

**KING LEAR** : If thou be as poor for a subject as he is for a king, thou art poor enough. What wouldst thou?

**KENT :** Service.

**KING LEAR :** Who wouldst thou serve?

**KENT :** You.

**KING LEAR :** Dost thou know me, fellow?

**KENT** : No, sir; but you have that in your countenance which I would fain call master.

**KING LEAR** : What's that?

**KENT** : Authority.

**KING LEAR :** What services canst thou do?

**KENT** : I can keep honest counsel, ride, run, mar a curious tale in telling it, and deliver a plain message





வேலை செய்வேன்; நல்லவனை நேசிப்பேன்; பேச்சைக் குறைத்துக் கொண்ட விவேகியிடத்திலே, பேச்சு வைத்துக் கொள்வேன்; கடவுளுக்கு பயப்படுவேன்; போக்கில்லை யென்றால், போராட்டத்தில் இறங்குவேன்; மீன் சாப்பிட மாட்டேன்.

**லீயர் :** நீ யென்ன செய்கிறாய்?

**கென்ட்:** உண்மையுள்ளவன் நான்; அரசனைப் போல், ஓர் ஏழை.

**லீயர் :** அரசன் என்ற நிலையில் வைத்துப் பார்த்தால், இந்த அரசன் ஏழைதான். பிரஜையென்ற நிலையில், நீயும் அந்த அளவுக்கு ஏழையாயிருந்தால், உன்னைப் பரம ஏழையென்றே சொல்ல வேண்டும்.

**கென்ட்:** அடியேன்.

**லீயர் :** யாருக்கு அடியானாக இருக்க விரும்புகிறாய்.

**கென்ட்:** தங்களுக்கு

**லீயர் :** என்னைத் தெரியுமாடா உனக்கு?

**கென்ட்:** தெரியாது, ஐயா. ஆனால் தங்கள் வதனத்தைப் பார்க்கும்போது, தங்களை எஜமானாகக் கருதத் தோன்றுகிறது.

**லீயர் :** வதனத்தில் என்ன இருக்கிறது?

**கென்ட்:** அதிகாரம்

**லீயர் :** உனக்கு என்ன வேலை தெரியும்?

**கென்ட்:** ரகசியத்தைக் காப்பாற்றத் தெரியும், ஓடிச் சாடத் தெரியும், குதிரை ஏற்றம் தெரியும், நல்ல கதையைச் சொல்லிக்

bluntly : that which ordinary men are fit for, I am qualified in; and the best of me is diligence.

**KING LEAR :** How old art thou?

**KENT** : Not so young, sir, to love
a woman for singing, nor so old to dote
on her for any thing :
I have years on my back forty eight.

**KING LEAR :** Follow me; thou shalt serve me :
if I like thee no worse after dinner,
I will not part from thee yet.
Dinner, ho, dinner!
Where's my knave? my fool?
Go you, and call my fool hither.



Exit an Attendant

Enter OSWALD

You, you, sirrah, where's my daughter?

**OSWALD :** So please you,--

Exit

**KING LEAR :** What says the fellow there?
Call the clotpoll back.

Exit a Knight





கெடுக்கத் தெரியும். வெள்ளைச் செய்தியை முரட்டுத் தனமாகச் சொல்லுவேன். பாமர மக்கள் செய்யக்கூடியதை யெல்லாம் எனக்கும் செய்யத் தெரியும். என்னுடைய தனிச்சிறப்பு என்னவென்றால், உண்மையோடு உழைப்பேன்.

**லீயர் :** உனக்கு என்ன வயது?

**கெண்ட்:** ஐயா, பாட்டுக்காக ஒரு பெண்ணைக் காதலிக்கும் அளவுக்கு நான் இளைஞன் அல்ல; எடுத்ததற்கெல்லாம் அவள் நாடியைத் தாங்கும் அளவுக்கு நான் முதியவனும் அல்ல. என் முதுகில் மேல் குந்திக் கொண்டிருப்பவை நாற்பத்தெட்டு ஆண்டுகள்.

**லீயர் :** என்னோடு வா, என் பணியாளாக இரு. சாப்பிட்ட பிறகும் உன்மேல் இஷ்டம் குறையாதிருக்குமானால், உன்னை இப்போதைக்கு விட்டுப் பிரிய மாட்டேன்.



சாப்பாடு, ஒ, சாப்பாடு! எங்கே என் கயவனை, என் கோமாளியை? நீ போய் என் கோமாளியை அழைத்து வா.

[ஒரு பணியாள் போகிறான்]

[ஆஸ்வால்ட் வருகிறான்]

ஏண்டா, உன்னைத் தானே, எங்கே என் மகள்?

**ஆஸ்வா:** நினைத்தபடி செய்யுங்கள்.

[போகிறான்]

**லீயர் :** அந்தப்பயல் என்ன சொல்லுகிறான்? அந்த மட்டியை வரசொல்.
[வீரன் போகிறான்]

Where's my fool, ho? I think the world's asleep.

Re-enter Knight

How now! where's that mongrel?

**Knight :** He says, my lord, your daughter is not well.

**KING LEAR :** Why came not the slave back to me when I called him.

**Knight :** Sir, he answered me in the roundest manner, he would not.

**KING LEAR** : He would not!

**Knight :** My lord, I know not what the matter is; but, to my judgment, your highness is not entertained with that ceremonious affection as you were wont; there's a great abatement of kindness appears as well in the general dependants as in the duke himself also and your daughter.

**KING LEAR :** Ha! sayest thou so?

**Knight :** I beseech you, pardon me, my lord, if I be mistaken; for my duty cannot be silent when I think your highness wronged.

**KING LEAR** : Thou but rememberest me of mine own conception : I have perceived a most faint neglect of





ஹோ, என் கோமாளி எங்கே? உலகமே தூங்கிக் கொண்டிருக்கிறதா?
[வீரன் வருகிறான்]

என்ன, அந்த ஜாதிகெட்ட நாய் எங்கே?

**வீரன்:** பிரபு, தங்கள் மக்களுக்கு உடல் நலம் இல்லையென்று அவன் சொல்லுகிறான்.

**லீயர் :** நான் கூப்பிட்டபோது, இந்தப் புழுக்கை ஏன் வராமலிருந்தான்?

**வீரன்:** 'மாட்டேன்' என்று நாக்கு மேலே பல்போட்டுசொல்லுகிறான், பிரபு.

**லீயர் :** மாட்டானா!

**வீரன்:** பிரபு, விஷயம் என்னவென்று புரியவில்லை. என் பார்வையில், முன்பு தங்களுக்குக் கிடைத்த உபசாரமும் அன்பும் இப்போது கிடைப்பதாகத் தெரியவில்லை. மொத்தத்தில், வேலையாட்களானாலும் சரி, கோமகனானாலும் சரி, தங்கள் மகளானாலும் சரி, அவர்கள் எல்லோரும் காட்டி வந்த அன்பு இப்போது திடீர் என்று குறைந்துவிட்டது.

**லீயர் :** ஆ, அப்படியா சொல்லுகிறாய்?

**வீரன்:** என்மேல் தவறு இருந்தால், மன்னிக்க வேண்டும், பிரபு, தங்களுக்கு இழுக்கு நேரிடும்போது வாயை மூடிக்கொண்டிருப்பது என் கடமையல்ல.

**லீயர் :** நான் எண்ணியதைத்தான் நீயும் நினைவுறுத்துகிறாய். ஏதோ ஒரு அலட்சிய பாவம் நிலவுவதைக் கொஞ்ச காலமாகவே நான் கவனித்து வருகிறேன். என்னுடைய பொறாமையாலும், சந்தேகத்தினாலும் ஏற்பட்ட கற்பனை தானோ அது என்று

late; which I have rather blamed as mine own jealous curiosity than as a very pretence and purpose of unkindness : I will look further into't. But where's my fool? I have not seen him this two days.

**Knight :** Since my young lady's going into France, sir, the fool hath much pined away.

**KING LEAR :** No more of that; I have noted it well. Go you, and tell my daughter I would speak with her.

Exit an Attendant

Go you, call hither my fool.

Exit an Attendant

Re-enter OSWALD

O, you sir, you, come you hither, sir : who am I, sir?

**OSWALD** : My lady's father.

**KING LEAR :** 'My lady's father'! my lord's knave : your whoreson dog! you slave! you cur!

**OSWALD :** I am none of these, my lord; I beseech your pardon.

**KING LEAR :** Do you bandy looks with me, you rascal? Striking him

**OSWALD :** I'll not be struck, my lord.







நினைத்தேன், அன்பின்மையால் ஏற்பட்ட அலட்சியம் இல்லையோ என்று திகைத்தேன். இனி, அதை ஊன்றிக் கவனிக்கிறேன்.

என்னுடைய கோமாளியை எங்கே? இந்த இரண்டு நாட்களாக அவனைப் பார்க்கவில்லையே.

**வீரன்:** நமது அரசிளங்குமரி ப்ரான்ஸுக்குப் போனதிலிருந்து, கோமாளி மிகவும் வாடிப்போனான்.

**லீயர் :** போதும் அதைப் பற்றிய பேச்சு. நானும் அதைக் கவனித்துக் கொண்டேன். நீ போய் என் மகளிடம் சொல், நான் அவளுடன் பேச வேண்டும் என்று.
[ஒரு பணியாள் போகிறான்]

நீ போய் கோமாளியைக் கொண்டு வா. [இன்னொரு பணியாள் போகிறான்]

[ஆஸ்வால்ட் மறுபடியும் வருகிறான்]

ஓ, நீங்களா, ஐயா, இங்கு வாருங்கள், நான் யார், ஐயா?

**ஆஸ்வா:** என் சீமாட்டியின் தந்தை.

**லீயர் :** என் சீமாட்டியின் தந்தை! அயோக்கியப் பயலே, வேசி மகனே, அடிமையே, நாயே.

**ஆஸ்வா:** பிரபு, நீங்கள் சொன்ன ஆசாமிகளில் ஒருவன் அல்ல நான். மன்னிக்க வேண்டும், பிரபு.

**லீயர் :** என்னடா, முழிக்கிறாய், கசவாளிப்பயலே!
[அடிக்கிறார்]
**ஆஸ்வா:** அடிபட மாட்டேன், பிரபு.

**KENT :** Nor tripped neither, you base football player. Tripping up his heels

**KING LEAR** : I thank thee, fellow; thou servest me, and I'll love thee.

**KENT :** Come, sir, arise, away! I'll teach you differences : away, away! if you will measure your lubber's length again, tarry : but away! go to; have you wisdom? so.

Pushes OSWALD out

**KING LEAR** : Now, my friendly knave, I thank thee : there's earnest of thy service.

Giving KENT money

Enter Fool

**Fool :** Let me hire him too : here's my coxcomb.

Offering KENT his cap

**KING LEAR :** How now, my pretty knave! how dost thou?

**Fool :** Sirrah, you were best take my coxcomb.

**KENT :** Why, fool?

**Fool :** Why, for taking one's part that's out of favour : nay, an thou canst not smile as the wind sits, thou'lt catch cold shortly : there, take my coxcomb :

**கெண்ட்:** [காலை இடறிவிட்டுக் கொண்டு] இடறப்படவும் மாட்டாய், பந்தாடும் பயலே.

**லீயர் :** உனக்கு நன்றி; நல்ல பணியாள் நீ, உன்னைப் பாராட்டுகிறேன்.

**கெண்ட்:** எழுந்துபோ, ஐயா, உனக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன். போ, போ, திரும்பவும் விழவேண்டும் என்றால், நில். போய்த் தொலை, மூளை கீளை இருக்கிறதா? உ...ம்!
[ஆஸ்வால்டைத் தள்ளுகிறான்]

**லீயர் :** அருமை நண்பனே, வந்தனம். இதோ உனக்குப் பணம்.
[கெண்ட்டுக்குப் பணம் கொடுக்கிறார்]
[கோமாளி வருகிறான்]

**கோமாளி:** நானும் அவனைக் கூலிக்கு அமர்த்துகிறேன், இதோ, என் கோழிக் கொண்டை.
[தன் குல்லாவைக் கொடுக்கிறான்]

**லீயர் :** அருமைப் பயலே, நீ எப்படி இருக்கிறாய்?

**கோமாளி:** நீங்கள் என் குல்லாவை அணிந்து கொண்டால், ரொம்பப் பொருத்தமாக இருக்கும்.

**கெண்ட்:** ஏண்டா கோமாளி?

**கோமாளி:** ஏனோ? மற்றவர்கள் விரும்பாத பாத்திரமாயிருப்பதால் தான். இதோ இந்தக் கோமாளித் தொப்பியை ஏற்றுக்கொள்ளுங்கள். இந்தப் பயல் தன் இரு பெண் மக்களையும் நாடு கடத்திவிட்டு, மூன்றாவது மகளுக்கு, தன் விருப்பத்துக்கு மாறாக, ஆசீர்வாதம் செய்து விட்டான். இவனைப் பின் தொடர்ந்து செல்ல நீங்கள் விரும்பினால், கட்டாயம் இந்தக் கோமாளித் தொப்பியை அணிந்து கொள்ள வேண்டும். என்ன சொல்லுகிறீர், மாமா?

why, this fellow has banished two on's daughters, and did the third a blessing against his will; if thou follow him, thou must needs wear my coxcomb. How now, nuncle! Would I had two coxcombs and two daughters!

**KING LEAR** : Why, my boy?

**Fool** : If I gave them all my living, I'ld keep my coxcombs myself. There's mine; beg another of thy daughters.

**KING LEAR :** Take heed, sirrah; the whip.

**Fool :** Truth's a dog must to kennel; he must be whipped out, when Lady the brach may stand by the fire and stink.



**KING LEAR :** A pestilent gall to me!

**Fool :** Sirrah, I'll teach thee a speech.

**KING LEAR :** Do.

**Fool :** Mark it, nuncle :
Have more than thou showest,
Speak less than thou knowest,
Lend less than thou owest,
Ride more than thou goest,
Learn more than thou trowest,
Set less than thou throwest;
Leave thy drink and thy whore,
And keep in-a-door,
And thou shalt have more





எனக்கு மாத்திரம் இரண்டு கோமாளித் தொப்பியும், இரண்டு பெண்மக்களும் இருந்திருக்கலாகாதா!

**லீயர்** : பையா, ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

**கோமாளி:** என் உடமையெல்லாம் அவர்களுக்கு நான் கொடுத்திருந்தாலும், என் தொப்பியைக் கொடுக்காமல் வைத்திருப்பேன். எனக்கு என்று ஒரு தொப்பியிருக்கிறது. உங்கள் மக்களிடம் பிச்சை கேட்டாவது, ஒன்றை வாங்கிக் கொள்ளுங்கள்.

**லீயர்** : ஜாக்கிரதை, சவுக்கடி வேண்டுமா?

**கோமாளி:** உண்மையென்ற ஆண் நாயைச் சவுக்கடி கொடுத்து விரட்ட வேண்டியதுதான்; பெண் நாய் வேண்டுமானால், அனல் அருகே நின்று நாறிக் கொண்டிருக்கட்டும்.



**லீயர்** : தொல்லை பிடித்த வேப்பங்காயாகி விட்டாய் நீ.

**கோமாளி:** ஐயா, உங்களுக்கு ஒரு வாசகம் சொல்லித் தருகிறேன்.

**லீயர்** : சரி.

**கோமாளி:** கேளுங்கள், மாமா.

காட்டுவது குறைச்சலாக இருக்க வேண்டும், ஆனால் இடுப்பிலிருக்கும் சரக்கு அதிகமாயிருக்க வேண்டும்; தெரிந்ததையெல்லாம் டமாரம் அடித்து விடாதே; உனக்குக் கடன் எவ்வளவு இருக்கிறதோ, அதைக் காட்டிலும் குறைத்துக் கடன் கொடு; நடப்பதைக் காட்டிலும் அதிகமாக சவாரி செய்; தெரிந்ததைக் காட்டிலும் அதிகமாகக் கற்றுக் கொள்; ஆசைப்படுவதைக் காட்டிலும் குறைத்துப் பணயம் வை; குடிப்பதையும் வேசியையும் விட்டு விடு வீட்டை விட்டு வெளியே

Than two tens to a score.

**KENT :** This is nothing, fool.

**Fool :** Then 'tis like the breath of an unfee'd lawyer; you gave me nothing for't. Can you make no use of nothing, nuncle?

**KING LEAR :** Why, no, boy; nothing can be made out of nothing.

**Fool :** [To KENT] Prithee, tell him, so much the rent of his land comes to : he will not believe a fool.

**KING LEAR** : A bitter fool!

**Fool :** Dost thou know the difference, my boy, between a bitter fool and a sweet fool?

**KING LEAR :** No, lad; teach me.

**Fool :** That lord that counsell'd thee
To give away thy land,
Come place him here by me,
Do thou for him stand :
The sweet and bitter fool
Will presently appear;
The one in motley here,
The other found out there.

**KING LEAR :** Dost thou call me fool, boy?





போகாதே; எழுபதுக்குமேல் இருபதாண்டு வாழலாம்.

**கென்ட்:** இதில் ஒன்றுமில்லை, முட்டாள்.

**கோமாளி:** அப்படியானால், இது ஊதியமில்லாத வக்கீலின் மூச்சைப் போன்றது. இதைச் சொல்ல எனக்குப் பணமா கொடுத்தீர்கள்? ஒன்றுமில்லாததை உங்களால் பயன்படுத்த முடியுமா, மாமா?

**லீயர் :** முடியாது, பையா, முடியாது. ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றையும் உண்டாக்க முடியாது.

**கோமாளி:** [கென்ட்டைப் பார்த்து] அவருடைய நாட்டிலிருந்து அவருக்கு எவ்வளவு வருமானம் வரும் என்று அவருக்குச் சொல்லும். கோமாளி சொல்லை அவர் நம்ப மாட்டார்.

**லீயர் :** அட, கசந்த முட்டாள்!

**கோமாளி:** தம்பி கசந்த முட்டாளுக்கும், இனிச்ச முட்டாளுக்கும் உள்ள வேற்றுமை உனக்குத் தெரியுமா?

**லீயர் :** தெரியாது, சொல்லிக் கொடு.

**கோமாளி:** உம்முடைய ராஜியத்தைக் கொடுத்து விடும்படி உமக்குப் புத்திமதி சொன்னாரே, அந்தப் பிரவுவை என் பக்கத்தில் நிறுத்துங்கள். நீங்கள் அவருக்குப் பதில் நில்லுங்கள். இனிச்ச முட்டாள் யார், கசந்த முட்டாள் யார் என்று அப்போது தெரியும். ஒருத்தன் கோமாளித் தொப்பி அணிந்தவன். மற்றவன் யார் என்பது வெட்ட வெளிச்சம்.

**லீயர் :** பையா, என்னை முட்டாள் என்றா சொல்லுகிறாய்?

**கோமாளி:** மற்ற எல்லாப் பட்டங்களையும் நீங்கள் துறந்து விட்டீர்கள், இந்த பட்டமோ உங்களோடு பிறந்தது.

**Fool :** All thy other titles thou hast given away; that thou wast born with.

**KENT :** This is not altogether fool, my lord.

**Fool :** No, faith, lords and great men
will not let me; if I had a monopoly out,
they would have part on't : and ladies too,
they will not let me have all fool to myself;
they'll be snatching. Give me an egg,
nuncle, and I'll give thee two crowns.

**KING LEAR :** What two crowns shall they be?

**Fool :** Why, after I have cut the egg i'
the middle, and eat up the meat,
the two crowns of the egg. When thou
clovest thy crown i' the middle,
and gavest away both parts, thou borest
thy ass on thy back o'er the dirt :
thou hadst little wit in thy bald crown,
when thou gavest thy golden one away. If I speak
like myself in this, let him be whipped that first
finds it so.

**Singing**

Fools had ne'er less wit in a year;
For wise men are grown foppish,
They know not how their wits to wear,
Their manners are so apish.





**கென்ட்:** பிரபு, இவனை முழு முட்டாள் என்று சொல்ல முடியாது போலிருக்கிறதே.

**கோமாளி:** பிரபுக்களும், பெரியோர்களும் என்னை முழுமுட்டாளாக இருக்க விடமாட்டார்கள். முட்டாள்தனம் முழுவதையும் நான் விலைக்கு வாங்கிக் கொண்டாலும், அவர்கள் பங்களை அவர்கள் விடமாட்டார்கள். சர்வ சுதந்திரமாக நான் முட்டாள்தனத்தை அனுபவிப்பதைப் பெண்களும் சகிக்க மாட்டார்கள். அதை என்னிடமிருந்து பிடுங்கிக் கொண்டேயிருப்பார்கள். ஒரு முட்டையை என்னிடம் கொடுங்கள், மாமா, நான் உங்களுக்கு இரண்டு முடிகள் [கிரீடங்கள்] கொடுப்பேன்.

**லீயர் :** என்ன முடிகள்?

**கோமாளி:** முட்டையை நடுவிலே வெட்டி, உள்ளேயிருப்பதை நான் குடித்தபிறகு, மிஞ்சியிருப்பவை இரு முடிகள். நீங்கள் உங்கள் முடியை நடுவிலே வெட்டி, இரு பாகங்களையும் கொடுத்தபோது, கழுதையை முதுகிலே சுமந்தவன் கதையாயிருந்தது. தங்க முடியைக் கொடுத்தீர்களே, அப்போது அதற்குக் கீழையிருந்த வெற்று முடிக்குள்ளே கொஞ்சமானவது புத்தியிருந்ததாகத் தெரியவில்லை. நான் இப்படிப் பேசுவது தப்பு என்று எவனுக்குப் படுகிறதோ, அவனைச் சவுக்கால் அடிக்க வேண்டும்.

[பாடுகிறான்]

[நொண்டிச் சிந்து போல்]
கோமாளிக்குக் கிராக்கியில்லைஇவ்வருஷம்
கோமாளிக்குக் கிராக்கியில்லைபெரிய
அறிவுக் களஞ்சியங்கள் அடக்கம் கெட்டு
மூளை பறி கொடுத்த தால்அவர்கள்
முட்டாள்கள் போலாகி விட்டார்கள்
ஆதலினால் [கோமாளிக்குக் கிராக்கியில்லை]

**KING LEAR** : When were you wont to be so full of songs, sirrah?

**Fool :** I have used it, nuncle,
ever since thou madest thy
daughters thy mothers :
for when thou gavest them
the rod, and put'st down thine own breeches,

Singing

Then they for sudden joy did weep,
And I for sorrow sung,
That such a king should play bo-peep,
And go the fools among.
Prithee, nuncle, keep a schoolmaster
that can teach thy fool to lie :
I would fain learn to lie.

**KING LEAR :** An you lie, sirrah,
we'll have you whipped.

**Fool** : I marvel what kin thou and
thy daughters are : they'll have me
whipped for speaking true, thou'lt have
me whipped for lying; and sometimes I am
whipped for holding my peace. I had
rather be any kind o' thing than a fool :
and yet I would not be thee, nuncle; thou hast
pared thy wit o' both sides, and left nothing i'
the middle : here comes one o'the parings.



**லீயர் :** ஏன்டாப்பா, ஒரே பாட்டாயிருக்கிறதே. இது எத்தனை காலமாக?

**கோமாளி:** மாமா, உங்கள் குழந்தைகளை உங்கள் தாய்மார் ஆக்கினீர்களே, அது முதல்.

உங்கள் இடுப்பில் அணிந்த ஆடையை அவிழ்த்துப் போட்டுவிட்டு, உங்களை மொத்துவதற்காக, அவர்களிடம் பிரம்பை எப்போது கொடுத்தீர்களோ, அது முதல் நானும் பாட்டில் இறங்கி விட்டேன். [பாடுகிறான்]

இன்பத்தால் கண்ணீர் வடித்தனர்அவர்
இன்பத்தால் கண்ணீர் வடித்தனர்நானோ
துன்பத்தால் பண்களைப் பாடினே
பட்டத்து மன்னவன் "விட்டாச்சி" விளையாடி
முட்டாள்பட் டாளத்தில் சேரலாமாஎன்று
துன்பத்தால் பண்களைப் பாடினேன்.

மாமா, வாத்தியார் வைத்துச் சொல்லிக் கொடுத்தாலும், உங்கள் கோமாளி பொய் சொல்ல மாட்டான்.

**லீயர் :** பயலே, நீ பொய் சொன்னால், உனக்கு சவுக்கடி கிடைக்கும்.

**கோமாளி:** தங்களுக்கும், தங்கள் பெண் மக்களுக்கும் உள்ள உறவு விசித்திரமானது. நான் உண்மை சொன்னால், அவர்கள் என்னைச் சவுக்கால் அடிக்கச் சொல்லுவார்கள். நீங்களோ, நான் பொய் சொன்னால் சவுக்கால் அடிக்க விரும்புகிறீர்கள். சில வேளைகளில் வாயை மூடிக்கொண்டிருப்பதற்காக நான் சவுக்கால் அடிபடுகிறேன். கோமாளியைத் தவிர வேறு எந்த ஜந்துவாகவும் பிறந்திருக்கலாம். ஆனால், மாமா, நீங்களாக நான் இருக்க விரும்பமாட்டேன். தங்கள் புத்தியை இரண்டு சரி பாகமாகப் பிரிந்து விட்டீர்கள்; இரண்டுக்கும் இடையில் காலி

Enter GONERIL

**KING LEAR :** How now, daughter! what makes that frontlet on? Methinks you are too much of late i' the frown.

**Fool :** Thou wast a pretty fellow when thou
hadst no need to care for her frowning;
now thou art an O without a figure :
I am better than thou art now;
I am a fool, thou art nothing.

To GONERIL

Yes, forsooth, I will hold my tongue; so your face
bids me, though you say nothing. Mum, mum,
He that keeps nor crust nor crum,
Weary of all, shall want some.

Pointing to KING LEAR

That's a shealed peascod.

**GONERIL** : Not only, sir, this your all-licensed fool,
But other of your insolent retinue
Do hourly carp and quarrel; breaking forth
In rank and not-to-be endured riots. Sir,
I had thought, by making this well known unto you,
To have found a safe redress; but now grow fearful,
By what yourself too late have spoke and done.
That you protect this course, and put it on
By your allowance; which if you should, the fault





இடந்தான் கிடக்கிறது. அதில் ஒரு பாதி இதோ வருகிறேதே.

[கானெரில் வருகிறாள்]

**லீயர் :** என்ன சங்கதி, மகளே? மூஞ்சியை ஏன் சுழித்துக் கொண்டுவருகிறாய்? கொஞ்ச காலமாக, உன் முகத்தில் கோணல் அதிகமாகத் தெரிகிறதே.

**கோமாளி:** அவள் முகக் கோணலை நீ லக்ஷியம் செய்யாதிருந்த காலம், உன் நற்காலம். இப்போதோ, நீ ஒரு சுன்னம் ஆகிவிட்டாய். உன்னைக் காட்டிலும் நான் மேல். நானாவது ஒரு கோமாளி; அதுவுமில்லை, நீ. [கானெரிலை நோக்கி] உன் வாய் போசாவிட்டாலும், உன் முகம் கட்டளை போடுகிறதே. ஆகையால், நாவையடக்கிக் கொள்ளுகிறேன்.

வெறுவாய்க் கிலையையும் வெறுப்பில் துறந்தார்க்கும்
சிறு தேவையுண்டம்மா சீமாட்டியே,

[லீயரைச் சுட்டிக் காட்டிக் கொண்டு]

அது ஒரு வெற்றுப் பட்டாணிக் கூடு.

**கானெரில்:** ஐயா, என்னத்தைச் சொல்லவும் உரிமை பெற்றிருக்கிற உங்கள் கோமாளி மாத்திரமல்ல, உங்கள் பரிவாரத்திலுள்ள மற்றவர்களுமே, சதாசண்டை சல்லியம் செய்து கொண்டும், கலவரம் செய்து கொண்டுமிருக்கிறார்கள். அவர்கள் செய்கையைத் தாங்க முடியவில்லை. ஐயா, தங்களுக்கு இதைத் தெளிவாகத் தெரிவித்த பிறகாவது விமோசனம் கிடைக்குமென்று நினைத்தேன். ஆனால், உங்கள் பேச்சையும், நடவடிக்கைகளையும் பார்க்கும்போது, உங்கள் ஆதரவு அவர்களுக்கிருக்கிறது, உங்கள் தூண்டுதலின் பேரிலேயே அவர்கள் இப்படி நடக்கிறார்கள் என்று தெரிகிறது. உங்கள் தூண்டுதல் இனிமேலும் இருக்குமானால், குற்றம், இனி தண்டனையைத் தப்பமுடியாது. குற்றத்தினால் அவமானம்

Would not 'scape censure, nor the redresses sleep,
Which, in the tender of a wholesome weal,
Might in their working do you that offence,
Which else were shame, that then necessity
Will call discreet proceeding.

**Fool :** For, you trow, nuncle,
The hedge-sparrow fed the cuckoo so long,
That it's had it head bit off by it young.
So, out went the candle,
and we were left darkling.

**KING LEAR** : Are you our daughter?

**GONERIL :** Come, sir,
I would you would make use of that good wisdom,
Whereof I know you are fraught; and put away
These dispositions, that of late transform you
From what you rightly are.

**Fool :** May not an ass know when the cart
draws the horse? Whoop, Jug! I love thee.

**KING LEAR :** Doth any here know me?
This is not Lear : Doth Lear walk thus?
speak thus? Where are his eyes?
Either his notion weakens, his discernings
Are lethargied--Ha! waking? 'tis not so.
Who is it that can tell me who I am?

**Fool :** Lear's shadow.



ஏற்படுகிறது. ஆகையால், அதைத் தண்டிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. உங்களுக்குக்கோபம் வந்தாலும், கவலையில்லை.

**கோமாளி:** உங்களுக்குத் தெரியுமா, மாமா?

கொஞ்சிப் பலநாள் ஓர் காகம் ஒரு
குஞ்சுக் குயிலை வளர்க்க
குஞ்சு விழுங்கிற்றாம் ஓர் நாள்
அந்தக் காக்கைத் தலையினைக் கொத்தி.
அணைந்தது விளக்கு
அகப்பட்டோம் இருட்டில்.

**லீயர் :** நீ நம்முடைய மகளா?

**கானெரில்:** சரிதான், ஐயா.

கொஞ்ச காலமாகவே, நற்குணம் படைத்த தங்களை கோபதாபங்கள் வந்து தாக்கி, விகாரப் படுத்துகின்றன. தங்களுக்கு இயல்பான விவேகம் உண்டே, அதைக் கொஞ்சம் பயன் படுத்துங்கள்.

**கோமாளி:** வண்டி எப்பொழுது குதிரையை இழுக்கிறது என்று கழுதைக்குக் கூடத் தெரியுமே.

“ஹூப், குட்டி, கேளு, உன் மேல் எனக்கு ஆசை”

**லீயர் :** இங்கு யாருக்காவது என்னைத் தெரியுமா? இது லீயர் அல்ல. லீயர் இப்படியும் நடப்பானா? இப்படியும் பேசுவானா? அவனுடைய நயனங்கள் எங்கே? ஒன்று, அவனுடைய புத்தி தடுமாறுகிறது, அல்லது அவனுடைய புலன்கள் மயங்கிப் போய் விட்டன. ஆ! நனவா? இல்லை. நான் யார் என்று எனக்குச் சொல்லக் கூடியவன் யார்?

**கோமாளி:** லீயரின் நிழல்.

**KING LEAR :** I would learn that; for, by the
marks of sovereignty, knowledge, and reason,
I should be false persuaded I had daughters.

**Fool :** Which they will make an obedient father.

**KING LEAR :** Your name, fair gentlewoman?

**GONERIL :** This admiration,
sir, is much o' the savour
Of other your new pranks. I do beseech you
To understand my purposes aright :
As you are old and reverend, you should be wise.
Here do you keep a hundred knights and squires;
Men so disorder'd, so debosh'd and bold,
That this our court, infected with their manners,
Shows like a riotous inn : epicurism and lust
Make it more like a tavern or a brothel
Than a graced palace. The shame itself doth speak
For instant remedy : be then desired
By her, that else will take the thing she begs,
A little to disquantity your train;
And the remainder, that shall still depend,
To be such men as may besort your age,
And know themselves and you.

**KING LEAR :** Darkness and devils!
Saddle my horses; call my train together :
Degenerate bastard! I'll not trouble thee.
Yet have I left a daughter.

**லீயர் :** அதைத் தெரிந்தாக வேண்டும். அரசபடாடோபங்கள், பகுத்தறிவு, விவேகம்இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, எனக்குப் பெண் மக்களும் இருந்தார்களா என்பதையே நம்பமுடியவில்லை.

**கோமாளி:** அதைப் பணிவுள்ள தந்தையாக்கப் பார்க்கிறார்கள்.

**லீயர் :** அழகுச் சீமாட்டியே, உன் பெயர் என்ன?

**கானெரில்:** ஐயா, இந்தப் பாராட்டு உங்கள் இதர சேஷ்டைகளையொத்திருக்கிறது. என்னுடைய நோக்கத்தை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள், மதிப்பிற்குரிய மூப்பு உங்களை வந்தடைந்திருக்கிறது, ஆகையால், விவேகத்தோடு நடந்து கொள்ளுங்கள். இங்கே நூறு வீரர்களையும், பிரபுக்களையும் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அவர்களுடைய ஒழுங்கீனமும், ஊதாரித்தனமும், துணிச்சலும் நம்முடைய ஆஸ்தானத்துக்கே இழுக்கைத் தருகின்றன. அவர்களுடைய நடத்தையால் நம்முடைய சபை கலகம் நிறைந்த கள்ளுக்கடை போலாகிவிட்டது. மதுபானமும், காமமும் இந்த மாட்சி மிக்க அரண்மனையை மதுச்சாலையாகவும் வேசி இல்லமாகவும் ஆக்கிவிட்டன. மானக்கேட்டை நினைக்கும்போது உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டியிருக்கிறது. உங்களுடைய பரிவாரத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்; உங்கள் வயதிற்கொத்த சிலரைஉங்களையும் தம்மையும் தெரிந்து சிலரைமாத்திரம் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மகளுடைய விருப்பம் இதுவே. விருப்பத்துக்கு நீங்கள் இணங்கவில்லையென்றால், விருப்பத்தைப் பூர்த்தி செய்ய அவளுக்குத் தெரியும்.

**லீயர் :** இருட்டே, பூதங்களே! என்னுடைய குதிரைகளுக்குச் சேணத்தைக் கட்டுங்கள்! உன் பரிவாரத்தை அணி வகுத்து நிறுத்துங்கள்! நிலையில் இழிந்த வேசி மகளே! உன்னைத் தொந்திரவு செய்யமாட்டேன். மகள் என்று இவளையும் பெற்றேனே.

**GONERIL :** You strike my people; and your disorder'd rabble
Make servants of their betters.

Enter ALBANY

**KING LEAR :** Woe, that too late repents,--

To ALBANY

O, sir, are you come? Is it your will? Speak, sir.
Prepare my horses. Ingratitude, thou marble-hearted fiend,
More hideous when thou show'st thee in a child
Than the sea-monster!

**ALBANY** : Pray, sir, be patient.



**KING LEAR** : [To GONERIL] Detested kite! thou liest.
My train are men of choice and rarest parts,
That all particulars of duty know, And in the most
exact regard support The worships of their name.
O most small fault, How ugly didst thou in Cordelia show!
That, like an engine, wrench'd my frame of
nature From the fix'd place; drew from heart all love,
And added to the gall. O Lear, Lear,
Lear! Beat at this gate, that let thy folly in,

Striking his head
And thy dear judgment out! Go, go, my people.

**ALBANY :** My lord, I am guiltless, as I am ignorant
Of what hath moved you.





**கானெரில்:** நீங்கள் என்னுடைய ஆட்களை அடிக்கிறீர்கள். ஒழுங்கங் குலைந்த உங்கள் பரிவாரங்களோ, அவர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களை உருட்டி மிரட்டி அடிமைப்படுத்தப் பார்க்கிறார்கள்.

[ஆல்பனி வருகிறார்]

**லீயர் :** நடந்த பிறகு வருந்தும் துன்பமே! ஆல்பனியைப் பார்த்து] ஓ, ஐயா, நீங்கள் வந்துவிட்டீர்களா. இது உங்கள் விருப்பமா? சொல்லுங்கள், ஐயா.குதிரைகளைத் தயார் செய்யுங்கள்நன்றி கெட்டதனமே! கல் மனம் கொண்ட பேய் நீ! கடலில் வாழும் திமிங்கிலமும், சுறாமீனும் நன்றிகெட்டு நடக்கும் போது, அவ்வளவு அலங்கோலமாகத் தோன்றுவதில்லை. ஆனால் பெற்ற பிள்ளையை அந்தப் பேய் பிடிக்கும் போது, எவ்வளவு அலங்கோலமாயிருக்கிறது!

**ஆல்பனி:** ஐயா, தயவு செய்து பொறுங்கள்



**லீயர் :** வெறுக்கத் தக்க வல்லூறே, நீ பொய் சொல்லுகிறாய். என் பரிவாரத்தைச் சேர்ந்தவர்கள் தெள்ளுமணிகள், அருங்குணத்தவர், கடமையின் விவரங்களை யுணர்ந்தவர்கள்; எல்லா வகையிலும் பதவிக்கேற்ற பெருமை படைத்தவர். ஓ, சின்னஞ்சிறிய பிழையே! கார்டீலியாவிடத்திலே, நீ ஏன் கொடும் பிழைபோலக் காட்சியளித்தாய்! குட்டையில் அடைபட்ட உடம்பைப் பிய்த்து எறிந்தது போல இருந்ததே உன் செயல். என் இதயத்திலிருந்த அன்பையெல்லாம் உறிஞ்சி, பித்தத்தைப் பெருக்கி விட்டதே அச்சிறுபிழை. ஓ, லீயர், லீயர் லீயர்! [மண்டையில் அடித்துக் கொண்டு] இந்த வாசலை இடி, இந்த வாசல் வழியாகத்தானே முட்டாள்தனம் புகுந்து நிதானம் வெளிச் சென்றது! போங்கள், போங்கள், என் குடிகளே.

**ஆல்பனி:** பிரபு, தங்களை இப்படிப் பேசச் செய்வது என்னவென்று தெரியவில்லையே. நான் குற்றமற்றவன்.

**KING LEAR** : It may be so, my lord.
Hear, nature, hear; dear goddess, hear!
Suspend thy purpose, if thou didst intend
To make this creature fruitful!
Into her womb convey sterility!
Dry up in her the organs of increase;
And from her derogate body never spring
A babe to honour her! If she must teem,
Create her child of spleen; that it may live,
And be a thwart disnatured torment to her!
Let it stamp wrinkles in her brow of youth;
With cadent tears fret channels in her cheeks;
Turn all her mother's pains and benefits
To laughter and contempt; that she may feel
How sharper than a serpent's tooth it is
To have a thankless child! Away, away!

Exit

**ALBANY** : Now, gods that we adore, whereof comes this?

**GONERIL :** Never afflict yourself to know the cause;
But let his disposition have that scope
That dotage gives it.

Re-enter KING LEAR

**KING LEAR** : What, fifty of my followers at a clap!
Within a fortnight!

**ALBANY :** What's the matter, sir?





**லீயர் :** அப்படியும் இருக்கலாம், பிரபு. கேள் இயற்கையன்னையே, கேள். அருமைத் தேவதையே, கேள். இந்த ஜந்துவுக்குப் பிள்ளைப்பேறு கொடுக்க நினைத்திருந்தாயேயானால், அந்த நோக்கத்தை நிறைவேற்றாமல் நிறுத்திவை. அவளுடைய கருப்பைக்குள்ளே மலட்டுத் தனத்தைப் புகுத்து. அவள் உடலுக்குள் உள்ள விளையும் உறுப்புகளை வறளச் செய். இயல்புக்கு மாறான அவள் அங்கத்தினின்றும் குழந்தையே பிறவாதொழிக! பிள்ளைப் பேற்றினால் கிட்டும் பெருமை அவளுக்கு இல்லாது ஒழிக!

குழந்தை பிறக்குமானால், சீற்றம் நிறைந்த குழந்தையாய், இயல்பு திரிந்த குழந்தையாய், குணக் கேட்டினால் அவளைச் சித்ரவதை செய்யும் குழந்தையாய் பிறக்கட்டும். அவளுடைய இளமையின் வதனத்திலே, அக்குழந்தையால், முதுமையின் சுருக்குகள் விழட்டும்; அவள் கண்ணினின்றும் வடியும் நீர் அவள் கன்னத்திலே கால்வாய் வெட்டிப் பாயட்டும். தாய்மையின் இன்பங்களும் துன்பங்களும், சிரிப்புக்கும், பழிப்புக்கும் இலக்காகட்டும். பாம்பின் பல்லைக் காட்டிலும் நன்றி குழந்தை கொடியது என்று அவள் உணரட்டும்! போங்கள், போங்கள்.

[போகிறார்]

**ஆல்பனி:** நாம் வணங்கும் தெய்வங்களே, எதற்காக இப்படியெல்லாம்?

**கானெரில்:** காரணத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அவருடைய கிழட்டுத்தனம் போகிற போக்கில் போகட்டும்.

[லீயர் மறுபடியும் வருகிறார்]
**லீயர் :** என்ன, என் பரிவாரத்திலுள்ள ஐம்பது பேரா திடீரென்று போகவேண்டுமாம்? அதுவும் அரை மாதத்திலா?

**ஆல்பனி:** என்ன செய்தி, ஐயா?

**KING LEAR :** I'll tell thee : To GONERIL

Life and death! I am ashamed
That thou hast power to shake my manhood thus;
That these hot tears, which break from me perforce,
Should make thee worth them. Blasts and fogs upon thee!
The untented woundings of a father's curse
Pierce every sense about thee! Old fond eyes,
Beweep this cause again, I'll pluck ye out,
And cast you, with the waters that you lose,
To temper clay. Yea, it is come to this?
Let is be so : yet have I left a daughter,
Who, I am sure, is kind and comfortable :
When she shall hear this of thee, with her nails
She'll flay thy wolvish visage. Thou shalt find
That I'll resume the shape which thou dost think
I have cast off for ever : thou shalt, I warrant thee.

Exeunt KING LEAR, KENT, and Attendants

**GONERIL :** Do you mark that, my lord?

**ALBANY :** I cannot be so partial, Goneril,
To the great love I bear you,--

**GONERIL** : Pray you, content. What, Oswald, ho!

To the Fool
You, sir, more knave than fool, after your master.

**Fool :** Nuncle Lear, nuncle Lear, tarry and take the fool with thee.





**லீயர் :** [கானெரிலைப் பார்த்து] உனக்குச் சொல்லுகிறேன் வாழ்வாம் சாவாம்! எனது ஆண்மையை இப்படி ஆட்டிவைக்கும் ஆற்றல் உனக்கிருப்பதைப் பார்த்து நான் நாணுகிறேன். சுடச்சுட என் கண்ணிலிருந்து வடியும் நீர்த்துளிகள், தகுதியற்ற உன் பொருட்டாக வடிக்கின்றன என்று நினைக்கும்போது, நான் வெட்கம் அடைகிறேன். உன் தலையில் மூடுபனியும் இடியும் விழட்டும்! ஒரு தந்தையின் சாபம் உன் புலன்களைக்குத்தி, ஊடுருவிப் பாய்ந்து, ஆழங்காண முடியாத புண்களையுண்டாக்கட்டும்! கிழட்டுக் கண்களே, அசட்டுக் கண்களே, இந்த நிகழ்ச்சியைக் கண்டு கண்ணீர் விடுங்கள்; உங்களைப் பிடுங்கி, நீங்கள் சொரியும் நீரோடு உங்களை எறிந்து, களிமண்ணைப் பக்குவப்படுத்த உபயோகிப்பேன். ஹா! இந்த அளவுக்கா வந்து விட்டது? இருக்கட்டும்; எனக்கு இன்னொரு மகள் இருக்கிறாள், அவள் அன்போடு ஆதரிப்பாள். உன் கதையைக் கேட்டால், உன் ஓநாய் முகத்தைக் கிழித்து விடுவாள் அவள். நான் உதறி விட்டதாக நீ நினைக்கிறாயே, அந்த உருவத்தை நான் திரும்பவும் பெறப் போகிறேன். கட்டாயம் இதைப் பார்க்கப் போகிறாய். இது உறுதி.

[லீயர், கென்ட், பணியாட்கள் போகிறார்கள்]

**கானெரில்:** அதைக் கவனித்தீர்களா, பிரபு?

**ஆல்பனி:** கானெரில், உன்னிடத்தில் எனக்கிருக்கும் அன்பின் காரணமாக, ஓரவஞ்சகம் செய்யமாட்டேன்.

**கானெரில்:** தயவு செய்து, சும்மா இருங்கள்என்ன, ஆஸ்வால்ட், ஓ

[கோமாளியைப் பார்த்து] கோமாளித்தனத்தைக் காட்டிலும் அயோக்கியத்தனம் உன்னிடம் அதிகம். உன் எஜமான் பின் போகவில்லையா?

**கோமாளி:** லீயர் மாமா, லீயர் மாமா, கொஞ்சம் பொறுங்கள், இந்தக் கோமாளியையும் அழைத்துச் செல்லுங்கள்.

A fox, when one has caught her,
And such a daughter,
Should sure to the slaughter,
If my cap would buy a halter :
So the fool follows after.

Exit

**GONERIL :** This man hath had good counsel :
--a hundred knights!
'Tis politic and safe to let him keep
At point a hundred knights : yes, that, on every dream,
Each buzz, each fancy, each complaint, dislike,
He may enguard his dotage with their powers,
And hold our lives in mercy. Oswald, I say!

**ALBANY :** Well, you may fear too far.

**GONERIL :** Safer than trust too far : Let me still take away the harms I fear, Not fear still to be taken : I know his heart.
What he hath utter'd I have writ my sister
If she sustain him and his hundred knights
When I have show'd the unfitness,--

Re-enter OSWALD

How now, Oswald!
What, have you writ that letter to my sister?

**OSWALD :** Yes, madam.

**GONERIL** : Take you some company, and away to horse :
Inform her full of my particular fear; And thereto add such





"பிடிபட்ட நரியையும், இவள் ஒத்த மகளையும்
கொலை செய்து மகிழவே வேண்டும்
தொப்பி விற்றாகிலும் சுறுக்காங் கயிறு வாங்கித்
தூக்கிட்டு மகிழவே வேண்டும்."
பின்னோடு நானும் போனேனே.
[போகிறான்]

**கானெரில்:** இந்த மனுஷனுக்கு நல்ல பாடம் புகட்டியாகி விட்டது. நூறு வீரர்கள்! நூறு படை வீரர்களைச் சதா தயாராக இவர் வைத்துக் கொண்டிருப்பது உசிதமா? நமக்குத்தான் நல்லதா? இந்த அசட்டுக் கிழவனுடைய நெட்டைக் கனவுகள், முணுமுணுப்புகள், கற்பனைகள், குற்றச்சாட்டுகள், வெறுப்புகள், ஒவ்வொன்றையும் மூடிப் பாதுகாப்பதற்கும், நமது உயிருக்கு உலைவைப்பதற்கும் வேண்டியதுதான் நூறு காவலர்கள்!

நான் சொல்லுகிறேன், ஆஸ்வால்ட்.

**ஆல்பனி:** மிதமிஞ்சி பயப்படுகிறாய் போலிருக்கிறதே.

**கானெரில்:** மிதமிஞ்சி நம்புவதைக் காட்டிலும், இது மேல். ஆபத்துக்கு ஆளாவதற்குமுன், நான் அஞ்சும் அபாயத்தை அகற்றிவிடுவது நலம். அவர் உள்ளம் எனக்குத் தெரியும். அவர் சொன்னதைத் தங்கைக்கு எழுதிவிட்டேன். நான் தவறு என்று காட்டிய பின்னும், அவரையும் அவருடைய நூறு வீரர்களையும் அவள் வைத்துக் காப்பாற்றுவாளேயானால்....

[ஆஸ்வால்ட் மீண்டும் வருகிறான்]
அந்தக் கடிதத்தைத் தங்கைக்கு எழுதி விட்டாயா?

**ஆஸ்வா:** ஆம், அம்மணி.

**கானெரில்:** துணைக்கு ஆட்களைக் கூட்டிக் கொண்டு, விரைவில்

reasons of your own as may compact it more. Get you gone; And hasten your return.

Exit OSWALD

No, no, my lord, This milky gentleness and course of yours
Though I condemn not, yet, under pardon,
You are much more attask'd for want of wisdom
Than praised for harmful mildness.

**ALBANY :** How far your eyes may pierce I can not tell :
Striving to better, oft we mar what's well.

**GONERIL :** Nay, then--

**ALBANY :** Well, well; the event.

Exeunt

## SCENE V.

Court before the same.
Enter KING LEAR, KENT, and Fool

**KING LEAR :** Go you before to Gloucester with these letters. Acquaint my daughter no further with any thing you know than comes from her demand out of the letter. If your diligence be not speedy, I shall be there afore you.

**KENT :** I will not sleep, my lord, till I have delivered your letter.

Exit





குதிரைமேல் புறப்படு. என்னுடைய அச்சத்தைப்பற்றி அவளுக்கு நன்றாக விவரித்து விளக்கு. உனக்குத் தோன்றும் பொருத்தமான காரணங்களையும் சொல்லி அவளை ஏற்றுக் கொள்ளும்படி செய். விரைவில் புறப்பட்டு, விரைவில் திரும்பிவா.
[ஆஸ்வால்ட் போகிறான்]

இல்லை, பிரபு, பால் போன்ற உங்கள் நெகிழ்ச்சியையும் போக்கையும் நான் கண்டிப்பதாக நினைத்துவிடாதீர்கள். ஆனால், மக்கள் என்ன செய்வார்கள்? தீமை தரும் உங்கள் மென்மையைப் புகழ மாட்டார்கள், உங்கள் விவேகமின்மையைக் கண்டிப்பார்கள்.

**ஆல்பனி:** உன் கண்கள் எவ்வளவு தூரம் ஊடுருவிப் பாயும் என்று எனக்குத் தெரியாது. நன்மையைப் பெருக்கும் முயற்சி பெரும்பாலும் நன்மையைக் கெடுக்கும் முயற்சியாகவே முடிகிறது.

**கானெரில்:** இல்லை, அப்படியானால்...

**ஆல்பனி:** சரி, சரி, விளைவு என்ன என்று பார்ப்போம்.

## காட்சி 5

அதே அரண்மனையில் அரசவை
[லீயர், கென்ட், கோமாளி வருகிறார்கள்]

**லீயர் :** இந்தக் கடிதங்களை க்ளாஸ்டருக்கு கொண்டுபோ. கடிதத்தைப் பார்த்துவிட்டு என் மகள் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் பதில் சொல். அதற்குமேல் தகவல் ஒன்றும் கொடுக்காதே. நீ விரைவில் போய்ச் சேராவிட்டால், நான் உனக்கு முன் அங்கு வந்துவிடுவேன்.

**கென்ட்:** பிரபு, இந்தக் கடிதத்தைச் சேர்ப்பதற்கு முன், நான் தூங்கப் போவதில்லை.

**Fool :** If a man's brains were in's heels,
were't not in danger of kibes?

**KING LEAR :** Ay, boy.

**Fool :** Then, I prithee, be merry;
thy wit shall ne'er go slip-shod.

**KING LEAR :** Ha, ha, ha!

**Fool :** Shalt see thy other daughter
will use thee kindly; for though she's as like this
as a crab's like an apple, yet I can tell what I can tell.

**KING LEAR :** Why, what canst thou tell, my boy?

**Fool :** She will taste as like this as a crab does to a
crab. Thou canst tell why one's nose stands i'
the middle on's face?

**KING LEAR** : No.

**Fool :** Why, to keep one's eyes of either side's nose; that
what a man cannot smell out, he may spy into.

**KING LEAR :** I did her wrong--

**Fool :** Canst tell how an oyster makes his shell?

**KING LEAR** : No.







**கோமாளி:** ஒரு மனிதனுடைய மூளை அவன் காலில் இருக்குமானால், கால் புண் ஏற்படும் என்று அஞ்ச வேண்டியதில்லை.

**லீயர் :** ஆம், தம்பி.

**கோமாளி:** அப்படியானால், சந்தோஷமாயிருங்கள், உங்கள் அறிவு செருப்புப் போடாமல் நடக்காது.

**லீயர் :** ஹா, ஹா, ஹா.

**கோமாளி:** அந்த மகள் உன்னிடம் அன்பாயிருக்கிறாளா என்று பார்ப்போம். ஆப்பிளுக்கும், புளிச்ச ஆப்பிளுக்கும் எவ்வளவு ஒற்றுமையோ, அவ்வளவு ஒற்றுமை அவளுக்கும் இவளுக்கும். இருந்தாலும், நான் சொல்லக் கூடியதைச் சொல்ல முடிகிறதே.

**லீயர் :** பையா, என்ன சொல்ல முடியும்?

**கோமாளி:** அந்த ஆப்பிளும் இந்த ஆப்பிளைப் போலவே புளிச்சிருக்கும். ஒருவனுடைய மூக்கு அவனுடைய முகத்துக்கு மத்தியில் ஏன் இருக்கிறது தெரியுமா?

**லீயர் :** தெரியாது.

**கோமாளி:** மூக்குக்கு இரு பாகத்திலும் ஒரு கண் இருக்க வேண்டுமே, அதற்காகத்தான். அப்போதுதானே மோப்பத்தால் அறிய முடியாததைக் கண்ணால் வேவு பார்த்துக் கொள்ளலாம்.

**லீயர் :** அவளுக்கு அபராதம் செய்து...
**கோமாளி:** சிப்பிப்பூச்சி சங்கை எப்படி உண்டாக்குகிறது, தெரியுமா?

**லீயர் :** தெரியாது.

**Fool :** Nor I neither; but I can tell why a snail has a house.

**KING LEAR :** Why?

**Fool :** Why, to put his head in; not to give it away to his daughters, and leave his horns without a case.

**KING LEAR** : I will forget my nature. So kind a father! Be my horses ready?

**Fool :** Thy asses are gone about 'em. The reason why the seven stars are no more than seven is a pretty reason.

**KING LEAR** : Because they are not eight?

**Fool :** Yes, indeed : thou wouldst make a good fool.

**KING LEAR :** To take 't again perforce! Monster ingratitude!

**Fool :** If thou wert my fool, nuncle, I'ld have thee beaten for being old before thy time.

**KING LEAR :** How's that?

**Fool :** Thou shouldst not have been old
till thou hadst been wise.

**KING LEAR :** O, let me not be mad, not mad,
sweet heaven Keep me in temper :
I would not be mad!

Enter Gentleman







**கோமாளி:** எனக்கும் தெரியாது. ஆனால் நத்தை ஏன் கூடு கட்டுகிறது என்று தெரியும்.

**லீயர் :** ஏன்?

**கோமாளி:** தலை வைத்துக் தூங்க! பெண் மக்களுக்குக் கொடுத்துவிட்டு, கொம்பை வைக்க இடமில்லாமல் திண்டாடுவதற்காக அல்ல.

**லீயர் :** என் குணத்தை மறந்திருக்கப் போகிறேன்... எவ்வளவு அன்பான தந்தை...குதிரைகள் தயாரா?

**கோமாளி:** குதிரைகளைத் தேடி உம்முடைய கழுதைகள் போயிருக்கின்றன. சப்தரிஷி நக்ஷத்திரங்கள் ஏன் ஏழுக்கு மேல் இல்லை என்பதற்கு ஒரு அழகான காரணமிருக்கிறது.

**லீயர் :** அவை எட்டாக இல்லை என்பதாலா?

**கோமாளி:** அப்படியேதான்; ஏது, கோமாளியாவதற்கு வேண்டிய தகுதி தங்களுக்கிருக்கிறதே!

**லீயர் :** மீண்டும் எடுத்துக்கொள்வதா! செய்நன்றி கொன்ற பேயே!

**கோமாளி:** மாமா, நீங்கள் என்னுடைய கோமாளியாயிருந்திருந்தால், பருவ காலத்துக்கு முன்னமேயே கிழவன் ஆனதற்காக உங்களுக்கு அடி வாங்கி கொடுத்திருப்பேன்.

**லீயர் :** அது எப்படி?

**கோமாளி:** விவேகம் வருவதற்கு முன் நீங்கள் கிழவனாகியிருக்கக் கூடாது.

**லீயர் :** இனிய வானமே! எனக்குப் பைத்தியம் பிடித்துவிடக்

How now! are the horses ready?

**Gentleman** : Ready, my lord.

**KING LEAR :** Come, boy.

**Fool :** She that's a maid now, and laughs at my departure,
Shall not be a maid long, unless things be cut shorter.

Exeunt

## ACT II

SCENE I. GLOUCESTER's castle.
Enter EDMUND, and CURAN meets him



**EDMUND :** Save thee, Curan.

**CURAN :** And you, sir. I have been with your father, and given him notice that the Duke of Cornwall and Regan his duchess will be here with him this night.

**EDMUND :** How comes that?

**CURAN :** Nay, I know not. You have heard of the news abroad; I mean the whispered ones, for they are yet but ear-kissing arguments?

**EDMUND :** Not I pray you, what are they?

**CURAN :** Have you heard of no likely wars toward, 'twixt the Dukes of Cornwall and Albany?





கூடாது, கூடவே கூடாது. [ஒரு கனவான் வருகிறார்] என்ன, குதிரைகள் தயாரா?

**கனவான்:** ஆம், பிரபு.

**லீயர் :** வா, பையா.
[போகிறார்கள்]

## அங்கம் II
## காட்சி 1

க்ளாஸ்டருடைய அரண்மனை
[எட்மன்டும், க்யூரானும் வருகிறார்கள்]

**எட்ம:** க்யூரானா? கடவுள் உங்களைக் காக்க வேண்டும், ஐயா.



**க்யூரான்:** ஐயா, உங்களையும் காக்கட்டும். உங்கள் தகப்பனாரிடமிருந்துதான் வந்திருக்கிறேன். கார்ன்வால் பிரபுவும், ரீகன் சீமாட்டியும் இன்றிரவு இவ்விடம் வருவார்கள் என்று தெரிவித்து விட்டேன்.

**எட்ம:** எதற்காக வருகிறார்களாம்?

**க்யூரான்:** எனக்குத் தெரியாது. நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்களே, மக்கள் பேசிக்கொள்வதை. இன்னும் ஒருவரும் வெளிப்படையாகப் பேசிக் கொள்ளவில்லை. காதோடு காதாய்த்தான் அது பரவி வருகிறது. உங்கள் காதுக்கும் அது எட்டியிருக்குமே.

**எட்ம:** எனக்கொன்றும் எட்டவில்லை. என்ன பேசிக் கொள்கிறார்களாம்?

**க்யூரான்:** கார்ன்வாலுக்கும், ஆல்பனிக்கும் யுத்தம் உண்டாகலாம் என்ற செய்திதான். உங்கள் காதுவரைக்கும் வரவில்லையா அது?

**EDMUND :** Not a word.

**CURAN :** You may do, then, in time. Fare you well, sir.

Exit

**EDMUND :** The duke be here to-night? The better! best!
This weaves itself perforce into my business.
My father hath set guard to take my brother;
And I have one thing, of a queasy question,
Which I must act : briefness and fortune, work!
Brother, a word; descend : brother, I say!

Enter EDGAR

My father watches : O sir, fly this place;
Intelligence is given where you are hid;
You have now the good advantage of the night :
Have you not spoken 'gainst the Duke of Cornwall?
He's coming hither : now, i' the night, i' the haste,
And Regan with him : have you nothing said
Upon his party 'gainst the Duke of Albany?
Advise yourself.

**EDGAR :** I am sure on't, not a word.

**EDMUND :** I hear my father coming : pardon me :
In cunning I must draw my sword upon you
Draw; seem to defend yourself; now quit you well.
Yield : come before my father. Light, ho, here!
Fly, brother. Torches, torches! So, farewell.







**எட்ம:** இல்லையே.

**க்யூரான்:** வரும், வரும், வேளை வரும்போது, வரும். போய்வருகிறேன், ஐயா.

[போகிறான்]

**எட்ம:** கோமகன் இன்று வருகிறாரா? ரொம்ப நல்லது, ரொம்ப ரொம்ப நல்லது. இது என்னுடைய காரியத்துக்கு ஒத்து வருகிறது. அண்ணனைப் பிடிக்க என் தந்தை சேவகர்களையனுப்பியிருக்கிறார். நாஸுக்காக காரியத்தை முடிக்க வேண்டும். விரைவே, நற்காலமே, வேலை செய்!

அண்ணா, ஒரு சொல்; தொலைந்தாய், அண்ணா, நீ தொலைந்தாய்.

[எட்கார் வருகிறான்]

என் தந்தை உன்னைத் துழாவிக் கொண்டிருக்கிறார்! இந்த இடத்தை விட்டு உடனே பறந்துவிடு! நீ இங்கே ஒளிந்திருக்கிறாய் என்ற தகவல் அவருக்குக் கிடைத்துவிட்டது. இரவு உனக்கு அனுகூலமாக அமைந்திருக்கிறது. நீ கார்ன்வால் கோமகனுக்கு விரோதமாகப் பேசியிருக்கிறாயல்லவா? அவர் இன்றிரவு அவசரமாக இங்கு வருகிறார். ரீகனும் கூட வருகிறாள். ஆல்பனி கோமகனே யெதிர்த்து நிற்கும் அவர் கட்சியைப்பற்றி நீ ஒன்றும் பேசியதில்லையா? யோசனை செய்து பார்.

**எட்கார்:** ஒரு சொல் கூடச் சொன்னதில்லையே, நிச்சயம்.

**எட்ம:** என் தந்தை வரும் சப்தம் கேட்கிறது. மன்னிக்க வேண்டும்; நான் உன்மீது வாளை ஓங்குவது போல் பாவனை செய்ய வேண்டும். வாளை உருவிக் கொள்; தற்காத்துக் கொள்வது போல் பாசாங்கு செய்; பணிந்து நில்! என் தந்தைக்கு முன் வா! வெளிச்சம்! ஓ, இங்கே! ஓடு, அண்ணா! பந்தம், பந்தம்! [எட்கார் போகிறான்] போய் வா.

Exit EDGAR

Some blood drawn on me would beget opinion.
Wounds his arm

Of my more fierce endeavour : I have seen drunkards
Do more than this in sport. Father, father!
Stop, stop! No help?

Enter GLOUCESTER, and Servants with torches

**GLOUCESTER** : Now, Edmund, where's the villain?

**EDMUND** : Here stood he in the dark, his sharp sword out,
Mumbling of wicked charms, conjuring the moon
To stand auspicious mistress,--

**GLOUCESTER :** But where is he?

**EDMUND :** Look, sir, I bleed.

**GLOUCESTER :** Where is the villain, Edmund?

**EDMUND :** Fled this way, sir. When by no means he could--

**GLOUCESTER :** Pursue him, ho! Go after.
Exeunt some Servants
By no means what?

**EDMUND :** Persuade me to the murder of your lordship;
But that I told him, the revenging gods
'Gainst parricides did all their thunders bend;







என் உடலில் கொஞ்சம் ரத்தம் வந்தால், நான் கடுமையாகப் போரிட்டதாக நினைப்பார்கள். [கையைக் குத்திக் கொள்கிறான்] வேடிக்கைக்காக, குடிகாரர்கள் இதைக் காட்டிலும் அதிகமாகச் செய்வார்கள்.

அப்பா, அப்பா! நில், நில்! துணைக்கு ஆள் இல்லையா?

[க்ளாஸ்டர் பந்தம் ஏந்திய பணியாட்களுடன் வருகிறார்]

**க்ளாஸ்:** எட்மன்ட், அந்த அயோக்கியப் பயலை எங்கே?

**எட்ம:** இதோ, இங்கே இருட்டினுள் நின்றான்; கூரிய வாளைக் கையிலேந்திக் கொண்டு, குறளி மந்திரங்களை உச்சாடனம் செய்து கொண்டு, சந்தரவசிய ஜபத்தை முணுமுணுத்துக் கொண்டு இங்கே நின்றான்.

**க்ளாஸ்:** அப்படியானால், எங்கே அவன்?

**எட்ம:** பாருங்கள், ஐயா, என் ரத்தத்தை

**க்ளாஸ்:** எட்மன்ட், எங்கே அந்தக் கயவனை?

**எட்ம:** இந்தப் பக்கம் ஓடினான், ஐயா, தங்களை...

**க்ளாஸ்:** பிடியுங்கள் அவனை, ஓ, பின்தொடருங்கள், தங்களை....

**எட்ம:** தங்களைக் கொலை செய்யும் காரியத்துக்கு நான் இணங்கமாட்டேன் என்று தெரிந்ததும், பழிக்குப் பழி வாங்கும் தெய்வங்கள், தந்தையைக் கொல்லும் பாவிகளைத் தண்டிப்பார்கள், இடியை எய்து கொல்லுவார்கள் என்று அவனிடம் சொன்னேன். தந்தையைத் தனயனோடு கட்டிப் பிணைக்கும் தளைகள் எவ்வளவு வலிமை வாய்ந்தவை என்று அவனுக்கு எடுத்துரைத்தேன். கடைசியாக, அவன் கண்டு கொண்டான், அருவருக்கத்தக்க

Spoke, with how manifold and strong a bond
The child was bound to the father; sir, in fine,
Seeing how loathly opposite I stood
To his unnatural purpose, in fell motion,
With his prepared sword, he charges home
My unprovided body, lanced mine arm :
But when he saw my best alarum'd spirits,
Bold in the quarrel's right, roused to the encounter,
Or whether gasted by the noise I made,
Full suddenly he fled.

**GLOUCESTER :** Let him fly far :
Not in this land shall he remain uncaught;
And found--dispatch. The noble duke my master,
My worthy arch and patron, comes to-night :
By his authority I will proclaim it,
That he which finds him shall deserve our thanks,
Bringing the murderous coward to the stake;
He that conceals him, death.

**EDMUND :** When I dissuaded him from his intent,
And found him pight to do it, with curst speech
I threaten'd to discover him : he replied,
'Thou unpossessing bastard! dost thou think,
If I would stand against thee, would the reposal
Of any trust, virtue, or worth in thee
Make thy words faith'd? No : what I should deny,--
As this I would : ay, though thou didst produce
My very character,--I'ld turn it all
To thy suggestion, plot, and damned practise :
And thou must make a dullard of the world,







அவனுடைய நோக்கத்துக்கும் எனக்கும் எவ்வளவு தூரம் என்று.

தயாராக வைத்திருந்த வாளைக்கொண்டு, தற்காப்பில்லாத என் மீது சாடி என் கையில் குத்தினான். ஆர்வம்மிக்க என் தீரத்தைக் கண்டோ அல்லது நீதியில் நின்ற என் நெறியைக் கண்டோ அல்லது நான் போட்ட கூப்பாட்டில் பயந்து போய்த்தானோ, ஓடியே போய் விட்டான்.

**க்ளாஸ்:** எங்கு வேண்டுமானாலும் ஓடட்டும். இந்நாட்டிலே அவன் பிடிபடாமல் இருக்க முடியாது. பிடிபட்டவுடனேயே அவனை ஒழித்துக் கட்ட வேண்டும். என்னுடைய வள்ளல்மாட்சிமை மிக்க கோமகன்இன்றிரவு வருகிறார். அவருடைய உத்திரவு பெற்று, "எவன் அந்தக் கொலைகாரக் கோழையைப் பிடித்துத் தூக்கு மரத்துக்குக் கொண்டு வருகிறானோ, அவனுக்கு நமது நன்றி உரித்தாகுக, எவன் அவனைப் பதுக்கி வைக்கிறானோ, அவனுக்கு மரண தண்டனை", என்று பறைசாற்றப் போகிறேன்.

**எட்ம:** தீச் செயலினின்றும் அவனைத் தடுக்க முயன்றேன். ஆனால், அவனுடைய கடுஞ் சொல்லிலிருந்து அவனுடைய வன்கண்மையையும் உறுதியையும் தெரிந்து கொண்டேன். "உன்னைக் காட்டிக் கொடுப்பேன்" என்று அச்சுறுத்தினேன்.

"வாரீஸ் யோக்கியதையற்ற வேசிமகனே, நான் உன்னை எதிர்த்து நிற்கும் போது, உன்னுடைய சொல்லுக்கு ஏதாவது விலையுண்டா? நீ நம்பிக்கைக்குரியவனாயிருந்தாலும், நல்லவனாயிருந்தாலும், நன்மதிப்புடையவனாயிருந்தாலும், உன்னை ஒருவரும் நம்பமாட்டார்கள்; என்னுடைய கடிதத்தையே நீ காட்டினாலும், நான் அது என்னுடையதல்ல என்று மறுக்கப் போகிறேன். மறுப்பதோடு நில்லாமல், இந்தச் சந்தர்ப்பத்தை உனக்கு விரோதமாகத் திருப்பி விடுவேன். சூழ்ச்சியும், சதியும். பாதகச் செயலும் உன்னுடையதே என்று நிலை நாட்டுவேன். என்னுடைய சாவால் உனக்கு எவ்வளவு லாபம் என்பதையும், லாபத்துக்காகவே என்மேல் வீண் பழி சுமத்தியிருக்கிறாய் என்பதையும் இந்த உலகம் அறிந்து

If they not thought the profits of my death
Were very pregnant and potential spurs
To make thee seek it.'

**GLOUCESTER :** Strong and fasten'd villain
Would he deny his letter? I never got him.

Tucket within

Hark, the duke's trumpets!
I know not why he comes. All ports I'll bar;
the villain shall not 'scape;
The duke must grant me that : besides,
his picture I will send far and near,
that all the kingdom
May have the due note of him; and of my land,
Loyal and natural boy,
I'll work the means
To make thee capable.

Enter CORNWALL, REGAN, and Attendants

**CORNWALL :** How now, my noble friend!
since I came hither, Which I can call but now,
I have heard strange news.

**REGAN :** If it be true, all vengeance comes too short
Which can pursue the offender. How dost, my lord?

**GLOUCESTER :** O, madam, my old heart is crack'd,
it's crack'd!







கொள்ளும். முட்டாள் உலகம் என்றா அதை நினைத்தாய்!" என்று அவன் சொன்னான்.

**க்ளாஸ்:** வலிய, முற்றிப் போன அயோக்கியன்! கடிதம் அவனுடையதல்ல என்றா சொல்லப் போகிறான்? நான் பெற்ற பிள்ளையல்ல அவன்.

[உள்ளேயிருந்து எக்காளம் ஊதுகிறது]

அதோ, கோமகனுடைய எக்காளம்! எதற்காக வருகிறார் என்று தெரியவில்லை.

எல்லாத் துறைமுகங்களையும் நான் அடைத்து விடுகிறேன்; அந்தப் பயல் தப்ப முடியாது. கோமகனும் எனக்கு அனுமதி தருவார். அதோடு, அவனுடைய படத்தை ஒவ்வொரு ஊருக்கும் அனுப்புவேன் அப்படிச் செய்தால்தான் நாடு முழுவதும் எச்சரிக்கையாக இருக்கும். உண்மை நிறைந்த என் சொந்த மகனே, என் சொத்தையெல்லாம் நீ அடைவதற்குரிய தகுதியை உனக்குக் கொடுக்கப்போகிறேன்.

[கார்ன்வால், ரீகன், பணியாட்கள் வருகிறார்கள்]

**கார்ன்:** என்ன, அருமை நண்பரே! நான் இங்கு வந்த பிறகு ஒரு விநோதச் செய்தியைக் கேட்டேன்.

**ரீகன்:** அது உண்மையானால், உடனடியாகக் குற்றவாளியைத் தண்டித்தாக வேண்டும்.

கௌக்கியமா, பிரபு?

**க்ளாஸ்:** ஒ, அம்மணி, என் கிழட்டு இதயத்திலே கீறல் விழுந்து விட்டது, ஆம், கீறல் விழுந்து விட்டது.

**REGAN :** What, did my father's godson seek your life?
He whom my father named? your Edgar?

**GLOUCESTER** : O, lady, lady, shame would have it hid!
**REGAN :** Was he not companion with the riotous knights
That tend upon my father?

**GLOUCESTER :** I know not, madam : 'tis too bad, too bad.

**EDMUND** : Yes, madam, he was of that consort.

**REGAN :** No marvel, then, though he were ill affected :
'Tis they have put him on the old man's death,
To have the expense and waste of his revenues.
I have this present evening from my sister
Been well inform'd of them; and with such cautions,
That if they come to sojourn at my house,
I'll not be there.

**CORNWALL :** Nor I, assure thee, Regan.
Edmund, I hear that you have shown your father
A child-like office.

**EDMUND** : 'Twas my duty, sir.

**GLOUCESTER** : He did bewray his practise; and received
This hurt you see, striving to apprehend him.

**CORNWALL :** Is he pursued?

**GLOUCESTER :** Ay, my good lord.





**ரீகன்:** என்ன, என் தந்தையால் பெயரிடப்பட்டவனாச்சே அந்த எட்கார், அவனா உங்களைக் கொலை செய்ய முயன்றான்?

**க்ளாஸ்:** அம்மணி, ஓ, அம்மணி, மானமுள்ளவன் இதை மறைக்கப் பார்ப்பான்.

**ரீகன்:** என் தந்தையோடிருக்கிறார்களே, அந்தக் கலகக்கார வீரர்கள், அவர்களுக்கு அவன் நண்பனாச்சே.

**க்ளாஸ்:** தெரியாதே, அம்மணி; ரொம்ப மோசம், ரொம்ப மோசம்.

**எட்ம:** ஆம், அம்மணி, அவனுடைய சகவாசம் அப்படி, அப்படித்தான்.

**ரீகன்:** அப்படியானால், அவன் நடத்தையைப் பற்றி ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை. கிழவனைக் கொன்று அவனுடைய சொத்தையும் வருமானத்தையும் கவர்ந்து கொள்ளவே அவனை அவர்கள் ஏவியிருக்க வேண்டும். இன்று மாலை அவர்களைப் பற்றிய தகவலையெல்லாம் அக்காள் எனக்குத் தெரியப்படுத்திவிட்டாள். அவர்கள் என் வீட்டில் தங்குவதற்கு வந்தால், நான் அங்கிருந்து போய்விட வேண்டும் என்று எச்சரித்திருக்கிறாள்.

**கார்ன்:** ரீகன், நானும் அங்கிருக்கப் போவதில்லை. இது உறுதி. எட்மண்ட், மகனுக்குரிய கடமையைத் தந்தைக்குச் செய்திருக்கிறாய் என்று கேள்விப்பட்டேன்.

**எட்ம:** என் கடமைதானே, பிரபு.

**க்ளாஸ்:** அவனுடைய துரோகத்தை இவன் காட்டிக்கொடுத்துவிட்டான். அவனைப் பிடிக்கும் போது இவனுக்கு ஏற்பட்ட காயம் இது.

**கார்ன்:** அவனைப் பின்தொடர்ந்து போயிருக்கிறார்களா?

**க்ளாஸ்:** ஆம், பிரபு.

**CORNWALL :** If he be taken, he shall never more
Be fear'd of doing harm : make your own purpose,
How in my strength you please.
For you, Edmund, Whose virtue and
obedience doth this instant
So much commend itself, you shall be ours :
Natures of such deep trust we shall much need;
You we first seize on.

**EDMUND :** I shall serve you, sir,
Truly, however else.

**GLOUCESTER :** For him I thank your grace.

**CORNWALL :** You know not why we came to visit you,--

**REGAN :** Thus out of season,
threading dark-eyed night :
Occasions, noble Gloucester, of some poise,
Wherein we must have use of your advice :
Our father he hath writ, so hath our sister,
Of differences, which I least thought it fit
To answer from our home; the several messengers
From hence attend dispatch. Our good old friend,
Lay comforts to your bosom; and bestow
Your needful counsel to our business,
Which craves the instant use.

**GLOUCESTER :** I serve you, madam :
Your graces are right welcome.

Exeunt







**கார்ன்:** அவனைப் பிடித்து விட்டால், அவனால் ஏற்படக் கூடிய அபாயத்தைப் பற்றி அஞ்சவேண்டாம். ஆதரிக்க நான் இருக்கும் போது, உங்கள் நோக்கத்தை எப்படி வேண்டுமானாலும் நிறைவேற்றுங்கள்.

எட்மன்ட், உன் கடமையுணர்ச்சியையும், நற்பண்பையும் மெச்சி, உன்னை நம்மவனாக ஆக்கிக் கொண்டோம். ஆழ்ந்த நம்பிக்கைக்குப் பாத்திரமான இப்பேர்ப்பட்டவர்கள் நமக்கு மிகவும் தேவை. முதன் முதலாக உன்னை நாம் தேர்ந்தெடுக்கிறோம்.

**எட்ம:** ஐயா, உண்மையோடு தங்களுக்குப் பணி செய்யக் காத்திருக்கிறேன்.

**க்ளாஸ்:** அவன் சார்பிலே, தங்களுக்கு நன்றி.

**கார்ன்:** நாங்கள் எதற்காக வந்திருக்கிறோம் என்று உங்களுக்குத் தெரியாதே.

**ரீகன்:** அகால நேரத்தில், கருங்கண் இரவையும் பொருட்படுத்தாது, ஓடோடி வந்திருக்கிறோம். மாண்புமிக்க க்ளாஸ்டரே, உங்கள் ஆரோசனையைப் பெறுவதற்காகவே வந்திருக்கிறோம். கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பதாக நம் தந்தை கடிதம் எழுதியிருக்கிறார்; நம் தமக்கையும் அவ்வாறே எழுதியிருக்கிறாள். கடிதங்களுக்குப் பதில், அரண்மனைக்கு வெளியே வந்து எழுதுவதே நலம் என்று நினைத்தேன். இங்கே, பதிலுக்குக் காத்துக் கொண்டு நிற்கிறார்கள் ஏவலாளர்கள். முதுபெரும் நண்பரே, மனதை அமைதிப் படுத்திக் கொண்டு, எங்கள் காரியத்தைப் பற்றிச் சிந்தனை செய்து, உடனடியாக ஆலோசனை கூறவேண்டும்.

**க்ளாஸ்:** தங்கள் சேவகன், அம்மணி. தங்கள் இருவருக்கும் நல்வரவு.

[எக்காளம் ஊதுகிறது; போகிறார்கள்]

## SCENE II.

Before Gloucester's castle.
Enter KENT and OSWALD, severally

**OSWALD :** Good dawning to thee, friend : art of this house?

**KENT :** Ay.

**OSWALD :** Where may we set our horses?

**KENT :** I' the mire.

**OSWALD :** Prithee, if thou lovest me, tell me.

**KENT :** I love thee not.

**OSWALD :** Why, then, I care not for thee.

**KENT :** If I had thee in Lipsbury pinfold, I would make thee care for me.

**OSWALD :** Why dost thou use me thus? I know thee not.

**KENT :** Fellow, I know thee.

**OSWALD :** What dost thou know me for?

**KENT :** A knave; a rascal; an eater of broken meats; a base, proud, shallow, beggarly, three-suited, hundred-pound, filthy, worsted-stocking knave; a lily-livered, action-taking knave, a whoreson, glass-gazing, super-serviceable finical rogue; one-trunk-inheriting slave; one that wouldst be a



## காட்சி 2

க்ளாஸ்டர் அரண்மனையின் முன்
[கென்ட், ஆஸ்வால்ட் தனித்தனியாக வருகிறார்கள்]

**ஆஸ்வா:** தம்பீ, வணக்கம். இந்த வீட்டைச் சேர்ந்தவன்தானே நீ?

**கென்ட்:** ஆமாம்.

**ஆஸ்வா:** எங்கள் குதிரைகளை எங்கே கட்டலாம்?

**கென்ட்:** சகதியிலே.

**ஆஸ்வா:** தம்பீ, என்ன, என்னிடத்தில் அன்பில்லையா? எங்கே கட்டலாம், சொல்.

**கென்ட்:** அன்பா? கிடையாது.

**ஆஸ்வா:** அப்படியானால், உன்னைப்பற்றி எனக்கென்ன?

**கென்ட்:** உன்னைக் குட்டையில் போட்டு அடைத்தால், என்னை கவனிக்காமலிருக்க முடியாது.

**ஆஸ்வா:** உன்னையே எனக்குத் தெரியாதே, இப்படி ஏன் என்னை நடத்துகிறாய்?
**கென்ட்:** உன்னை எனக்குத் தெரியும், பயலே.

**ஆஸ்வா:** என்ன தெரியும்?

**கென்ட்:** ஒரு கயவன். அயோக்கியன்; எச்சில் பொறுக்கி, தரம்கெட்ட திமிர்பிடித்த வெங்கன், அட்டுப்பிடித்த ஒசிச்சட்டை; கூலிக்காரச்சல்லி, பயந்தாரி, டம்பாச்சாரி, வேசி மகன், தளுக்குக்காரப் போக்கிரி, ஒற்றை டப்பாப் புழுக்கை, கூட்டிக்கொடுக்கிற பயல். போக்கிரியையும் பிச்சைக்காரனையும்,

bawd, in way of good service, and art nothing but
the composition of a knave, beggar, coward, pandar,
and the son and heir of a mongrel bitch : one whom I
will beat into clamorous whining, if thou deniest
the least syllable of thy addition.

**OSWALD :** Why, what a monstrous fellow art thou, thus to rail on one that is neither known of thee nor knows thee!

**KENT :** What a brazen-faced varlet art thou, to deny thou knowest me! Is it two days ago since I tripped up thy heels, and beat thee before the king? Draw, you rogue : for, though it be night, yet the moon shines; I'll make a sop o' the moonshine of you : draw, you whoreson cullionly barber-monger, draw.
Drawing his sword

**OSWALD :** Away! I have nothing to do with thee.

**KENT :** Draw, you rascal : you come with letters against the
king; and take vanity the puppet's part against the
royalty of her father : draw, you rogue, or I'll so
carbonado your shanks : draw, you rascal; come your ways.

**OSWALD :** Help, ho! murder! help!

**KENT :** Strike, you slave; stand, rogue, stand; you neat
slave, strike.

Beating him

**OSWALD :** Help, ho! murder! murder!





கோழையையும், டாப்பர் மாமாவையும் ஒன்றாகப் பிடித்து வைத்த நரி நீ. ஜாதிகெட்ட நாய்போட்ட சொரிக்குட்டி, அதுக்குத் தனி வாரீஸ். இந்தப் பட்டத்திலே எதை நீ மறுத்தாலும், உன்னைக் கதறிக் கதறி ஊளையிட அடிப்பேன்.

**ஆஸ்வா:** உன்னை எனக்குத் தெரியாது, என்னை உனக்குத் தெரியாது. அப்படியிருந்தும் என்னை இப்படித் திட்டுகிறாயே, பேய்ப்பயலே.

**கென்ட்:** என்னைத் தெரியாது என்று சொல்ல, நீ சரியான கல்லுளி மங்கனாயிருக்க வேண்டும்! அரசன் முன்னிலையில், உன் காலை இடறிவிட்டு அடித்து இன்னும் ரெண்டு நாள் ஆகவில்லையே. போக்கிரி, வாளையுருவு. இரவாக இருந்தாலும், நிலா வெளிச்சம் இருக்கிறது. உன்னைத் துவையலாக்கி விடுகிறேன்; வேசி மகனே, அம்பட்டப்பயலே, உருவுடா, உருவு.

**ஆஸ்வா:** போ, உனக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை.

**கென்ட்:** வாளையுருவுடா, கசவாளி, நீ அரசனுக்கு விரோதமாய்க் கடிதங்கள் கொண்டு வருகிறாய்; பொம்மலாட்டம் ஆடி ராஜத் துரோகம் செய்கிறாய்; வாளை உருவு, போக்கிரி, இல்லையென்றால், உன் காலை முறித்துக் கறி சமைத்து விடுவேன். வா, வா.

**ஆஸ்வா:** ஐயோ, ஐயோ, கொலை!

**கென்ட்:** அடி, பயலை. நில்லு, நில்லு, போக்கிரி சாக்ஷாத் அயோக்கியன்!

**ஆஸ்வா:** ஐயோ, கொலை! கொலை!

[கத்தியை உருவிக் கொண்டு எட்மன்ட் வருகிறான்]

Enter EDMUND, with his rapier drawn, CORNWALL, REGAN, GLOUCESTER, and Servants

**EDMUND :** How now! What's the matter?

**KENT :** With you, goodman boy, an you please : come, I'll flesh ye; come on, young master.

**GLOUCESTER :** Weapons! arms! What 's the matter here?

**CORNWALL :** Keep peace, upon your lives :
He dies that strikes again. What is the matter?

**REGAN :** The messengers from our sister and the king.



**CORNWALL :** What is your difference? speak.

**OSWALD** : I am scarce in breath, my lord.

**KENT :** No marvel, you have so bestirred your valour. You cowardly rascal, nature disclaims in thee : a
tailor made thee.

**CORNWALL :** Thou art a strange fellow :
a tailor make a man?

**KENT :** Ay, a tailor, sir : a stone-cutter or painter could not have made him so ill, though he had been but two hours at the trade.

**CORNWALL :** Speak yet, how grew your quarrel?





**எட்ம:** என்னது? என்ன சங்கதி?

[விலக்கி விடுகிறான்]

**கென்ட்:** தம்பீ, வேண்டுமானால் நீ வா. உன் தொலியைக் கழற்றிக் காட்டுகிறேன். வாடாப்பா, இளையதுரை.

[கார்ன்வால், ரீகன், க்ளாஸ்டர், பணியாட்கள் வருகிறார்கள்]

**க்ளாஸ்:** படைகள்! ஆயுதங்கள்! என்ன சங்கதி?

**கார்ன்:** நிறுத்துங்கள். மறுபடியும் அடிப்பவன் தொலைந்தான். என்ன காரியம் இது?

**ரீகன்:** அக்காளிடமிருந்தும் அரசரிடமிருந்தும் வந்த தூதர்களா?



**கார்ன்:** உங்களுக்குள் என்ன சண்டை? சொல்லுங்கள்.

**ஆஸ்வா:** நான் திக்கு முக்காடிக் கொண்டிருக்கிறேன், பிரபு.

**கென்ட்:** வியப்பில்லை. உன் வீரத்தை அப்படிக் கிளறி விட்டிருக்கிறாய். கோழைக் கயவனே, உன்னைப் படைக்கவில்லையென்று இயற்கைத் தேவியே கையை விரிகிறாள். ஒரு தையல்காரன் உன்னைப் படைத்திருக்கிறான்.
**கார்ன்:** நீ ஒரு விந்தைக்காரப் பயலாயிருக்கிறாயே. தையல்காரனாவது, மனிதனைப் படைப்பதாவது!

**கென்ட்:** ஆமாம், ஐயா. தையல்காரனே தான். ஒரு கல் தச்சனோ, ஒரு ஓவியனோ இவ்வளவு இழிவான உருவத்தைப் படைத்திருக்க மாட்டான். இரண்டு மணி நேர அனுபவம் உள்ளவன்கூட இப்படிப் படைத்திருக்க மாட்டான்.

**கார்ன்:** உங்கள் சண்டை தொடங்கியது எப்படி? சொல்லுங்கள்.

**OSWALD :** This ancient ruffian, sir, whose life I have spared at suit of his gray beard,--

**KENT :** Thou whoreson zed!
thou unnecessary letter! My
lord, if you will give me leave, I will tread this
unbolted villain into mortar, and daub the wall of
a jakes with him. Spare my gray beard, you wagtail?

**CORNWALL :** Peace, sirrah!
You beastly knave, know you no reverence?

**KENT :** Yes, sir; but anger hath a privilege.

**CORNWALL :** Why art thou angry?

**KENT :** That such a slave as this should wear a sword,
Who wears no honesty.
Such smiling rogues as these,
Like rats, oft bite the holy cords a-twain
Which are too intrinse t'
unloose; smooth every passion
That in the natures of their lords rebel;
Bring oil to fire, snow to their colder moods;
Renege, affirm, and turn their halcyon beaks
With every gale and vary of their masters,
Knowing nought, like dogs,
but following. A plague upon your epileptic visage!
Smile you my speeches, as I were a fool?
Goose, if I had you upon Sarum plain,
I'ld drive ye cackling home to Camelot.



**ஆஸ்வா:** ஐயா, இந்தக் கிழட்டுப் போக்கிரியின் நரைத்த தாடிக்கு இரங்கி இவனைக் கொல்லாமல் விட்டேன்.

**கென்ட்:** அட, தேவடியாள் மகனே! வேண்டாத அக்ஷரமே!

பிரபு, தாங்கள் உத்தரவு கொடுத்தால். இந்தக் கரட்டுப் போக்கிரியை மிதித்து, சாந்தாக்கி கக்கூஸ் சுவருக்குப் பூசுவேன்என் நரைத்த தாடிக்காக விட்டானாம்! அட, வாலு!

**கார்ன்:** கூச்சல் போடாதே.

ஏய், காட்டு மிராண்டி! உனக்கு மரியாதை தெரியாதா?

**கென்ட்:** தெரியும், ஐயா, ஆனால், கோபத்துக்கு ஒரு உரிமை உண்டே.

**கார்ன்:** உனக்கென்ன கோபம்?

**கென்ட்:** நேர்மையைப் பூணத்தெரியாத இந்தப் புழுக்கைக்கு, வாளைப் பூண உரிமையுண்டா? அவிழ்க்க முடியாத மங்கல முடிச்சுகளை இவனைப் போன்ற போக்கிரி எலிகள் பல்லால் கடித்து அறுத்து விடுவார்கள். தம்முடைய எஜமானர் உள்ளத்தில் எழும் தீய உணர்ச்சிகளுக்கு தூபம் போடுவார்கள். உணர்ச்சி நெருப்புக்கு எண்ணெய் இட்டு, கசப்புணர்ச்சிக்கு மேலும் கசப்பேற்ற வல்லவர்கள்; மீன் கொத்திப் பறவை, காற்றடிக்கும் திக்கெல்லாம் தன் அலகைத் திருப்புவது போல, தங்கள் எஜமானர்களுடைய குணம் மாறும் போதெல்லாம், அதற்குத்தக்க 'ஆமாம்' பாட்டுப் பாடுகின்றவர்கள். நாய்களைப்போல, பின் தொடர்வதைத் தவிர மற்றொன்றும் அறியாதவர்கள்.

காக்காய் வலிப்பு முகமும், நீயும் நாசமாய்ப்போக! என்னை முட்டாள் என்று நினைத்தா, நான் பேசுவதற்கெல்லாம் இளிக்கிறாய்? வாத்துப்பயலே, உன்னை "சாரம்" சமவெளியில் சந்தித்திருந்தால்,

**CORNWALL :** Why, art thou mad, old fellow?

**GLOUCESTER :** How fell you out? say that.

**KENT :** No contraries hold more antipathy
Than I and such a knave.

**CORNWALL :** Why dost thou call him a knave? What's his offence?

**KENT :** His countenance likes me not.

**CORNWALL :** No more, perchance,
does mine, nor his, nor hers.

**KENT** : Sir, 'tis my occupation to be plain :
I have seen better faces in my time
Than stands on any shoulder that I see
Before me at this instant.

**CORNWALL :** This is some fellow,
Who, having been praised for bluntness,
doth affect A saucy roughness,
and constrains the garb
Quite from his nature : he cannot flatter, he,
An honest mind and plain, he must speak truth!
An they will take it, so; if not, he's plain.
These kind of knaves
I know, which in this plainness
Harbour more craft and more corrupter ends
Than twenty silly ducking observants





காமிலோ நகரம் வரை கதறிக் கொண்டு ஓட வைத்திருப்பேன்.

**கார்ன்:** என்ன, கிழவா, உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா?

**க்ளாஸ்:** எதற்காகச் சண்டை போட்டீர்கள்? சொல்லு.

**கென்ட்:** எனக்கும் இந்தப் போக்கிரிக்கும் இடையே உள்ள பகைமை, உலகத்திலுள்ள வேறு எந்த எதிர்மறைப் பொருள்களுக்கும் இடையில் இருக்க முடியாது.

**கார்ன்:** அவனை ஏன் போக்கிரி என்று சொல்லுகிறாய்? அவன் செய்த குற்றம் என்ன?

**கென்ட்:** அவன் மூஞ்சிக்கு என்னைப் பிடிக்கவில்லை.

**கார்ன்:** எனக்கும் அப்படியே, அவனுக்கும் அப்படியே, அவளுக்கும் அப்படியே.

**கென்ட்:** ஐயா, மனம்திறந்து பேசுவதே என் தொழில். நான் இங்கே இப்போது பார்க்கிறேனே, முகங்கள், அதாவது, தோள்மேல் நிற்கும் முகங்கள், இவற்றைக் காட்டிலும் அழகிய முகங்களை, என் காலத்திலே, பார்த்திருக்கிறேன்.

**கார்ன்:** இவன் ஒரு மாதிரியான ஆசாமி. மனதில் பட்டதைப் பேசுகிறவன் என்று இவனை யாரோ பாராட்டி விட்டார்கள். ஆனால், முரட்டுத்தனமாகப் பேசுவது நல்லது என்று நினைத்து, தன் இயல்பான குணத்தைத் திரித்து, புதுப்பழக்கத்தை மேற்கொண்டிருக்கிறான். நேர்மையானவன், திறந்த பேசுகிறவன், முகஸ்துதி செய்யமாட்டான் என்றெல்லாம் ஊரார் நினைப்பார்கள். ஆனால், எனக்குத் தெரியும் இந்தப் பயல்களையெல்லாம்; கபடமற்றவர் போலப் பாசாங்கு செய்துகொண்டு சூழ்ச்சிக்கும் தீய நோக்கத்துக்குமே இடமாயிருப்பவர்கள் இவர்கள். பசப்பிலும், அற்பத்தனத்திலும் இருபது ஆஸ்தானப் பிரபுக்களுக்கு

That stretch their duties nicely.

**KENT :** Sir, in good sooth, in sincere verity, Under the allowance of your great aspect, Whose influence, like the wreath of radiant fire On flickering Phoebus' front,--

**CORNWALL :** What mean'st by this?

**KENT :** To go out of my dialect, which you discommend so much. I know, sir, I am no flatterer : he that beguiled you in a plain accent was a plain knave; which for my part
I will not be, though I should win your displeasure
to entreat me to 't.

**CORNWALL :** What was the offence you gave him?

**OSWALD :** I never gave him any : It pleased the king his master very late To strike at me, upon his misconstruction;
When he, conjunct and flattering his displeasure,
Tripp'd me behind; being down, insulted, rail'd,
And put upon him such a deal of man,
That worthied him, got praises of the king
For him attempting who was self-subdued;
And, in the fleshment of this dread exploit,
Drew on me here again.

**KENT :** None of these rogues and cowards
But Ajax is their fool.

**CORNWALL** : Fetch forth the stocks!
You stubborn ancient knave, you reverend braggart,
We'll teach you--





ஈடுகொடுப்பார்கள் இவர்கள்.

**கென்ட்:** ஐயா, சுத்தக் கருத்தோடு சொல்லுகிறேன், மனமாரச் சொல்லுகிறேன், தங்கள் மாட்சிமைமிகுந்த சன்னிதியிலே, பகலவனச் சுற்றி ஒளிரும் பரிவட்டத்தைப் போன்ற தங்கள் செல்வாக்கினால்...

**கார்ன்:** இதற்கெல்லாம் என்ன பொருள்?

**கென்ட்:** தங்களுக்குப் பிடிக்காத என் பாஷையை விலக்கி விட்டுப் பேசுகிறேன். ஐயா, எனக்குத் தெரியும், நான் முகஸ்துதி செய்பவன் அல்ல. வெள்ளை வாசகத்தைக் கொண்டு உங்களை மயக்கினவன் ஒரு வெள்ளைப் போக்கிரி. அத்தகைய போக்கிரியாயிருக்க நான் விரும்பவில்லை, தங்கள் கோபத்துக்கு ஆளானாலும் கூட.

**கார்ன்:** நீ அவனுக்கு என்ன கெடுதி செய்தாய்.

**ஆஸ்வா:** ஒரு கெடுதியும் செய்யவில்லை. அவனுடைய எஜமானாக இருக்கும் அரசர், அவனுடைய தப்புப்பேச்சைக் கேட்டுக்கொண்டு, என்னை அடித்தார். அவரோடு இவனும் சேர்ந்து கொண்டு, அவருக்கு மேலும் கோபமூட்டி, என் பின்னாலிருந்து, என் காலை இடறினான். நான் கீழே விழுந்து கிடந்த போது என்னைத் திட்டியும் இகழ்ந்தும், தன் வீரத்தனங்களைக் காட்டியும், அரசருடைய பாராட்டுதலைப் பெற்றான். இந்தப் பொல்லாத சாகசத்தைச் செய்த திமிரிலே, மீண்டும் இங்கே என்னைத் தாக்கினான்.

**கென்ட்:** போக்கிரித்தனத்திலும், கோழைத்தனத்திலும் அஜாக்ஸையும் மிஞ்சிவிடுவார்கள் இவர்கள்.

**கார்ன்:** கொண்டு வா குட்டையை! நீ ஒரு பிடிவாதம் பிடித்த கிழட்டுப் போக்கிரி, தற்பெருமைக்காரன். உனக்குப் பாடம் கற்பிக்கப் போகிறோம்.

**KENT :** Sir, I am too old to learn :
Call not your stocks for me : I serve the king;
On whose employment I was sent to you :
You shall do small respect, show too bold malice
Against the grace and person of my master,
Stocking his messenger.

**CORNWALL :** Fetch forth the stocks!
As I have life and honour,
There shall he sit till noon.

**REGAN :** Till noon! till night, my lord; and all night too.

**KENT :** Why, madam, if I were your father's dog,
You should not use me so.

**REGAN :** Sir, being his knave, I will.

**CORNWALL** : This is a fellow of the self-same colour
Our sister speaks of. Come, bring away the stocks!

Stocks brought out

**GLOUCESTER :** Let me beseech your grace not to do so :
His fault is much, and the good king his master
Will cheque him for 't :
your purposed low correction
Is such as basest and contemned'st wretches
For pilferings and most common trespasses
Are punish'd with : the king must take it ill,
That he's so slightly valued in his messenger,
Should have him thus restrain'd.

**கென்ட்:** ஐயா, கற்றுக்கொள்ளும் பருவம் போய் விட்டது. நான் வயதானவன். எனக்காக உங்கள் குட்டையை வரவழைக்க வேண்டாம். மேலும், நான் அரசரின் சேவகன். அரச காரியத்துக்காக உங்களிடம் வந்திருக்கிறேன். என்னைக் குட்டையில் போட்டு அடைப்பது அரசரை அவமதித்து நிந்தித்ததற்குச் சமானம்.

**கார்ன்:** கொண்டு வா குட்டையை! எனக்கும் உயிர் இருக்கிறது. மானம் இருக்கிறது. மதியம் வரை அவன் குட்டையில் அடைபட்டுக் கிடக்கட்டும்.

**ரீகன்:** பிரபு, மதியம் வரையிலா! இரவு வரையில், இரவு முழுவதுமே.

**கென்ட்:** ஏன், அம்மணி, நான் உங்கள் தந்தையின் நாயாயிருந்தால் கூட, என்னை இப்படி நடத்தக் கூடாது.

**ரீகன்:** ஐயா, நீர் அவருடைய பணியாள் அல்லவா, ஆகையால் அப்படியே செய்யப்போகிறேன்.

**கார்ன்:** நமது மச்சினி குறிப்பிட்டிருக்கும் அதே ஆசாமியைப் போலிருக்கிறான் இவன். அதே அச்சு! வா, கொண்டுவா குட்டையை.
[குட்டையைக் கொண்டு வருகிறார்கள்]

**க்ளாஸ்:** பிரபு, அப்படிச் செய்யவேண்டாம், உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். அவனுடைய குற்றம் பெரியது. அவனுடைய எஜமான்நமது அரசர் அவனைத் தண்டிப்பார். தாங்கள் கொடுக்கப்போகும் இழிவான தண்டனை, மிகவும் கீழ்த்தரமான குற்றவாளிகளுக்கும், களவாணிகளுக்கும், எல்லை மீறுபவர்களுக்குமே உரியது. அரச தூதனைக் குட்டையில் அடைத்தால், அரசர் என்ன நினைப்பார்! தம்மையே அவமதித்தாக நினைக்கமாட்டாரா?

**CORNWALL** : I'll answer that.

**REGAN** : My sister may receive it much more worse,
To have her gentleman abused, assaulted,
For following her affairs. Put in his legs.

KENT is put in the stocks

Come, my good lord, away.

Exeunt all but GLOUCESTER and KENT

**GLOUCESTER :** I am sorry for thee, friend;
'tis the duke's pleasure, Whose disposition,
all the world well knows, Will not be rubb'd
nor stopp'd : I'll entreat for thee.

**KENT :** Pray, do not, sir : I have watched and travell'd hard;
Some time I shall sleep out, the rest I'll whistle. A good man's
fortune may grow out at heels : Give you good morrow!

**GLOUCESTER :** The duke's to blame in this; 'twill be ill taken.

Exit

**KENT :** Good king, that must approve the common saw,
Thou out of heaven's benediction comest
To the warm sun!
Approach, thou beacon to this under globe,
That by thy comfortable beams I may





**கார்ன்:** அதற்கு நான் பதில் சொல்லிக் கொள்வேன்.

**ரீகன்:** என்னுடைய தமக்கையின் தூதனை, அவளுடைய காரியமாக வந்தவனை, இப்படித் திட்டும் அடியும் வாங்கும்படி செய்தால், அவள் அதைக் காட்டிலும் தப்பான நினைத்துக் கொள்வாள் அவன் கால்களைக் குட்டையில் இடுங்கள்.
[குட்டையிலிடுகிறார்கள்]

வாருங்கள், பிரபு போகலாம்.

[க்ளாஸ்டர், கென்ட் தவிர எல்லோரும் போகிறார்கள்]

**க்ளாஸ்:** நண்பரே, உமக்காக வருந்துகிறேன். இது கோமகனுடைய விருப்பம். அதைத் தடுக்கவும் முடியாது, மாற்றவும் முடியாது. இது உலகமே அறிந்த விஷயம். உங்களுக்காக மன்றாடிப் பார்க்கிறேன்.

**கென்ட்:** வேண்டாம், ஐயா. வேண்டாம். தூக்கமில்லாமல் நெடுவழி வந்திருக்கிறேன். கொஞ்ச நேரத்தைத் தூங்கிக் கழிப்பேன். மிச்ச நேரத்தில் சீட்டியடிப்பேன். நல்லவனுக்குச் செல்வம் காலிலிருந்து முளைத்தெழலாம். போய்வாருங்கள்.

**க்ளாஸ்:** [தனக்குள்] கோமகன் செய்தது தவறு. இதை ஒப்ப மாட்டார்கள். [போகிறார்]

**கென்ட்:** உத்தம வேந்தே, "ஸ்வர்க்கத்தின் கருணையால், சூரிய வெளிச்சத்துக்கு வருகிறாய்" என்ற பழமொழி மெய்யாகி விட்டது.

இந்த பாதாள லோகத்தின் விளக்கே வா. உன் கதிர் ஒளியிலே இந்தக் கடிதத நான் படிக்கலாமல்லவா. துன்பத்தைத் தவிர மற்ற தத்துவங்களுக்கு அற்புதங்கள் அநேகமாகப் புலனாவதில்லை. அது கார்டீலியாவிடமிருந்து வந்திருக்கிறது என்ற எனக்குத் தெரியும்.

Peruse this letter! Nothing almost sees miracles
But misery : I know 'tis from Cordelia,
Who hath most fortunately been inform'd
Of my obscured course; and shall find time
From this enormous state, seeking to give
Losses their remedies. All weary and o'erwatch'd,
Take vantage, heavy eyes, not to behold
This shameful lodging.
Fortune, good night : smile once more : turn thy wheel!
Sleeps

## SCENE III.

A wood.

Enter EDGAR

**EDGAR :** I heard myself proclaim'd;
And by the happy hollow of a tree
Escaped the hunt. No port is free; no place,
That guard, and most unusual vigilance,
Does not attend my taking. Whiles I may 'scape,
I will preserve myself : and am bethought
To take the basest and most poorest shape
That ever penury, in contempt of man,
Brought near to beast : my face I'll grime with filth;
Blanket my loins : elf all my hair in knots;
And with presented nakedness out-face
The winds and persecutions of the sky.
The country gives me proof and precedent
Of Bedlam beggars, who, with roaring voices,
Strike in their numb'd and mortified bare arms
Pins, wooden pricks, nails, sprigs of rosemary;



நல்ல வேளையாக, என் மாறுவேஷத்தைப் பற்றி அவளுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. இங்குள்ள கஷ்டங்களுக்கெல்லாம் பரிகாரம் அவள் மூலம் கிடைக்கும். தூக்கமில்லாமல், உடம்பெல்லாம் களைப்பாயிருக்கிறது. தூக்கம் முட்டிக் கொண்டு நிற்கும் கண்களே, இந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இந்த மானக் கேடான இருக்கையைக் கவனிக்காதீர்கள். ஆக்கமே, வந்தனம்; மறுபடியும் புன்முறுவல் செய்; உன் சக்கரத்தைச் சுழற்று!

[உறங்குகிறான்]

## காட்சி 3

திறந்த வெளி

[எட்கார் வருகிறான்]

**எட்கார்:** என்னைக் குற்றவாளி என்று பறை சாற்றுவதை நானே கேட்டேன். நல்ல வேளையாக, ஒரு மரப் பொந்தில் இருந்ததால், என்னை வேட்டையாட வந்தவர்களிடமிருந்து தப்பினேன். காவலில்லாத துறைமுகம் இல்லை; என்னைப் பிடிப்பதற்காக, தீவிரமான காவல் இல்லாத இடமே இல்லை. தப்பியோடும்போது தற்காத்துக் கொள்ளவேண்டும். அதற்காக மாறுவேடம் போட்டுக் கொள்ள வேண்டும். வறுமை, மனிதனை நையாண்டிசெய்து மிருக நிலைக்குக் கொண்டு வருகிறது. அந்த நிலையில், மனிதன் உருக்குலைந்து இழிதகைமையடைகிறான். அவ்விழிய உருவத்தை நான் மேற்கொள்ள வேண்டும். என் முகத்தில் அழுக்கைப் பூசிக் கொள்வேன், இடுப்பிலே கந்தலைச் சூடிக் கொள்வேன். முடியைச் சடைகளாகத் திரித்துக் கொள்வேன், அம்மணமாக, காற்றையும் வானத்தின் கொடுமைகளையும் தாங்குவேன். நாட்டிலேயுள்ள பெட்லம் பிச்சைக்காரர்களைப் போல வாழ்வேன். அவர்கள் ஓலமிட்டுக் கொக்கரிப்பார்கள், மரத்துப்போன அவர்களுடைய எலும்புக் கைகளிலே குண்டுசிகளையும் மர ஆணிகளையும் இரும்பாணிகளையும் ரோஸ்மரிக் குச்சிகளையும் குத்திக் கொண்டு, கீழ்த்தரமான பண்ணைகளுக்கும், இழிவான குக்கிராமங்களுக்கும், ஆட்டுப்பட்டிகளுக்கும், ஆலைகளுக்கும்

And with this horrible object, from low farms,
Poor pelting villages, sheep-cotes, and mills,
Sometime with lunatic bans, sometime with prayers,
Enforce their charity. Poor Turlygod! poor Tom!
That's something yet : Edgar I nothing am.

Exit

## SCENE IV.

Before GLOUCESTER's castle. KENT in the stocks.
Enter KING LEAR, Fool, and Gentleman

**KING LEAR** : 'Tis strange that they should so depart from home, And not send back my messenger.

**Gentleman :** As I learn'd, The night before there was no purpose in them of this remove.

**KENT :** Hail to thee, noble master!

**KING LEAR :** Ha!
Makest thou this shame thy pastime?

**KENT** : No, my lord.

**Fool :** Ha, ha! he wears cruel garters. Horses are tied by the heads, dogs and bears by the neck, monkeys by the loins, and men by the legs : when a man's over-lusty at legs, then he wears wooden nether-stocks.

**KING LEAR :** What's he that hath so much thy place mistook To set thee here?







சென்று, பைத்தியக் குரல் எழுப்பியும், பிரார்த்தனைகள் செய்தும், மக்களைப் பிச்சைபோடச் செய்கிறார்கள். அவர்களுடைய நோக்கம் அஞ்சத்தக்கது. பாவம்! பிச்சைக்காரர்கள்! ஆனால், அவர்கள் பிச்சைக்காரர்களாகவாவது இருக்கிறார்களே. எட்கார்! நீ அதுவுமில்லையே!

## காட்சி 4

க்ளாஸ்டர் அரண்மனையின் முன்.
[லீயர், கோமாளி, கனவான்கள் வருகிறார்கள்]

**லீயர் :** அவர்கள் இப்படியாக வீட்டை விட்டுப் போயிருக்கிறார்கள். என் தூதர்களையும் திருப்பி அனுப்பவில்லையே. வேடிக்கைதான்.

**கனவான்:** முந்தின இரவில்கூட அவர்கள் வெளியே போகவேண்டும் என்று எண்ணவில்லையாம்.

**கென்ட்:** அருமைப் பிரபு, வணக்கம்.

**லீயர் :** ஆ! இப்படிக் கேவலமான நிலையிலிருப்பது உனக்கு உல்லாஸமாயிருக்கிறதா?

**கென்ட்:** இல்லை, பிரபு.

**கோமாளி:** ஹா, ஹா, கொடுமையான காலணி அணிந்திருக்கிறார். குதிரைகளுக்குக் கட்டு, தலையிலே; நாய்களுக்கும், கரடிகளுக்கும், கழுத்திலே; குரங்குகளுக்கு, இடுப்பிலே; மனிதர்களுக்கு காலிலே. கால் வேகம் மிக்கவனுக்குக் காலிலே கட்டை.

**லீயர் :** உன்னை யார் என்று தெரியாமல் இப்படிக் குட்டையில் அடைத்தவன் யார்?

**கென்ட்:** அவனும் அவளும் உங்கள்; உங்கள் மருமகனும் மகளும்.

**KENT :** It is both he and she; Your son and daughter.

**KING LEAR :** No.

**KENT :** Yes.

**KING LEAR** : No, I say.

**KENT :** I say, yea.

**KING LEAR :** No, no, they would not.

**KENT :** Yes, they have.

**KING LEAR** : By Jupiter, I swear, no.

**KENT :** By Juno, I swear, ay.

**KING LEAR :** They durst not do 't; They could not, would not do 't; 'tis worse than murder, To do upon respect such violent outrage : Resolve me, with all modest haste, which way Thou mightst deserve, or they impose, this usage, Coming from us.

**KENT** : My lord, when at their home
I did commend your highness' letters to them,
Ere I was risen from the place that show'd
My duty kneeling, came there a reeking post,
Stew'd in his haste, half breathless, panting forth
From Goneril his mistress salutations;
Deliver'd letters, spite of intermission,

**லீயர் :** இருக்க முடியாது.

**கென்ட்:** அவர்களே தான்.

**லீயர் :** நான் சொல்லுகிறேன், அப்படி இருக்காது.

**கென்ட்:** நான் சொல்லுகிறேன், அவர்களே என்று.

**லீயர் :** இல்லை, இல்லை, அவர்கள் செய்திருக்க மாட்டார்கள்.

**கென்ட்:** அவர்களே செய்தார்கள்.

**லீயர் :** ஜூப்பிடர் சத்தியமாக, "இருக்காது" என்று சொல்லுகிறேன்.

**கென்ட்:** ஜூனோ சத்தியமாக, ஆம் என்று சொல்லுகிறேன்.

**லீயர் :** அவர்கள் இப்படியும் செய்வார்களா! செய்யக் கூடுமா, செய்யத்தான் விரும்புவார்களா! நினைத்து இப்படிச் செய்திருந்தால், கொலையைக் காட்டிலும் கொடியது அது. நம்மிடமிருந்து வந்த உன்னை இந்தத் தண்டனைக்கு ஆளாக்குவானேன்? காரணமென்ன? விரைவில் சொல்லித் தெளிவுபடுத்து.

**கென்ட்:** பிரபு, அவர்கள் வீட்டிலிருக்கும்போது, தங்கள் கடிதத்தை அவர்களிடம் கொடுத்தேன். நான் மண்டியிட்டு எழுவதற்கு முன், அவசரம் அவசரமாக ஒருவன் ஓடோடி வந்து, திக்குமுக்காடிப் பெருமூச்சு விட்டு, அவனுடைய எஜமானி கானெரிலுடைய கடிதத்தை வணக்கம் செய்து சமர்ப்பித்தான். அதை அவர்கள் படித்தார்கள். உடனே பணியாட்களைக் கூப்பிட்டுக் கொண்டு, குதிரையேறிப் புறப்பட்டார்கள். என்னையும் அவர்கள்பின் வரும்படியும், அவர்கள் எப்போது பதில் தருகிறார்களோ, அப்போது அதை வாங்கிக் கொண்டு போகும்படியும் பணித்தார்கள். அவர்கள் என்னைப் பார்த்த பார்வையிலே அன்பில்லை. அந்த

Which presently they read : on whose contents,
They summon'd up their meiny, straight took horse;
Commanded me to follow, and attend
The leisure of their answer; gave me cold looks :
And meeting here the other messenger,
Whose welcome, I perceived, had poison'd mine,--
Being the very fellow that of late
Display'd so saucily against your highness,--
Having more man than wit about me, drew :
He raised the house with loud and coward cries.
Your son and daughter found this trespass worth
The shame which here it suffers.

**Fool :** Winter's not gone yet,
if the wild-geese fly that way.
Fathers that wear rags
Do make their children blind;
But fathers that bear bags
Shall see their children kind.
Fortune, that arrant whore,
Ne'er turns the key to the poor.
But, for all this, thou shalt have as many dolours
for thy daughters as thou canst tell in a year.

**KING LEAR :** O, how this mother swells up toward my heart!
Hysterica passio, down, thou climbing sorrow,
Thy element's below! Where is this daughter?

**KENT** : With the earl, sir, here within.

**KING LEAR :** Follow me not; Stay here.







தூதனுக்குக் கொடுத்த நல்வரவு எனக்கு நஞ்சாக மாறியது. அவனை இங்கு வந்த பின்னும் சந்தித்தேன். அவன் வேறு யாரும் இல்லை, தங்களிடம் திமிராக நடந்து கொண்டானே, அவனேதான். எனக்கோ புத்தியைக் காட்டிலும் வீரம் அதிகம். ஆகவே, அவனைக் கண்டதும், வாளையுருவினேன். வீடே அதிர்ந்து விழுந்து விடுமோ என்றிருந்தது அவன் போட்ட படப்பயமும், கூப்பாடும். நான் செய்த குற்றத்துக்காக நான் இப்போது அனுபவிக்கும் அவமானத்தைக் கொடுத்தார்கள் தங்கள் மருமகனும் மகளும்.

**கோமாளி:** காட்டு வாத்துக்கள் அவ்வழி பறந்து கொண்டிருந்தால் குளிர்காலம் போய்விட்டது என்று சொல்ல முடியாது.

[பாடுகிறான்]

கந்தை அணிந்தவன் தந்தை யென்றால்இரு
கண்கெட்டுப் போவராம் மக்கள் எல்லாம்
பந்தமும் பாசமும் காட் டிடுவார்தந்தை
பாரப் பணப்பை சுமந்திருந்தால்;
''அதிர்ஷ்டம்'' என்ற விலைமகளும்பொருள்
அற்றார்க்கு வாசல் திறப்பதில்லை.

ஆகையால், உங்கள் பெண் மக்களுக்காக, பணத்தைச் சேர்த்து வையுங்கள். ஒரு ஆண்டிலே எவ்வளவு எண்ண முடியுமோ, அவ்வளவு பணத்தைச் சேர்க்க வேண்டும்.

**லீயர்** : ஓ, இந்த வாயு எப்படித் திரண்டு, உருண்டு ஓங்கி என் நெஞ்சைத் தாக்குகிறது! என்னைப் பித்தனாக்கும் உணர்ச்சியே, இறங்கு! ஏறும் துயரமே, இறங்கு கீழே!எங்கே இந்த மகளை?

**கென்ட்:** கோமகனோடு உள்ளே இருக்கிறாள், பிரபு.

**லீயர்** : என்னோடு வரவேண்டாம், இருங்கள்.

Exit

**Gentleman :** Made you no more offence
but what you speak of?

**KENT** : None.
How chance the king comes with so small a train?

**Fool :** And thou hadst been set
i' the stocks for that
question, thou hadst well deserved it.

**KENT :** Why, fool?

**Fool :** We'll set thee to school to an ant,
to teach thee there's no labouring
i' the winter. All that follow
their noses are led by their eyes but blind men; and
there's not a nose among twenty but can smell him
that's stinking. Let go thy hold when a great wheel
runs down a hill, lest it break thy neck with
following it : but the great one that goes up the
hill, let him draw thee after.
When a wise man gives thee better counsel,
give me mine again : I would have none
but knaves follow it,
since a fool gives it.
That sir which serves and seeks for gain,
And follows but for form,
Will pack when it begins to rain,
And leave thee in the storm,







[போகிறார்]

கனவான் நீ சொன்னாயே, அதைத்தவிர நீ வேறொரு குற்றமும் செய்யவில்லையா**?**

**கெண்ட்:** வேறொன்றும் இல்லைஏன் இவ்வளவு சிறிய பரிவாரத்தோடு மன்னர் வருகிறார்**?**

**கோமாளி:** இந்தக் கேள்விக்காகத்தான் உன்னைக் குட்டையில் அடைத்திருக்கிறார்கள். உனக்கு வேண்டியதுதான்.

**கெண்ட்:** ஏன், கோமாளி**?**

**கோமாளி:** குளிர் காலத்திலே வேலை கிடையாது என்ற பாடம் படிக்க, உன்னை எறும்புப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டும். கண்ணுள்ளவர்கள் எல்லோருக்கும் மூக்கினால் மோப்பம் பிடிக்கவும் தெரியும். குருடர்கள்கூட, துர்நாற்றம் நாறிக் கொண்டிருப்பவனை மோப்பத்தால் கண்டுபிடித்து விடுவார்கள். அப்படிக் கண்டுபிடிக்காத மூக்கு இருபதில் ஒன்று கூட இல்லை. மலையிலிருந்து கீழ்நோக்கி உருண்டுவரும் சக்கரத்தைப் பிடித்துக் கொண்டு போனால், உன்கழுத்து முறிந்துவிடும். ஆகையால், உன் பிடியை விட்டுவிடு. ஆனால், மென்மேலும் உயரச் செல்லுகின்ற பெரியவனை விடாதே. அவன் உன்னையும் சேர்த்து இழுத்துக் கொண்டு போகட்டும். அறிவாளி என்னைக் காட்டிலும் நல்ல யோசனை சொன்னால், என் ஆலோசனையைத் திரும்பக் கொடுத்துவிடு. முட்டாள் சொல்லும் புத்திமதியைப் போக்கிரிகள் மாத்திரமே பின்பற்ற வேண்டும்.

[காவடிச் சிந்து மெட்டு]

துட்டுக்கு வேலை செய்யும் பேர்கள் வெறும்
ஒப்புக்குக் கூட வருவார்கள்ஒரு
சொட்டு மழைவிழுந்தால் புயலில்உம்மை

But I will tarry; the fool will stay,
And let the wise man fly :
The knave turns fool that runs away;
The fool no knave, perdy.

**KENT :** Where learned you this, fool?

**Fool** : Not i' the stocks, fool.

Re-enter KING LEAR with GLOUCESTER

**KING LEAR :** Deny to speak with me?
They are sick? they are weary?
They have travell'd all the night?
Mere fetches;
The images of revolt and flying off.
Fetch me a better answer.

**GLOUCESTER :** My dear lord,
You know the fiery quality of the duke;
How unremoveable and fix'd he is
In his own course.

**KING LEAR :** Vengeance! plague! death!
confusion! Fiery? what quality?
Why, Gloucester, Gloucester,
I'ld speak with the
Duke of Cornwall and his wife.

**GLOUCESTER :** Well, my good lord,
I have inform'd them so.







விட்டு விலகி ஓடுவார்கள்
இங்கு
கோமாளியென் றூரார் சொலும்
நானோ வெனில் தானாகவே
கூட இருந்திடு வேனேபுத்தி
சாலிகள் ஓடினும் நானே
ஓடிடும் முட்டாள் ஓர் கயவன்விட்டு
ஓடிடும் முட்டாள் ஓர் கயவன்
இங்கு
ஓடாதவன் கோமாளியே
ஆனாலும் ஓர் நாளாகிலும்
ஒட்டாது அயோக்கியப் பட்டம்எனக்
கொட்டாது அயோக்கியப் பட்டம்.

**கென்ட்:** இதை நீ எங்கே கற்றாய், முட்டாள்?

**கோமாளி:** குட்டையில் அல்ல, முட்டாள்.
[க்ளாஸ்டருடன் லீயர் வருகிறார்]

**லீயர் :** என்னுடன் பேச மறுக்கிறார்களா? சீக்காம், களைப்பாம், இரவு முழுவதும் பயணமாம். எல்லாம் நொண்டிச் சாக்கு, ஏற்றுக் கொள்ளக் கூடிய பதிலை வாங்கி வா.

**க்ளாஸ்:** அருமைப் பிரவு, கோமகனுடைய கடுகடுப்பு உங்களுக்கு தெரிந்ததுதானே. ஒரே நெருப்பாயிருக்கிறார். தான் பிடித்ததைச் சாதிப்பார்.

**லீயர் :** பழி! நாசம்! சாவு! குழப்பம்! நெருப்பா? என்ன குணம்? க்ளாஸ்டர், க்ளாஸ்டர், கார்ன்வால் கோமகனோடும், அவர் மனைவியோடும் பேச விரும்புகிறேன்.

**க்ளாஸ்:** தங்கள் விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்து விட்டேன், பிரவு!

**KING LEAR** : Inform'd them! Dost thou understand me, man?

**GLOUCESTER :** Ay, my good lord.

**KING LEAR** : The king would speak with Cornwall;
the dear father Would with his daughter speak, commands
her service : Are they inform'd of this? My breath and blood!
Fiery? the fiery duke? Tell the hot duke that--
No, but not yet : may be he is not well :
Infirmity doth still neglect all office
Whereto our health is bound; we are not ourselves
When nature, being oppress'd, commands the mind
To suffer with the body : I'll forbear;
And am fall'n out with my more headier will,
To take the indisposed and sickly fit
For the sound man. Death on my state! wherefore

Looking on KENT

Should he sit here? This act persuades me
That this remotion of the duke and her is practise only. Give
me my servant forth. Go tell the duke and 's wife I'ld speak
with them, Now, presently : bid them come forth and hear
me, Or at their chamber-door I'll beat the drum
Till it cry sleep to death.

**GLOUCESTER :** I would have all well betwixt you.

Exit

**KING LEAR :** O me, my heart, my rising heart! but, down!



**லீயர் :** "தெரிவித்து விட்டேனா"**?** நான் சொல்லுவது தெரிகிறதா, ஐயா**?**

**க்ளாஸ்:** ஆம், பிரபு.

**லீயர் :** கார்ன்வாலோடு மன்னர் பேச விரும்புகிறார். அன்புத் தந்தை தன் மகளோடு பேச விரும்புகிறார், அவள் சேவையை நாடுகிறார். இதை அவர்களுக்குத் "தெரிவித்தீரா"**?** அழகு, அழகு! நெருப்பாமே, நெருப்பு! கொதிக்கும் கோமகனிடத்திலே இதைச் சொல்லும்வேண்டாம், இப்பொழுது வேண்டாம்; ஒருக்கால், உண்மையிலேயே அவர் உடல் நலமில்லாமலிருக்கலாம்; நோயுற்ற காலத்தில் சரிவரச் செய்யும் கடமைகளை, நோயுற்ற காலத்தில் செய்யத் தவறி விடுகிறோம். உடலைத் துன்புறுத்தும் நோய் உள்ளத்தையும் ஆட்டி வைத்துத் துன்புறுத்துகிறது; கோபத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்; நோயினால் ஏற்படும் குற்றங்களை நோயாளிக்கு ஏற்றுவது தவறு. முன் கோபத்தால் இத்தவறு செய்துவிட்டேன். நெஞ்சமே! பாழாய்ப் போ, (கென்டைப் பார்த்து) எதற்காக இவன் இங்கிருக்க வேண்டும்**?** இந்தச் செயலைப் பார்க்கும்போது, கோமகனும் அவளும் இங்கு ஓடி வந்தது, கெட்ட நோக்கத்தோடுதான் என்று தெரிகிறது. என்னுடைய வேலைக்காரனை உடனே என்னிடம் ஒப்படைக்க வேண்டும். அந்தக் கோமகனிடத்திலும் அவர் மனைவியிடத்திலும் போய், அவர்களிடம் நான் பேச விரும்புகிறேன் என்று சொல்லும். அவர்களை வரச் சொல்லும், வந்து நான் சொல்வதைக் கேட்கச் சொல்லும். இல்லையென்றால், அவர்கள் பள்ளியறைக்கு முன் நின்றுகொண்டு, டமாரம் அடிப்பேன். அவர்களுடைய உறக்கம் சாவிலே போய் முடியும் வரை டமாரம் அடிப்பேன்.

**க்ளாஸ்:** உங்கள் உறவு சீராக வேண்டுமென்பதே என் ஆசை.

**லீயர் :** ஐயோ, நெஞ்சமே, குதிகுதிக்கும் நெஞ்சமே! அலட்டிக் கொள்ளாதே. [போகிறார்]

**Fool :** Cry to it, nuncle, as the cockney did to the eels when she put 'em i' the paste alive; she knapped 'em o' the coxcombs with a stick, and cried 'Down, wantons, down!' 'Twas her brother that, in pure kindness to his horse, buttered his hay.

Enter CORNWALL, REGAN, GLOUCESTER, and Servants

**KING LEAR :** Good morrow to you both.

**CORNWALL :** Hail to your grace!

KENT is set at liberty

**REGAN :** I am glad to see your highness.

**KING LEAR** : Regan, I think you are; I know what reason
I have to think so : if thou shouldst not be glad,
I would divorce me from thy mother's tomb,
Sepulchring an adultress.

**To KENT**

O, are you free? Some other time for that. Beloved Regan,
Thy sister's naught : O Regan, she hath tied
Sharp-tooth'd unkindness, like a vulture, here :

Points to his heart
I can scarce speak to thee; thou'lt not believe
With how depraved a quality--O Regan!

**கோமாளி:** மாமா, நெஞ்சைப் பார்த்தா கூப்பாடு போடுகிறீர்கள்! அந்தக் சமையல்காரி கதையாயிருக்கிறதே; குழம்புக்குள்ளே அவள் விலங்கு மீனை உயிரோடு போட்டாளாம்; துள்ளல் போட்ட மீனை மண்டையிலே அடித்து, "துள்ளாதே, துள்ளாதே", என்று ஓலமிட்டாளாம். அவள் அண்ணனோ, அதைவிட புத்திசாலி; குதிரையிடமிருந்த அன்பை, புல்லிலே வெண்ணெய்யைத் தடவிக் காட்டினானாம்.

[கார்ன்வால், ரீகன், க்ளாஸ்டர் பணியாட்கள் வருகிறார்கள்]

**லீயர் :** உங்கள் இருவருக்கும் வணக்கம்.

**கார்ன்:** நல்வரவு, பிரபு.
[கென்டை அவிழ்த்து விடுகிறார்கள்]

**ரீகன்:** தங்களைப் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சி.

**லீயர் :** ரீகன், உனக்கு மகிழ்ச்சிதான் என்று நினைக்கிறேன். அதற்குக் காரணம் என்ன என்ற எனக்குத் தெரியும். என்னைக் கண்டு எனக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லையென்றால், கல்லறையில் கிடக்கும் உன் தாயை கற்பிழந்த பெண்ணின் கல்லறையாக அது காட்சியளிக்கும். (கென்டைப் பார்த்து) ஓ, உனக்கு விடுதலை கிடைத்துவிட்டதா? அதைப் பற்றிப் பின்னால் வைத்துக் கொள்வோம்.

அன்புள்ள ரீகன், உன் அக்காள் மிகுந்த கொடுமைக்காரி. ஓ, ரீகன், கூரிய பல்லையுடைய கொடுமையை பிணந்தின்னிக் கழுகை இங்கே கொத்தும்படி செய்துவிட்டாள். (நெஞ்சைக் காட்டுகிறார்) சொல்லத் தயங்குறேண்டி, அம்மா, அவள் இவ்வளவு இழிந்தவளா என்று நம்ப முடியாதுஐயோ, ரீகன்!

**ரீகன்:** பொறுமையாயிருங்கள், அப்பா. அவள் கடமையில்

**REGAN** : I pray you, sir, take patience : I have hope.
You less know how to value her desert
Than she to scant her duty.

**KING LEAR** : Say, how is that?

**REGAN :** I cannot think my sister in the least would fail her obligation : if, sir, perchance she have restrain'd the riots of your followers, 'Tis on such ground, and to such wholesome end, as clears her from all blame.

**KING LEAR :** My curses on her!

**REGAN :** O, sir, you are old. Nature in you stands on the very verge of her confine : you should be ruled and led
By some discretion, that discerns your state
Better than you yourself. Therefore, I pray you,
That to our sister you do make return;
Say you have wrong'd her, sir.

**KING LEAR :** Ask her forgiveness?
Do you but mark how this becomes the house :
'Dear daughter, I confess that I am old;

**Kneeling :** Age is unnecessary : on my knees I beg
That you'll vouchsafe me raiment, bed, and food.'

**REGAN :** Good sir, no more; these are unsightly tricks :
Return you to my sister.

**KING LEAR :** [Rising] Never, Regan : She hath abated me of half my train; Look'd black upon me; struck me with her





தவறிவிட்டாள் என்பதைக் காட்டிலும் நீங்கள் அவளுடைய நற்குணத்தைச் சரியாக மதிக்கவில்லையென்றே நான் நினைக்கிறேன்.

**லீயர் :** ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

**ரீகன்:** கடமையில் ஒரு சிறிதும் தவறமாட்டாள் என் அக்காள். உங்கள் பரிவாரத்தின் அக்கிரமத்தை அவள் அடக்கினாள் என்றால், அவளைக் குறை கூறலாமா? அவள் செய்தது முறைதானே.

**லீயர் :** அவள் பாழாய்ப்போக!

**ரீகன்:** ஓ, அப்பா, உங்களுக்கு வயதாகிவிட்டது. வாழ்க்கையின் இறுதி விளிம்பிலே கால் வைத்து நிற்கிறீர்கள். உங்கள் நிலை உங்களுக்கே தெரியாது. உங்களைக் கண்டித்துக் கட்டுப்படுத்திப் பாதுகாக்க வேண்டும். ஆகையால், அக்காளிடமே திரும்பிப் போய் விடுங்கள். அவளுக்கு தவறிழைத்து விட்டதாக அவளிடமே சொல்லுங்கள்.

**லீயர் :** மன்னிப்புக் கேட்கச் சொல்லுகிறாயா? "அருமை மகளே, நான் கிழடன் ஆகிவிட்டேன். கிழவர்கள் ஒன்றுக்கும் பயன் படாதவர்கள். ஆகையால், உண்டியும், உடுக்கையும், இருக்கையும் எனக்கு நீ தந்தருள வேண்டும்" என்று மண்டிபோட்டு அவளிடம் கேட்கவா? நமது அரச குடும்பத்துக்கு இது அடுக்குமா?

**ரீகன்:** வேண்டாம், ஐயா, இந்தக் கண்ராவிப் பாசாங்குகள். அக்காளிடம் போய்ச் சேருங்கள்.

**லீயர் :** ஒருகாலத்திலும் முடியாது, ரீகன். அவள் என் பரிவாரத்தைப் பாதியாக்கிவிட்டாள். கண்ணால் மிரட்டினாள். அவளுடைய நாவினால் பாம்பைப்போல், என் இதயத்தைக் கொத்தி விட்டாள். வானத்திலே உருண்டு திரண்டு நிற்கும் பழியெல்லாம் அவளுடைய

tongue, Most serpent-like, upon the very heart :
All the stored vengeances of heaven fall
On her ingrateful top! Strike her young bones,
You taking airs, with lameness!

**CORNWALL :** Fie, sir, fie!

**KING LEAR :** You nimble lightnings, dart your blinding flames
Into her scornful eyes! Infect her beauty,
You fen-suck'd fogs, drawn by the powerful sun,
To fall and blast her pride!

**REGAN** : O the blest gods! so will you wish on me,
When the rash mood is on.

**KING LEAR :** No, Regan, thou shalt never have my curse : Thy tender-hefted nature shall not give thee o'er to harshness : her eyes are fierce; but thine do comfort and not burn. 'Tis not in thee to grudge my pleasures, to cut off my train, To bandy hasty words, to scant my sizes, and in conclusion to oppose the bolt against my coming in : thou better know'st The offices of nature, bond of childhood, effects of courtesy, dues of gratitude; thy half o' the kingdom hast thou not forgot, wherein I thee endow'd.

**REGAN :** Good sir, to the purpose.

**KING LEAR :** Who put my man i' the stocks?
Tucket within

**CORNWALL :** What trumpet's that?







நன்றிகெட்ட மண்டையில் மேல் விழட்டும்! பூதங்களே, அவளுடைய கருப்பைக்குள்ளிருக்கும் சிசுவை நொண்டியாக்குங்கள்!

**கார்ன்:** சீச்சீ, என்ன ஐயா இது!

**லீயர் :** நொய்ம்மையான மின்னல்களே, குருடாக்கும் உங்கள் வெங்கனலை அவள் கண்களுக்குள் பாய்ச்சுங்கள்! அந்தச் செருக்குக்காரக் கண்களுக்குள்! சதுப்பு நிலங்களிலிருந்து பகலவனால் உறிஞ்சப்படும் நாறல் ஆவியே, அவளுடைய அழகைக் கெடு, அவள் திமிரைச் சிதை.

**ரீகன்:** அட, கடவுளே, கோபம் வந்தால், என்னையுந்தான் இப்படிச் சபிப்பீர்கள்.

**லீயர் :** இல்லை, ரீகன், உன்னை ஒரு நாளும் சபிக்க மாட்டேன். மென்மை நிறைந்த நீ கடுமைக்கு இடங்கொடுக்கமாட்டாய். அவளுடைய கண்கள் கோரமானவை. ஆனால், உன்னுடைய நயனங்களோ, இங்கிதமானவை, குளுமை நிறைந்தவை. நீ என்னை வஞ்சகம் செய்ய மாட்டாய், என் பரிவாரத்தைக் குறைப்பாயா? பதட்டமாய்ப் பேசுவாயா? என் மானியத்தைச் சுருக்குவாயா? என் வருகையைத் தடுக்க, தாழ்ப்பாழ் போடுவாயா? மாட்டாய். உறவின் தன்மை தெரிந்தவள் நீ. குழந்தைப் பாசம் உணர்ந்தவள் நீ. மரியாதை தெரிந்தவள், நன்றியுணர்வுடையவள். இந்த நாட்டில் பேர்பாதியை உனக்கு நன்கொடையாகக் கொடுத்தவன் நான் என்பதை மறந்தவள் அல்ல நீ.

**ரீகன்:** சரி, விஷயத்துக்கு வாருங்கள், ஐயா.

**லீயர் :** என்னுடைய ஆளைக் குட்டையில் அடைத்தது யார்?

[உள்ளே அணிவகுப்பு இசை முழங்கிறது]

**கார்ன்:** என்ன முழுக்கம் அது?

**REGAN :** I know't, my sister's : this approves her letter,
That she would soon be here.
Enter OSWALD

Is your lady come?

**KING LEAR :** This is a slave, whose easy-borrow'd pride
Dwells in the fickle grace of her he follows.
Out, varlet, from my sight!

**CORNWALL :** What means your grace?

**KING LEAR :** Who stock'd my servant? Regan, I have good hope thou didst not know on't. Who comes here? O heavens,
Enter GONERIL

If you do love old men, if your sweet sway
Allow obedience, if yourselves are old,
Make it your cause; send down, and take my part!

To GONERIL

Art not ashamed to look upon this beard?
O Regan, wilt thou take her by the hand?

**GONERIL :** Why not by the hand, sir? How have I offended?
All's not offence that indiscretion finds
And dotage terms so.

**KING LEAR :** O sides, you are too tough;
Will you yet hold?







**ரீகன்:** எனக்குத் தெரியும், அக்காளுடைய எக்காளம் அது. கடிதத்தில் எழுதியபடியே வந்துவிட்டாள்.
[ஆஸ்வால்ட் வருகிறான்]
உன்னுடைய பெருமாட்டி வந்து விட்டாளா?

**லீயர் :** இந்த பயலின் திமிர் இருக்கிறதே, அதை அவனுடைய எஜமானியின் நிலையற்ற தயவிலிருந்து, கடன் வாங்கியிருக்கிறான்.

போ, புழுக்கையே, மூஞ்சியில் விழிக்காதே,

**கார்ன்:** பிரபு, தங்கள் கருத்தென்ன?

**லீயர் :** என் வேலைக்காரனைக் குட்டையில் இட்டது யார்? ரீகன், உனக்குத் தெரியாமலே இது நடந்திருக்கிறது என்று நம்புகிறேன்.

இங்கே வருவது யார்?

[கானெரில் வருகிறாள்]

ஏ, வானமே, கிழவர்களிடத்திலே உனக்கு அன்பிருக்குமானால், உன் இனிய ஆட்சியிலே பணிவுக்கு இடமிருக்குமானால், என் கட்சியில் சேர்ந்து, எனக்காகப் போராடு. என் நிலையில் நின்றுபார். உன் சக்திகளைப் பூமிக்கு அனுப்பு. இந்த வெண்தாடியைப் பார்க்க நீ வெட்கப்படவில்லையா?ஓ, ரீகன், அவள் கையைத் தொட்டுக் குலுக்கப் போகிறாயா?

**கானெரில்:** ஏன், ஐயா, கையைத் தொடக்கூடாது? நான் என்ன குற்றம் செய்துவிட்டேன்? அசட்டுக் கிழடு சொன்னதற்காக, குற்றமற்றது குற்றமாகி விட்டது.

**லீயர் :** விலாக்களே, உங்களுக்கு அசாதாரணமான வன்மையிருக்கிறதே. உங்களால் இன்னும் என்னைத் தாங்க

How came my man i' the stocks?

**CORNWALL :** I set him there,
sir : but his own disorders
Deserved much less advancement.

**KING LEAR :** You! did you?

**REGAN :** I pray you, father,
being weak, seem so.
If, till the expiration of your month,
You will return and sojourn with my sister,
Dismissing half your train, come then to me :
I am now from home, and out of that provision
Which shall be needful for your entertainment.

**KING LEAR :** Return to her,
and fifty men dismiss'd?
No, rather I abjure all roofs, and choose
To wage against the enmity o' the air;
To be a comrade with the wolf and owl,--
Necessity's sharp pinch!
Return with her?
Why, the hot-blooded France, that dowerless took
Our youngest born, I could as well be brought
To knee his throne, and, squire-like; pension beg
To keep base life afoot. Return with her?
Persuade me rather to be slave and sumpter
To this detested groom.

Pointing at OSWALD





முடியுமா?

சரி, என்னுடைய ஆள் எப்படிக் குட்டையில் அடைபட்டான்?

**கார்ன்:** நான்தான், ஐயா, அவனை அடைத்தேன். அவன் செய்த வம்புக்கு இதுவும் போதாது.

**லீயர் :** நீரா செய்தீர்? நீரா?

**ரீகன்:** அப்பா, நீங்கள் கையாலாகாதவன், ஆகையால், கையாலாகாதவர் போல் நடந்து கொள்ளவும் வேண்டும். பரிவாரத்தைப் பாதியாகக் குறைத்துக் கொண்டு, இம்மாத இறுதி வரையில், அக்காளோடு தங்கியிருப்பீர்களானால், பிறகு என்னிடம் வரலாம். நான் இப்பொழுது என் வீட்டில் இல்லை, உங்களுக்குரிய பணிவிடைகளைச் செய்வதற்கும் போதிய வசதியில்லை.

**லீயர் :** திரும்பவும் அவளிடம் போகவா? அதுவும், ஐம்பது ஆட்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டா? முடியாது. அவளிடம் போய் இருப்பதைக் காட்டிலும், கூரையற்று, இருக்கையற்று இருப்பது மேல்; வெட்டவெளியின் பகைமையோடு போராடி, ஓநாய்க்குத் தோழமை பூண்டு, இளமையின் பொல்லாத துயரத்தை ஊளையிட்டுக் காட்டுவது மேல்.

அவளிடம் திரும்பிப் போகவா? அதைவிட, சீதனம் இல்லாமல் நம் கடைக்குட்டி மகளை மணந்தாரே, அந்த ப்ரான்ஸ் அரசர், அவருடைய அரியாசனத்ததின் முன் மண்டியிட்டு, எனக்கு மானியம் கொடுக்கும்படி கேட்கலாமே. கேடுகெட்ட உயிரை இப்படியுமா காப்பாற்ற வேண்டும்?
அவளோடு திரும்பிப் போக வேண்டுமாமே!

[ஆஸ்வால்டைக் காட்டி]

**GONERIL :** At your choice, sir.

**KING LEAR :** I prithee, daughter,
do not make me mad :
I will not trouble thee, my child; farewell :
We'll no more meet,
no more see one another :
But yet thou art my flesh,
my blood, my daughter;
Or rather a disease that's in my flesh,
Which I must needs call mine : thou art a boil,
A plague-sore, an embossed carbuncle,
In my corrupted blood.
But I'll not chide thee;
Let shame come when it will, I do not call it :
I do not bid the thunder-bearer shoot,
Nor tell tales of thee to high-judging Jove :
Mend when thou canst;
be better at thy leisure :
I can be patient; I can stay with Regan,
I and my hundred knights.

**REGAN :** Not altogether so :
I look'd not for you yet, nor am provided
For your fit welcome. Give ear, sir, to my sister;
For those that mingle reason with your passion
Must be content to think you old, and so--
But she knows what she does.

**KING LEAR** : Is this well spoken?

இந்தப் பாழும் புழுக்கைக்குப் புழுக்கையாயிரு என்று சொன்னால் கூடப் பரவாயில்லை.

**கானெரில்:** தங்கள் யுக்தம், ஐயா.

**லீயர் :** மகளே, உன்னைக் கேட்டுக் கொள்கிறேன். என்னைப் பித்தனாக்காதே, குழந்தை, உனக்கு நான் தொல்லை கொடுக்க மாட்டேன், போய் வருகிறேன்.

இனி, நாமிருவரும் சந்திக்கப் போவதில்லை, ஒருவரையொருவர் பார்க்கப் போவதில்லை. என்றாலும், என் உடம்பிலே ஒட்டியவள் நீ, என் இரத்தத்திலே தோய்ந்தவள், என் மகள்; இல்லை, என் உடலிலே உண்டான நோய் நீ. நோயாயிருந்தாலும், அது என்னுடையது என்றுதானே சொல்ல வேண்டும். என் கெட்ட ரத்தத்திலே, கூம்பி முளைத்த கொப்புளம் நீ. கொடும் புண் நீ. முண்டு முடிச்சாகப் பருத்துப் புரையோடிய புளவை நீ. ஆனால், நான் உன்னைத் திட்டப் போவதில்லை. அவமானம் வரும்போது வரட்டும்; நான் அதை அழைக்கப் போவதில்லை. இடியை உன் மேல் இடிக்கச் சொல்ல மாட்டேன். நீதி வழங்கும் ஜௌ தேவனிடம் உன்னைக் காட்டிக் கொடுக்கப் போவதில்லை. முடிந்தால், உன்னைத் திருத்திக்கொள். நாளாவட்டத்தில் மேல் நிலையை அடை. பொறுமையுடன் என்னால் இருக்க முடியும். நானும் என்னுடைய நூறு வீரர்களும் ரீகனோடு தங்கப் போகிறோம்.

**ரீகன்:** அப்படியும் சொல்வதற்கில்லை. நான் இப்போதே உங்களை எதிர்பார்க்கவில்லை. உங்களுக்குள்ள உபசாரங்களைச் செய்யவும் நான் ஆயுத்தமாயில்லை. அப்பா, அக்காள் சொல்லுவதைக் காது கொடுத்துக் கேளுங்கள். உங்களுக்குக் கிழடு தட்டி விட்டதென்று உங்கள் கோபதாபங்களை அறிந்தவர்களுக்குத் தெரியும். ஆகையினாலே... ஆனால், அவள் செய்வது என்னவென்று அவளுக்குத் தெரியும்.

**லீயர் :** இது சரியான பேச்சா?

**REGAN :** I dare avouch it, sir : what, fifty followers?
Is it not well? What should you need of more?
Yea, or so many, sith that both charge and danger
Speak 'gainst so great a number? How, in one house,
Should many people, under two commands,
Hold amity? 'Tis hard; almost impossible.

**GONERIL :** Why might not you, my lord, receive attendance
From those that she calls servants or from mine?

**REGAN :** Why not, my lord? If then they chanced to slack you,
We could control them. If you will come to me,--
For now I spy a danger,--I entreat you
To bring but five and twenty : to no more
Will I give place or notice.



**KING LEAR :** I gave you all--

**REGAN :** And in good time you gave it.

**KING LEAR :** Made you my guardians, my depositaries;
But kept a reservation to be follow'd
With such a number. What, must I come to you
With five and twenty, Regan? said you so?

**REGAN :** And speak't again, my lord; no more with me.

**KING LEAR :** Those wicked creatures yet do look well-favour'd,
When others are more wicked : not being the worst
Stands in some rank of praise.
To GONERIL





**ரீகன்:** நிச்சயம், ஐயா. ஐம்பது ஆட்கள் போதாதா? அதற்குமேல் உங்களுக்கு என்ன தேவை? அதற்கு மேல் இருப்பது அபாயம். ஒரே வீட்டிலே, இத்தனை பேர், இருவருடைய தலைமையில் செயற்பட்டால், அவர்களுக்குள் ஒற்றுமை எப்படி இருக்கும்? இருக்காது, இருக்கவே இருக்காது என்றே சொல்லலாம்.

**கானெரில்:** பிரபு, அவளுடைய வேலையாட்களாவது, என்னுடைய வேலையாட்களாவது உங்களுக்குப் பணிவிடை செய்தால், அதை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதா?

**ரீகன்:** ஏன் கூடாது, பிரபு? அவர்கள் உங்களிடம் கவனக் குறைவாக நடந்தால், நாங்கள் அவர்களைக் கண்டிப்போம். நீங்கள் என்னிடம் வருவதாயிருந்தால், இருபத்தைந்து பேரைத்தான் கூட்டி வரலாம். அதற்கு மேலிருந்தால், ஆபத்து என்று தெரிந்துகொண்டேன். அதற்குமேல் வந்தால், இடங்கொடுக்க மாட்டேன்.



**லீயர் :** உனக்கு எல்லாம் கொடுத்தேனே

**ரீகன்:** காலம் தப்பிக் கொடுக்கவில்லை.

**லீயர் :** உங்களை என் போஷகர்களாக்கினேன், எல்லாமும் ஆக்கினேன். ஆனால், நூறு பேரை வைத்துக் கொள்வேன் என்ற நிபந்தனையில் செய்தேன். என்ன, உன்னிடம் வரும்போது இருபத்தைந்து பேரோடுதான் வரவேண்டுமா? ரீகன், அப்படிச் சொல்ல உனக்கு வாய் வந்ததா?

**ரீகன்:** மீண்டும் சொல்லுகிறேன், அப்பா, அதற்கு மேல் கூடாது.

**லீயர் :** கொடியவர்களைக் காட்டிலும் கொடியவர்களைப் பார்க்கும்போது, முந்தியவர்கள் நல்லவர்கள் என்றே தோன்றுகிறது. கொடியவர், மிகக் கொடியவர், மிகமிகக் கொடியவர் என்று நிறுத்தி வைத்துப் பார்க்கும்போது, சாமானியக் கொடியவரைப் பாராட்டவும் செய்யலாம். [கானெரிலைப் பார்த்து] நான் உன்னோடு

I'll go with thee :
Thy fifty yet doth double five and twenty,
And thou art twice her love.

**GONERIL :** Hear me, my lord;
What need you five and twenty, ten, or five,
To follow in a house where twice so many
Have a command to tend you?

**REGAN :** What need one?

**KING LEAR :** O, reason not the need : our basest beggars
Are in the poorest thing superfluous :
Allow not nature more than nature needs,
Man's life's as cheap as beast's : thou art a lady;
If only to go warm were gorgeous,
Why, nature needs not what thou gorgeous wear'st,
Which scarcely keeps thee warm. But, for true need,--
You heavens, give me that patience, patience I need!
You see me here, you gods, a poor old man,
As full of grief as age; wretched in both!
If it be you that stir these daughters' hearts
Against their father, fool me not so much
To bear it tamely; touch me with noble anger,
And let not women's weapons, water-drops,
Stain my man's cheeks! No, you unnatural hags,
I will have such revenges on you both,
That all the world shall--I will do such things,--
What they are, yet I know not : but they shall be
The terrors of the earth. You think I'll weep
No, I'll not weep :







வருகிறேன். அவள் சொல்லுகிற இருபத்தைந்துக்கு இருமடங்காக இருக்கிறதே உன்னுடைய ஐம்பது. அவளுடைய அன்பைக் காட்டிலும் இரட்டிப்பானது உன்னுடையது.

**கானெரில்:** கேளுங்கள், பிரபு, வீட்டில் இரண்டு மடங்கு ஆட்கள் உங்களுக்குப் பணிவிடை செய்ய இருக்கும்போது, உங்களுக்கு என்று இருபத்தைந்தோ, ஏன், ஐந்தோதான் என்னத்துக்கு?

**ரீகன்:** என்னத்துக்கு?

**லியர் :** ஓ, என்னுடைய தேவையைப் பற்றி வாதம் செய்யாதே. கேடுகெட்ட பிச்சைக்காரனிடமிருக்கும் அற்பப் பொருளைக்கூட தேவையில்லாதது என்று சொல்லிவிடலாம். இயல்பான தேவைக்கு மேல் ஒன்றும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றால், மனித வாழ்க்கை, மிருக வாழ்க்கையைப் போல், இழிநிலை அடைந்து விடும். நீ ஒரு சீமாட்டி. குளிரைத் தவிர்ப்பதற்காக ஆடை அணிகிறாய், அந்த ஆடையை ஆடம்பரம் என்று ஒதுக்கலாமா? நீ பகட்டுக்காக அணியும் ஆடை குளிர் தவிர்க்கவும் உதவாது, அதை எப்படித் தேவையானது என்று சொல்லமுடியும்? ஆனால், உண்மையான தேவை எனக்குத் தேவையானது பொறுமை தெய்வங்களே, அந்தப் பொறுமையை எனக்குக் கொடுங்கள்! இங்கிருக்கும் என்னைப் பாருங்கள்.

இந்த ஏழைக்கிழவனிடத்திலே, வயது எவ்வளவு நிரம்பியிருக்கிறதோ, அவ்வளவு துன்பமும் நிரம்பியிருக்கிறது. இரண்டாலும் பாதிக்கப்படும் பாவி நான். என் பெண் மக்களுடைய இதயத்தைக் கலக்கி, தந்தையை விரோதிக்கச் செய்வது நீங்களாயிருந்தால், ஏ, தெய்வங்களே, இதையெல்லாம் பொறுமையோடு சகித்துக் கொண்டிருக்கும் முட்டாளாக்காதீர்கள் என்னை. என்னுள்ளே கோபப் பெருமிதத்தை மூட்டுங்கள். பெண்களுக்குரிய ஆயுதங்கள் நீர்த்துளிகள் என் ஆண்மைக் கன்னங்களை மாசு படுத்தாது ஒழியட்டும்! இல்லை, இயல்பில் திரிந்த சண்டாளிகளே, உங்களை பழிக்குப்பழி வாங்கப் போகிறேன். அதைக் கண்டு இந்த உலகமே

I have full cause of weeping; but this heart
Shall break into a hundred thousand flaws,
Or ere I'll weep. O fool, I shall go mad!

Exeunt KING LEAR, GLOUCESTER, KENT, and Fool

Storm and tempest

**CORNWALL :** Let us withdraw; 'twill be a storm.

**REGAN :** This house is little : the old man and his people
Cannot be well bestow'd.

**GONERIL :** 'Tis his own blame;
hath put himself from rest,
And must needs taste his folly.

**REGAN** : For his particular, I'll receive him gladly,
But not one follower.

**GONERIL :** So am I purposed.
Where is my lord of Gloucester?

**CORNWALL :** Follow'd the old man forth :
he is return'd.

Re-enter GLOUCESTER

**GLOUCESTER :** The king is in high rage.

**CORNWALL** : Whither is he going?





நான் என்ன செய்வேன், தெரியுமா? என்ன செய்வேன் என்று எனக்கு இன்னும் தெரியாது. ஆனால், என் செய்கையைக் கண்டு அச்சத்தால் பூமியே அதிரும். நான் அழுவேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை, அழமாட்டேன். [புயலும் சூறாவளியும் அடிக்கிறது] அழுகைக்குக் காரணம் நிறைய இருக்கிறது, எனக்கு. ஆனால், நான் அழப்போவதில்லை, இந்த நெஞ்சு நூறாயிரம் சுக்காக உடைந்தாலும், அழப்போவதில்லை. ஓ, கோமாளி, எனக்குப் பைத்தியம் பிடிக்கப் போகிறது!

[லீயர், க்ளாஸ்டர், கென்ட், கோமாளி போகிறார்கள்]

**கார்ன்:** நாம் வீட்டிற்குள் போவோம்; புயல் வரப்போகிறது.

**ரீகன்:** இந்த வீடு சிறியது. கிழவருக்கும் அவருடைய ஆட்களுக்கும் போதாது.

**கானெரில்:** குற்றம் அவருடையது. களைப்பாறாமல் வெளியே போகிறார். முட்டாள்தனத்தின் பலனை அவர் அனுபவிக்கட்டும்.

**ரீகன்:** அவருக்காக அவரை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்வேன், ஆனால் அவருடைய ஆசாமி ஒருவனையாவது ஏற்றுக்கொள்ள முடியாது.

**கானெரில்:** நானும் அப்படியே நினைக்கிறேன். க்ளாஸ்டர் பிரபு எங்கே?

**கார்ன்:** பெரியவர் பின்னால் போனார்; திரும்பி விட்டார்.

[க்ளாஸ்டர் திரும்பி வருகிறார்]

**க்ளாஸ்:** அரசர் மிகுந்த சீற்றத்திலிருக்கிறார்.

**கார்ன்:** எங்கே போய்க் கொண்டிருக்கிறார்?

**GLOUCESTER :** He calls to horse;
but will I know not whither.

**CORNWALL :** 'Tis best to give him way;
he leads himself.

**GONERIL :** My lord, entreat him by no means to stay.

**GLOUCESTER** : Alack, the night comes on,
and the bleak winds
Do sorely ruffle; for many miles a bout
There's scarce a bush.

**REGAN :** O, sir, to wilful men,
The injuries that they themselves procure
Must be their schoolmasters. Shut up your doors :
He is attended with a desperate train;
And what they may incense him to, being apt
To have his ear abused, wisdom bids fear.

**CORNWALL** : Shut up your doors,
my lord; 'tis a wild night :
My Regan counsels well;
come out o' the storm.

Exeunt

## ACT III

SCENE I. A heath.
Storm still. Enter KENT
and a Gentleman, meeting

**க்ளாஸ்:** குதிரை கொண்டுவரச் சொல்லுகிறார், எங்கே போவதற்கென்று தெரியவில்லை.

**கார்ன்:** போக்குப் போல் விடுவதுதான் நல்லது. அவருக்கு அவரே வழிகாட்டி.

**கானெரில்:** பிரபு, எக்காரணத்தையிட்டும் அவரைத் தங்கும்படி சொல்லாதீர்கள்.

**க்ளாஸ்:** ஐயோ! இரவு சூழ்ந்து வருகிறது. வாடைக் காற்று பலமாக ஆட்டி வைக்கிறது. பல காத தூரத்துக்கு ஒரு புதர் கூடக் கிடையாது, ஒதுங்குவதற்கு.

**ரீகன்:** ஐயா, பிடிவாதக்காரர்களுக்கு அண்ணாவி யார் தெரியுமா? பிடிவாதத்தால் அவர்கள் தேடிப்பிடிக்கும் இன்னல்களே.

உங்கள் வாயில்களை அடையுங்கள். அவரைச் சூழ்ந்து நிற்கும் பரிவாரம் எதையும் துணிகரமாகச் செய்யும். அவருடைய காதைக் கடித்து, அவருக்கு என்ன சீற்றத்தையுண்டாக்குவார்களோ? விவேகமுடையவர்கள் அதை நினைத்து அஞ்சத்தான் வேண்டும்.

**கார்ன்:** பிரபு, உங்கள் கதவுகளை மூடுங்கள். பயங்கரமான இரவு இது. என்னுடைய ரீகன் சொல்லுவது சரிதான். புயலுக்குத் தப்பி உள்ளே வாருங்கள்.

[போகிறார்கள்]

## அங்கம் III
## காட்சி 1

[புயல் இன்னும் அடிக்கிறது, கெண்ட்டும்
ஒரு கனவானும் தனித்தனியே வருகிறார்கள்]

**KENT** : Who's there, besides foul weather?

**Gentleman :** One minded like the weather, most unquietly.

**KENT :** I know you. Where's the king?

**Gentleman** : Contending with the fretful element :
Bids the winds blow the earth into the sea,
Or swell the curled water 'bove the main,
That things might change or cease; tears his white hair,
Which the impetuous blasts, with eyeless rage,
Catch in their fury, and make nothing of;
Strives in his little world of man to out-scorn
The to-and-fro-conflicting wind and rain.
This night, wherein the cub-drawn bear would couch,
The lion and the belly-pinched wolf
Keep their fur dry, unbonneted he runs,
And bids what will take all.

**KENT :** But who is with him?

**Gentleman :** None but the fool; who labours to out-jest
His heart-struck injuries.

**KENT :** Sir, I do know you; and dare, upon the warrant of my note, commend a dear thing to you. There is division, Although as yet the face of it be cover'd with mutual cunning, 'twixt Albany and Cornwall; who have--as who have not, that their great stars throned and set high?--servants, who seem no less, which are to France the spies and speculations Intelligent of our state; what hath been seen, either in snuffs

**கென்ட்:** யாரங்கே, ஊதைக் காற்றைத் தவிர?

**கனவான்:** காற்றைப் போன்று, அமைதியற்ற ஒருவன்.

**கென்ட்:** உன்னைத் தெரியும், அரசர் எங்கே?

**கனவான்:** சிணுசிணுக்கும் காற்றோடு வாதாடிக் கொண்டிருக்கிறார். ''பூமியைக் கடலுக்குள்ளே ஊதித் தள்ளு'' என்றும், ''சுருண்ட கடல் அலைகளால் சந்திரனைத் தாக்கு'' என்றும் காற்றுக்குக் கட்டளையிடுகிறார். உலகம் மாறட்டும் அல்லது ஒழியட்டும் என்று சொல்லி, தன் நரைத்த முடியைப் பிய்த்து எறிகிறார். கண்ணற்ற சீற்றத்தோடு அடிக்கும் காற்று, அந்த ரோமங்களைத் தூற்றிச் சிதறிச் சூறையாடுகிறது. மனிதனுடைய சிறுமை உலகில் நிற்கும் அவர், முரண்பட்டு அல்லாடும் காற்றையும் மழையையும் பார்த்து நையாண்டி செய்து நகைக்கிறார். வறட்டுக் கரடியும் வெளிவர அஞ்சும் இவ்விரவில், சிங்கமும், பசியால் வயிறொட்டிப் போன ஓநாயும் மழைக்கஞ்சிப் பதுங்கி கிடக்கும் இவ்விரவில், வெறுந்தலையராய் ஓடிச்சாடி உயிரையே பணயமாக வைக்கிறார்.

**கென்ட்:** அவருடன் இருப்பது யார்?

**கனவான்:** கோமாளியைத் தவிர வேறு யார்? அவருடைய நெஞ்சிலேயுள்ள புண்ணுக்கு, தன்னுடைய விகடத்தினால் ஒத்தடம் போட்டுப் பார்க்கிறான் கோமாளி.

**கென்ட்:** ஐயா, உம்மை நன்றாகத் தெரிந்தவன் நான். நான் அறிந்த ரகசியத்தை உம்மிடம் சொல்லி வைக்கிறேன். ஆல்பனிக்கும், கார்ன்வாலுக்குமிடைய பிளவு ஏற்பட்டு விட்டது. பரஸ்பர தந்திரத்தினால் அதைப் பொத்தி வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய பணியாட்கள் ப்ரான்ஸ் மன்னனுடைய ஒற்றர்களாய் இயங்கி, நம் நாட்டில் நடக்கும் செய்திகளை அவருக்குத் தெரிவித்து வருகிறார்கள். இரண்டு கோமகன்களுக்கும்

and packings of the dukes, or the hard rein which both of them have borne against the old kind king; or something deeper, whereof perchance these are but furnishings;
But, true it is, from France there comes a power Into this scatter'd kingdom; who already, wise in our negligence, have secret feet in some of our best ports, and are at point To show their open banner. Now to you : if on my credit you dare build so far to make your speed to Dover, you shall find Some that will thank you, making just report of how unnatural and bemadding sorrow The king hath cause to plain.
I am a gentleman of blood and breeding; and, from some knowledge and assurance, offer This office to you.

**Gentleman :** I will talk further with you.



**KENT** : No, do not. for confirmation that I am much more
Than my out-wall, open this purse, and take what it contains.
If you shall see Cordelia,-- as fear not but you shall,--show her this ring; and she will tell you who your fellow is
That yet you do not know. Fie on this storm!
I will go seek the king.

**Gentleman** : Give me your hand :
have you no more to say?

**KENT** : Few words, but, to effect, more than all yet;
That, when we have found the king,--in which your pain
That way, I'll this,--he that first lights on him
Holla the other.

Exeunt severally





இடையிலுள்ள பிணக்கத்தையறிந்தோ அல்லது இருவரும் சேர்ந்து அரசரைப் பாடாகப் படுத்தியதையுணர்ந்தோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ, ப்ரான்ஸ் தன் நாட்டுப் படைவீரர்களை நமது முக்கிய துறைமுகங்களில் ரகசியமாக இறக்கி, போர் தொடங்கத் தயாராயிருக்கிறார். நம்முடைய அலக்ஷியம் அவர்களுக்கு விவேகத்தைக் கொடுத்திருக்கிறது. என்னை நம்பி, நீங்கள் டோவருக்குப் போவீர்களானால், உங்களை நன்றியோடு ஒருவர் வரவேற்பார். அரசர் ஏன் அல்லற்படுகிறார், சோகத்தால் எப்படி அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்பதையெல்லாம் அவரிடம் சொல்லுங்கள். நான் உயர்குடியில் பிறந்தவன். விஷயம் தெரிந்து, பொறுப்புணர்ச்சியோடு இந்த வேலையை உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

**கனவான்:** மேலும் இதைப்பற்றி பேச விரும்புகிறேன்.

**கென்ட்:** இல்லை, வேண்டாம். வெளித்தோற்றத்தில் எளியவன் போலிருந்தாலும், உண்மையில் நான் மேல்நிலையிலுள்ளவன். இந்த பணப்பையைத் திறந்து அதிலிருப்பதை எடுத்துக் கொள்ளும்நீர் கார்டீலியாவைச் சந்தித்தால், பயப்படாமல் இந்த மோதிரத்தை அவளிடம் காட்டும். இன்னும் அறிந்து கொள்ளாமல் இருக்கிறீரே, அந்த ஆசாமியை யார் என்று அவள் உமக்குச் சொல்லுவாள். பாழாய்ப் போக இந்தப் புயல் காற்று! அரசரைத் தேடிப் போகிறேன்.
**கனவான்:** உங்கள் கையைக் கொடுங்கள்; வேறு ஒன்றும் சொல்லவேண்டியதில்லையா?



**கென்ட்:** சில வார்த்தைகள் சொல்லவேண்டும்; இதுவரையில் சொன்னதைக் காட்டிலும், அவை முக்கியமானவை;நான் இப்படிப் போகிறேன். நீர் அப்படிப்போம். நம்மில் யாரொருவர் அரசனைக் கண்டுபிடித்துவிட்டாலும், மற்றவருக்கு அதைத் தெரிவிக்க வேண்டும்.

[தனித்தனியாகப் போகிறார்கள்]

## SCENE II.

Another part of the heath.
Storm still.
Enter KING LEAR and Fool

**KING LEAR :** Blow, winds,
and crack your cheeks! rage! blow!
You cataracts and hurricanoes, spout
Till you have drench'd our
steeples, drown'd the cocks!
You sulphurous and thought-executing fires,
Vaunt-couriers to oak-cleaving thunderbolts,
Singe my white head!
And thou, all-shaking thunder,
Smite flat the thick rotundity o' the world!
Crack nature's moulds, an germens spill at once,
That make ingrateful man!

**Fool :** O nuncle, court holy-water in a dry
house is better than this rain-water out o' door.
Good nuncle, in, and ask thy daughters' blessing :
here's a night pities neither wise man nor fool.

**KING LEAR :** Rumble thy bellyful!
Spit, fire! spout, rain!
Nor rain, wind, thunder,
fire, are my daughters :
I tax not you, you elements, with unkindness;
I never gave you kingdom, call'd you children,
You owe me no subscription : then let fall
Your horrible pleasure : here I stand, your slave,





## காட்சி 2

வெம்பரப்பில் மற்றொரு பாகம்
[புயல் இன்னும் அடிக்கிறது]
[லீயரும், கோமாளியும் வருகிறார்கள்]

**லீயர் :** காற்றுகளே, அடியுங்கள்! உங்கள் ஊதிப்போன கன்னங்கள் வெடிக்கும்வரை அடியுங்கள்! சீறுங்கள்! வீசுங்கள்! அருவிகளே, சண்டமாருதங்களே, நீரை உமிழுங்கள்! எங்கள் கோபுரங்கள் மூழ்கும் வரை, திசையறி கருவிகள் அமிழ்ந்து போகும் வரை, நீரை உமிழுங்கள்! ஓக் மரங்களைப் பிளந்தெறியும் இடிகளுக்கு முன்னோடியாக வரும் மின்னல்களே, கந்தகப் புகையை உமிழ்ந்து, மனோவேகத்தில் ஓடிவரும் மின்னல்களே, என்னுடைய நரைத்த தலையைப் பொசுக்கிக் கரியாக்குங்கள்! யாவற்றையும் அதிரச் செய்யும் இடியே, திரண்டு உருண்ட இப்பூமிமேல் விழுந்து, அதைத் தட்டையாக்கு! இயற்கையின் வார்ப்பை நொறுக்கு, நன்றி கெட்ட மனிதனை உண்டு பண்ணும் உயிர் வித்துக்களை அழித்துச் சிதறிவிடு!

**கோமாளி:** ஓ, மாமா, வீட்டுக்கு வெளியே கிடைக்கும் மழை நீரைக் காட்டிலும், வீட்டுக்குள்ளே கிடைக்கும் ஈரமற்ற வெற்றுரை மேல். அன்புள்ள மாமா, உள்ளே போங்கள்; உங்கள் மக்களுடைய நல்லாசியைக் கோருங்கள்; இந்தக் கொடிய இரவு இரக்கமற்றது; அறிவாளிகளுக்கும் இரங்காது, முட்டாள்களுக்கும் இரங்காது.

**லீயர் :** உன் விலாப்புடைக்கக் குமுறு! நெருப்பே, கக்கு! மழையே, பொழி! மழையும் காற்றும் இடியும் நெருப்பும் எனக்கு பிறந்தவையல்ல; ஆகையாட்ல, பூதங்களே, உங்களுக்கு அன்பில்லை என்று நான் குற்றம் சாட்டப்போவதில்லை. உங்களுக்கு என் அரசைப் பரிசாகக் கொடுத்தேனா? உங்களை மக்களே என்று அழைத்தேனா? என்னிடம் கடன் கொண்டவர்களா நீங்கள்? ஆகவே, வேண்டுமட்டும் உங்கள் கொடுமையைக் கொட்டுங்கள்; இங்கே காட்ததுக் கொண்டிருக்கிறேன் உங்கள் அடிமை, ஏழ்மை

A poor, infirm, weak, and despised old man :
But yet I call you servile ministers,
That have with two pernicious daughters join'd
Your high engender'd battles 'gainst a head
So old and white as this.
O! O! 'tis foul!

**Fool :** He that has a house to put's head
in has a good head-piece.
The cod-piece that will house
Before the head has any,
The head and he shall louse;
So beggars marry many.
The man that makes his toe
What he his heart should make
Shall of a corn cry woe,
And turn his sleep to wake.
For there was never yet fair
woman but she made
mouths in a glass.

**KING LEAR** : No, I will be the pattern of all patience;
I will say nothing.

Enter KENT

**KENT :** Who's there?

**Fool :** Marry, here's grace and a cod-piece;
that's a wise man and a fool.

**KENT :** Alas, sir, are you here? things that love night

மிக்க, இன்னல் நிறைந்த, ஆற்ற மாட்டாத இழிதகு கிழட்டடிமை. என்ன இருந்தபோதிலும், உங்களை துன்மந்திரிகள் என்றே சொல்லுவேன். இரண்டு குணங்கெட்ட பெண்களோடு கூட்டுச் சேர்ந்துகொண்டு என்னோடு கொடும்போர் தொடுக்கிறீர்களே. எவ்வளவு கிழடு பாய்ந்த தலை இது! வெண்நரை பாவிய தலை! ஓ! ஓ! என்ன கொடுமை!

**கோமாளி:** எவனுக்குத் தலைவைத்து உறங்க வீடு இருக்கிறதோ, அவன் தலைக்குள் ஒரு துண்டு மூளையிருக்கிறது.

[பாடுகிறான்]

கூரைக்குத் தலை தவிக்க, காலுக்கு செருப்புத் தேடில்,
கொட்டு மழைச் சகதியிலே கட்டி ரெண்டும் புரண்டிடுமே;
பிச்சையே தொழில் எனினும், பேன் தலையில புழுத்திடினும்,
இச்சைக்குப் பெண்டாட்டி எத்தனையும் கட்டிடுவார்;
பஞ்சொத்த நெஞ்சுதனை, பாதம் போல், நடக்க விட்டால்,
நெஞ்சாணி விழுந்து விடும், நெடும் புலம்பல் ஆகிவிடும்,
ஏக்கம் பிடித்து விடும், இரவு பகலாகி விடும்,
தூக்கம் கலைந்து நெஞ்சம் துடியாய்த் துடித்துவிடும்.

கண்ணாடியைப் பார்த்து, முகத்தைக் கோணாத அழகியைக் கண்டதில்லை.

**லீயர் :** நான் பொறுமையின் திலகமாக இருக்கப் போகிறேன். ஒன்றும் பேசப் போவதில்லை.
[கெண்ட் வருகிறார்]

**கெண்ட்:** யாரங்கே?

**கோமாளி:** மன்னரும் கோமாளியும்; அறிஞரும் முட்டாளும்.

**கெண்ட்:** ஐயோ, பிரபு, தாங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்?

Love not such nights as these; the wrathful skies
Gallow the very wanderers of the dark,
And make them keep their caves : since I was man,
Such sheets of fire, such bursts of horrid thunder,
Such groans of roaring wind and rain, I never
Remember to have heard : man's nature cannot carry
The affliction nor the fear.

**KING LEAR** : Let the great gods,
That keep this dreadful pother o'er our heads,
Find out their enemies now. Tremble, thou wretch,
That hast within thee undivulged crimes,
Unwhipp'd of justice : hide thee, thou bloody hand;
Thou perjured, and thou simular man of virtue
That art incestuous : caitiff, to pieces shake,
That under covert and convenient seeming
Hast practised on man's life : close pent-up guilts,
Rive your concealing continents, and cry
These dreadful summoners grace. I am a man
More sinn'd against than sinning.

**KENT :** Alack, bare-headed!
Gracious my lord, hard by here is a hovel;
Some friendship will it lend you 'gainst the tempest :
Repose you there; while I to this hard house--
More harder than the stones whereof 'tis raised;
Which even but now, demanding after you,
Denied me to come in--return, and force
Their scanted courtesy.

**KING LEAR :** My wits begin to turn.
Come on, my boy : how dost, my boy? art cold?

இரவைக் கண்டு காதலிப்பவை கூட இப்பேர்ப்பட்ட இரவை வெறுக்குமே; சீறிவிழும் இந்த வானத்தைக் கண்டு, இருட்டிலே நடமாடித் திரியும் ஜந்துக்களே நடுங்குமே, நடுக்கத்தால் அவை தம் குகைகளில் ஒண்டிக் கிடக்குமே; நான் மனிதப்பிறவி எடுத்தபின் இவ்வளவு பயங்கரமான இரவைக் கண்டதில்லை; விரிந்து பரவும் தீத்தகடுகள்! மயிர்க்கூச்சலெடுக்கும் இடியிடிப்புகள்! காற்றும் மழையும் கலந்து புலம்பும் குமுறல்கள்! இந்தத் துன்பத்தையும் அச்சத்தையும் மனித தத்துவத்தால் பொறுக்க முடியாது.

**லீயர் :** இந்த அபாயங்களை நம் தலைக்குமேல் தொங்கவிட்ட கடவுளர்கள் அவர்கள் விரோதிகள் யார் என்று கண்டுபிடிக்கட்டும். கள்ளத்தனமாக குற்றங்கள் செய்து நீதிக்குத் தப்பிநிற்கும் பாதகனே, நடுங்கு, ரத்தக்கறைபட்ட கையே, உன்னை மறைத்துக் கொள். பொய் பேச நல்லவன் போல் பாசாங்கு செய்யும் ஆஷாட பூதியே, முக்காடு போட்டுக் கொள். மனிதனை வஞ் சித்து ஏமாற்றும் பாவியே, துண்டு துண்டாகச் சிதறிப் போ. அநீதியால் மண்டிப் பருத்த குற்றமே, நீ ஒளித்து வைத்திருக்கும் அண்டங்களைப் பிளந்து காட்டி, இந்தப் பயங்கர நீதிமான்களிடம் மன்னிப்புக் கேள். நான் செய்திருக்கும் தீங்கைக் காட்டிலும், எனக்குச் செய்யப்பட்டிருக்கும் தீங்கே அதிகம்.

**கென்ட்:** ஐயோ, வெறுந்தலையராகவா! அருள் கனிந்த பிரபு, பக்கத்திலே ஒரு குடிசையிருக்கிறது. புயற்காற்றின் பகைமையினின்றும் காப்பாற்றும் நட்பு சற்று இந்தக் குடிசைக்கிருக்கிறது. அங்கு வந்து இளைப்பாறுங்கள். அந்தக் கல்நெஞ்சம் படைத்த வீடு இருக்கிறதே, அதிலுள்ள கற்கள் கூட இரங்கும், ஆனால், அந்த வீடு இரங்காது. உங்களைத் தேடிப்போன எனக்குக் கதவடைத்துக் கொண்டு நிற்கிறது அது. அந்த வீட்டிற்குள் மறுபடியும் புகுந்து அங்குள்ளவர்களைக் கட்டாயப்படுத்தியாவது உபசரிக்கச் சொல்லுகிறேன்.

**லீயர் :** என் புத்தி கலங்குகிறது. வா, தம்பீ, என் தம்பி எப்படியிருக்கிறான்? அவனுக்கு விறையல் எடுக்கிறதா? எனக்கு

I am cold myself. Where is this straw, my fellow?
The art of our necessities is strange,
That can make vile things precious. Come,
your hovel. Poor fool and knave, I have one part in my heart
That's sorry yet for thee.

**Fool :** [Singing]
He that has and a little tiny wit--
With hey, ho, the wind and the rain,--
Must make content with his fortunes fit,
For the rain it raineth every day.

**KING LEAR :** True, my good boy. Come, bring us to this hovel.

Exeunt KING LEAR and KENT

**Fool :** This is a brave night to cool a courtezan.
I'll speak a prophecy ere I go : When priests are more in word than matter; When brewers mar their malt with water;
When nobles are their tailors' tutors;
No heretics burn'd, but wenches' suitors;
When every case in law is right;
No squire in debt, nor no poor knight;
When slanders do not live in tongues;
Nor cutpurses come not to throngs;
When usurers tell their gold i' the field;
And bawds and whores do churches build;
Then shall the realm of Albion
Come to great confusion :
Then comes the time, who lives to see't,
That going shall be used with feet.



விறையல் எடுக்கிது. இந்த வைக்கோல் எங்கே, பயலே? அவசியம் என்பது ஒரு விசித்திரக்கலை. அவசியம் என்று ஏற்பட்டுவிட்டால், சிறு துரும்புக்கும், இல்லாத மதிப்பு உண்டாகிவிடுகிறது. வா, என் குடிசைக்கு! பாவம், கோமாளிப்பயலே, என் உள்ளத்தில் ஒரு பாகம் உன்னை நினைத்து இன்னும் வருந்திக் கொண்டிருக்கிறது.

**கோமாளி:** [பாடிக்கொண்டு]
துக்கிணிப் போல அறிவிருந்தாலும் நீ
தொல்லைகள் தாங்கிட வேணுமடா
திக்குத் தெரியாமல் காற்றும் மழையும்
தினமும் அடிக்கத்தான் செய்யுமடா.

**லீயர் :** சரிதான், தம்பி நம்மை அந்தக் குடிசைக்கு அழைத்துச் செல்.

[லீயரும் கென்ட்டும் போகிறார்கள்]

**கோமாளி:** வேசியின் காமத்தீயைக் கூடத் தணித்து விடும் இந்தக் குளிர்ந்த இரவு. நான் போவதற்கு முன் ஒரு குறி சொல்லப் போகிறேன்.

விஷயத்தை மறந்து, குருமார்கள் சொல்லைக்கட்டி அழும்போது, சாராயம் காய்ச்சுகிறவன் பானத்திலே நீரைப் பெருக்கும்போது, பிரபுக்கள் அவர்களுடைய தையற்காரர்களுக்கு ஆசிரியர்களாக அமையும்போது, நிரீஸ்வரவாதிகளை விட்டுவிட்டு தாசி காதலர்களை மக்கள் தீக்கிரையாக்கும்போது, எந்த வழக்கும் சட்டபூர்வமாகச் செல்லும் என்ற நிலை ஏற்படும் போது, கடனற்ற பண்ணையாரும் வறுமையற்ற வீரனும் எங்கும் இல்லை என்று ஏற்படும் போது, பழிப்பேச்சு நாவை விட்டு அகன்றபோது, கூட்டங்களுக்குத் திருடர்கள் வராமல் நின்ற போது, கொடுக்கல் வாங்கல் செய்பவர்கள், திருடர் பயம் அற்று, பணத்தை பகிரங்கமாக எண்ணும் போது, சல்லிகளும் வேசிகளும் தேவாலயங்கள் கட்டும் போது, ஆல்பியனுடைய ஆட்சி குழம்பும். இது மெர்லின்

This prophecy Merlin shall make;
for I live before his time.
Exit

## SCENE III.

Gloucester's castle.
Enter GLOUCESTER and EDMUND

**GLOUCESTER :** Alack, alack, Edmund, I like not this unnatural dealing. When I desire their leave that I might pity him, they took from me the use of mine own house; charged me, on pain of their perpetual displeasure, neither to speak of him, entreat for him, nor any way sustain him.

**EDMUND :** Most savage and unnatural!

**GLOUCESTER :** Go to; say you nothing.
There's a division betwixt the dukes; and a worse matter than that : I have received a letter this night; 'tis dangerous to be spoken; I have locked the letter in my closet :
these injuries the king now bears will be revenged home; there's part of a power already footed : we must incline to the king. I will seek him, and privily relieve him : go you and maintain talk with the duke, that my charity be not of him perceived :
if he ask for me. I am ill, and gone to bed.
Though I die for it, as no less is threatened me, the king my old master must be relieved. There is some strange thing toward, Edmund; pray you, be careful.
Exit

சொல்லப்போகும் ஜோசியம். அவன் காலத்துக்கு முன் நான் வாழ்பவன்.

## காட்சி 3

க்ளாஸ்டருடைய அரண்மனையில் ஓர் அறை
[க்ளாஸ்டரும், எட்மன்டும் வருகிறார்கள்]

**க்ளாஸ்:** ஐயோ, ஐயோ, எட்மன்ட், இயல்புக்கு மாறான இச்செயலை நான் விரும்பவில்லை. அவருக்குப் பரிவு காட்டிய காரணத்தால், அவர்கள் என் வீட்டையே கவர்ந்து கொண்டார்கள். அவர் பேச்சையெடுத்தாலும், அவருக்காகப் பரிந்து பேசினாலும், அவரைக் காக்க முற்பட்டாலும், அவர்களுடைய நிரந்தரமான கோபத்துக்கு ஆளாவேன் என்று கண்டிப்பாகத் தெரிவித்து விட்டார்கள்.

**எட்ம:** அநாகரிகம், அக்கிரமம்!

**க்ளாஸ்:** நீ ஒன்றும் பேசாதே. இரண்டு இளவரசர்களுக்குள்ளும் அற்றுக்கொண்டது, அதோடு மோசமான காரியம் ஒன்று, அதைப்பற்றிச் சொல்வதே அபாயம். இன்றிரவு எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதைப் பெட்டியில் பூட்டி வைத்திருக்கிறேன். மன்னர் அனுபவிக்கும் இன்னல்களுக்கெல்லாம், பழிக்குப்பழி வாங்கும் காலம் வந்து விட்டது. பட்டாளத்தின் ஒரு பகுதி நம் நாட்டில் இறங்கிவிட்டது. நாம் அரசர் பக்கம் சாய வேண்டும். அவரைக் கண்டு பிடித்து அவருக்கு வேண்டியதைச் செய்யப்போகிறேன். இளவரசர் என் பரிவை அறியாவண்ணம், நீ அவருடன் பேச்சுக்கொடுத்துக் கொண்டிரு. என்னைப்பற்றி அவர் கேட்டால், எனக்கு உடல் நலமில்லை, படுக்கையில் படுத்திருக்கிறேன் என்று சொல்லிவிடு. செத்தாலும் சரி, அரசரைஎனது பழைய எஜமானரைகாப்பதே என் கடமை. எட்மன்ட், விபரீதமான நிகழ்ச்சிகள் நிகழப் போகின்றன. எச்சரிக்கையாயிரு. [போகிறார்]

**EDMUND :** This courtesy, forbid thee, shall the duke
Instantly know; and of that letter too :
This seems a fair deserving, and must draw me
That which my father loses; no less than all :
The younger rises when the old doth fall.

Exit

## SCENE IV.

The heath. Before a hovel.
Enter KING LEAR, KENT, and Fool

**KENT :** Here is the place, my lord; good my lord, enter :
The tyranny of the open night's too rough
For nature to endure.
Storm still

**KING LEAR:** Let me alone.

**KENT :** Good my lord, enter here.

**KING LEAR :** Wilt break my heart?

**KENT :** I had rather break mine own. Good my lord, enter.

**KING LEAR :** Thou think'st 'tis much that this contentious storm invades us to the skin : so 'tis to thee; But where the greater malady is fix'd, The lesser is scarce felt. Thou'ldst shun a bear; But if thy flight lay toward the raging sea, Thou'ldst meet the bear i' the mouth. When the mind's free, The body's delicate : the tempest in my mind Doth from my senses take all feeling else save what beats







**எட்ம:** உங்களுடைய பரிவைப்பற்றி இளவரசர் உடனே தெரிந்து கொள்ளவேண்டும்; அந்தக் கடிதத்தைப் பற்றியும் அவருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால், என் தந்தைக்கு நஷ்டம், ஆனால் எனக்கு லாபம். சொத்து முழுதும் இம்மி குறையாமல் எனக்குக் கிடைத்துவிடும். இளமையின் கையோங்கும்போது, முதுமை இடறி விழவேண்டியதுதானே.

[போகிறான்]

## காட்சி 4

வெம்பரப்பில் ஒரு குடிசைக்கு முன்
[கென்ட், லீயர், கோமாளி வருகிறார்கள்]

**கென்ட்:** இந்த இடந்தான், பிரபு; எழுந்தருளுங்கள். இந்த இரவின் கொடுங்கோன்மை காட்டுத் தனமானது. திறந்த வெளியில் இருந்தால் அதைத் தாங்க முடியாது.

[புயல் இன்னும் அடிக்கிறது]

**லீயர் :** என்னைத் தனியாக விட்டு விடுங்கள்

**கென்ட்:** உத்தமப் பிரபு, உள்ளே செல்லுங்கள்

**லீயர் :** என் நெஞ்சே, நீ வெடித்து விடுவாயா?
**கென்ட்:** என் நெஞ்சம் வெடித்தால் கூட நல்லது. உள்ளே வாருங்கள், பிரபு.

**லீயர் :** துன்புறுத்தும் இந்தப் புயல்என் தோலைத் துளைத்து விட்டால்தான் என்ன? அதனால் பாதகம் ஒன்றும் இல்லை. உன் தோலையுந்தான் அது துளைக்கிறது. ஆனால், பெருநோய் பீடித்து நிற்கும்போது, சிறு நோயால் வரும் துன்பம் அவ்வளவாகத் தென்படுவதில்லை. கரடியைக் கண்டால் நீ ஒதுங்கி ஓடுவாய். ஆனால், கர்ஜிக்கும் கடலை நோக்கி ஓட வேண்டியிருந்தால்,

there. Filial ingratitude! Is it not as this mouth should tear this hand for lifting food to't? But I will punish home : No, I will weep no more. In such a night to shut me out! Pour on; I will endure. in such a night as this! O Regan, Goneril! Your old kind father, whose frank heart gave all, O, that way madness lies; let me shun that; No more of that.

**KENT :** Good my lord, enter here.

**KING LEAR :** Prithee, go in thyself : seek thine own ease : This tempest will not give me leave to ponder on things would hurt me more. But I'll go in. To the Fool in, boy; go first. You houseless poverty, Nay, get thee in. I'll pray, and then I'll sleep. Fool goes in

Poor naked wretches, whereso'er you are, that bide the pelting of this pitiless storm, how shall your houseless heads and unfed sides, your loop'd and window'd raggedness, defend you from seasons such as these? O, I have ta'en Too little care of this! Take physic, pomp; Expose thyself to feel what wretches feel, that thou mayst shake the superflux to them, and show the heavens more just.

**EDGAR :** [Within] Fathom and half,
fathom and half! Poor Tom!
The Fool runs out from the hovel

**Fool :** Come not in here, nuncle, here's a spirit
Help me, help me!

**KENT :** Give me thy hand. Who's there?

**Fool :** A spirit, a spirit : he says his name's poor Tom.





எதிர்ப்பக்கம் திரும்பி, கரடிவாயில் புகுந்து தப்பிக்கப் பார்ப்பாய். இதயம் கவலையற்றிருக்கும்போது, உடட்ல பாரமற்று இயங்குகிறது. என் இதயத்தில் புயல் வீசும்போது, என் புலன்கள், தமக்குரிய உணர்ச்சிகளை மறந்து, இதயத் துடிதுடிப்பிலேயே அடங்கி ஒடுங்கி விடுகின்றன. தந்தை செய் நன்றி கொன்ற தன்மையே, உணவைத் தூக்கி வாய்க்குக் கொடுத்த கையை, வாய் கடித்துக் கிழித்த கணக்காயிருக்கிறதே. ஆனால், இதை நான் நன்றாகத் தண்டிப்பேன், இனி அழப்போவதில்லை. இப்பேர்ப்பட்ட இரவிலே, என்னை வெளியே தள்ளி, வீட்டை அடைப்பதா? இன்னும் பொழி, மழையே; நான் பொறுத்துக் கொள்வேன்.

ஆடையற்று நிற்கும் ஏழைகளே, நீங்கள் எங்கிருந்தாலும் சரி, இந்த ஈவிரக்கமற்ற புயலை எப்படித் தாங்குவீர்கள்? தலைவைத்துப் படுக்க வீடில்லாமல், உணவற்ற வயிற்றோடும், பலகணி வைத்த பீத்தல் கந்தையோடும், இதைப் போன்ற பருவங்களோடு போரிட்டு, எப்படி உங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் போகிறீர்கள்? ஓ, இதைப் பற்றியெல்லாம் நான் கவனம் செலுத்தியதே இல்லையே! டம்பமே, மருந்து சாப்பிடு; திக்கற்றவர் நிலையில் நீயும் இருந்து பார். அவர்களுடைய துன்பத்தை நீயும் அனுபவித்துப் பார்த்தால், உன் தேவைக்கு மேலுள்ளதை யெல்லாம் நீ துறந்து, அவர்களுக்குக் கொடுத்து விடுவாய்; அப்படிச் செய்தவன்மூலம், நீயும் நீதிமான் என்று, வானமறிய, நிலைநாட்டுவாய்.

**எட்கார்:** [உள்ளிருந்து] ஒன்றரை பாகம். ஒன்றரை பாகம்! ஐயோ, டாம்!

[கோமாளி குடிசையைவிட்டு வெளியே ஓடி வருகிறான்]

**கோமாளி:** மாமா, உள்ளே வராதீர்கள். இங்கே ஒரு பேய் இருக்கிறது. உதவி, உதவி!

**கென்ட்:** உன் கையைக் கொடுயாரங்கே?

**கோமாளி:** பேய், பேய்; அதன் பெயர் டாம் என்று சொல்லுகிறது.

**KENT :** What art thou that dost grumble there i' the straw? Come forth.

Enter EDGAR disguised as a mad man

**EDGAR :** Away! the foul fiend follows me!
Through the sharp hawthorn blows the cold wind.
Hum! go to thy cold bed, and warm thee.

**KING LEAR :** Hast thou given all to thy two daughters? And art thou come to this?

**EDGAR :** Who gives any thing to poor Tom? whom the foul fiend hath led through fire and through flame, and through ford and whirlipool e'er bog and quagmire; that hath laid knives under his pillow, and halters in his pew; set ratsbane by his porridge; made film proud of heart, to ride on a bay trotting-horse over four-inched bridges, to course his own shadow for a traitor. Bless thy five wits! Tom's a-cold,--O, do de, do de, do de. Bless thee from whirlwinds, star-blasting, and taking! Do poor Tom some charity, whom the foul fiend vexes : there could I have him now,--and there,--and there again, and there.

Storm still

**KING LEAR :** What, have his daughters brought him to this pass? Couldst thou save nothing? Didst thou give them all?

**கென்ட்:** வைக்கோலுக்குள்ளே கிடந்து முனங்குகிறவன் யார்? வெளியே வா.

[பைத்தியக்கார வேடம் பூண்டு எட்கார் வருகிறான்]

**எட்கார்:** போ! கெட்ட பய பேய் என்னைப் பின் தொடர்கிறது! ஹாத்தார்ன் புதர் ஊடே காற்றடிக்கிறது. ஹூம், உன் படுக்கைக்குப் போய், சூடேற்றிக் கொள்.

**லியர் :** உன் உடைமையை யெல்லாம் உன் பெண் மக்களுக்குக் கொடுத்தாயா? அதனால் இந்தக் கதி வந்ததா?

**எட்கார்:** ஏழை டாமுக்கு என்ன கொடுக்கப் போகிறார்கள்? நெருப்பிலும், அனலிலும், மடுவிலும், நீர்ச்சுழியிலும், மூடு பனியிலும், சேற்றிலும் அக்கொடுமைக்காரப்பேய் அவனை இழுத்துச் சென்றது; அவனுடைய தலையணைக்கடியிலே கத்திகளையும், பூசைப் பீடத்திலே, சுருக்காங் கயிற்றையும் வைத்தது; எலி மருந்தைக் கஞ்சியிலிட்டது; அவனுக்கு ஆர்வமூட்டி நாலு அங்குலப் பாலத்திலே துள்ளும் குதிரையைச் சவாரி செய்ய வைத்தது, அவனுடைய நிழலையே அவனுக்குத் துரோகி என்று அவனை விரட்டச் செய்தது. உனது ஐயுணர்வு வாழட்டும்! டாமுக்குக் குளிராட்டுகிறதுஓ டோ டே, டோ டே, டோ டே, சூறாவளிக் காற்றினின்றும், கோளாறுகளினின்றும், சூனியத்தினின்றும் கடவுள் உன்னைக் காக்கட்டும்! பேயால் பீடிக்கப்பட்ட இந்த டாமுக்குக் கொஞ்சம் பிச்சை போடுங்கள். அதோ இருக்கிறது பேய், இப்போது, இதோ. அதோ, அதோ; இதோ, இதோ.

[புயல் தொடர்ந்தடிக்கிறது]

**லியர் :** என்ன, அவனுடைய பெண்களால் அவனுக்கு இந்த கதி வந்து விட்டதா? உனக்கென்று ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லையா? எல்லாவற்றையுமே கொடுத்து விட்டாயா?

**Fool :** Nay, he reserved a blanket,
else we had been all shamed.

**KING LEAR :** Now, all the plagues that in the pendulous air
Hang fated o'er men's faults light on thy daughters!

**KENT** : He hath no daughters, sir.

**KING LEAR :** Death, traitor! nothing could have subdued
nature to such a lowness but his unkind daughters.
Is it the fashion, that discarded fathers
Should have thus little mercy on their flesh?
Judicious punishment! 'twas this flesh begot
Those pelican daughters.

**EDGAR :** Pillicock sat on Pillicock-hill : Halloo, halloo, loo, loo!

**Fool :** This cold night will turn us all to fools and madmen.

**EDGAR :** Take heed o' the foul fiend : obey thy parents;
keep thy word justly; swear not; commit not with
man's sworn spouse; set not thy sweet heart on proud
array. Tom's a-cold.

**KING LEAR :** What hast thou been?

**EDGAR :** A serving-man, proud in heart and mind; that curled
my hair; wore gloves in my cap; served the lust of
my mistress' heart, and did the act of darkness with
her; swore as many oaths as I spake words, and
broke them in the sweet face of heaven : one that







**கோமாளி:** இல்லை, ஒரு கம்பளியை மாத்திரம் தனக்கென்று வைத்துக் கொண்டான். இல்லையேல், நமக்கு இழிவு ஏற்பட்டிருக்குமே!

**லீயர் :** காற்றிலே ஆடும் நோய்க்கிருமிகள் எல்லாம் குற்றவாளிகளுடைய பெண் மக்கள் தலையைத் தாக்கட்டும்.

**கென்ட்:** அவனுக்குப் பெண் மக்கள் கிடையாது.

**லீயர் :** ஒழிந்து போ, துரோகி! அன்பற்ற பெண் மக்களைத் தவிர, வேறு யாராகிலும் இவனை இவ்வளவு இழிந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்க முடியாது. கைவிடப்பட்ட தந்தையர், தம்முடைய உடலுக்குக் கருணை காட்ட மாட்டார்களோ? தகுந்த தண்டனை இது! இந்த உடல்தானே அந்த பெலிக்கன் பெண்களைப் பெற்றது.

**எட்கார்:** "செல்லப் பறவை ஓர் குன்றில் அமர்ந்தது"
ஏலோ ஏலோ ஏ லே லோ

**கோமாளி:** குளிரும் இவ்விரவு நம்மையெல்லாம் பித்துப்பிடிக்கச் செய்துவிடும்.

**எட்கார்:** அந்தக் கொடும் பேயிடத்திலே எச்சரிக்கையாயிரு; பெற்றோர் சென்னதைக் கேள்; சொன்ன சொல்லைக் காப்பாற்று; ஆணையிடாதே; மற்றவன் மனைவியை நாடாதே; டம்பத்தை விரும்பாதே. டாமுக்குக் குளிராட்டுகிறது.

**லீயர் :** உனக்கு என்ன வேலை?

**எட்கார்:** நான் ஒரு தாஸன்; உள்ளத்திலே உரம் உள்ளவன்; தலைமயிரைச் சுருட்டி, கையுறைகளைத் தொப்பியில் அணிந்தவன்; என் காதலியின் காமத்துக்குத் தாளம் போடுபவன்; இருட் செயலை அவளோடு சேர்ந்து புரிந்தவன்; சொல்லுக்குச் சொல்

slept in the contriving of lust, and waked to do it :
wine loved I deeply, dice dearly : and in woman
out-paramoured the Turk : false of heart, light of
ear, bloody of hand; hog in sloth, fox in stealth,
wolf in greediness, dog in madness, lion in prey.
Let not the creaking of shoes nor the rustling of
silks betray thy poor heart to woman : keep thy foot
out of brothels, thy hand out of plackets, thy pen
from lenders' books, and defy the foul fiend.
Still through the hawthorn blows the cold wind :
Says suum, mun, ha, no, nonny.
Dolphin my boy, my boy, sessa! let him trot by.

Storm still

**KING LEAR :** Why, thou wert better in thy grave than to answer
with thy uncovered body this extremity of the skies.
Is man no more than this?
Consider him well. Thou
owest the worm no silk, the beast no hide, the sheep
no wool, the cat no perfume. Ha! here's three on
's are sophisticated! Thou art the thing itself :
unaccommodated man is no more but such a poor bare,
forked animal as thou art. Off, off, you lendings!
come unbutton here.

Tearing off his clothes

**Fool :** Prithee, nuncle, be contented; 'tis a naughty night
to swim in. Now a little fire in a wild field were
like an old lecher's heart; a small spark, all the







ஆணையிடுபவன்; கடவுளறிய ஆணை பொய்த்தவன்; காமச் சூழ்ச்சியிலே உறங்கி விழித்தவன்; மதுபானப்பிரியன், சூதாடி, பரத்தையரைச் சுகிப்பதிலே துருக்கரையும் முறியடித்தவன்; பொய் நெஞ்சன், மென்செவியன், குருதிக்கையன்; சோம்பலில், பன்றி; தந்திரத்தில், நரி; பேராசையில், ஓநாய்; வெறியில், நாய்; வேட்டையில், சிங்கம். "க்ரீச்"சிடும் செருப்பொலிக்கும், பட்டாடையின் சலசலப்புக்கும் மயங்கி, பெண்ணினத்துக்கு உன் இதயத்தைக் காட்டிக் கொடுக்காதே. விபசார விடுதியில் கால் வைக்காதே, பெண்கள் முந்தானையில் கை வைக்காதே, கடன் கொடுப்பவன் பேரேட்டில் பேனா வைக்காதே. கொடும் பேயை எதிர்த்து நில்.

"பிச்சிப் புதலிலே வாடை அடிக்குது
டடா டிடீ டெ டே
ஓடட்டும், ஓடட்டும், பயலே"

[புயல் தொடர்ந்தடிக்கிறது]

**லீயர் :** உன் ஆடையற்ற உடல், வானத்தின் கொடுமையோடு போராடுகிறதே. அதைக் காட்டிலும், அது கல்லறைக்குள்ளிருந்தால், சுகமாயிருக்குமே. மனிதன் என்றால், இதற்குமேல் இல்லையோ? உற்றுப்பார் அவனை. நீ கடனாளி இல்லையே. பட்டுப் பூச்சிக்குப் பட்டும், மாட்டுக்குத் தோலும், ஆட்டுக்கு ரோமமும், பூனைக்குப் புனுகும் கடன் கொடுக்க வேண்டியதில்லை நீ.ஆ! நம்மைக் கபடாக்குவது இந்த மூன்றுந்தான். நீயே சுயம்பானவன். ஆடையற்ற மனிதன், உன்னைப் போல், எளிய, அம்மணமான கவுட்டைக் கால் ஜந்துவுக்கு மேல் இல்லை. எடு. எடு; கடன் வாங்கினதையெல்லாம், எடுத்தெறி. இந்த பொத்தானைக் கழற்று.

[ஆடைகளைக் கிழித்தெறிகிறார்]

**கோமாளி:** மாமா, பொறுங்கள். நீஞ்சல் அடிப்பதற்குரிய இரவு இதுவல்ல. விரிந்த காட்டிலேயுள்ள சிறு நெருப்பு, காமுகனுடைய இதயத்தைப் போன்றது. சிறு பொறி, ஆனால் உடம்பின் மற்ற

rest on's body cold.
Look, here comes a walking fire.
Enter GLOUCESTER, with a torch

**EDGAR :** This is the foul fiend Flibbertigibbet : he begins at curfew, and walks till the first cock; he gives the web and the pin, squints the eye, and makes the hare-lip; mildews the white wheat, and hurts the poor creature of earth.

S. Withold footed thrice the old;
He met the night-mare, and her nine-fold;
Bid her alight, And her troth plight,
And, aroint thee, witch, aroint thee!



**KENT :** How fares your grace?

**KING LEAR :** What's he?

**KENT :** Who's there? What is't you seek?

**GLOUCESTER** : What are you there? Your names?

**EDGAR :** Poor Tom;
that eats the swimming frog, the toad, the tadpole, the wall-newt and the water; that in the fury of his heart, when the foul fiend rages, eats cow-dung for sallets; swallows the old rat and the ditch-dog; drinks the green mantle of the standing pool; who is whipped from tithing to tithing, and stock- punished, and imprisoned; who hath had three suits to his back, six shirts to his





பாகங்களில் எல்லாம் ஒரே குளிர்ச்சி. [க்ளாஸ்டர் தீவட்டியோடு வருகிறார்] நடந்து வருகிற இந்த நெருப்பைப் பாருங்கள்!

**எட்கார்:** இதுதான் கொள்ளிப் பிசாசு; மாலையில் வந்து, முதற்கோழி கூவும் நேரம் வரையிருந்து மறைந்து விடுகிறது. அது கண்ணைக் கெடுத்து பூ விழச் செய்கிறது. மாறு கண்ணைக் கொடுக்கிறது, உதட்டிலே வெடிப்பையுண்டாக்குகிறது, வெண் கோதுமையில் நோய் விழச் செய்கிறது, பூமியிலுள்ள பிராணிகளை வருத்துகிறது.

ஸ்விட்டோல்ட் என்ற மாயக்காரி
சுற்றிச் சுற்றி வந்தாளாம்
ஸ்வப்பனம் என்ற பிசாசினையும்
குட்டிப் பிசாசுகள் ஒன்பதையும்
சந்தித்துப் பேசி, சத்தியம் வாங்கி,
சாகசம் செய்திட்ட மாயக்காரி,
காப்பாற்று, இவனைக் காப்பாற்று!



**கென்ட்:** தாங்கள் எப்படி யிருக்கிறீர்கள், பிரபு?

[க்ளாஸ்டர் தீவட்டியோடு பக்கத்தில் வருகிறார்]

**லியர் :** யாரது?

**கென்ட்:** வருவது யார்? என்ன வேண்டும்?

**க்ளாஸ்:** நீங்கள் யார்? உங்கள் பெயர்?

**எட்கார்:** எளிய டாம், நீஞ்சலடிக்கும் தவளையையும், தேரைக்குஞ் சையும், சுவர்ப்பல்லியையும், நீர்ப்பல்லியையும் உண்பவன்; பேயாட்டத்தில் நெஞ்சு குமுறும்போது, சாணியையும் சாப்பிடுபவன்; பழைய எலியையும், சாக்கடையில் கிடக்கும் செத்த நாயையும் விழுங்குபவன்; தேங்கிக் கிடக்கும் குட்டைப் பசும்பாசியைப்

body, horse to ride, and weapon to wear;
But mice and rats, and such small deer,
Have been Tom's food for seven long year.
Beware my follower.
Peace, Smulkin; peace, thou fiend!

**GLOUCESTER** : What, hath your grace no better company?

**EDGAR** : The prince of darkness is a gentleman : Modo he's call'd, and Mahu.

**GLOUCESTER** : Our flesh and blood is grown so vile, my lord, That it doth hate what gets it.

**EDGAR** : Poor Tom's a-cold.

**GLOUCESTER** : Go in with me : my duty cannot suffer
To obey in all your daughters' hard commands :
Though their injunction be to bar my doors,
And let this tyrannous night take hold upon you,
Yet have I ventured to come seek you out,
And bring you where both fire and food is ready.

**KING LEAR :** First let me talk with this philosopher. What is the cause of thunder?

**KENT :** Good my lord, take his offer; go into the house.





பருகுபவன்; ஊர்தோறும் சவுக்கால் அடிபட்டும், குட்டையில் அடைபட்டும் தண்டனையடைந்து சிறையிருப்பவன்; மூன்று சீருடைகளும் ஆறு சொக்காய்களும், சவாலிக்குக் குதிரையும், பூணுவதற்கு ஆயுதமும் உடையவன்; ஆனால், ஏழு வருஷமாக டாம் உண்பதுவோ எலியும், கிலியும். எச்சரிக்கை! என்னைப் பிடித்த ஸ்மல்கின் பேயே, அமைதி!

**க்ளாஸ்:** பிரபு, என்ன இது? இதைக் காட்டிலும் மேலானவர்கள் உறவு உங்களுக்குக் கிடைக்கவில்லையா?

**எட்கார்:** இருட்டுக்கரசன் ஒரு கனவான். மோடோ என்பது அவன் பெயர். மாகு என்றும் அழைப்பார்கள்.

**க்ளாஸ்:** நம்முடைய தசையோடு தசையாய், இரத்தத்தோடு இரத்தமாயுள்ள உற்றார்கள் அடங்காப் பிடாரிகள் ஆகிவிட்டார்கள்; பெற்றோர்களையே அவர்கள் வெறுக்கிறார்கள்.

**எட்கார்:** ஏழை டாமுக்குக் குளிராட்டுகிறது.

**க்ளாஸ்:** என்னோடு வாருங்கள். என் கடமைக்கு முரண்பட்ட, கொடிய உத்திரவுகளை உங்கள் புதல்விகள் போடுகிறார்கள். அவற்றை நிறைவேற்ற மனம் வரவில்லை. என் வீட்டுக்குள் உங்களை வரவிடாமல், இந்தக் கொடிய இரவுக்கு உங்களை இரையாக்க வேண்டும் என்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள், இருந்தாலும், அவர்களை மீறி நான் இங்கு வந்திருக்கிறேன். உங்களைக் கண்டுபிடித்து, சூடும், உணவும் உள்ள ஒரு இடத்துக்குக் கொண்டுபோக வந்திருக்கிறேன்.

**லீயர் :** முதலில், இந்தத் தத்துவ ஞானியோடு பேச விரும்புகிறேன். இடிக்கு மூலகாரணம் என்ன?

**கென்ட்:** பிரபு, அவர் சொற்படி, அவர் வீட்டுக்குப் போங்கள்.

**KING LEAR** : I'll talk a word with this same learned Theban.
What is your study?

**EDGAR :** How to prevent the fiend, and to kill vermin.

**KING LEAR :** Let me ask you one word in private.

**KENT** : Importune him once more to go, my lord;
His wits begin to unsettle.

**GLOUCESTER** : Canst thou blame him?

Storm still

His daughters seek his death :
ah, that good Kent!
He said it would be thus,
poor banish'd man!
Thou say'st the king grows mad; I'll tell thee, friend,
I am almost mad myself : I had a son,
Now outlaw'd from my blood; he sought my life,
But lately, very late : I loved him, friend;
No father his son dearer : truth to tell thee,
The grief hath crazed my wits.
What a night's this!
I do beseech your grace,--

**KING LEAR :** O, cry your mercy, sir.
Noble philosopher, your company.

**EDGAR :** Tom's a-cold.

**லீயர் :** இந்த தீபனிடம் ஒரு வார்த்தை எதைப் பற்றி ஆராய்ச்சி நடத்துகிறாய்?

**எட்கார்:** பேயைத் தடுப்பது எப்படி, தீய ஐந்துக்களைக் கொல்வது எப்படி என்பதைப்பற்றி.

**லீயர் :** உன்னிடம் தனியாக ஒன்று கேட்கிறேன்.

**கென்ட்:** மீண்டும் அவரை வரச்சொல்லுங்கள், பிரபு. அவருக்கு அறிவு தடுமாறுகிறது.

**க்ளாஸ்:** அவரைக் குற்றம் சொல்வானேன்?

[புயல் இன்னும் அடிக்கிறது]

அவருடைய புதல்விகள் அவருடைய சாவை நாடுகிறார்கள். ஆ; உத்தமன் கென்ட் சொன்னாரே, இப்படித்தான் நடக்கும் என்று. பாவம், அவர் நாடு கடத்தப்பட்டார். அரசருக்கு அறிவு தடுமாறுகிறது என்று நீ சொல்லுகிறாய். நண்பனே, நான் சொல்லுகிறேன், எனக்கே பித்துப்பிடித்தது போலிருக்கிறதே. எனக்கு ஒரு மகன் இருந்தான். இப்போது அவனைத் துறந்து விட்டேன். அவன் சமீபத்தில் என் உயிருக்கே உலை வைக்கப் பார்த்தான். நான் அவனிடம் அன்பாயிருந்தேன். நண்பரே, ஒரு தந்தையாவது தன் மகனை இவ்வளவு நேசித்திருக்கமாட்டான்; உண்மையில் இந்த வருத்தத்தால் என் அறிவு குழம்பிவிட்டது. என்ன இரவு இது!

பிரபு, தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்

**லீயர் :** ஓ, கருணை காட்டுங்கள், ஐயாஅரிய தத்துவ ஞானியே, உமது தோழமையை நாடுகிறேன்.

**எட்கார்:** டாமுக்குக் குளிராட்டுகிறது.

**GLOUCESTER :** In, fellow, there, into the hovel : keep thee warm.

**KING LEAR :** Come let's in all.

**KENT :** This way, my lord.

**KING LEAR :** With him;
I will keep still with my philosopher.

**KENT :** Good my lord, soothe him;
let him take the fellow.

**GLOUCESTER** : Take him you on.

**KENT** : Sirrah, come on; go along with us.

**KING LEAR :** Come, good Athenian.

**GLOUCESTER :** No words, no words : hush.

**EDGAR** : Singing
Child Rowland to the dark tower came,
His word was still,--Fie, foh, and fum,
I smell the blood of a British man.

Exeunt

**க்ளாஸ்:** உள்ளே இரு, பயலே, குடிலுக்குள் இரு; வெப்பமாயிருக்கும்.

**லீயர் :** ஆம், எல்லோரும் உள்ளே போவோம்.

**கென்ட்:** இந்தப் பக்கம், பிரபு.

**லீயர் :** அவனோடு; என்னுடைய தத்துவ ஞானியோடுதான் நான் இருப்பேன்.

**கென்ட்:** பிரபு, அவருடைய ஆறுதலுக்காக, அவனையும் அவர் அழைத்து வரட்டும்.

**க்ளாஸ்:** நீயே அவனை அழைத்து வா.

**கென்ட்:** ஏண்டாப்பா, நீயும் வா, எங்களோடு வா.

**லீயர் :** அரிய அதீனியனே, கூட வா.

**க்ளாஸ்:** கப்சிப்...பேச்சுமூச்சு கூடாது.

**எட்கார்:** [பாடுகிறான்]

இருட்டுக் கோபுரத் துள்ளே
இளைஞன் ரோலன்ட் வந்தான்,
"பிரிட்டிஷ் ரத்தம், ஐயோ!
பின்னும் நாறு"தென்றான்.

[எல்லோரும் போகிறார்கள்]

## SCENE V.

Gloucester's castle.
Enter CORNWALL and EDMUND

**CORNWALL :** I will have my revenge ere I depart his house.

**EDMUND :** How, my lord, I may be censured, that nature thus gives way to loyalty, something fears me to think of.
CORNWALL : I now perceive, it was not altogether your brother's evil disposition made him seek his death; but a provoking merit, set a-work by a reprovable badness in himself.

**EDMUND :** How malicious is my fortune, that I must repent to be just! This is the letter he spoke of, which approves him an intelligent party to the advantages of France : O heavens! that this treason were not, or not I the detector!

**CORNWALL :** o with me to the duchess.

**EDMUND :** If the matter of this paper be certain, you have mighty business in hand.

**CORNWALL :** True or false, it hath made thee earl of Gloucester. Seek out where thy father is, that he may be ready for our apprehension.

**EDMUND :** [Aside] If I find him comforting the king, it will stuff his suspicion more fully.

## காட்சி 5

க்ளாஸ்டர் அரண்மனையில் ஒரு அறை
[கார்ன்வால், எட்மன்ட் வருகிறார்கள்]

**கார்ன்:** அவருடைய வீட்டை விட்டுப் போவதற்குமுன் அவரைப் பழிவாங்கப் போகிறேன்.

**எட்ம:** ராஜவிஸ்வாசத்துக்காக, தந்தையிடமிருக்கும் இயல்பான அன்பைப் புறக்கணித்து விட்டேன் என்று என்மேல் பழிசுமத்துவார்கள். அதை நினைத்து நாணுகிறேன்.

**கார்ன்:** இப்போதுதான் தெரிகிறது, உன் அண்ணன் அவரைக் கொல்ல முனைந்ததற்குக் காரணம், அவனுடைய கெட்ட குணமில்லை, அவனுடைய நற்குணம்தான் என்று, கண்டிக்கத்தக்க அவருடைய துர்குணத்தைத் தாங்க முடியாமல் அவன் அப்படிச் செய்திருக்கிறான்.

**எட்ம:** என் தலைவிதி, நேர்மையாயிருப்பதற்காக நான் வருந்த வேண்டியிருக்கிறது! இதுதான் அவர் குறிப்பிட்ட கடிதம். அதைப் பார்க்கும்போது அவர் ப்ரான்ஸூக்கு உடந்தையாயிருக்கிறார் என்று தெரிகிறது. அட கடவுளே, இந்த அரசத் துரோகம் நடக்காமல் இருந்திருக்கக்கூடாதா? அப்படி நடந்தாலும் நானா அதைக் காட்டிக் கொடுத்திருக்க வேண்டும்!

**கார்ன்:** இளவரசியைப் பார்க்க என்னோடு வா.

**எட்ம:** இக்கடிதத்தில் கண்ட செய்தி உண்மையாயிருந்தால், உங்களுக்கு ஏகப்பட்ட வேலையிருக்கும்.

**கார்ன்:** உண்மையோ, பொய்யோ, நீ க்ளாஸ்டர் பிரபு ஆவது உறுதி. உன்னுடைய தகப்பனார் எங்கே இருக்கிறார் என்று தேடிப்பார். நாம் அவரைக் கைது செய்ய வேண்டும்.

I will persevere in
my course of loyalty, though the conflict be sore
between that and my blood.

**CORNWALL :** I will lay trust upon thee;
and thou shalt find a
dearer father in my love.

Exeunt

## SCENE VI.

A chamber in a farmhouse adjoining the castle.
Enter GLOUCESTER, KING LEAR,
KENT, Fool, and EDGAR

**GLOUCESTER :** Here is better than the open air; take it thankfully. I will piece out the comfort with what addition I can : I will not be long from you.

**KENT :** All the power of his wits have given way to his impatience : the gods reward your kindness!

Exit GLOUCESTER

**EDGAR :** Frateretto calls me; and tells me
Nero is an angler in the lake of darkness.
Pray, innocent, and beware the foul fiend.

**Fool :** Prithee, nuncle, tell me whether a madman be a gentleman or a yeoman?







**எட்ம:** (தனக்குள்) அவர் அரசனுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தால், இவருடைய சந்தேகம் உறுதியாகிவிடும். நான் ராஜவிஸ்வாஸப் பாதையில் தொடர்ந்து நடக்க வேண்டியதுதான். இயல்புக்கு அது முரண்பட்டதாக இருந்தாலும், பரவாயில்லை.

**கார்ன்:** நான் உன்னிடம் முழு நம்பிக்கை வைத்திருக்கிறேன். அன்பிலே தந்தையினும் சிறந்தவனாக இருப்பேன் உனக்கு.

[போகிறார்கள்]

## காட்சி 6

அரண்மனைக்குப் பக்கத்திலுள்ள பண்ணை
வீட்டில் ஒரு அறை [கென்ட்டும் க்ளாஸ்டரும் வருகிறார்கள்]

**க்ளாஸ்:** திறந்த வெளியைக் காட்டிலும் நல்ல இடம் இது; இதை நன்றியோடு ஏற்றுக்கொள். என்னால் முடிந்தவரை, வசதி செய்து கொடுக்கிறேன். போய்விட்டு விரைவில் வருகிறேன்.

**கென்ட்:** பொறுமையை அவர் இழந்துவிட்டார். ஆகையால், அவருடைய அறிவுத் திறமையெல்லாம் மங்கிவிட்டது. நீங்கள் காட்டிய அன்புக்கு, தெய்வங்கள் உங்களுக்கு அருள் புரிவார்கள்.

[க்ளாஸ்டர் போகிறார்] [லீயர், எட்கார், கோமாளி வருகிறார்கள்]

**எட்கார்:** ப்ராட்டெரெட்டோ பேய் என்னைக் கூப்பிட்டு, இருட்டு ஏரியிலே நீரோ மீன் பிடிக்கிறான் என்று சொல்லுகிறது. நிரபராதியே, அந்தக் கெட்ட பேயிடம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

**கோமாளி:** மாமா, ஒன்று கேட்கிறேன், பைத்தியக்காரனை கனவான் என்று சொல்லலாமா அல்லது குடியானவன் என்று சொல்லலாமா?

**KING LEAR :** A king, a king!

**Fool :** No, he's a yeoman that has a gentleman to his son; for he's a mad yeoman that sees his son a gentleman before him.

**KING LEAR :** To have a thousand with red burning spits
Come hissing in upon 'em,--

**EDGAR :** The foul fiend bites my back.
Fool : He's mad that trusts in the tameness of a wolf, a horse's health, a boy's love, or a whore's oath.

**KING LEAR :** It shall be done;
I will arraign them straight.

To EDGAR

Come, sit thou here, most learned justicer;

To the Fool

Thou, sapient sir, sit here. Now, you she foxes!

**EDGAR :** Look, where he stands and glares!
Wantest thou eyes at trial, madam?
Come o'er the bourn, Bessy, to me,--

**Fool :** Her boat hath a leak,
And she must not speak
Why she dares not come over to thee.

**லீயர் :** மன்னன் அவன், மன்னன்!

**கோமாளி:** இல்லை, கனவானை மகனாகப் பெற்ற குடியானவன் அவன். தன்னைக் காட்டிலும் மேலான கனவானாகத் தன் மகனைக் காண விரும்புகிற குடியானவன் ஒரு பைத்தியக்காரன்.

**லீயர் :** சிவந்த எரியைக் கக்கிக்கொண்டு, ஆயிரம் நாக்குகள் "உஸ்ஸ்" என்று ஒலித்துக்கொண்டு அவர்களைத் தாக்க வேண்டும்.

**எட்கார்:** அந்தக் கெட்டபேய் என் முதுகைக் கடிக்கிறது.

**கோமாளி:** ஓநாயின் சாத்வீகத்திலும், குதிரையின் ஆரோக்கியத்திலும், சிறுவனின் காதலிலும், தாசியின் பிரமாணத்திலும் நம்பிக்கை வைப்பவன் ஒரு பைத்தியக்காரன்.

**லீயர் :** அதைச் செய்தே ஆகவேண்டும். குற்றவாளிக் கூண்டிலே அவர்களை உடனே கொண்டு வந்து நிறுத்த வேண்டும்

[எட்காரைப் பார்த்து] வாருங்கள், படிப்பில் சிறந்த நீதிபதியே, இங்கே அமருங்கள்
[கோமாளியைப் பார்த்து] விவேகம் நிறைந்தவரே, இங்கே உட்காரும்

இனி, ஏ, பெண் நரிகளே!

**எட்கார்:** பாருங்கள், அது எப்படி நின்று விழிக்கிறது என்று. விசாரணை காலத்தில் உங்களைப் பார்த்துப் பாராட்டுவதற்கு ஆட்கள் வேண்டுமா?
ஓடையைத் தாண்டி வாடி, பெஸ்ஸி, ஓடையைத் தாண்டி வாடி.

**கோமாளி:** படகிலே ஓட்டையடா, பார்ப்பதற்கும் அஞ்சுதடா,
வரமாட்டாள், கிட்டேவர மாட்டாளடா.

**EDGAR :** The foul fiend haunts poor Tom in the voice of a nightingale. Hopdance cries in Tom's belly for two white herring. Croak not, black angel; I have no food for thee.

**KENT :** How do you, sir? Stand you not so amazed : Will you lie down and rest upon the cushions?

**KING LEAR :** I'll see their trial first.
Bring in the evidence.

To EDGAR
Thou robed man of justice, take thy place;

To the Fool
And thou, his yoke-fellow of equity,
Bench by his side :

To KENT
you are o' the commission, Sit you too.

**EDGAR** : Let us deal justly.
Sleepest or wakest thou, jolly shepherd?
Thy sheep be in the corn;
And for one blast of thy minikin mouth,
Thy sheep shall take no harm.
Pur! the cat is gray.

**KING LEAR :** Arraign her first; 'tis Goneril. I here take my oath before this honourable assembly, she kicked the poor king her father.





**எட்கார்:** குயிலின் குரலில் உட்கார்ந்து கொண்டு அந்தப் பேய் ஏழை டாமை வதைக்கிறதே.

ஹேப்பெடான்ஸ் பேய் டாமின் வயிற்றில் உட்கார்ந்து கொண்டு, இரண்டு வெள்ளை ஹெர்ரிங் மீன் வேண்டுமென்று கூப்பாடு போடுகிறது. கூவாதே, கரும்பேயே, உனக்குச் சாப்பாடு என்னிடம் இல்லை.

**கென்ட்:** எப்படியிருக்கிறீர்கள், பிரபு? திருகத் திருக விழிக்காதீர்கள், மெத்தையில் படுத்து இளைப்பாறுங்களேன்?

**லீயர் :** முதலில், அவர்கள் விசாரணையை நான் கவனிக்கவேண்டும் அவர்களுடைய சாட்சியத்தைக் கொண்டுவாருங்கள் [எட்காரைப் பார்த்து] உரிய உடையணிந்த நீதிபதியே, உங்களுக்குரிய இடத்தில் அமருங்கள்

[கோமாளியைப் பார்த்து] நீதிபதிக்கு நல்ல ஜோடி நீ. பீடத்தில் அவர் பக்கம் அமர்.

[கென்டைப் பார்த்து] நீங்களும் நீதிக்குழுவைச் சேர்ந்தவர், நீங்களும் உட்காருங்கள்.
**எட்கார்:** நீதி வழங்குவோமாக.

அசதியா, முழிப்புத்தானா, ஆட்டிடையனாரே,
ஆடுமேயுது வயலுக்குள்ளே, ஆட்டிடையனாரே,
குழலையூதி, குட்டிமறித்தால், ஆட்டிடையனாரே,
குட்டியெல்லாம் கெட்டா போகும், ஆட்டிடையனாரே.
மியாவ்! சாம்பல் நிறப்பூனை இது.

**லீயர் :** அவளை முன்னாலே நிறுத்து, கானெரிலை. நான் இந்த மேன்மைதங்கிய நீதி மன்றத்தில் பிரமாணமாகக் கூறுவது என்னவென்றால், அவள் அவளுடைய தந்தையை ஏழை அரசனை உதைத்தாள்.

**Fool** : Come hither, mistress.
Is your name Goneril?

**KING LEAR :** She cannot deny it.

**Fool :** Cry you mercy, I took you for a joint-stool.

**KING LEAR :** And here's another, whose warp'd looks proclaim
What store her heart is made on.

Stop her there!
Arms, arms, sword, fire!
Corruption in the place!
False justicer, why hast thou let her 'scape?

**EDGAR** : Bless thy five wits!

**KENT** : O pity! Sir, where is the patience now,
That thou so oft have boasted to retain?

**EDGAR:** [Aside] My tears begin to take his part so much,
They'll mar my counterfeiting.

**KING LEAR :** The little dogs and all, Tray, Blanch, and
Sweet-heart, see, they bark at me.

**EDGAR :** Tom will throw his head at them.
Avaunt, you curs!

Be thy mouth or black or white,
Tooth that poisons if it bite;
Mastiff, grey-hound, mongrel grim,





**கோமாளி:** அம்மணி, இப்படி வாருங்கள். உங்கள் பெயர்தான் கானெரிலா?

**லீயர் :** அதை மறுக்க முடியாது அவள்.

**கோமாளி:** அட பாவமே, நான் உன்னை முக்காலி என்றல்லவா நினைத்தேன்.

**லீயர் :** இன்னொருத்தி இதோ இருக்கிறாள், அவள் மூஞ்சியைப் பார்த்தாலே தெரியுமே, அவள் நெஞ்சு எப்படிப்பட்டது என்று

அவளை அங்கேயே நிறுத்துங்கள்! ஆயுதம் எங்கே? ஈட்டி கொண்டுவா! தீயைக் கொண்டுவா! இந்த இடத்தில் நேர்மையில்லை. பொய் நீதிபதியே, ஏன் அவளைத் தப்பியோட விட்டீர்?

**எட்கார்:** உம்முடைய ஐம்புலன்கள் வாழ்க!

**கென்ட்:** ஒ, பாவம்! ஐயா, பொறுமை, பொறுமை என்று சொல்லிக் கொள்வீர்களே, அந்தப் பொறுமை எங்கே போய்விட்டது?

**எட்கார்:** [தனக்குள்] அவர் நிலையை நினைத்து நான் விடும் கண்ணீர் என் போலி வேஷத்தைக் கலைத்து விடும் போலிருக்கிறதே.

**லீயர் :** பாருங்கள், இந்தச் சின்ன நாய்களை, ட்ரே, ப்ளான்ச், ஸ்வீட்ஹார்ட் எல்லாமே என்னைப் பார்த்துக் குரைக்கின்றன.

**எட்கார்:** டாம் தன் தலையை அவர்கள் மேல் வீசி எறிவான் போங்கள், சொறி நாய்களே!

கறுப்பாயிருந்தாலும், வெளுப்பாயிருந்தாலும்
கடிக்கின்ற பல்லிலே நஞ்சே யிருந்தாலும்
வேட்டை நாயானாலும், வீட்டு நாயானாலும்

Hound or spaniel, brach or lym,
Or bobtail tike or trundle-tail,
Tom will make them weep and wail :
For, with throwing thus my head,
Dogs leap the hatch, and all are fled.

Do de, de, de. Sessa! Come, march to wakes and fairs and market-towns. Poor Tom, thy horn is dry.

**KING LEAR** : Then let them anatomize Regan; see what breeds about her heart. Is there any cause in nature that makes these hard hearts?

To EDGAR

You, sir, I entertain for one of my hundred; only I do not like the fashion of your garments : you will say they are Persian attire : but let them be changed.

**KENT :** Now, good my lord, lie here and rest awhile.

**KING LEAR :** Make no noise, make no noise; draw the curtains : so, so, so. We'll go to supper i' he morning. So, so, so.

**Fool** : And I'll go to bed at noon.
Re-enter GLOUCESTER

**GLOUCESTER** : Come hither, friend : where is the king my master?





பட்டி நாயானாலும், குட்டி நாயானாலும்
குட்டை வாலானாலும், கூந்தல் வாலானாலும்
அழஅழப்பண்ணி, ஊளையிடச் செய்வான், டாமே
ஏனெனில்,
தலை விழுந்ததைக் கண்டதுமே
தாவிடுமாம் கோட்டை, நாய்களெல்லாம்
தட்டுக் கெட்டோடி ஒளிந்திடுமாம்.

டோ, டெ, டெ, டெ. செஸ்ஸா, சந்தைக்கு நடையைக்கட்டு, பாவம்! டாம், உன் குரல்வளை வறண்டு போச்சே.

**லீயர் :** இனி, ரீகனுடைய உடலை அறுத்துப் பிளந்து ஆராய்ச்சி செய்யவேண்டும். அவள் ஹிருதயத்தைச் சுற்றி என்ன வளர்கிறது என்று பார்க்கவேண்டும். இந்த இதயங்களைக் கல்லாக்குவதற்கு இயற்கைக் காரணம் ஏதாவது இருக்கிறதா என்று தெரியவேண்டும்.

ஐயா, உம்மை என் நூறு வீரர்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டேன். ஆனால் உம்முடைய ஆடையின் பாணிதான் எனக்குப் பிடிக்கவில்லை. அது பாரஸீகத்துப் பாணி என்று நீர் சொல்லுவீர்; அதை மாற்றிவிட வேண்டும்.

**கென்ட்:** பிரபு, இப்போது தாங்கள் படுத்துக் கொள்ள வேண்டும், படுத்துக் கொஞ்ச நேரமாவது இளைப்பாற வேண்டும்.

**லீயர் :** இரைச்சல் போடாதீர்கள், இரைச்சல் போடாதீர்கள். திரையைப் போடுங்கள். அமைதி, அமைதி, இரவுச் சாப்பாட்டைக் காலையில் வைத்துக் கொள்வோம்.

**கோமாளி:** உறக்கத்தை நான் மதியத்தில் வைத்துக் கொள்வேன். [க்ளாஸ்டர் மறுபடியும் வருகிறார்]

**க்ளாஸ்:** வாரும், நண்பரே; அரசரை எங்கே?

**KENT :** Here, sir; but trouble him not, his wits are gone.

**GLOUCESTER :** Good friend, I prithee,
take him in thy arms;
I have o'erheard a plot of death upon him :
There is a litter ready; lay him in 't,
And drive towards Dover, friend, where thou shalt meet
Both welcome and protection.
Take up thy master :
If thou shouldst dally half an hour, his life,
With thine, and all that offer to defend him,
Stand in assured loss : take up, take up;
And follow me, that will to some provision
Give thee quick conduct.

**KENT :** Oppressed nature sleeps :
This rest might yet have balm'd thy broken senses,
Which, if convenience will not allow,
Stand in hard cure.

To the Fool
Come, help to bear thy master;
Thou must not stay behind.

**GLOUCESTER :** Come, come, away.

Exeunt all but EDGAR

**EDGAR :** When we our betters see bearing our woes,
We scarcely think our miseries our foes.
Who alone suffers suffers most i' the mind,



**கென்ட்:** இங்கேதான், ஐயா. ஆனால், அவரை சிரமப்படுத்தாதீர்கள். அவருக்கு அறிவு இல்லாமல் போய்விட்டது.

**க்ளாஸ்:** அருமை நண்பரே, ஒன்று செய்யவேண்டும்; உங்கள் கையால் அவரைத் தூக்கிக் கொள்ளுங்கள். அவரைக் கொல்லுவதற்கு சதி நடக்கிறது. இதை ஒட்டுக்கேட்டு அறிந்தேன். ஒரு பல்லக்கு தயாராக இருக்கிறது. அதில் அவரை வைத்து டோவருக்கு அழைத்துச் செல்லுங்கள், அங்கே உங்களை வரவேற்றுப் பாதுகாப்பார்கள். உங்கள் எஜமானரைத் தூக்கிக் கொள்ளுங்கள். அரைமணிநேரம் தாயமாடினாலும், அவருக்கும் ஆபத்து, உங்களுக்கும் ஆபத்து, அவரைக் காப்பாற்ற முனையும் எவருக்கும் ஆபத்து. தூக்குங்கள், தூக்குங்கள், என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள். விரைவில் போய்ச் சேருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

**கென்ட்:** துன்பத்தால் பாதிக்கப்பட்ட உடல் உறங்குகிறது. இப்படிக் களைப்பாறுவதால், குழம்பிப் போன உம் நரம்புகளுக்கு அமைதி கிட்டும். இந்த அருமருந்தில்லையெனில் நோய் குணமாவது அரிது.

[கோமாளியைப் பார்த்து] வா, உன் எஜமானைத் தூக்கிச் செல்லுவோம். நீயும் இங்கே தங்கக் கூடாது.

**க்ளாஸ்:** வாருங்கள், விரைவில் வந்துவிடுங்கள்.

[அரசரைத் தூக்கிக்கொண்டு கென்ட்டும், க்ளாஸ்டரும், கோமாளியும் போகிறார்கள்]

**எட்கார்:** நம்மைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் துன்பத்தைத் தாங்குவதைப் பார்க்கும்போது, நம்முடைய துன்பம் நமக்குப் பிரமாதமாகப் படுவதில்லை. கூடச் சேர்ந்து துன்புறுவதற்குக் கூட்டாளி இல்லையென்றால், துக்கம் தலைக்கு ஏறிவிடுகிறது, இன்பத்தை மறந்துவிடுகிறோம். ஆனால், துன்பத்திலே தோழமை

Leaving free things and happy shows behind :
But then the mind much sufferance doth o'er skip,
When grief hath mates, and bearing fellowship.
How light and portable my pain seems now,
When that which makes me bend makes the king bow,
He childed as I father'd! Tom, away!
Mark the high noises; and thyself bewray,
When false opinion, whose wrong thought defiles thee,
In thy just proof, repeals and reconciles thee.
What will hap more to-night, safe 'scape the king!
Lurk, lurk.

Exit

## SCENE VII.

Gloucester's castle.
Enter CORNWALL, REGAN, GONERIL,
EDMUND, and Servants

**CORNWALL :** Post speedily to my lord
your husband; show him this letter :
the army of France is landed.
Seek out the villain Gloucester.
Exeunt some of the Servants

**REGAN :** Hang him instantly.

**GONERIL :** Pluck out his eyes.

**CORNWALL :** Leave him to my displeasure. Edmund, keep you our sister company : the revenges we are bound to take





கிடைக்கும்போது, தீராத் துயரத்தையும் ஒரு தாண்டுத் தாண்டி விடுகிறோம். இப்பொழுது, என்னுடைய வேதனைக்குள்ள பாரம் எப்படிக் குறைந்து விட்டது! தாங்கக் கூடியதாகி விட்டது அது. என்னைக் குனியச் செய்த துயரம் அரசனையும் தலைவணங்கச் செய்திருக்கிறது. எனக்கு எப்படி அப்பனோ, அப்படி அவருக்குப் பிள்ளை.

டாம், போய்விடு! வரப்போகும் காரியங்களைக் கவனித்துக்கொள். உன்னைப்பற்றிய பொய்க் கருத்துகள் உன்னைக் கேவலப்படுத்தி விட்டன. உண்மையைத் துலக்கி, உன் பெயரைக் காப்பாற்றிக்கொள். இன்றிரவு என்ன நடந்தாலும், அரசர் இடையூறின்றித் தப்பித்துக் கொள்ளட்டும்! ஒளிந்துகொள், ஒளிந்துகொள்.

## காட்சி 7

க்ளாஸ்டர் அரண்மனையில் ஒரு அறை
[கார்ன்வால், ரீகன், கானெரில், எட்மன்ட்,
பணியாட்கள் வருகிறார்கள்]

**கார்ன்:** [கானெரிலைப் பார்த்து] உங்கள் கணவரிடம் விரைந்து சென்று, இந்தக் கடிதத்தைக் காட்டுங்கள்; ப்ரான்ஸ் நாட்டுப் படைகள் நம் நாட்டில் இறங்கி விட்டன

அந்த க்ளாஸ்டர் துரோகியைத் தேடிப்பிடியுங்கள்.
[சில பணியாட்கள் போகிறார்கள்]

**ரீகன்:** உடனே அவனைத் தூக்கிலிடுங்கள்.

**கானெரில்:** அவன் கண்ணைப் பிடுங்குங்கள்.

**கார்ன்:** அவனை என்னுடைய தண்டனைக்கு விட்டு விடுங்கள் எட்மன்ட், நம்முடைய மைத்துனிக்குத் துணையாகப் போ. துரோகம் செய்த உன் தந்தைக்கு நாம் கொடுக்கப்போகும் தண்டனையை நீ பார்க்கலாகாது.

upon your traitorous father are not fit for your beholding. Advise the duke, where you are going, to a most festinate preparation : we are bound to the like. Our posts shall be swift and intelligent betwixt us. Farewell, dear sister : farewell, my lord of Gloucester.

Enter OSWALD

How now! where's the king?

**OSWALD :** My lord of Gloucester hath convey'd him hence :
Some five or six and thirty of his knights,
Hot questrists after him, met him at gate;
Who, with some other of the lords dependants,
Are gone with him towards Dover; where they boast
To have well-armed friends.

**CORNWALL :** Get horses for your mistress.

**GONERIL : F**arewell, sweet lord, and sister.

**CORNWALL :** Edmund, farewell.
Exeunt GONERIL, EDMUND, and OSWALD

Go seek the traitor Gloucester,
Pinion him like a thief, bring him before us.

Exeunt other Servants

Though well we may not pass upon his life
Without the form of justice, yet our power





கோமகனிடம் சென்று விரைவில் ஆயுத்தமாகச் சொல்லவேண்டும். நாமும் அப்படியே ஆயத்தமாயிருப்போம். நாம் பரிமாறிக்கொள்ளும் செய்திகளும் கடிதங்களும் விரைவில் ஒருவரையொருவர் அடையவேண்டும்.

அருமை மச்சினியே, போய்வாருங்கள். க்ளாஸ்டர் பிரபு, போய் வாருங்கள்

[ஆஸ்வால்ட் வருகிறான்]

என்ன, எங்கே அரசரை?

**ஆஸ்வா:** க்ளாஸ்டர் பிரபு அவரை இங்கிருந்து அப்புறப்படுத்தி விட்டார். முப்பத்தைந்து அல்லது முப்பத்தாறு வீரர்கள் அரசரை வாயிலில் சந்தித்து அவரோடு டோவரை நோக்கிப் போயிருக்கிறார்கள். டோவரில் அவர்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்களாம், படைபலம் கொண்ட நண்பர்கள்.

**கார்ன்:** உங்கள் எஜமானிக்குக் குதிரைகள் கொண்டு வாருங்கள்.

**கானெரில்:** பிரபு, போய் வருகிறேன், தங்கையே, போய்வருகிறேன்.

**கார்ன்:** எட்மன்ட், போய் வாருங்கள்.
[கானெரில், எட்மன்ட், ஆஸ்வால்ட் போகிறார்கள்]

அந்தத் துரோகி க்ளாஸ்டரைத் தேடிப் பிடித்து வாருங்கள். திருடனுக்கு விலங்கிடுவதுபோல், அவனை விலங்கிட்டுக் கொண்டுவாருங்கள்.

[மற்ற பணியாட்கள் போகிறார்கள்]

விசாரணையில்லாமல் அவனுக்கு மரண தண்டனை கொடுப்பது சரியில்லை. ஆனாலும், நம்முடைய கோபத்தைச் சாந்திசெய்து கொள்வதற்காக, உடனடியாக அவனுக்கு ஏதாவது ஒரு தண்டனை

Shall do a courtesy to our wrath, which men
May blame, but not control.

Who's there? the traitor?

Enter GLOUCESTER, brought in by two or three

**REGAN :** Ingrateful fox! 'tis he.

**CORNWALL :** Bind fast his corky arms.

**GLOUCESTER :** What mean your graces?
Good my friends, consider
You are my guests : do me no foul play, friends.

**CORNWALL :** Bind him, I say.

Servants bind him

**REGAN :** Hard, hard. O filthy traitor!

**GLOUCESTER :** Unmerciful lady as you are, I'm none.

**CORNWALL :** To this chair bind him.
Villain, thou shalt find--

REGAN plucks his beard

**GLOUCESTER** : By the kind gods,
'tis most ignobly done
To pluck me by the beard.

கொடுக்க வேண்டும். மக்கள் அப்படிப்பட்ட தண்டனையைக் குறை கூறலாம், ஆனால் அதைத் தவிர்க்க முடியாது.

யாரது? துரோகியா?

[இரண்டு மூன்று பேர் க்ளாஸ்டரைக் கொண்டு வருகிறார்கள்]

**ரீகன்:** நன்றிகெட்ட நரி! அவன் தான் அது.

**கார்ன்:** சூம்பிப்போன அவன் கைகளை இறுகக் கட்டுங்கள்.

**க்ளாஸ்:** பிரபு, உங்கள் கருத்தென்னவென்று தெரியவில்லையே. நண்பர்களே, நீங்கள் என் விருந்தாளிகள் என்பதை மறந்து விடாதீர்கள். எனக்குக் கேடு செய்யாதீர்கள்.

**கார்ன்:** நான் செல்லுகிறேன், அவனைக் கட்டு.

[ஏவலாளர்கள் கட்டுகிறார்கள்]

**ரீகன்:** நம்பவே முடியவில்லையே, கேடுகெட்ட துரோகி, நம்பவே முடியவில்லை.

**க்ளாஸ்:** கருணையற்ற பெண்ணே, நான் அப்படிப்பட்டவன் இல்லை.

**கார்ன்:** இந்த நாற்காலியோடு சேர்த்து அவனைக் கட்டுங்கள்.

கயவனே, உனக்கு என்ன கிடைக்கப் போகிறது, தெரியுமா?

[ரீகன் அவருடைய தாடியைப் பிய்க்கிறாள்]

**க்ளாஸ்:** தெய்வங்களே, என் தாடியைப் பிய்ப்பது அக்கிரமத்திலும் அக்கிரமம்.

**REGAN :** So white, and such a traitor!

**GLOUCESTER :** Naughty lady,
These hairs, which thou dost ravish from my chin,
Will quicken, and accuse thee : I am your host :
With robbers' hands my hospitable favours
You should not ruffle thus. What will you do?

**CORNWALL :** Come, sir,
what letters had you late from France?

**REGAN :** Be simple answerer, for we know the truth.

**CORNWALL :** And what confederacy have you with the traitors
Late footed in the kingdom?

**REGAN :** To whose hands have you sent the lunatic king?
Speak.

**GLOUCESTER :** I have a letter guessingly set down,
Which came from one that's of a neutral heart,
And not from one opposed.

**CORNWALL :** Cunning.

**REGAN :** And false.

**CORNWALL :** Where hast thou sent the king?

**GLOUCESTER :** To Dover.

**REGAN :** Wherefore to Dover? Wast thou not charged at peril--







**ரீகன்:** தாடி இவ்வளவு வெள்ளை, எனினும் எவ்வளவு துரோகம்!

**க்ளாஸ்:** வம்புக்காரப் பெண்ணே என் தாடியிலிருந்து நீ பிய்த்த ரோமங்கள் உயிர்பெற்று உன்னைக் குற்றம் சாட்டிக் கொண்டு நிற்கும். விருந்தோம்பிய என்னை, உன் சோரக் கைகளால் இப்படிக் கேவலப்படுத்தக் கூடாது. என்னதான் செய்து விடுவாய் நீ?

**கார்ன்:** அப்படி வாருங்கள், ஐயா. சமீபத்தில் ப்ரான்ஸிடமிருந்து உமக்கு என்ன கடிதம் வந்தது?

**ரீகன்:** ஒளிவு, மறைவில்லாமல் பதில் சொல்லும்; ஏனென்றால், எங்களுக்கு உண்மை தெரியும்.

**கார்ன்:** நம் நாட்டில் இப்போது கால் வைத்திருக்கும் துரோகிகளோடு சேர்ந்து என்ன சடிதி செய்திருக்கிறீர்?

**ரீகன்:** பைத்தியம் பிடித்த அரசனை யாரிடம் அனுப்பி வைத்தீர்? சொல்லும்.

**க்ளாஸ்:** பொதுவான ஒருவரிடமிருந்து ஹேஷ்யங்களைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அது எதிரிகளிடமிருந்தல்ல.

**கார்ன்:** தந்திரம்.

**ரீகன்:** பொய்.

**கார்ன்:** அரசரை எங்கே யனுப்பியிருக்கிறீர்?

**க்ளாஸ்:** டோவருக்கு.

**ரீகன்:** எதற்காக டோவருக்கு? முன்னமேயே உம்மை எச்சரிக்கவில்லையா?

**CORNWALL :** Wherefore to Dover? Let him first answer that.

**GLOUCESTER :** I am tied to the stake,
and I must stand the course.

**REGAN :** Wherefore to Dover, sir?

**GLOUCESTER :** Because I would not see thy cruel nails
Pluck out his poor old eyes;
nor thy fierce sister
In his anointed flesh stick boarish fangs.
The sea, with such a storm as his bare head
In hell-black night endured,
would have buoy'd up,
And quench'd the stelled fires :
Yet, poor old heart, he holp the heavens to rain.
If wolves had at thy gate howl'd that stern time,
Thou shouldst have said 'Good porter, turn the key,'
All cruels else subscribed : but I shall see
The winged vengeance overtake such children.

**CORNWALL :** See't shalt thou never.
Fellows, hold the chair.
Upon these eyes of thine I'll set my foot.

**GLOUCESTER :** He that will think to live till he be old,
Give me some help! O cruel! O you gods!

**REGAN :** One side will mock another;
the other too.





**கார்ன்:** டோவருக்கு எதற்காக? அதற்கு பதில் அவர் சொல்லட்டும்.

**க்ளாஸ்:** என்னைக் கட்டுத்தறியில் கட்டி விட்டீர்கள். பட வேண்டியதைப் பட்டுத்தான் தீர வேண்டும்.

**ரீகன்:** எதற்காக டோவருக்கு?

**க்ளாஸ்:** ஏனென்றால், உன்னுடைய கொடிய நகத்தாலே, அவருடைய கிழட்டுக் கண்களைப் பிடுங்கி எறியும் காட்சியை நான் பார்க்க விரும்பவில்லை. கோரம் நிறைந்த உன் தமக்கையிருக்கிறாளே, அவளுடைய காட்டுப் பன்றிப் பற்களால் அவருடைய புனித தசைகளைக் கிழிக்கும் காட்சியை நான் பார்த்துச் சகிக்க முடியாது; நரக இருட்டிலே, வெறுந் தலையோடு புயலில் அவர் பட்டபாட்டைப் பார்த்திருந்தால், கடலே கொந்தளித்து ஓங்கி நக்ஷத்திர மண்டலத்திலுள்ள அக்னியை அவித்திருக்கும். ஆயினும், அவர் வானத்தைப் பார்த்து, "இன்னும் பெய்" என்று சொல்லி ஊக்குவித்தார். அந்தக் கொடிய நேரத்தில், உன் வீட்டு வாசலில், ஓநாய்கள் வந்து ஊளையிட்டிருந்தாலும், கருணையோடு, கதவைத்திறந்து அவைகளை வரவேற்று நீ ஆதரித்திருக்க வேண்டும். இத்தகைய கருணையற்ற குழந்தைகளைப் பழிதீர்க்கும் காலம் வரப்போகிறது. நானும் பார்க்கப் போகிறேன்.

**கார்ன்:** நீராவது, பார்ப்பதாவது! ஒருக்காலும் முடியாதுபயல்களா, நாற்காலியைப் பிடியுங்கள்!
உன்னுடைய கண்களில் என் காலை வைத்து அமுக்குகிறேன்.

**க்ளாஸ்:** கிழட்டுப் பருவம் வரை உயிரோடிருக்க விரும்புகிறவன் எவனாவது இருந்தால், எனக்கு உதவி செய்ய வா! ஆ, கொடுமை! ஒ தெய்வங்களே!

**ரீகன்:** ஒரு கண் மற்றதைப் பார்த்து நகைக்குமே, ஊ...ம், அதையும்.

**CORNWALL :** If you see vengeance,--

**First Servant :** Hold your hand, my lord :
I have served you ever since I was a child;
But better service have I never done you
Than now to bid you hold.

**REGAN :** How now, you dog!

**First Servant :** If you did wear a beard upon your chin,
I'd shake it on this quarrel. What do you mean?

**CORNWALL :** My villain!

They draw and fight

**First Servant :** Nay, then, come on,
and take the chance of anger.

**REGAN :** Give me thy sword.
A peasant stand up thus!

Takes a sword, and runs at him behind

**First Servant**
O, I am slain! My lord, you have one eye left
To see some mischief on him. O! Dies

**CORNWALL :** Lest it see more, prevent it.
Out, vile jelly!
Where is thy lustre now?

**கார்ன்:** பழி தீர்ப்பதை நீ பார்த்தால்

**முதல் பணியாள்:** நிறுத்துங்கள், பிரபு! நான் குழந்தையாயிருந்த காலந்தொட்டு, உங்களுக்குச் சேவை செய்து வந்திருக்கிறேன். ஆனால், என்னுடைய சேவையில் எல்லாம் உயர்ந்த சேவை எதுவென்றால்; இப்போது உங்களை நிறுத்தச் சொன்னேனே, அது தான்.

**ரீகன்:** என்ன சங்கதி, நாயே?

**முதல் பணியாள்:** உங்கள் நாடியிலே ஒரு தாடியிருக்குமானால், இந்தச் சண்டையிலே, அதைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கியிருப்பேன். என்ன நினைத்து இப்படிச் செய்கிறீர்கள்?

**கார்ன்:** என் அடிமையா!

[வாளையுருவி இருவரும் சண்டை போடுகிறார்கள்]

**முதல் பணியாள்:** அப்படியா! வாரும், வாரும். கோபத்தின் விளைவை ஏற்றுக்கொள்ளும்.

**ரீகன்:** உன்னுடைய வாளைக் கொடு ஒரு குடியானவனுக்கு இவ்வளவு திமிரா?
[ஒரு வாளையெடுத்துக் கொண்டு பின்புறம் போய்க் குத்துகிறாள்]

**முதல் பணியாள்:** ஓ, நான் செத்தேன்!பிரபு, உங்களுக்கு ஒரு கண் மிஞ்சியிருக்கிறது. இவனுக்கு வரும் கேட்டைக் கண்டு களிக்க, ஓ! [சாகிறான்]

**கார்ன்:** அந்தக் கண்ணும் இனி எதையும் பார்க்காதவாறு தடுத்து விடுகிறேன்.
ஒழிந்து போ, கூழ் முட்டையே! இப்போது, எங்கே போயிற்று உன் ஒளி!

**GLOUCESTER :** All dark and comfortless.
Where's my son Edmund?
Edmund, enkindle all the sparks of nature,
To quit this horrid act.

**REGAN :** Out, treacherous villain!
Thou call'st on him that hates thee : it was he
That made the overture of thy treasons to us;
Who is too good to pity thee.

**GLOUCESTER :** O my follies!
then Edgar was abused.
Kind gods, forgive me that, and prosper him!

**REGAN :** Go thrust him out at gates,
and let him smell His way to Dover.

Exit one with GLOUCESTER

How is't, my lord? how look you?

**CORNWALL :** I have received a hurt : follow me, lady.
Turn out that eyeless villain; throw this slave
Upon the dunghill.
Regan, I bleed apace :
Untimely comes this hurt : give me your arm.

Exit CORNWALL, led by REGAN

**Second Servant** : I'll never care what wickedness I do,
If this man come to good.

**க்ளாஸ்:** எல்லாம் இருள் மயம், சோக மயம்! என்னுடைய மகன், எட்மன்ட் எங்கே?

எட்மன்ட், இயற்கையிலுள்ள தீப் பொறிகளை ஊதி, ஊதி எரியச் செய், பழிக்குப்பழி வாங்கு; கொடுஞ்செயல் இது!

**ரீகன்:** தொலைந்து போ, அயோக்கியத் துரோகி! உன்னை வெறுப்பவனைப் பார்த்தா வஞ்சம் தீர்க்கச் சொல்லுகிறாய்? அவன்தானே உன்னுடைய துரோகத்தை எங்களுக்குக் காட்டிக் கொடுத்தவன்; உனக்கு இரக்கங் காட்டாத அளவுக்கு அவன் நல்லவன்.

**க்ளாஸ்:** என் முட்டாள்தனத்தை என்ன சொல்ல! அப்படியானால், எட்காருக்குத் தவறிழைத்து விட்டேன். அருமைத் தெய்வங்களே, என்னை மன்னித்து அவனை வாழ்த்துங்கள்!

**ரீகன்:** போய், அவனை வாசலுக்கு வெளியே தள்ளுங்கள். மோப்பம் பிடித்துக் கொண்டே அவன் டோவர் போய்ச் சேரட்டும் [க்ளாஸ்டரோடு ஒருவன் போகிறான்]

என்ன, பிரபு? எப்படியோ இருக்கிறீர்களே?

**கார்ன்:** எனக்கு ஒரு காயம்பட்டு விட்டது; என்னோடு வா, அம்மா அந்தக் குருட்டு அயோக்கியனை வெளியே தள்ளுங்கள். இந்த அடிமையை எருக்குழியில் போடுங்கள்

ரீகன், எனக்கு ரத்தம் கொட்டுகிறது. நேரந்தப்பிய நேரத்தில் இந்தக் காயம் எனக்கு ஏற்பட்டு விட்டது. உன் கையைக் கொடு.

[ரீகன் கார்ன்வாலை நடத்திச் செல்லுகிறாள்]

**இரண்டாவது பணியாள்:** இந்த மனிதனுக்கும் நல்வாழ்வு உண்டென்றால், எவனும் எந்த அக்கிரமத்தையும் செய்யலாம் என்றுதான் ஏற்படுகிறது.

Third Servant : If she live long,
And in the end meet the old course of death,
Women will all turn monsters.

**Second Servant :** Let's follow the old earl, and get the Bedlam
To lead him where he would : his roguish madness
Allows itself to any thing.

**Third Servant :** Go thou : I'll fetch some flax and whites of eggs
To apply to his bleeding face.
Now, heaven help him!

Exeunt severally

## ACT IV
## SCENE I.

The heath.
Enter EDGAR

**EDGAR :** Yet better thus, and known to be contemn'd,
Than still contemn'd and flatter'd. To be worst,
The lowest and most dejected thing of fortune,
Stands still in esperance, lives not in fear :
The lamentable change is from the best;
The worst returns to laughter.
Welcome, then, thou unsubstantial
air that I embrace!
The wretch that thou hast blown unto the worst
Owes nothing to thy blasts.
But who comes here?
Enter GLOUCESTER, led by an Old Man







**மூன்றாவது பணியாள்:** அவளும் நீடுழி வாழப் போகிறாள் என்றால், பெண்கள் எல்லோரும் பேயாகி விடுவார்கள் என்பது உறுதி.

**இரண்டாவது பணியாள்:** நாம் நம் கிழட்டு எஜமான் பின்னால் போவோம்; பைத்தியம் அவரை எங்கு அழைத்துப் போனாலும் போகட்டும். அந்தப் பைத்தியம் என்னத்தையும் செய்யும்.

**மூன்றாவது பணியாள்:** நீ போ. முட்டையின் வெள்ளைக் கருவையும், கொஞ்சம் பஞ்சையும் எடுத்து வருகிறேன். ரத்தம் ஒழுகும் அவர் முகத்துக்கு அதைப் போடலாம். அவரைக் கடவுள் காக்கட்டும்!

[தனித்தனியே போகிறார்கள்]

## அங்கம் IV
## காட்சி 1

வெம்பரப்பு [எட்கார் வருகிறான்]

**எட்கார்:** என்னுடைய தற்போதைய நிலை ஒரு வகையில் நல்ல நிலைதான். என்னை யார் என்று தெரியாமல் என்னை இகழ்கிறார்கள். இதைப் பொறுத்துக் கொள்ளலாம். என்னை யார் என்று தெரிந்து, இகழும்போதும் புகழும்போதுந்தான் சகிக்கமுடியவில்லை. ஆகக் கேவலமான நிலையிலிருக்கும்போதும், அதிர்ஷ்ட தேவியால் புறக்கணிக்கப்பட்டு மிகமிகத் தாழ்ந்த நிலையடைந்த பிறகும், அச்சமில்லாமல், நம்பிக்கையோடு வாழ்கிறோம். உயர்ந்த நிலையிலிருந்து தாழ்வு அடையும்போதுதான் வருத்தம் ஏற்படுகிறது. மிகத்தாழ்ந்த நிலையையடைந்த பிறகோ, அதற்கும் கீழே தாழ முடியாது, அதற்குமேல் ஏற்படும் மாறுதல் எல்லாம் இன்பத்தையே கொடுக்கவல்லது. ஆகவே, நான் ஆவிச் சேர்த்துத் தழுவி நிற்கும் வெறுங் காற்றே, உனக்கும் நல்வரவு கூறுகிறேன். நீ வீசக்கூடிய துன்பத்தையெல்லாம் இந்த ஏழைமீது வீசித் தீர்த்துவிட்டாய். உன்னைக் கண்டு அஞ்சுவானேன்?இங்கே வருவது யார்?

My father, poorly led? World, world, O world!
But that thy strange mutations make us hate thee,
Lie would not yield to age.

**Old Man** : O, my good lord,
I have been your tenant, and
your father's tenant, these fourscore years.

**GLOUCESTER :** Away, get thee away; good friend, be gone :
Thy comforts can do me no good at all;
Thee they may hurt.

**Old Man :** Alack, sir, you cannot see your way.

**GLOUCESTER :** I have no way, and therefore want no eyes;
I stumbled when I saw : full oft 'tis seen,
Our means secure us, and our mere defects
Prove our commodities. O dear son Edgar,
The food of thy abused father's wrath!
Might I but live to see thee in my touch,
I'ld say I had eyes again!

**Old Man :** How now! Who's there?

**EDGAR :** [Aside] O gods!
Who is't can say 'I am at the worst'?
I am worse than e'er I was.

**Old Man** : 'Tis poor mad Tom.

**EDGAR :** [Aside] And worse I may be yet : the worst is not
So long as we can say 'This is the worst.'





[ஒரு கிழவன் க்ளாஸ்டரை நடத்தி வருகிறான்]

என் தகப்பனா? அவரை நடத்தி வருவதைப் பார்க்கும்போது, பரிதாபமாயிருக்கிறது! அட, உலகமே, உலகமே! உன்னுடைய அலங்கோலமான ரஸவாதங்களைப் பார்க்கும்போது வாழ்க்கையில் வெறுப்புத் தட்டி விடுகிறது. இந்த வெறுப்பில்லை யென்றால், வாழ்க்கைக்குக் கிழடு தட்டாதே.

**கிழவன்:** உத்தமப் பிரபு, இந்த எண்பது ஆண்டுகளாக, உங்கள் தந்தையிடத்திலும், உங்களிடத்திலும், பண்ணையாளாக இருந்து வந்திருக்கிறேன்.

**க்ளாஸ்:** போய்விடு, நீ போய்விடு, நண்பனே, போய்விடு. உன்னுடைய பரிவினால் எனக்கு நன்மை ஏற்படவே செய்யாது; அதனால், உனக்குத் தீங்கு ஏற்படலாம்.

**கிழவன்:** உங்களுக்குப் பாதையைப் பார்க்க முடியாதே.

**க்ளாஸ்:** எனக்குப் பாதையில்லை, ஆகையால், கண்ணும் தேவையில்லை. பார்வையிருந்தபோது, நான் தடுமாறினேன். அடிக்கடி நமக்குத் தெரிகிறது என்னவென்றால், நம் திறமை நமக்கு உலைவைக்கிறது, நம் குறைபாடு நம்மைக் காப்பாற்றுகிறது. ஒ, எட்கார், என் அன்புமகனே, உன் தந்தையின் தவறான சினத்துக்கு இரையானாய் நீ. உன்னை மாத்திரம் தொட்டுப் பார்க்க எனக்குக் கொடுத்து வைக்குமானால், பார்ப்பதற்கு எனக்குக் கண் கிடைத்துவிட்டது என்றே சொல்வேன்.

**கிழவன்:** இது யார்? அங்கிருப்பது யார்?

**எட்கார்:** [பராக்குப் பார்த்து] ஒ! தெய்வங்களே! நான் தாழ்ந்த நிலையின் இறுதியையடைந்து விட்டேன் என்று யார்தான் சொல்லமுடியும்? நான் எந்தக் காலத்திலுமிருந்ததை விட மோசமான நிலையிலிருக்கிறேன் இப்போது.

**Old Man :** Fellow, where goest?

**GLOUCESTER** : Is it a beggar-man?

**Old Man** : Madman and beggar too.

**GLOUCESTER** : He has some reason,
else he could not beg.
I' the last night's storm I such a fellow saw;
Which made me think a man a worm : my son
Came then into my mind; and yet my mind
Was then scarce friends with him : I have heard
more since. As flies to wanton boys, are we to the gods.
They kill us for their sport.

**EDGAR** : [Aside] How should this be?
Bad is the trade that must play fool to sorrow,
Angering itself and others.
Bless thee, master!

**GLOUCESTER** : Is that the naked fellow?

**Old Man** : Ay, my lord.

**GLOUCESTER** : Then, prithee, get thee gone :
if, for my sake,
thou wilt o'ertake us, hence a mile or twain,
I' the way toward Dover, do it for ancient love;
And bring some covering for this naked soul,
Who I'll entreat to lead me.

**கிழவன்:** ஏண்டா, எங்கேடா போகிறாய்?

**க்ளாஸ்:** பிச்சைக்காரனா அது?

**கிழவன்:** பித்தனுங்கூட.

**க்ளாஸ்:** அவனுக்குக் கொஞ்சம் அறிவிருக்கிறது. இல்லையென்றால், அவன் பிச்சைக்குப் போவானா? நேற்றிரவு அடித்த புயலில், இதைப்போல, ஒரு பயலைப் பார்த்தேன். அவனைப் பார்த்ததும், மனிதன் ஒரு புழு என்ற நினைப்பு எனக்கு வந்தது. அந்த சமயத்திலே என் மகனிடத்திலே பரிவற்று இருந்தேன். இருந்தாலும், அந்தப் பயலைப் பார்த்தபோது, என் மகனுடைய ஞாபகம் வந்தது, அதற்குப் பின்னால், பல காரியங்கள் நடந்து விட்டன. சுட்டிப் பையன்களுக்கு ஈக்கள் எப்படியோ, அப்படித்தான் தெய்வங்கள் கையில் நாமும்; விளையாட்டுக்காக அவர்கள் நம்மைக் கொல்லுவார்கள்.

**எட்கார்:** [பராக்கு பார்த்து] இது எப்படி நடந்தது? சோகத்தின் முன்னிலையிலே, கோமாளித்தனம் செய்யும் வியாபாரம் நல்லதல்ல. அதனால், கோமாளிக்கும் தொல்லை, மற்றவர்களுக்கும் தொல்லை. எஜமானனே, நீங்கள் நன்றாயிருக்க வேண்டும்.

**க்ளாஸ்:** அவன்தானா? அந்த ஆடையில்லாத பயலா?

**கிழவன்:** ஆம், பிரபு.

**க்ளாஸ்:** அப்படியானால், நீ போய்விடு. டோவர் போகிற வழியில், இங்கிருந்து இரண்டொரு மைல்களுக்கப்பால், நீ எங்களைச் சந்திக்க முடியுமானால், செல்; பழைய அன்புக்காகவாவது, செய், என்னை அழைத்துச் செல்லும்படி இவனிடம் கேட்டுக் கொள்ளப் போகிறேன். இந்த ஆடையற்றவன் தன் உடம்பை மூடிக்கொள்ள ஏதாவது கொண்டு வா.

**Old Man** : Alack, sir, he is mad.

**GLOUCESTER :** 'Tis the times' plague,
when madmen lead the blind.
Do as I bid thee, or rather do thy pleasure;
Above the rest, be gone.

**Old Man** : I'll bring him the best 'parel that I have,
Come on't what will.
Exit

**GLOUCESTER :** Sirrah, naked fellow,--

**EDGAR :** Poor Tom's a-cold.
Aside
I cannot daub it further.

**GLOUCESTER :** Come hither, fellow.

**EDGAR :** [Aside] And yet I must.
--Bless thy sweet eyes, they bleed.

**GLOUCESTER :** Know'st thou the way to Dover?

**EDGAR** : Both stile and gate, horse-way and foot-path. Poor Tom hath been scared out of his good wits : bless thee, good man's son, from the foul fiend! five fiends have been in poor Tom at once; of lust, as Obidicut; Hobbididence, prince of dumbness; Mahu, of stealing; Modo, of murder; Flibbertigibbet, of mopping and mowing,







**கிழவன்:** ஐயோ, அவன் ஒரு பைத்தியம், ஐயா.

**க்ளாஸ்:** காலத்தின் கோலம் என்னவென்றால், குருடர்களைப் பித்தர்கள் தான் கூட்டிச் செல்ல வேண்டும். நான் சொன்னபடி செய். இல்லாவிட்டால், உன் இஷ்டம். எல்லாவற்றுக்கும் மேலாக நீ இங்கிருந்து போய்விடு.

**கிழவன்:** என்ன வந்தாலும் சரி, என்னிடமுள்ள சிறந்த ஆடையை நான் கொண்டு வருகிறேன்.
[போகிறான்]

**க்ளாஸ்:** ஏண்டா, அம்மணாண்டி.

**எட்கார்:** ஏழை டாமுக்குக் குளிராட்டுகிறது. [பராக்குப் பார்த்து] இனிமேலும் இந்த வேஷத்தைப் போடமுடியாது.

**க்ளாஸ்:** இங்கே வா, அப்பா.

**எட்கார்:** [தனக்குள்]வேஷம் போட்டும் ஆக வேண்டியிருக்கிறது பாவம், உங்கள் இனிய கண்கள் குணமாகட்டும். ரத்தம் வருகிறதே.

**க்ளாஸ்:** டோவருக்குப் போகும் வழி உனக்குத் தெரியுமா?

**எட்கார்:** ஓ! எல்லாம் தெரியும்; படியும், வாசலும், குதிரைப் பாதையும், ஒற்றடிப் பாதையும்.

ஏழை டாம் கிலியடித்ததால் அறிவிழந்துவிட்டான்; உத்தமர் மகனே, அந்தக் கொடிய பேய் உம்மைப் பீடிக்காதிருக்கட்டும். ஒரே காலத்தில், ஐந்து பேய்கள் டாமைப் பிடித்திருக்கின்றன; ஆபிடிகட் என்ற காமப்பேய், ஹாப்பிடிடென்ஸ் என்ற ஊமைப் பேய், மாகு என்ற திருட்டுப் பேய், மோடோ என்ற கொலைகாரப் பேய், ஸ்டிபெர்டிகெபிட் என்ற அஷ்டகோணல் பேய். கடைசியில்

who since possesses chambermaids
and waiting-women.
So, bless thee, master!

**GLOUCESTER** : Here, take this purse,
thou whom the heavens' plagues
Have humbled to all strokes : that I am wretched
Makes thee the happier : heavens, deal so still!
Let the superfluous and lust-dieted man,
That slaves your ordinance, that will not see
Because he doth not feel, feel your power quickly;
So distribution should undo excess,
And each man have enough.
Dost thou know Dover?

**EDGAR :** Ay, master.

**GLOUCESTER :** There is a cliff,
whose high and bending head
Looks fearfully in the confined deep :
Bring me but to the very brim of it,
And I'll repair the misery thou dost bear
With something rich about me : from that place
I shall no leading need.

**EDGAR :** Give me thy arm :
Poor Tom shall lead thee.

Exeunt





சொன்ன பேய்தான், இப்போது தோழிகளையும், பணிப் பெண்களையும் பிடித்திருக்கிறது. எஜமானே, உங்களுக்கு மங்களம் உண்டாகவேண்டும்.

**க்ளாஸ்:** இதோ, இந்தப் பணப்பையை எடுத்துக் கொள். வானத்தின் கொடுமைகளால் நீ குறைந்து குன்றிப் போனாய். நீ பட வேண்டிய துயரத்திலே, இனி பாக்கி சாக்கியில்லை. என்னுடைய துன்பத்தைப் பார்க்கும்போது, உன்னுடைய துன்பம் குறைகிறது. காமத்தை உணவாகக் கொண்டு, ஆடம்பரத்தில் மிதந்து, தெய்வ நியதியைப் பழித்து, உணர்ச்சியற்றுப் போன காரணத்தால், காட்சியற்று நிற்கும் மனிதனுக்கு, வானங்களே, உங்களுடைய ஆற்றலை உடனடியாக உணர்த்துங்கள். அதிகமாக வைத்திருக்கிறவனிடத்திலே தேவையில்லாப் பொருள் இருக்கிறது; அதைக் குறைத்து, அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தால், ஒவ்வொருவனிடத்திலும் வேண்டிய அளவு பொருளிருக்கும். உனக்கு டோவர் தெரியுமா?

**எட்கார்:** தெரியும், எஜமானே.

**க்ளாஸ்:** அங்கே ஒரு மலைச் சிகரம் இருக்கிறது. அதன் தலை உயர்ந்து, வளைந்து, கீழிருக்கும் கடலை, அச்சத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும் அந்தச் சிகரத்தின் விளிம்பிலே என்னை மாத்திரம் கொண்டு போய் விட்டுவிடு. அப்படிச் செய்தால், என் செல்வத்தைக் கொண்டு உன் வறுமையைத் துடைத்து விடுவேன். அங்கே என்னை விட்ட பிறகு, மேலும் வழிகாட்ட எனக்கு ஆள் வேண்டியதில்லை.

**எட்கார்:** உங்கள் கையைக் கொடுங்கள்; ஏழை டாம் உங்களை இட்டுச் செல்வான்.

[போகிறார்கள்]

## SCENE II.

Before ALBANY's palace.
Enter GONERIL and EDMUND

**GONERIL :** Welcome, my lord : I marvel our mild husband
Not met us on the way.

Enter OSWALD

Now, where's your master'?

**OSWALD :** Madam, within; but never man so changed.
I told him of the army that was landed;
He smiled at it : I told him you were coming :
His answer was 'The worse : ' of Gloucester's treachery,
And of the loyal service of his son,
When I inform'd him, then he call'd me sot,
And told me I had turn'd the wrong side out :
What most he should dislike seems pleasant to him;
What like, offensive.

**GONERIL :** [To EDMUND] Then shall you go no further.
It is the cowish terror of his spirit,
That dares not undertake : he'll not feel wrongs
Which tie him to an answer. Our wishes on the way
May prove effects. Back, Edmund, to my brother;
Hasten his musters and conduct his powers :
I must change arms at home, and give the distaff
Into my husband's hands. This trusty servant
Shall pass between us : ere long you are like to hear,
If you dare venture in your own behalf,



## காட்சி 2

ஆல்பனிக் கோமகன் அரண்மனைக்கு முன்
[கானெரில், எட்மன்ட் வருகிறார்கள்]

**கானெரில்:** வாருங்கள், பிரபு. நமது அப்பாவிக் கணவர் நம்மை எதிர்நோக்கி அழைக்கவில்லையே என்று வியப்படைந்தேன்.

[ஆஸ்வால்ட் வருகிறான்]

சரி, எங்கே உன் எஜமான்?

**ஆஸ்வா:** உள்ளே, அம்மணி; ஆனால், அவர் எவ்வளவோ மாறிவிட்டார்; படைகள் வந்து இறங்கி விட்டன என்று சொன்னேன்; அதைக் கேட்டு அவர் புன்முறுவல் செய்தார், தங்கள் வருகையைப் பற்றி அவரிடம் சொன்னேன்; "இன்னும் மோசம்" என்று பதில் சொன்னார். க்ளாஸ்டருடைய துரோகத்தைப் பற்றியும், அவர் மகனுடைய உண்மையான சேவையைப் பற்றியும் சொன்னேன்; என்னை முட்டாள் என்று சொல்லி, உள்ளிருக்க வேண்டியதைத் தவறிப் போய் வெளியில் வைத்துவிட்டேன் என்று சொன்னார். வெறுக்க வேண்டியதைப் பாராட்டுகிறார். விரும்ப வேண்டியதையோ, வெறுக்கிறார்.

**கானெரில்:** [எட்மன்டைப் பார்த்து] அப்படியானால், நீங்கள் இதற்குமேல் வரவேண்டாம். அவர் பசுப் போன்றவர். அவருடைய ஆன்மாவுக்குள்ளே அச்சம் குடிகொண்டிருக்கிறது. துணிச்சலோடு காரியத்தில் இறங்கமுடியாது அவரால்; குற்றத்தைக் கடிந்து அதை ஆண்மையோடு எதிர்க்கும் ஆற்றல் அவரிடம் கிடையாது. நாம் வரும் வழியில் கொண்ட ஆசை நிறைவேறலாம். எட்மன்ட், என்னுடைய மைத்துனரிடம் மீண்டும் போய் அவருடைய படைகளைத் திரட்டும்படி சொல்லுங்கள். என் வீட்டுக்காரியமோ என்றால், நூற்புக் கதிரை என் கணவன் கையில் கொடுத்துவிட்டு, நானே படைக்கலம் தாங்கி நிற்கவேண்டியதாக இருக்கிறது. இந்த வேலைக்காரன் நம்பிக்கையானவன்; இவன் நமக்கிடையில் தூது

A mistress's command. Wear this; spare speech;
Giving a favour
Decline your head : this kiss, if it durst speak,
Would stretch thy spirits up into the air :
Conceive, and fare thee well.

**EDMUND :** Yours in the ranks of death.

**GONERIL :** My most dear Gloucester!
Exit EDMUND

O, the difference of man and man!
To thee a woman's services are due :
My fool usurps my body.

**OSWALD :** Madam, here comes my lord.
Exit
Enter ALBANY

**GONERIL :** I have been worth the whistle.

**ALBANY :** O Goneril!
You are not worth the dust which the rude wind
Blows in your face. I fear your disposition :
That nature, which contemns its origin,
Cannot be border'd certain in itself;
She that herself will sliver and disbranch
From her material sap, perforce must wither
And come to deadly use.

**GONERIL :** No more; the text is foolish.





செல்வான். நீங்கள் துணிகரமாக வேலை செய்தால் உங்கள் நாயகியின் கட்டளை உங்கள் காதில் கேட்கும். இதை யேற்றுக் கொள்ளுங்கள். பேச்சு வேண்டாம். [முத்தம் கொடுத்துக்கொண்டு] தலையைச் சாயுங்கள்; இந்த முத்தம் பேசுமேயானால், அது உங்களுக்கு ஆர்வமூட்டி, உங்களை அந்தரத்தில் தூக்கி நிறுத்திவிடும். தெரிந்ததா? வணக்கம்.

**எட்ம:** செத்தாலும், உங்களோடு சாவேன்.

**கானெரில்:** அருமை க்ளாஸ்டர்.
[எட்மன்ட் போகிறான்]

ஓ, மனிதனுக்கு மனிதன் என்ன வேறுபாடு! ஒரு பெண்ணின் பணிவிடை உனக்கே உரியது. எனக்கு வாய்த்த முட்டாள் என் உடலை அனுபவிப்பதெல்லாம் வெறும் ஆக்கிரமிப்புதான்.

**ஆஸ்வா:** அம்மணி, இதோ வருகிறார் பிரபு.
[போகிறான்]
[ஆல்பனி வருகிறார்]

**கானெரில்:** நான் சீட்டியடித்துக் கூப்பிடுவதற்கு லாயக்குள்ளவளாகத் தானிருக்கிறேன்.

**ஆல்பனி:** ஓ, கானெரில், காற்று உன் மூஞ்சியிலடிக்கிறதே தூசி, அந்தத் தூசி கூடப் பெறமாட்டாய் நீ. உன்னுடைய குணத்தைப்பற்றி நினைக்கவே அஞ்சுகிறேன். தன்னுடைய மூலத்தையே பழிக்கும் பொருள் ஒரு வரம்புக்குள் அடங்கி நிற்காது. எவள் ஒருத்தி தான் கிளைத்து வந்த மரத்திலிருந்து பிய்த்துக்கொண்டு பிரிகிறாளோ, அவளுக்கு மரத்திலிருந்து கிடைக்கும் ஊட்டம் அற்று விடுகிறது. ஆகவே, அவள் வாடிச் சாகவேண்டியது தான்.

**கானெரில்:** போதும், போதும், முட்டாள் தனமான பாடமாயிருக்கிறது.

**ALBANY :** Wisdom and goodness to the vile seem vile :
Filths savour but themselves.
What have you done?
Tigers, not daughters, what have you perform'd?
A father, and a gracious aged man,
Whose reverence even the head-lugg'd bear would lick,
Most barbarous, most degenerate! have you madded.
Could my good brother suffer you to do it?
A man, a prince, by him so benefited!
If that the heavens do not their visible spirits
Send quickly down to tame these vile offences,
It will come,
Humanity must perforce prey on itself,
Like monsters of the deep.

**GONERIL :** Milk-liver'd man!
That bear'st a cheek for blows, a head for wrongs;
Who hast not in thy brows an eye discerning
Thine honour from thy suffering; that not know'st
Fools do those villains pity who are punish'd
Ere they have done their mischief.
Where's thy drum?
France spreads his banners in our noiseless land;
With plumed helm thy slayer begins threats;
Whiles thou, a moral fool, sit'st still, and criest
'Alack, why does he so?'

**ALBANY :** See thyself, devil!
Proper deformity seems not in the fiend
So horrid as in woman.

**ஆல்பனி:** விவேகமும், நன்மையும், கெட்டவர்க்குக் கெட்டவை. அழுக்குக்கு அழுக்கே ருசி. என்ன செய்தீர்கள் நீங்கள்? மக்களா நீங்கள்? புலிகள். என்ன காரியத்தைச் செய்து விட்டீர்கள்? ஒரு தகப்பனை? சால்புமிக்க ஒரு பெரியவரை? கூத்தாடிக் கரடி கூட அந்தப் பெரியவருக்கு இரங்கி அவரை நக்குமே! காட்டுமிராண்டித்தனம்! இழிதகைமை! உங்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா! நீங்கள் இப்படிச் செய்ததையும் என் தம்பி பார்த்துக் கொண்டிருந்தாரா? ஒரு ஆண்மகன், கோமகன், அவரால் பயனடைந்தவர்! இப்பேர்பட்ட காட்டுத்தனமான குற்றங்களை அடக்குவதற்கு, வான நாட்டிலிருந்து கண்கண்ட தெய்வங்கள் வரவேண்டும். வரவில்லையென்றால், மானுடம், கடல் மிருகங்களைப் போல, தன்னைத் தானே தின்னும் காலம் வந்துவிடும்.

**கானெரில்:** கோழை மனிதனே! அடிவாங்குவதற்காகவே, கன்னத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய் நீ; பழி சுமப்பதற்காகவே தலையென்று ஒன்றை வைத்துக் கொண்டிருக்கிறாய்; மானத்துக்கு அவமானத்துக்கும் வேற்றுமை தெரியாத கண் படைத்தவன் நீ. கயவர்கள் அவர்களுடைய கடமையைச் செய்து சாதிப்பதற்குள், தண்டிக்கப்படுகிறார்கள். இந்த கயவர்களுக்குப் பரிவு காட்டுகிறவன் முட்டாள் என்பதைக் கூட நீ அறியவில்லை:

எங்கே உன்னுடைய போர் முரசு? ஆரவாரமற்ற நம் நாட்டிலே ப்ரான்ஸ் மன்னன் தன் பாவட்டாவைப் பறக்கவிடுகிறான்; தலையிலே டம்பமான கவசம் பூண்டு அவன் உன்னுடைய நாட்டைப் பயமுறுத்துகிறான். நீயோ, முட்டாள்தனமாகச் சட்டம் பேசிக்கொண்டும், சும்மா உட்கார்ந்து கொண்டும், "ஐயோ, ஏன் அப்படிச் செய்கிறான்?" என்று கேட்டு அழுதுகொண்டும் இருக்கிறாய்?

**ஆல்பனி:** உன்னையே நீ பார் பேயே! பேய்த்தனம், பேயிடத்திலிருப்பதைக் காட்டிலும், பெண்ணிடத்திலிருக்கும்போது, பயங்கரமாயிருக்கிறது.

**GONERIL :** O vain fool!

**ALBANY :** Thou changed and self-cover'd thing, for shame,
Be-monster not thy feature. Were't my fitness
To let these hands obey my blood,
They are apt enough to dislocate and tear
Thy flesh and bones : howe'er thou art a fiend,
A woman's shape doth shield thee.

**GONERIL :** Marry, your manhood now--

Enter a Messenger

**ALBANY :** What news?

**Messenger :** O, my good lord, the Duke of Cornwall's dead :
Slain by his servant, going to put out
The other eye of Gloucester.

**ALBANY :** Gloucester's eye!

**Messenger :** A servant that he bred, thrill'd with remorse, Opposed against the act, bending his sword to his great master; who, thereat enraged, flew on him, and amongst them fell'd him dead; but not without that harmful stroke, which since hath pluck'd him after.

**ALBANY :** This shows you are above, you justicers, that these our nether crimes so speedily can venge! But, O poor Gloucester! Lost he his other eye?

**Messenger :** Both, both, my lord.

கானெரில், ஒ, தற்பெருமை கொண்ட முட்டாளே!

**ஆல்பனி:** குணம் மாறி, தன்னையே மறைத்துக் கொண்டிருப்பவளே, மானத்துக் கஞ்சியாவது நீ பேயுருவம் கொள்ளாமல் இரு. என் உணர்ச்சி சொல்வதை என் கைகள் நிறைவேற்றுவதாக இருந்தால், அவை உன்னைத் தசை வேறு, எலும்பு வேறாகப் பிய்த்திருக்கும். நீ பேயாக இருந்த போதிலும், ஒரு பெண்ணின் உருவம் கவசமாக இருந்து உன்னைக் காப்பாற்றுகிறது.

**கானெரில்:** இப்போது உன்னுடைய ஆண்மை

[ஒரு தூதன் வருகிறான்]

**தூதன்:** ஒ, பிரபு, கார்ன்வால் கோமகன் இறந்துபட்டார். க்ளாஸ்டருடைய இன்னொரு கண்ணை அவர் அவிக்கப் போனபோது, அவருடைய பணியாள் அவரைக் கொன்றான்.

**ஆல்பனி:** க்ளாஸ்டருடைய கண்கள்!

**தூதன்:** அவரால் வளர்க்கப்பட்ட வேலைக்காரன், இரக்கத்தால், அவரைத் தடுத்தான். அவனுடைய வாள் கொண்டு தன் எஜமானை நோக்கிச் சாடினான். இதைக் கண்ட எஜமான், கோப மேலீட்டால், அவன் மேல் பாய்ந்து, அவனைக் கொன்று வீழ்த்தினார். அப்போது ஏற்பட்ட காயம் அவருடைய உயிரையும் பறித்து விட்டது.

**ஆல்பனி:** நீதிபதிகளே, கீழே நடக்கும் குற்றங்களை இவ்வளவு விரைவில் தண்டிப்பதற்கு, நீங்கள் மேலே இருக்கிறீர்கள் என்று இதிலிருந்து தெரிகிறது. ஆனால், ஒ, ஏழை க்ளாஸ்டர்! மிஞ் சியிருக்கும் கண்ணையும் அவர் இழந்தாரா?

**தூதன் :** இரண்டையும், பிரபு, இரண்டையும்

This letter, madam, craves a speedy answer;
'Tis from your sister.

**GONERIL :** [Aside] One way I like this well;
But being widow, and my Gloucester with her,
May all the building in my fancy pluck
Upon my hateful life : another way,
The news is not so tart.
I'll read, and answer.
Exit

**ALBANY :** Where was his son when they did take his eyes?

**Messenger :** Come with my lady hither.

**ALBANY :** He is not here.

**Messenger :** No, my good lord;
I met him back again.

**ALBANY :** Knows he the wickedness?

**Messenger :** Ay, my good lord; 'twas he inform'd against him;
And quit the house on purpose, that their punishment
Might have the freer course.

**ALBANY :** Gloucester, I live
To thank thee for the love thou show'dst the king,
And to revenge thine eyes. Come hither, friend :
Tell me what more thou know'st.
Exeunt





அம்மணி, இந்தக் கடிதத்துக்கு பதில் உடனே வேண்டுமாம்; இது உங்கள் சகோதரியிடமிருந்து வந்திருக்கிறது.

**கானெரில்:** [தனக்குள்] ஒரு வகையில் இது விரும்பத்தக்கது தான். ஆனால், அவள் விதவையாகி, அவள் அருகில் என் க்ளாஸ்டரும் இருப்பதால் ஒருக்கால் என் கற்பனைக்கோட்டை தகர்ந்து, என் வாழ்வில் வேதனை ஏற்படலாம். இன்னொரு வகையில் பார்த்தாலும், இச்செய்தி அவ்வளவு கசப்பானது என்று சொல்ல முடியாது.
நான் படித்து, பதில் அனுப்புகிறேன்.
[போகிறாள்]

**ஆல்பனி:** அவருடைய கண்களைப் பிடுங்கும் போது அவர் மகன் எங்கிருந்தான்?

**தூதன்:** நமது அம்மணியோடு இங்கு வந்து விட்டார்.

**ஆல்பனி:** அவன் இங்கில்லையே.

**தூதன்:** இல்லை, பிரபு; இங்கு அவரை மீண்டும் சந்தித்தேனே.

**ஆல்பனி:** இந்த அக்கிரமத்தைப் பற்றி அவனுக்குத் தெரியுமா?

**தூதன்:** ஆம், பிரபு. அவர்தான் தந்தைக்கு விரோதமான தகவலைச் சொன்னவர். தண்டிக்கும்போது இடையூறாக இருக்க வேண்டாம் என்றே, வீட்டை விட்டுக் கிளம்பிப் போய்விட்டார்.

**ஆல்பனி:** க்ளாஸ்டர், அரசரிடம் நீர் காட்டிய அன்புக்கு நன்றி செலுத்தவும், உம் கண்களுக்கு ஏற்பட்ட பழிக்குப் பழி வாங்கவும் நான் உயிரோடிருக்கிறேன். இங்கு வா, அப்பா, உனக்குத் தெரிந்ததையெல்லாம் எனக்குச் சொல்லு.

[போகிறார்கள்]

## SCENE III.

The French camp near Dover.
Enter KENT and a Gentleman

**KENT :** Why the King of France is so suddenly gone back know you the reason?

**Gentleman :** Something he left imperfect in the state, which since his coming forth is thought of; which imports to the kingdom so much fear and danger, that his personal return was most required and necessary.

**KENT :** Who hath he left behind him general?

**Gentleman :** The Marshal of France, Monsieur La Far.

**KENT :** Did your letters pierce the queen to any demonstration of grief?

**Gentleman :** Ay, sir; she took them, read them in my presence;
And now and then an ample tear trill'd down
Her delicate cheek : it seem'd she was a queen
Over her passion; who, most rebel-like,
Sought to be king o'er her.

**KENT :** O, then it moved her.

**Gentleman :** Not to a rage : patience and sorrow strove
Who should express her goodliest.



## காட்சி 3

டோவருக்கு அருகே ப்ரெஞ்ச் பாசறை
[கென்ட்டும், ஒரு கனவானும் வருகிறார்கள்]

**கென்ட்:** ப்ரெஞ்ச் மன்னர் இப்படி ஏன் திடீர் என்று போய்விட்டார்? என்ன காரணம் என்று தெரியுமா?

**கனவான்:** இங்கு புறப்பட்டு வந்தபோது, அவர் நாட்டிலே எதையோ அரைகுறையாக வைத்து விட்டு வந்திருக்கிறார். வந்த பிறகு, அதை நினைத்துப் பார்க்கையில், அதனால் தன் நாட்டுக்கு அச்சமும் அபாயமும் விளையலாம் என்று கருதி, அவரே நேரில் கவனிப்பதற்காகப் போயிருக்கிறார்.

**கென்ட்:** தளகர்த்தராக இங்கே யாரை விட்டு விட்டுப் போயிருக்கிறார்?

**கனவான்:** ப்ரெஞ்ச் தளபதி முஸியர் லா பார்.

**கென்ட்:** நீர் கொடுத்த கடிதங்களைப் படித்த பிறகு, அரசி தன் சோகத்தை வெளிக் காட்டினாளா?

**கனவான்:** ஆம், ஐயா, அவற்றை அவள் வாங்கி என் முன்னிலையில் படித்தாள்; படிக்கும்போது அவள் மென்மையான கன்னத்தின் வழியே, ஒரு வளமான கண்ணீர்த்துளி அடிக்கடி உருண்டு வடியும். பார்க்கும்போது, அவள் தன் உணர்ச்சிக்கு அரசியாக இருந்தாள். ஆனால், அவள் உணர்ச்சியோ, கலகக்காரனைப்போல் கட்டு மீறி, அவளுக்கு அரசனாக இருக்க முனைந்தது.

**கென்ட்:** ஒ, அப்படியானால் அது அவளை உருக்கியிருக்கிறது.

**கனவான்:** அவள் சீற்றங்கொள்ளவில்லை. அவளுடைய குண அழகை எடுத்துக் காட்டும் முயற்சியிலே பொறுமையும் சோகமும் போட்டி போட்டன. வெயிலும் மழையும் ஏக காலத்தில் அடிப்பதை

You have seen Sunshine and rain at once :
her smiles and tears were like a better way :
those happy smilets, that play'd on her ripe lip,
seem'd not to know
What guests were in her eyes; which parted thence,
As pearls from diamonds dropp'd. In brief,
Sorrow would be a rarity most beloved,
If all could so become it.

**KENT :** Made she no verbal question?

**Gentleman :** 'Faith, once or twice
she heaved the name of 'father'
Pantingly forth, as if it press'd her heart :
Cried 'Sisters! sisters! Shame of ladies! sisters!
Kent! father! sisters! What, i' the storm? i' the night?
Let pity not be believed!' There she shook
The holy water from her heavenly eyes,
And clamour moisten'd : then away she started
To deal with grief alone.

**KENT :** It is the stars,
The stars above us, govern our conditions;
Else one self mate and mate could not beget
Such different issues.
You spoke not with her since?

**Gentleman :** No.

**KENT :** Was this before the king return'd?

**Gentleman :** No, since.







நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவளுடைய புன்முறுவலும் கண்ணீரும் அப்படியிருந்தன, இல்லை, அதைக் காட்டிலும் அழகாயிருந்தன. வைரங்களிலிருந்து முத்துக்கள் உதிர்ந்தது போல், அவள் கண்களிலிருந்து கண்ணீர் உதிர்ந்தது. கண்களில் தங்கிருக்கும் விருந்தாளிகளை அறியாமல், அவளுடைய சிவந்த உதட்டிலே குறுமுறுவல்கள் களிப்போடு விளையாடிக் கொண்டிருந்தன. சுருங்கச் சொன்னால், தக்கவர்கள் துயரத்தை அனுபவிக்கும்போது, துயரத்துக்கே ஒரு அபூர்வமான பொலிவு ஏற்பட்டு விடுகிறது; விரும்பத்தக்க அரிய பொருளாகி விடுகிறது துயரம்.

**கென்ட்:** அவள் வாய்திறந்து ஒன்றும் கேட்க வில்லையா?

**கனவான்:** இரண்டொரு தரம் திக்குமுக்காடிக் கொண்டு, "அப்பா" என்று சொல்லி அவள் பெருமூச்செறிந்தாள். அப்படிச் சொல்லும்போது, அவளுக்கு மாரடைத்தது போல இருந்தது. "அக்காளுகளாம், அக்காளுகள்! பெண்ணினத்துக்கே அவமானம்! அக்காளுகள்! கென்ட்! அப்பா! அக்காள்கள்! என்ன புயலிலா! இரவிலா! இரக்கம் என்று ஒரு பொருள் இல்லையோ?" என்று கத்தினாள். பிறகு, அவளுடைய தெய்வீகக் கண்களிலிருந்து பொங்கிய புனித நீரைச் சிதறினாள். மறுபடியும் கண்ணீர் துளித்தது; அதன்பின், அவள் புடை பெயர்ந்து, தனியாளாகச் சோகத்தில் ஆழ்ந்தாள்.

**கென்ட்:** நம்முடைய பண்புகளை அடக்கி ஆள்வது கிரகங்கள் என்றே தெரிகிறது. இல்லையென்றால், ஒரே கணவனும் மனைவியும் இப்படி ஒவ்வாத மக்களைப் பெறுவார்களா! அதற்குப்பின் நீர் அவளோடு பேசவில்லையா?

**கானவான்:** இல்லை.

**கென்ட்:** இதெல்லாம் மன்னன் திரும்பிப் போவதற்கு முன்பா?

**கனவான்:** இல்லை, திரும்பியபின்.

**KENT :** Well, sir, the poor distressed Lear's i' the town;
Who sometime, in his better tune, remembers
What we are come about, and by no means
Will yield to see his daughter.

**Gentleman :** Why, good sir?

**KENT :** A sovereign shame so elbows him :
his own unkindness,
That stripp'd her from his benediction, turn'd her
To foreign casualties, gave her dear rights
To his dog-hearted daughters, these things sting
His mind so venomously, that burning shame
Detains him from Cordelia.

**Gentleman :** Alack, poor gentleman!

**KENT :** Of Albany's and Cornwall's
powers you heard not?

**Gentleman :** 'Tis so, they are afoot.

**KENT :** Well, sir, I'll bring you to our master Lear,
And leave you to attend him : some dear cause
Will in concealment wrap me up awhile;
When I am known aright, you shall not grieve
Lending me this acquaintance. I pray you, go
Along with me.

Exeunt

**கென்ட்:** நல்லது, சோகத்தால் மொத்துண்ட ஏழை லீயர் நகரத்திலிருக்கிறார். மனம் சரியாக இருக்கும்போது, சில வேளைகளில், நாம் எதற்காக இங்கு வந்தோம் என்ற நினைப்பு அவருக்கு வருகிறது. அந்தச் சமயங்களில், தன் மகளைப் பார்க்கச் சம்மதிக்க மாட்டேன் என்கிறார்.

**கனவான்:** ஏன், ஐயா?

**கென்ட்:** ஒரு ராஜ அவமானம் அவரை ஆட்டி வைக்கிறது. அவருடைய அன்பின்மையால் அவள் உடைமையிழந்தாள், அயல்நாட்டில் இடர்ப்பட்டாள், அவளுடைய உரிமைகள் பறிபோயின; அவருடைய நாய்நெஞ்சப் புதல்வியருக்கு அவ்வுரிமைகளை அவர் நல்கினார். இந்நிகழ்ச்சிகள் எல்லாம் அவரது உள்ளத்தை விஷம் கொண்டு கொட்டுகின்றன. எரிச்சலைக் கொடுக்கும் அவமானம் கார்டீலியாவைப் பார்க்க வொட்டாமல் அவரைத் தடுகிறது.

**கனவான்:** ஐயோ, பாவம், எளியவர் அவர்.

**கென்ட்:** ஆல்பனி, கார்ன்வால், இருவருடைய படைகளைப் பற்றியும் கேள்விப்பட்டீரா?

**கனவான்:** அவை வந்து கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான்.

**கென்ட்:** நல்லது, ஐயா, உங்களை எங்கள் எஜமானர் லீயரிடம் அழைத்துச் செல்லுகிறேன். நீங்கள் அவரைக் கவனித்துக் கொள்ளுங்கள். ஒரு முக்கிய காரணத்துக்காகக் கொஞ்ச காலம் நான் மறைவாக இருக்க வேண்டியிருக்கிறது. நான் யார் என்று தெரிந்த பிறகு நீங்கள் எனக்குச் செய்யும் உதவிக்காக வருந்தமாட்டீர்கள். தயவுசெய்து என்னோடு வாருங்கள்.

[போகிறார்கள்]

## SCENE IV.

The same. A tent.
Enter, with drum and colours, CORDELIA,
Doctor, and Soldiers

**CORDELIA :** Alack, 'tis he : why, he was met even now
As mad as the vex'd sea; singing aloud;
Crown'd with rank fumiter and furrow-weeds,
With bur-docks, hemlock, nettles, cuckoo-flowers,
Darnel, and all the idle weeds that grow
In our sustaining corn. A century send forth;
Search every acre in the high-grown field,
And bring him to our eye.

Exit an Officer

What can man's wisdom
In the restoring his bereaved sense?
He that helps him take all my outward worth.

**Doctor :** There is means, madam :
Our foster-nurse of nature is repose,
The which he lacks; that to provoke in him,
Are many simples operative, whose power
Will close the eye of anguish.

**CORDELIA :** All blest secrets,
All you unpublish'd virtues of the earth,
Spring with my tears! be aidant and remediate
In the good man's distress! Seek, seek for him;
Lest his ungovern'd rage dissolve the life

## காட்சி 4

அதே இடம், ஒரு கூடாரம்
[முரசு, கொடிகளோடு, கார்டீலியா, மருத்துவர்,
படை வீரர்கள் வருகிறார்கள்]

**கார்டீலியா:** ஐயோ, அவர்தான் அது. கொஞ்ச நேரத்துக்கு முன்தான் அவரைச் சந்தித்திருக்கிறார்கள், கொந்தளிக்கும் கடலைப் பாலப் பித்தேறியிருக்கிறார், இரைந்து பாடுகிறார். கசந்த ப்யூமிட்டரி பூக்களையும், கழனித் தழைகளையும், நெருஞ் சில் முட்களையும், நச்சுக் கொடிகளையும், ஒட்டுப் புற்களையும், குக்கூக் கொடிகளையும், டார்னெல் பூண்டுகளையும், நமது கோதுமை வயல்களிலே, வளரும் விருதாக் களைகளையும் தலையிலே கிரீடமாக அணிந்திருக்கிறார்நூறு பேரை உடனே அனுப்பி, சாலி நிலக்காணி ஒவ்வொன்றிரும் தேடிக்கண்டுபிடித்து அவரை என் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துங்கள்.
[ஒரு வீரன் செல்கிறான்]

செத்துப்போன அறிவை உயிர்ப்பிப்பதற்கு மனித விவேகத்தால் என்ன செய்ய முடியும்? அவரை குணப்படுத்துகிறவன் என் புற உடைமையை யெல்லாம் எடுத்துக் கொள்ளட்டும்.

**மருத்துவர்:** அதற்கு வழியிருக்கிறது, அம்மணி; ஓய்வே இயற்கையின் செவிலித்தாய், ஓய்வுதான் அவருக்குத் தேவையானது. ஓய்வு கொடுக்கும் பல மூலிகைகளிருக்கின்றன. அவருக்கு அவைகளைக் கொடுத்தால், துன்புற்ற அவரது கண்கள் தூக்கத்தால் கூம்பிவிடும்.

**கார்டீலியா:** என் கண்ணீரின் ஆற்றலால், புனிதமான எல்லா மர்மங்களும், இன்னும் வெளிவராத மண்ணுலக மருந்துகளும் வெளிவரட்டும்! அவை அந்த நல்லவருக்கு உதவி செய்து அவருடைய நோயைக் குணப்படுத்தட்டும்! தேடுங்கள்; அடங்காச் சீற்றத்தால் அவர் வாழ்வு பாழாவதற்குமுன், வாழும் வகையின்மையால் அவர் வாழ்க்கை கரைந்து போவதற்குமுன்,

That wants the means to lead it.

Enter a Messenger

**Messenger :** News, madam;
The British powers are marching hitherward.

**CORDELIA** : 'Tis known before; our preparation stands
In expectation of them. O dear father,
It is thy business that I go about;
Therefore great France
My mourning and important tears hath pitied.
No blown ambition doth our arms incite,
But love, dear love, and our aged father's right :
Soon may I hear and see him!

Exeunt

## SCENE V.

Gloucester's castle.
Enter REGAN and OSWALD

**REGAN :** But are my brother's powers set forth?

**OSWALD :** Ay, madam.

**REGAN :** Himself in person there?

**OSWALD :** Madam, with much ado :
Your sister is the better soldier.







அவரைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.

[ஒரு தூதன் வருகிறான்]

**தூதன்:** ஒரு செய்தி, அம்மணி, பிரிட்டிஷ் படைகள் இங்கே முன்னேறி வருகின்றன.

**கார்டீலியா:** முன்னமே தெரிந்ததுதானே. அதை எதிர்பார்த்து நாம் தயாராயிருக்கிறோம்.
ஓ, அன்புத் தந்தையே, உம்முடைய காரியத்துக்காகத் தான் நான் இவ்வாறு அலைகிறேன்; என் துயரத்தையும், மன்றாடிக் கெஞ்சும் என் கண்ணீரையும் கண்டு, மேன்மைமிக்க ப்ரான்ஸ் என்னிடம் இரக்கம் கொண்டிருக்கிறார். பேராசைக் கொழுப்பிலே நாங்கள் படையெடுக்கவில்லை. ஆனால், அன்புக்காக, அன்பின் மிகுதியினால், எங்கள் முதிய தந்தையின் உரிமைக்காக, எங்கள் படை திரண்டு நிற்கிறது. விரைவில் அவரைப் பார்க்க வேண்டுமே, அவர் குரலைக் கேட்டவேண்டுமே!

[போகிறார்கள்]

## காட்சி 5

க்ளாஸ்டர் அரண்மனையில் ஒரு அறை
[ரீகனும் ஆஸ்வால்டும் வருகிறார்கள்]

**ரீகன்:** என்னுடைய மைத்துனரின் படைகள் புறப்பட்டு விட்டனவா?

**ஆஸ்வா:** ஆம், அம்மணி.

**ரீகன்:** படைகளோடு அவரும் வருகிறாரா?

**ஆஸ்வா:** வேண்டா வெறுப்பாக வருகிறார். வீரத்தில் உங்கள் தமக்கை தான் சிறந்தவர்.

**REGAN :** Lord Edmund spake not with your lord at home?

**OSWALD :** No, madam.

**REGAN :** What might import my sister's letter to him?

**OSWALD :** I know not, lady.

**REGAN :** 'Faith, he is posted hence on serious matter.
It was great ignorance,
Gloucester's eyes being out,
To let him live : where he arrives he moves
All hearts against us : Edmund, I think, is gone,
In pity of his misery, to dispatch
His nighted life : moreover, to descry
The strength o' the enemy.

**OSWALD :** I must needs after him, madam, with my letter.

**REGAN** : Our troops set forth to-morrow :
stay with us;
The ways are dangerous.

**OSWALD :** I may not, madam :
My lady charged my duty in this business.

**REGAN** : Why should she write to Edmund?
Might not you transport her purposes by word?
Belike, Something--I know not what :
I'll love thee much,
Let me unseal the letter.

**ரீகன்:** எட்மன்ட் பிரபு உங்கள் கோமகனோடு வீட்டில் பேசவில்லையா?

**ஆஸ்வா:** இல்லை, அம்மணி.

**ரீகன்:** அவருக்கு என் தமக்கையெழுதிய கடிதத்தில் என்ன இருந்ததோ?

**ஆஸ்வா:** தெரியாது; அம்மணி.

**ரீகன்:** அவர் முக்கிய காரியமாகப் போயிருக்கிறார். கண்கள் போன பிறகு க்ளாஸ்டரை உயிரோடு விட்டு வைப்பது அறியாமை. அவர் எங்கு போனாலும், அங்குள்ளவர்களுடைய உள்ளத்தை இளக்கி, நமக்கு விரோதமாகத் திருப்பிவிடுகிறார். அவருடைய துன்பத்துக்கிரங்கி, அவருடைய இருண்டுபோன வாழ்க்கையை ஒழிப்பதற்காக எட்மன்ட் போயிருக்கிறார் என்று நினைக்கிறேன். அதோடு, எதிரிகளுடைய படை வலிமையை வேவு பார்க்கப் போயிருக்கலாம்.

**ஆஸ்வா:** என் கடிதத்தை அவரிடம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும், அம்மணி.

**ரீகன்:** நாளை நம்முடைய படை புறப்படுகிறது. எங்களோடு தங்கியிரு. போகும் வழியெல்லாம் அபாயமானது.

**ஆஸ்வா:** தங்குவதற்கில்லை, அம்மணி. இந்தக் காரியத்தில் என் எஜமானியிட்ட கட்டளையை நிறைவேற்ற வேண்டும்.

**ரீகன்:** அவள் எட்மன்டுக்கு ஏன் எழுதவேண்டும்? அவள் நோக்கத்தை நீயே வாய்ச் சொல்லால் அவரிடம் தெரிவிக்கக் கூடாதா? ஏதோ ஒரு குட்டு இருக்கிறது, அது என்னவென்று தெரியவில்லை. கடிதத்தைத் திறந்து காட்டு.உனக்கு மிக்க அன்பு செலுத்துவேன்.

**OSWALD :** Madam, I had rather--

**REGAN** : I know your lady does not love her husband;
I am sure of that : and at her late being here
She gave strange oeillades and most speaking looks
To noble Edmund. I know you are of her bosom.

**OSWALD** : I, madam?

**REGAN :** I speak in understanding; you are; I know't :
Therefore I do advise you, take this note :
My lord is dead; Edmund and I have talk'd;
And more convenient is he for my hand
Than for your lady's : you may gather more.
If you do find him, pray you, give him this;
And when your mistress hears thus much from you,
I pray, desire her call her wisdom to her.
So, fare you well.
If you do chance to hear of that blind traitor,
Preferment falls on him that cuts him off.

**OSWALD** : Would I could meet him,
madam! I should show what party I do follow.

**REGAN :** Fare thee well.

Exeunt







**ஆஸ்வா:** அம்மணி, அதைவிட

**ரீகன்:** கணவனிடம் அன்பில்லாதவள் உன் எஜமானி. அது எனக்குத் தெரியும், நிச்சயமாகத் தெரியும். சமீபத்தில் அங்கு வந்திருந்தபோது, பெருந்தகை எட்மன்டைப் பார்த்துக் கண் அடித்தாள். பேசும் விழிகளாலே, நவம் நவமான பார்வைகள் பார்த்தாள். நீ அவளுடைய நம்பிக்கைக்குப் பாத்திரப்பட்டவன் என்றும் தெரியும்.

**ஆஸ்வா:** நானா, அம்மணி?

**ரீகன்:** ஆம் தெரிந்துதான் சொல்லுகிறேன். எனக்குத் தெரியும். ஆகையால், என் சொற்படி, இந்தக் கடிதத்தை எடுத்துக் கொள். என்னுடைய கணவர் இறந்துவிட்டார். எட்மன்டும் நானும் இதுபற்றிப் பேசிக் கொண்டோம். உன் எஜமானியைக் காட்டிலும் எனக்கே ஏற்றவர் அவர். உனக்கு இன்னும் பல விஷயங்கள் தெரியலாம். அவரைக் கண்டால், எனக்காக, இதை அவரிடம் கொடு. இதைப் பற்றி உன் எஜமானி ஏதாவது கேட்டால், எட்மன்டை அறவே மறந்துவிட வேண்டும் என்று சொல். இனி, நீ போகலாம். அந்தக் குருட்டுத் துரோகியைப்பற்றி நீ கேள்விப்பட்டால், அவனைத் தீர்த்துக் கட்டுகிறவனுக்குப் பரிசு கிடைக்கும் என்று சொல்.

**ஆஸ்வா:** அவரைச் சந்திக்க மாத்திரம் முடிந்ததானால், நான் எந்தக் கட்சியைச் சேர்ந்தவன் என்று காட்டாமலா இருப்பேன்!

**ரீகன்:** போய் வா.

[போகிறார்கள்]

## SCENE VI.

Fields near Dover.
Enter GLOUCESTER, and EDGAR dressed like a peasant

**GLOUCESTER :** When shall we come to the top of that same hill?

**EDGAR :** You do climb up it now : look, how we labour.

**GLOUCESTER :** Methinks the ground is even.

**EDGAR :** Horrible steep.
Hark, do you hear the sea?

**GLOUCESTER :** No, truly.

**EDGAR :** Why, then, your other senses grow imperfect
By your eyes' anguish.

**GLOUCESTER :** So may it be, indeed :
Methinks thy voice is alter'd; and thou speak'st
In better phrase and matter than thou didst.

**EDGAR :** You're much deceived : in nothing am I changed
But in my garments.

**GLOUCESTER :** Methinks you're better spoken.

**EDGAR :** Come on, sir; here's the place : stand still.
How fearful and dizzy 'tis,
to cast one's eyes so low!



## காட்சி 6

டோவருக்கு அருகேயுள்ள நாட்டுப்புறம்

**க்ளாஸ்:** அந்த மலையின் உச்சிக்கு நான் எப்போது வரப் போகிறேன்?

**எட்கார்:** நீங்கள் அந்த மலைமேல் தான் ஏறிக் கொண்டிருக்கிறீர்கள். பாருங்கள், எப்படிக் கஷ்டப்படுகிறோம் என்று.

**க்ளாஸ்:** சமபூமி போலிருக்கிறதே.

**எட்கார்:** கடுமையான ஏற்றம், கவனியுங்கள், கடல் ஒலி கேட்கவில்லையா?

**க்ளாஸ்:** உண்மையாக, இல்லை.

**எட்கார்:** அப்படியானால், உங்கள் கண் வலியினால் மற்றப் புலன்களும் மங்கிப் போயிருக்கவேண்டும்.

**க்ளாஸ்:** அப்படியும் இருக்கலாம்; உன்னுடைய குரல் மாறிவிட்டது போல் தெரிகிறதே. உன்னுடைய சொல்லிலும் பொருளிலும் திருத்தம் ஏற்பட்டிருக்கிறதே.

**எட்கார்:** நீங்கள் ஏமாந்து போனீர்கள். உடையைத் தவிர ஒரு மாறுதலும் எனக்கில்லை.

**க்ளாஸ்:** உன் பேச்சு திருந்தியிருக்கிறது.

**எட்கார்:** வாருங்கள், ஐயா. இதுதான் அந்த இடம். அலுங்காமல் நில்லுங்கள். இந்தப் பாதாளத்தைப் பார்க்கும்போது, எப்படித் தலை சுற்றுகிறது! எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! காக்கைகளும், செங்கால் பறவைகளும், அந்தரத்திலே சிறகடிக்கும் போது, சிறு வண்டுகளைப்போல் காட்சியளிக்கின்றன. கீழே,

The crows and choughs that wing the midway air
Show scarce so gross as beetles : half way down
Hangs one that gathers samphire, dreadful trade!
Methinks he seems no bigger than his head :
The fishermen, that walk upon the beach,
Appear like mice; and yond tall anchoring bark,
Diminish'd to her cock; her cock, a buoy
Almost too small for sight : the murmuring surge,
That on the unnumber'd idle pebbles chafes,
Cannot be heard so high. I'll look no more;
Lest my brain turn, and the deficient sight
Topple down headlong.

**GLOUCESTER :** Set me where you stand.



**EDGAR :** Give me your hand : you are now within a foot
Of the extreme verge : for all beneath the moon
Would I not leap upright.

**GLOUCESTER :** Let go my hand.
Here, friend, 's another purse; in it a jewel
Well worth a poor man's taking : fairies and gods
Prosper it with thee! Go thou farther off;
Bid me farewell, and let me hear thee going.

**EDGAR :** Now fare you well, good sir.

**GLOUCESTER :** With all my heart.

**EDGAR :** Why I do trifle thus with his despair
Is done to cure it.





பாதி தூரத்தில், சாம்பயர் பூண்டுகளைச் சேகரிப்பவன் தொங்கிக் கொண்டிருக்கிறான்; பயங்கரமான தொழில் இது! அவனுடைய உடலின் பருமன் தலையளவுகூட இல்லையென்று தோன்றுகிறது. கடற்கரையில் நடந்து செல்லும் செம்படவர்கள் சுண்டெலிகளைப் போல் தோன்றுகிறார்கள். அதோ, நங்கூரம் போட்டு நிற்கும் அந்த உயரமான கப்பல், சிறு தோணியாகக் குறுகி விட்டது. அதில் இருக்கும் சிறு தோணியோ, காட்சிக்கு அரிய தெப்பக் கட்டையாகச் சிறுத்துவிட்டது. எண்ணற்ற கூழாங்கற்களிலே சாடி முணுமுணுக்கும் அலையோசையை இந்த உயரத்திலிருந்து கேட்கமுடியவில்லை. இனி, நான் பார்க்கமாட்டேன். பார்த்தால், தலைசுற்றி, பார்வை மங்கித் தலைகீழாக விழுந்து விடுவேன்.

**க்ளாஸ்:** நீ நிற்குமிடத்தில் என்னை நிறுத்து.



**எட்கார்:** உங்கள் கையைக் கொடுங்கள். கடைசி விளிம்புக்கு ஒரு அடிக்குள் நீங்கள் இப்போது நிற்கிறீர்கள். சந்திரனுக்கு அடியிலுள்ள எந்தப் பொருளைக் கொடுத்தாலும், நான் துணிச்சலோடு இந்த இடத்திலிருந்து குதிக்க மாட்டேன்.

**க்ளாஸ்:** என் கையை விடு. நண்பனே, இதோ இன்னொரு பணப்பை. அதில் ஒரு நகையிருக்கிறது; ஏழைக்கு உதவும் நகை அது. வானவர்கள் உனக்கு ஆக்கம் அளிக்கட்டும்! இன்னும் தூரத்தில் போய்விடு. என்னிடம் விடை பெற்றுக் கொள். நீ போகும் சப்தத்தை நான் கேட்கவேண்டும்.

**எட்கார்:** அன்பார்ந்த ஐயா, நான் போய் வருகிறேன்.

**க்ளாஸ்:** மனமார உன்னை வாழ்த்துகிறேன்.

**எட்கார்:** [தனக்குள்] அவருடைய துயரத்தோடு நான் விளையாடுவதற்குக் காரணம், அதைக் குணப்படுத்துவதற்காகவே.

**GLOUCESTER :** [Kneeling] O you mighty gods!
This world I do renounce, and, in your sights,
Shake patiently my great affliction off :
If I could bear it longer, and not fall
To quarrel with your great opposeless wills,
My snuff and loathed part of nature should
Burn itself out. If Edgar live, O, bless him!
Now, fellow, fare thee well.

He falls forward

**EDGAR** : Gone, sir : farewell.
And yet I know not how conceit may rob
The treasury of life, when life itself
Yields to the theft :
had he been where he thought,
By this, had thought been past.
Alive or dead?
Ho, you sir! friend! Hear you, sir! speak!
Thus might he pass indeed : yet he revives.
What are you, sir?

**GLOUCESTER** : Away, and let me die.

**EDGAR** : Hadst thou been aught but gossamer, feathers, air,
So many fathom down precipitating,
Thou'dst shiver'd like an egg :
but thou dost breathe;
Hast heavy substance; bleed'st not; speak'st; art sound.
Ten masts at each make not the altitude
Which thou hast perpendicularly fell :

**க்ளாஸ்:** [மண்டி போடுகிறார்] ஓ! ஆற்றல் மிக்க தெய்வங்காள்! இந்த உலகத்தை நான் துறக்கிறேன். உங்கள் முன் என் மாபெருந்த துன்பத்தைப் பொறுமையோடு கழற்றி எறிகிறேன். எதிர்க்க முடியாத உங்கள் பேராற்றலை எதிர்த்து, இதைப் பொறுத்துக் கொண்டிருக்க நான் முயன்றாலும், எரிந்து போன என் அம்சமே என்னை எரித்துத் தீர்த்திருக்கும். எட்கார் உயிரோடிருந்தால், அவனை ஆசீர்வதியுங்கள்! பயலே, நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.

**எட்கார்:** போய்விட்டேன், ஐயா, வணக்கம்.
[அவர் கீழே விழுகிறார்]
[தனக்குள்] உயிரை விடத் தயாராயிருப்பவருக்கு, அவர் கற்பனையே அவரது உயிரைக் கவரும் கள்வனாக அமையும். அவர் இருப்பதாக நினைக்கும் இடத்தில் அவர் இருந்ததிருந்தால், இதற்குள்ளாக நினைவு அற்றுப்போயிருக்கும். பிழைத்தாரா, செத்தாரா?
ஓ, ஐயா, நண்பரே, காது கேட்கிறதா, ஐயா? பேசுங்கள்!
[தனக்குள்] இந்நிலையிலேயே இவர் உயிர் போனாலும் போய்விடலாம். ஆனாலும் அவருக்கு உணர்வு மறுபடியும் வருகிறது
ஐயா, நீங்கள் யார்?

**க்ளாஸ்:** போய் விடு, என்னைச் சாக விடு.

**எட்கார்:** இத்தனை உயரத்திலிருந்து கீழே விழுந்தீர்களே, சிதறிப் போகாமல் இருக்கிறீர்களே, சிலந்திக் கூடாகவோ, இறகாகவோ, காற்றாகவோ நீங்கள் இருந்திருந்தாலும், முட்டை சிதறியது போல், சிதறியிருப்பீர்கள். ஆனால், நீங்களோ, மூச்சு விடுகிறீர்கள்; கனமுள்ள பொருளாயிருக்கிறீர்கள்; உடலிலிருந்து ரத்தம் வரவில்லை, பேசுகிறீர்கள், உருப்படியாக இருக்கிறீர்கள். செங்குத்தாக விழுந்தீர்களே, எவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தீர்கள், தெரியுமா! பத்துப் பாய் மரங்களை ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கினாலும், அந்த உயரம் வராது. நீங்கள்

Thy life's a miracle. Speak yet again.

**GLOUCESTER** : But have I fall'n, or no?

**EDGAR** : From the dread summit of this chalky bourn.
Look up a-height; the shrill-gorged lark so far
Cannot be seen or heard : do but look up.

**GLOUCESTER** : Alack, I have no eyes.
Is wretchedness deprived that benefit,
To end itself by death? 'Twas yet some comfort,
When misery could beguile the tyrant's rage,
And frustrate his proud will.

**EDGAR** : Give me your arm :
Up : so. How is 't?
Feel you your legs? You stand.

**GLOUCESTER** : Too well, too well.

**EDGAR** : This is above all strangeness.
Upon the crown o' the cliff, what thing was that
Which parted from you?

**GLOUCESTER** : A poor unfortunate beggar.

**EDGAR** : As I stood here below, methought his eyes
Were two full moons; he had a thousand noses,
Horns whelk'd and waved like the enridged sea :
It was some fiend; therefore, thou happy father,
Think that the clearest gods, who make them honours

உயிரோடிருப்பது ஒரு அற்புதம். மறுமுறை பேசுங்கள்.

**க்ளாஸ்:** ஆனால், நான் உண்மையில் விழுந்தேனா, இல்லையா?

**எட்கார்:** இந்தச் சுண்ணாம்பு மலையின் பயங்கர உச்சியிலிருந்து! அண்ணாந்து பாருங்கள் உயரத்தை; உச்சஸ்தாயியில் பாடும் வானம்பாடியை, இங்கிருந்து பார்க்கவும் முடியாது, கேட்கவும் முடியாது. அவ்வளவு உயரம்! அண்ணாந்துதான் பாருங்களேன்.

**க்ளாஸ்:** ஐயோ, எனக்குக் கண்ணில்லை. தன்னுயிரைத் தானே மாய்த்துக் கொள்ளும் வசதி கூட ஒரு அபலைக்கு இல்லையா? இல்லையென்றாலும், இதிலிருந்து கொஞ்சம் ஆறுதலும் கிடைக்கிறது. கொடுங்கோலனது சினத்தையும், செருக்கையும் ஒரு அபலை தப்ப முடியும் என்ற ஆறுதல்.

**எட்கார்:** உங்கள் கையைக் கொடுங்கள்: எழுந்து நில்லுங்கள், அப்படித்தான்.
நிற்கிறீர்களே, கால் பாவுகிறதா?

**க்ளாஸ்:** ரொம்ப நன்றாக, ரொம்ப நன்றாக.

**எட்கார்:** வேடிக்கை கடந்த வேடிக்கையாயிருக்கிறதே இது. மலையின் உச்சியிலே உங்களை விட்டுச் சென்ற உருப்படி எது?

**க்ளாஸ்:** ஒரு ஏழை, துரதிர்ஷ்டம் பிடித்த ஏழை.

**எட்கார்:** கீழேயிருந்து பார்க்கும்போது, அவனுடைய கண்கள் இரண்டு முழு நிலாக்களைப் போன்றிருந்தன. ஆயிரம் மூக்குகள் கொண்டவன் அவன். அவனுடைய தடித்த கொம்புகள் ஆடி அலைந்தபோது அணை போட்ட கடல் அலைவது போலிருந்தது. ஒரு பேயாகத் தானிருக்க வேண்டும் அது. மனிதனால் செய்ய முடியாததை தெய்வங்கள் செய்து காட்டும்போது, அவர்களிடம் நமக்கு பக்தியேற்படுகிறது. இன்பத் தந்தையே, நீதியில் மிக்க

Of men's impossibilities, have preserved thee.

**GLOUCESTER** : I do remember now : henceforth I'll bear
Affliction till it do cry out itself
'Enough, enough,' and die. That thing you speak of,
I took it for a man; often 'twould say
'The fiend, the fiend : ' he led me to that place.

**EDGAR** : Bear free and patient thoughts.
But who comes here?

Enter KING LEAR,
fantastically dressed with wild flowers

The safer sense will ne'er accommodate
His master thus.

**KING LEAR** : No, they cannot touch me for coining;
I am the king himself.

**EDGAR** : O thou side-piercing sight!

**KING LEAR** : Nature's above art in that respect.
There's your press-money.
That fellow handles his bow like a crow-keeper :
draw me a clothier's yard.
Look, look, a mouse! Peace, peace;
this piece of toasted cheese will do 't.
There's my gauntlet; I'll prove it on a giant.
Bring up the brown bills.
O, well flown, bird! i' the clout, i' the clout :

தெய்வங்களே உங்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

**க்ளாஸ்:** ஆம், இப்பொழுது அது நினைவுக்கு வந்து விட்டது. இனி, துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளப் போகிறேன். துன்பமே "போதும், போதும்" என்று வாய்விட்டு அலறிச் சாகும் வரையில், நான் அதைப் பொறுத்துக் கொள்ளப் போகிறேன். அதை மனிதன் என்றல்லவா நினைத்து விட்டேன்! "பேய், பேய்" என்று அது அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கும். அதுதான் அந்த இடத்துக்கு என்னை இட்டுச் சென்றது.

**எட்கார்:** கவலையற்ற, பொறுமை நிறைந்த கருத்துக்களையே கருதுங்கள்
இங்கு வருகிறவர் யார்?

[லீயர், காட்டுப் பூக்களைச் சூடிக்கொண்டு, அலங்கோலமாக வருகிறார்]

தெளிவுள்ளவன் இந்தக் கோலத்திலிருக்க மாட்டான்.

**லீயர் :** இல்லை, நான் நாணயம் அடித்தாலும், அவர்கள் என்னையொன்றும் செய்துவிட முடியாது. நான் சாக்ஷாத் அரசனாச்சே.

**எட்கார்:** ஓ, விலாவைத் துளைக்கும் காட்சி!

**லீயர் :** அந்த வகையில், கலையைக் காட்டிலும் இயற்கை மேலோங்கி நிற்கிறது
இதோ, உனக்குரிய போர்க்கூலிகாக்கை விரட்டுகிறவனைப்போல, அந்தப் பயல் தன் வில்லைப் பிடித்திருக்கிறானே எனக்காக ஒரு கெஜம் அம்பை இழுபார், பார், ஒரு சுண்டெலி! அமைதி அமைதி; வறுத்த பால் ஆடை அதைச் செய்து விடும் அதோ, என் கை முடி ஒரு அரக்கனோடு போரிட்டு அதை ருஜு செய்ய முடியும் குத்தீட்டிகளைக் கொண்டு வா பேஷ், நன்றாகப்

hewgh!
Give the word.

**EDGAR** : Sweet marjoram.

**KING LEAR** : Pass.

**GLOUCESTER** : I know that voice.

**KING LEAR** : Ha! Goneril, with a white beard!
They flattered me like a dog;
and told me I had white hairs in my
beard ere the black ones were there. To say 'ay'
and 'no' to every thing that I said!--'Ay' and 'no'
too was no good divinity. When the rain came to
wet me once, and the wind to make me chatter; when
the thunder would not peace at my bidding; there I
found 'em, there I smelt 'em out.
Go to, they are not men o' their words :
they told me I was every thing; 'tis a lie,
I am not ague-proof.

**GLOUCESTER** : The trick of that voice I do well remember :
Is 't not the king?

**KING LEAR** : Ay, every inch a king :
When I do stare, see how the subject quakes.
I pardon that man's life. What was thy cause? Adultery?
Thou shalt not die : die for adultery! No :
The wren goes to 't, and the small gilded fly
Does lecher in my sight.





பறந்தாய், பறவையே! இலக்கில், இலக்கில்
ஹ்யூ, யாரது;

**எட்கார்:** இனித்த ஏலக்காய்.

**லீயர் :** அப்படியானால், உள்ளே போகலாம்.

**க்ளாஸ்:** அந்தக் குரலை எனக்குத் தெரியும்.

**லீயர் :** ஹா! கானெரிலா! வெள்ளைத் தாடியோடா!நாயைப் புகழ்ந்தது போல், அவர்கள் என்னை முகஸ்துதி செய்தார்கள். கறுப்பு ரோமம் வருவதற்கு முன்பே என் தாடியில் வெள்ளை ரோமம் முளைத்து விட்டதாகச் சொன்னார்கள். நான் "ஆம்" என்றால் 'ஆம்' என்பார்கள்; "இல்லை" யென்றால் 'இல்லை' என்பார்கள். இதை நீதியென்று சொல்ல முடியாது. ஒரு நாள் மழை வந்து என்னை நனைத்தது, காற்று வந்து வருத்தியது. இடி, என் கட்டளையை மீறி, இடித்துக் கொண்டேயிருந்தது. அப்போதுதான் அவர்கள் யார் என்று கண்டு கொண்டேன்; அவர்கள் குட்டு வெளியாயிற்று. சொன்ன சொல்லைக் காப்பாற்ற மாட்டார்கள் அவர்கள். சர்வமும் நான்தான் என்று சொன்னார்கள். வெறும் பொய் அது. வாதம் என்னை பீடிக்காதா?

**க்ளாஸ்:** அந்தக் குரலின் நாதம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. அது அரசர் தானே.

**லீயர் :** ஆம், ஒவ்வொரு அங்குலமும் அரசர். நான் முறைத்துப் பார்த்தால், என் குடிகள் எப்படி நடுங்குகிறார்கள் என்று பா; மரண தண்டனையிலிருந்து அந்த மனிதனுக்கு மன்னிப்புக் கொடுத்திருக்கிறேன் உன்னுடைய குற்றம் என்ன? மற்றவன் மனைவியை நயந்தாயா? நீ சாக வேண்டியதில்லை. பிறர் மனைவியை நயந்ததற்காகவா சாவு? வேண்டாம்; சிட்டுக் குருவியுந்தான் அதைச் செய்கிறது. பொண்வண்டு என் மூஞ்சிக்கு முன்னாலேயே அந்தச் செயலைச் செய்கிறது. புணர்ச்சி வாழ்க! சட்டபூர்வமான மஞ்

Let copulation thrive; for Gloucester's bastard son
Was kinder to his father than my daughters
Got 'tween the lawful sheets.
To 't, luxury, pell-mell! for I lack soldiers.
Behold yond simpering dame,
Whose face between her forks presages snow;
That minces virtue, and does shake the head
To hear of pleasure's name;
The fitchew, nor the soiled horse, goes to 't
With a more riotous appetite.
Down from the waist they are Centaurs,
Though women all above :
But to the girdle do the gods inherit,
Beneath is all the fiends';
There's hell, there's darkness, there's the
sulphurous pit,
Burning, scalding, stench, consumption; fie,
fie, fie! pah, pah! Give me an ounce of civet,
good apothecary, to sweeten my imagination :
there's money for thee.

**GLOUCESTER** : O, let me kiss that hand!

**KING LEAR** : Let me wipe it first; it smells of mortality.

**GLOUCESTER** : O ruin'd piece of nature! This great world
Shall so wear out to nought. Dost thou know me?

**KING LEAR** : I remember thine eyes well enough.
Dost thou squiny at me?
No, do thy worst, blind Cupid! I'll not





சத்திலே நான் பெற்ற பெண்களைக் காட்டிலும், க்ளாஸ்டரின் பரத்தை மகன் தந்தைக்கு அதிக அன்பு செலுத்தியிருக்கிறான். படாடோபம் ஒழிக! ஏன் ஒழியவேண்டும் என்றால், எனக்குப் போர் வீரர்கள் கிடையாது. அதோ இளித்துக் கொண்டிருக்கும் மங்கையைப் பார். அவளுடைய இரு விரல்களுக்குப் பின்னால் இருக்கும் அவள் முகம் பனிக்கட்டி போலிருக்கிறது. அவள் உத்தமி போல் பாசாங்கு செய்கிறாள். சிற்றின்பம் என்ற பெயரைக் கேட்டவுடனேயே, அவள் தலையசைகிறதுஅந்தச் சிறுக்கி தம் காமப் பசியைத் தீர்த்துக் கொள்ளும் தீவிரத்தைப் பார்த்தால், காய்ந்த குதிரையும் வெருகுப் பூனையும் கெட்டது, போ. இடுப்புக்கு மேலேதான் அவர்கள் பெண்கள், இடுப்புக்குக் கீழேயோ, அவர்கள் பைசாசக் குதிரைகள்; இடுப்பு வரையிலும் தெய்வங்களுக்குரியது, இடுப்புக்குக் கீழே பேய்களுக்குரியது!

எல்லாம் நரகமும், இருளும், கெந்தகக் குழியும்! எரிப்பும், கொப்புளமும், நாற்றமும், க்ஷய ரோகமும் சேச்சே சே! என் கற்பனையிலிருக்கும் நாற்றத்தைப் போக்கடித்து, நறு மணம் உண்டு பண்ண, ஒரு பலம் புனுகு தாரும், மருத்துவரே, இதோ உமக்குப் பணம்.

**க்ளாஸ்:** ஓ, அந்தக் கையை நான் முத்தமிட வேண்டும்.

**லீயர் :** முத்தமிடுவதற்கு முன், நான் அதைத் துடைத்துக் கொள்ளுகிறேன்; அதில் சாவின் நாற்றம் அடிக்கிறது.

**க்ளாஸ்:** ஓ, தட்டழிந்த இயல்பே! இம் மா இரு ஞாலம் தேய்ந்து தேய்ந்து பாழாய்ப் போக!

என்னைத் தெரிகிறதா தங்களுக்கு?

**லீயர் :** உன் கண்கள் எனக்கு நன்றாக நினைவிலிருக்கின்றன. என்னை, என்னை ஓரப் பார்வை பார்க்கிறாயா? குருட்டு மன்மதா, வேண்டுமட்டும் பார்! நான் காதலிக்க மாட்டேன்.

love. Read thou this challenge; mark but the penning of it.

**GLOUCESTER** : Were all the letters suns, I could not see one.

**EDGAR** : I would not take this from report; it is, And my heart breaks at it.

**KING LEAR** : Read.

**GLOUCESTER** : What, with the case of eyes?

**KING LEAR** : O, ho, are you there with me? No eyes in your head, nor no money in your purse? Your eyes are in a heavy case, your purse in a light; yet you see how this world goes.

**GLOUCESTER** : I see it feelingly.

**KING LEAR** : What, art mad? A man may see how this world goes with no eyes. Look with thine ears : see how yond justice rails upon yond simple thief. Hark, in thine ear : change places; and, handy-dandy, which is the justice, which is the thief? Thou hast seen a farmer's dog bark at a beggar?

**GLOUCESTER** : Ay, sir.

**KING LEAR** : And the creature run from the cur? There thou mightst behold the great image of authority : a







என் அறைகூவலைக் கவனி; எழுத்தைக் கவனித்து ஆராய்ச்சி செய்.

**க்ளாஸ்:** உங்கள் எழுத்துகள் எல்லாம் சூரியர்களாயிருந்தாலும், அவற்றை என் கண்களால் பார்க்க முடியாது.

**எட்கார்:** [தனக்குள்] மற்றவர்கள் சொல்லியிருந்தால், இதை நம்பியிருக்கமாட்டேன். ஆனால் அது உண்மையாயிருக்கிறதே. அதைப் பார்க்கும் போது நெஞ்சு உடைகிறது.

**லீயர் :** படி.

**க்ளாஸ்:** என்ன, கண் உறையாலா?

**லீயர் :** ஓகோ, நீ என்னோடு சேர்ந்தவனா? உன் தலையிலே கண்ணுமில்லை, உன் பையிலே பணமுமில்லை. உன் கண்களுக்குத் தடித்த உறை, உன் பணப்பைக்கு மெலிந்த உறை; இருந்தாலும், இந்த உலகம் போகிற போக்கு உனக்குத் தெரிகிறது.

**க்ளாஸ்:** உணர்ச்சியினால் அதைப் பார்க்கிறேன்.

**லீயர் :** என்ன, பைத்தியமா உனக்கு? இந்த உலகத்தின் போக்கை, கண்ணில்லாமலே, ஒருவன் பார்க்க முடியுமே. உன்னுடைய செவிகளால், பார். அதோ இருக்கும் நீதிபதி அந்த அப்பாவித் திருடனை எப்படி ஏளனம் செய்கிறான் என்று பார். காதினால் கவனி; கை மாற்றி விளையாடு. இப்போது நீதிபதி யார்? திருடன் யார்? குடியானவனுடைய நாய் பிச்சைக்காரனைக் கண்டு குரைப்பதைப் பார்த்திருக்கிறாயா?

**க்ளாஸ்:** பார்த்திருக்கிறேன், பிரபு.

**லீயர் :** நாயைக் கண்டு அவன் ஓடுவதை? அங்கே தான் அதிகாரத்தின் சிறந்த சின்னத்தை நீ பார்க்கலாம்;

dog's obeyed in office.

Thou rascal beadle, hold thy bloody hand!
Why dost thou lash that whore? Strip thine own back;
Thou hotly lust'st to use her in that kind
For which thou whipp'st her.

The usurer hangs the cozener.
Through tatter'd clothes small vices do appear;
Robes and furr'd gowns hide all.
Plate sin with gold,
And the strong lance of justice hurtless breaks :
Arm it in rags, a pigmy's straw does pierce it.
None does offend, none, I say, none; I'll able 'em :
Take that of me, my friend, who have the power
To seal the accuser's lips. Get thee glass eyes;
And like a scurvy politician, seem
To see the things thou dost not.
Now, now, now, now :
Pull off my boots : harder, harder : so.

**EDGAR** : O, matter and impertinency mix'd!
Reason in madness!

**KING LEAR** : If thou wilt weep my fortunes, take my eyes.
I know thee well enough;
thy name is Gloucester :
Thou must be patient; we came crying hither :
Thou know'st, the first time that we smell the air,
We wawl and cry.
I will preach to thee : mark.





அதிகாரத்திலிருக்கும் போது, நாயை மதிப்பார்கள்.

அயோக்கியச் சேவகனே, உன் ரத்தக் கறைபட்ட கையை நிறுத்து! அந்த அவுசாரியை ஏன் சவுக்கால் அடிக்கிறாய்? அடிபடுவதற்கு, உன் முதுகைத் திறந்து காட்டு. எந்த வகைக்காக அவளுக்குச் சவுக்கடி கொடுக்கிறாயோ, அந்த வகைக்கே ஆர்வத்துடன் அவளைப் பயன்படுத்த விரும்புகிறாய்.

கொடுக்கல் வாங்கல்காரன் ஏமாற்றுக் காரனைத் தூக்கிலிடுகிறான். கந்தல் துணி மூலம் சிறு குற்றங்களும் வெளிக்குத் தெரிந்து விடுகின்றன. பாவத்துக்குத் தங்க முலாம் பூசிப் பார்;நீதியின் வன்மை மிக்க நெடுவேல், குத்த மாட்டாமல் ஒடிந்து நொறுங்கி விடுகின்றது; பீத்தல் ஆடையை அதற்கு உடுத்து; ஒரு நோஞ் சான் வைக்கோல் அதை ஊடுருவிப் பாய்ந்து விடுகின்றது. குற்றம் செய்கிறவன் ஒருவனும் இல்லை; நான் சொல்லுகிறேன், ஒருவனுமே இல்லை. நான் அவர்களை ஆதரிக்கிறேன், குற்றஞ் சாட்டுகிறவனுக்கு வாய்ப் பூட்டுப் போடும் சக்தி உன்னிடமிருக்கிறது. ஆகையால், நண்பனே, நான் சொல்லுவதைக் கேட்டுக் கொள்; கண்ணாடிக் கண்களை வாங்கி வைத்துக் கொள்; மட்டமான அரசியல்வாதியைப் போல, பார்க்காததையும் பார்த்தது போல் பாவனை செய். இப்போ, இப்போ, இப்போ, என்னுடைய பூட்ஸைக் கழற்று. இழு. இன்னும், இன்னும், அப்படித்தான்.

**எட்கார்:** [தனக்குள்] விஷயமும் வெற்றுரையும் கலந்திருக்கிறதே. பைத்தியத்திலே அறிவு!

**லியர் :** என்னுடைய கதியைக் கண்டு நீ அழ விரும்பினால், என்னுடைய கண்களை எடுத்துக் கொள்; உன்னை நன்றாக எனக்குத் தெரியும். உன் பெயர் க்ளாஸ்டர். நீ பொறுமையுடன் இருக்க வேண்டும். நாம் அழுது கொண்டு இங்கு வந்தோம். முதன் முதலாக நாம் காற்றை நுகரும்போது, நாம் அழுது கூப்பாடு போடுகிறோம். அதை எடுத்து விளக்குகிறேன், கவனி.

**GLOUCESTER** : Alack, alack the day!

**KING LEAR** : When we are born,
we cry that we are come
To this great stage of fools : this a good block;
It were a delicate stratagem, to shoe
A troop of horse with felt : I'll put 't in proof;
And when I have stol'n upon these sons-in-law,
Then, kill, kill, kill, kill, kill, kill!

Enter a Gentleman, with Attendants

**Gentleman** : O, here he is : lay hand upon him. Sir,
Your most dear daughter--

**KING LEAR :** No rescue?
What, a prisoner? I am even
The natural fool of fortune. Use me well;
You shall have ransom.
Let me have surgeons;
I am cut to the brains.

**Gentleman :** You shall have any thing.

**KING LEAR :** No seconds? all myself?
Why, this would make a man a man of salt,
To use his eyes for garden water-pots,
Ay, and laying autumn's dust.

**Gentleman :** Good sir,--







**க்ளாஸ்:** அடடா, பாழும் நாள் அது!

**லீயர் :** முட்டாள்கள் மலிந்த இந்த நாடக மேடைக்கு வந்து விட்டோமே என்று பிறந்தவுடன் நாம் அழுகிறோம்.

இது நல்ல கம்பளித் தொப்பி! படைக்குதிரைகளுக்கும் கம்பளத்தால் லாடம் அடித்தால் தந்திரமான காரியமாயிருக்கும். இந்தத் தந்திரத்தைச் செய்து அது நல்லதென்று நானே நிலைநாட்டுவேன். என் மருமக்களுக்குத் தெரியாமல், ஓசையின்றி, அவர்களை நெருங்கிய பிறகு, கொல்லு, கொல்லு, கொல்லு!

[ஒரு கனவான் வேலைக்காரர்களோடு வருகிறார்]

**கனவான்:** ஓ, இங்கே இருக்கிறார் அவர்; அவரைப் பிடியுங்கள் ஐயா, அன்பிற்சிறந்த உங்கள் மகள்.

**லீயர் :** தப்ப முடியாதா? என்ன, கைதியா? விதியின் விளையாட்டுப் பொம்மை நான். என்னை நன்றாகப் பயன்படுத்தினால், உங்களுக்குப் பரிசு கிடைக்கும்; அறுவை மருத்துவர்களைக் கொண்டு வாருங்கள். என் மூளையிலேயே வெட்டு விழுந்து விட்டது.

**கனவான்:** எதை வேண்டுமானாலும் உங்களுக்குக் கொண்டு வருகிறோம்.

**லீயர் :** உதவிக்கு ஆள் இல்லையா? நான் தனியனா? இந்நிலையில் எந்த மனிதனும் உப்பு மனிதனாகி விடுவான். அவன் சிந்தும் உப்புக் கண்ணீர் நந்தவனத்திலுள்ள பூந்தொட்டிகளை நிரப்ப உதவும். ஆம், காற்றுக் காலத்திலே எழும்பும் புழுதியைப் படிய வைக்கும்.

**கனவான்:** உத்தமப் பிரபு

**KING LEAR :** I will die bravely, like a bridegroom. What!
I will be jovial : come, come; I am a king,
My masters, know you that.

**Gentleman** : You are a royal one, and we obey you.

**KING LEAR :** Then there's life in't. Nay, if you get it, you shall get it with running. Sa, sa, sa, sa.

Exit running; Attendants follow

**Gentleman :** A sight most pitiful in the meanest wretch,
Past speaking of in a king! Thou hast one daughter,
Who redeems nature from the general curse
Which twain have brought her to.

**EDGAR** : Hail, gentle sir.

**Gentleman** : Sir, speed you : what's your will?

**EDGAR :** Do you hear aught, sir, of a battle toward?

**Gentleman :** Most sure and vulgar : every one hears that,
Which can distinguish sound.

**EDGAR :** But, by your favour, How near's the other army?

**Gentleman :** Near and on speedy foot; the main descry
Stands on the hourly thought.

**EDGAR :** I thank you, sir : that's all.





**லீயர் :** முறுக்கான மாப்பிள்ளையைப் போல், சாவைத் துணிந்து தழுவுவேன். ஏன், நான் களியாட்டம் போடுவேன். ஆம், நான் அரசன் என்று உங்களுக்குத் தெரியுமா, எஜமானர்களே?

**கனவான்:** நீங்கள் ஒரு ராஜ புருஷர்; உங்களுக்குக் கீழ்ப் படிவோம்.

**லீயர் :** அப்படியானால், அதில் சாரம் இருக்கிறதே, ஓடியடைய வேண்டும் அதை. ஸ, ஸா, ஸ, ஸா.

[பணியாட்கள் தொடர, ஓடுகிறார்]

**கனவான்:** கேடு கெட்டவனுக்கு நேர்ந்தாலே, இது கண்ராவியாயிருக்கும். அரசருக்கு நேர்ந்தால், அது சொல்லில் அடங்காது. இது புதல்வியரால் ஏற்பட்ட சாபத்திலிருந்து நீக்க, தங்களுக்கு ஒரு புதல்வி இருக்கிறாள்.

**எட்கார்:** வந்தனம், ஐயா.

**கனவான்:** ஐயா, என்ன வேண்டும்? உடனே சொல்லுங்கள்.

**எட்கார்:** வரப் போகிற யுத்தத்தைப் பற்றி ஏதாவது கேள்விப்பட்டீர்களா, ஐயா?

**கனவான்:** காது கேட்கக் கூடியவர்கள் எல்லாம் அதைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே.

**எட்கார்:** அந்தப் படை எவ்வளவு கிட்ட வந்திருக்கிறது?

**கனவான்:** கிட்டேயே வந்து விட்டார்கள். விரைந்து வருகிறார்கள். ஒவ்வொரு மணியும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**எட்கார்:** நல்லது, ஐயா, நன்றி.

**Gentleman :** Though that the queen on special cause is here,
Her army is moved on.

**EDGAR** : I thank you, sir.

Exit Gentleman

**GLOUCESTER :** You ever-gentle gods, take my breath from me :
Let not my worser spirit tempt me again
To die before you please!

**EDGAR :** Well pray you, father.

**GLOUCESTER :** Now, good sir, what are you?

**EDGAR :** A most poor man, made tame to fortune's blows;
Who, by the art of known and feeling sorrows,
Am pregnant to good pity. Give me your hand,
I'll lead you to some biding.

**GLOUCESTER :** Hearty thanks :
The bounty and the benison of heaven
To boot, and boot!

Enter OSWALD

**OSWALD :** A proclaim'd prize! Most happy!
That eyeless head of thine was first framed flesh
To raise my fortunes. Thou old unhappy traitor,
Briefly thyself remember : the sword is out
That must destroy thee.





**கனவான்:** ஒரு தனிக் காரணத்துக்காக, அரசி இங்கேயிருந்தாலும், அவருடைய படை முன்னேறிக் கொண்டிருக்கிறது.

**எட்கார்:** தங்களுக்கு நன்றி.

[கனவான் போகிறார்]

**க்ளாஸ்:** ஒ, சாந்த மூர்த்திகளே, என் உயிரை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளுங்கள், விதித்த காலத்துக்கு முன் நான் சாக முயலாதிருப்பேனாகவும்!

**எட்கார்:** பிரார்த்தனை செய்யுங்கள், தந்தையே.

**க்ளாஸ்:** ஐயா, நீங்கள் யார்?

**எட்கார்:** மிகவும் எளிய ஏழை, விதியினால் அடிபட்டு மொத்துண்டவன் நான். துயரத்தை நேரடியாகவும், உணர்ச்சியோடும் அனுபவித்த காரணத்தால், பிறர் துயரத்தைக் கண்டவுடன், பரிவு கொள்பவன். உங்கள் கையைக் கொடுங்கள். இளைப்பாறுவதற்காக ஒரு இடத்துக்கு அழைத்துச் செல்லுகிறேன்.

**க்ளாஸ்:** உளமார்ந்த நன்றி. இறைவனுடைய அருள் உங்களுக்கு மேலும் மேலும் உண்டாவதாக.

[ஆஸ்வால்ட் வருகிறான்]

**ஆஸ்வா:** விளம்பரப்படுத்தப்பட்ட பரிசு! மிக்க மகிழ்ச்சி! அந்தக் கண்ணற்ற உன் தலையைப் படைத்ததற்குக் காரணமே என்னுடைய ஆக்கத்துக்காகத்தான்.கிழட்டுத் துரோகி! செய்த பாவங்களுக்கெல்லாம் இறைவனிடத்திலே இப்போதே மன்னிப்புக் கேட்டுக் கொள். உன்னை வெட்டப் போகிற வாள் இதோ உறையிலிருந்து வெளிவந்து விட்டது.

**GLOUCESTER** : Now let thy friendly hand
Put strength enough to't. EDGAR interposes

**OSWALD :** Wherefore, bold peasant,
Darest thou support a publish'd traitor? Hence;
Lest that the infection of his fortune take
Like hold on thee. Let go his arm.

**EDGAR** : Ch'ill not let go, zir, without vurther 'casion.

**OSWALD :** Let go, slave, or thou diest!

**EDGAR :** Good gentleman, go your gait, and let poor volk pass. An chud ha' bin zwaggered out of my life, 'twould not ha' bin zo long as 'tis by a vortnight. Nay, come not near th' old man; keep out, che vor ye, or ise try whether your costard or my ballow be the harder : ch'ill be plain with you.

**OSWALD** : Out, dunghill!

**EDGAR** : Ch'ill pick your teeth, zir : come; no matter vor your foins. They fight, and EDGAR knocks him down

**OSWALD :** Slave, thou hast slain me :
villain, take my purse :
If ever thou wilt thrive, bury my body;
And give the letters which thou find'st about me
To Edmund earl of Gloucester; seek him out
Upon the British party : O, untimely death!

Dies





**க்ளாஸ்:** வாளை வீசும் போது, வேண்டிய வன்மையோடு வீசு, நண்பனே.

**ஆஸ்வா:** துணிச்சல்காரனே, எதற்காக இந்த துரோகிக்கு உடந்தையாயிருக்கிறாய்? ஓடிவிடு இல்லையேல், அவனைப் பிடித்த துரதிர்ஷ்டம் உன்னையும் பிடித்துவிடும். அவன் கையை விடு.

**எட்கார்:** முடியாது, ஐயா.

**ஆஸ்வா:** விடு, புழுக்கை. இல்லையென்றால் செத்தாய்!

**எட்கார்:** ஏழைகளை விட்டுவிட்டு உன் பாட்டிலே போய்யா. மிரட்டல்லே சாகிறதுன்னா ரெண்டு வாரத்துக்கு முன்னாடியே செத்திருப்பேன். விலகி நில்! ஜாக்கிரதை, இல்லைன்னா தடிக்குப் பலம் அதிகமா, உன் மண்டைக்குப் பலம் அதிகமான்னு பார்த்துடுவேன். சூதில்லாமே சொல்லிட்டேன்.

**ஆஸ்வா:** போடா, சாணிப் பொத்தை!

**எட்கார்:** உன் பல்லொடைப்பேன், வா. குத்தவா செய்றே.

[இருவரும் சண்டை போடுகிறார்கள்; ஆஸ்வால்ட் விழுகிறான்]

**ஆஸ்வா:** அடிமையே, என்னைக் கொன்று விட்டாய். அயோக்கியனே, என் பணப்பையை எடுத்துக் கொள். நல்வாழ்வு வேண்டுமென்றால் என் உடலைப் புதைத்துவிடு. என்னிடமிருக்கிற கடிதத்தை க்ளாஸ்டர் கோமகன், எட்மன்டிடம் கொடு. பிரிட்டிஷ் கட்சியில் அவர் இருப்பார். ஓ, அகால மரணமே!

[சாகிறான்]

**EDGAR** : I know thee well : a serviceable villain;
As duteous to the vices of thy mistress
As badness would desire.

**GLOUCESTER :** What, is he dead?

**EDGAR** : Sit you down, father; rest you
Let's see these pockets :
the letters that he speaks of
May be my friends. He's dead; I am only sorry
He had no other death's-man. Let us see :
Leave, gentle wax; and, manners, blame us not :
To know our enemies' minds,
we'ld rip their hearts;
Their papers, is more lawful.

Reads

'Let our reciprocal vows be remembered.
You havemany opportunities to cut him off :
if your willwant not,
time and place will be fruitfully offered.
There is nothing done, if he return the conqueror :
then am I the prisoner, and his bed my goal; from
the loathed warmth whereof deliver me, and supply
the place for your labour.

'Your--wife, so I would say--
'Affectionate servant,
'GONERIL.'





**எட்கார்:** உன்னை நன்றாகத் தெரியும்; அயோக்கியக் கையாள். உன் எஜமானியின் தீச் செயலுக்கெல்லாம் உடந்தையானவன். தீமையின் விருப்பத்தையெல்லாம் நிறைவேற்றுபவன்.

**க்ளாஸ்:** என்ன, செத்துப் போனானா?

**எட்கார்:** கீழே உட்காருங்கள், தந்தையே, இளைப்பாறுங்கள்

இந்தப் பைகளைச் சோதனை போடுவோம்; அவன் சொன்ன கடிதங்கள் எனக்கு நண்பர்களாயிருக்கலாம். அவன் இறந்துவிட்டான். அவனைக் கொல்வதற்கு வேறொருவரும் இல்லாமல் போனார்களே என்றுதான் வருந்துகிறேன். பார்ப்போம், இளகும் அரக்கே, அகன்றுவிடு. ஒழுக்கமே, எங்களைக் குறை கூறாதே. நம்முடைய பகைவர்களுடைய எண்ணத்தையறிவதற்காக, அவர்களுடைய இதயத்தையே பிளந்து பார்க்கிறோம். அவர்களுடைய கடிதங்களைப் பிளந்து பார்ப்பது அதைக் காட்டிலும் நியாயமானது.
[படிக்கிறான்]

"நாம் பரஸ்பரம் செய்து கொண்ட பிரமாணம் ஞாபகத்திலிருக்கட்டும். அவரைத் தொலைப்பதற்கு உங்களுக்குப் பல வாய்ப்புகள் ஏற்படும். நீங்கள் தளராமல் இருந்தால், உரிய நேரமும் இடமும் உங்களைத் தாமே வந்தடையும். அவர் வெற்றி வீரனாகத் திரும்பினால், நினைத்த காரியம் கைகூடாது; நான் கைதியாவேன். அவருடைய படுக்கையே என் சிறைச்சாலையாகும்; நான் வெறுக்கும் அந்தப் படுக்கையின் வெப்பத்தினின்றும் என்னைக் காப்பாற்றி அதற்குப் பரிசாக உம்மையே எனக்கு நல்க வேண்டும்.

உம்முடைய மனைவியும் (மனைவியென்றே சொல்ல விரும்புகிறேன்)
அன்புள்ள சேவகியுமான
கானெரில்"

O undistinguish'd space of woman's will!
A plot upon her virtuous husband's life;
And the exchange my brother! Here, in the sands,
Thee I'll rake up, the post unsanctified
Of murderous lechers : and in the mature time
With this ungracious paper strike the sight
Of the death practised duke : for him 'tis well
That of thy death and business I can tell.

**GLOUCESTER :** The king is mad : how stiff is my vile sense,
That I stand up, and have ingenious feeling
Of my huge sorrows! Better I were distract :
So should my thoughts be sever'd from my griefs,
And woes by wrong imaginations lose
The knowledge of themselves.

**EDGAR :** Give me your hand :

Drum afar off

Far off, methinks, I hear the beaten drum :
Come, father, I'll bestow you with a friend.

Exeunt

## SCENE VII.

A tent in the French camp.
LEAR on a bed asleep, soft music playing;
Gentleman, and others attending.
Enter CORDELIA, KENT, and Doctor





ஒ, பெண்மையின் காம விலாஸம் எப்படிக் கட்டுமீறி விரிந்து நிற்கிறது! நற்குணம் நிறைந்த அவளது கணவனுடைய உயிருக்கு உலைவைக்கும் சதி இது. பரிவர்த்தனைக்கு, என் தம்பி!
கொலைகாரக் காமுகர்களின் தரகனாகிய உன்னை, புனிதமற்ற இந்த மணலில் புதைக்கிறேன். காலம் பார்த்து அவர்கள் கொலை செய்ய நினைத்த கோமகனிடம் இந்த வெட்கம் கெட்ட கடிதத்தைக் காட்டுகிறேன்; உன்னுடைய சாவைப் பற்றியும், பிரவர்த்தியைப் பற்றியும் அவரிடம் சொல்லுகிறேன்.

**க்ளாஸ்:** அரசருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. என்னுடைய அறிவோ விறைத்து நிற்கிறது. என்னுடைய மகத்தான துயரத்தையே எனக்கு உணர்த்திக் கொண்டு நிற்கிறது அது. எனக்கும் பித்துப்பிடித்தால் நன்றாக இருக்கும்; என்னுடைய கவலைகளுக்கும் சிந்தனைகளுக்கும் இடையே உள்ள உறவு அற்றுப் போகும்; குழம்பிப்போன கற்பனைகளால், துயரம் தன்னையே மறந்து நிற்கும்.

[தூரத்தில் பேரிகை முழங்குகிறது]

**எட்கார்:** உங்கள் கையைக் கொடுங்கள். வெகு தூரத்தில், பேரிகை முழக்கம் கேட்கிறது. வாருங்கள், தந்தையே, உங்களை ஒரு நண்பரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்.

[போகிறார்கள்]

## காட்சி 7

ப்ரெஞ்சுப் பாசறையில் ஒரு கூடாரம்
[லீயர் ஒரு படுக்கையில் உறங்குகிறார்.
இனிய இசை கேட்கிறது. கனவான்களும்
மற்றவர்களும் ஏவலில் நிற்கிறார்கள்]
[கார்டீலியா, கென்ட், மருத்துவர் வருகிறார்கள்]

**CORDELIA :** O thou good Kent, how shall I live and work,
To match thy goodness? My life will be too short,
And every measure fail me.

**KENT :** To be acknowledged, madam, is o'erpaid.
All my reports go with the modest truth;
Nor more nor clipp'd, but so.

**CORDELIA :** Be better suited :
These weeds are memories of those worser hours :
I prithee, put them off.

**KENT :** Pardon me, dear madam;
Yet to be known shortens my made intent :
My boon I make it, that you know me not
Till time and I think meet.

**CORDELIA** : Then be't so, my good lord.
To the Doctor
How does the king?

**Doctor** : Madam, sleeps still.

**CORDELIA :** O you kind gods,
Cure this great breach in his abused nature!
The untuned and jarring senses, O, wind up
Of this child-changed father!

**Doctor :** So please your majesty
That we may wake the king : he hath slept long.

**கார்டீலியா:** அன்பு நிறைந்த கென்ட், உம்முடைய சிறந்த சேவைக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேன்; கைமாறு செய்ய, எனக்கு ஒரு ஆயுள் காலம் போதாது. நான் செய்யக்கூடியதும் அற்பமாகத்தானிருக்கும்.

**கென்ட்:** அம்மணி, பாராட்டுத் தெரிவிப்பதே மிகையாகுமே. நடந்ததையெல்லாம் உள்ளபடியே சொல்லி விட்டேன். கூட்டவுமில்லை, குறைக்கவுமில்லை.

**கார்டீலியா:** நல்ல ஆடையை உடுத்திக்கொள்ளுங்கள். இந்தப் பீத்தல் ஆடை பழைய துன்பங்களையெல்லாம் நினைவுறுத்துகிறது. தயவுசெய்து இந்த ஆடைகளைக் களைந்து விடுங்கள்.

**கென்ட்:** மன்னிக்க வேண்டும், அம்மணி, என்னை நானே இனங் காட்டிக் கொண்டால், என்னுடைய நோக்கம் நிறைவேறாமல் போகும். தங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன். உரிய காலம் வந்து, நான் உங்களைக் கேட்டுக்கொள்ளும்வரை, நீங்கள் என்னை யறியாததுபோல் நடந்து கொள்ள வேண்டும்.

**கார்டீலியா:** அப்படியானால், அப்படியே நடக்கிறேன், பிரபு. [மருத்துவரைப் பார்த்து] அரசர் எப்படியிருக்கிறார்?

**மருத்துவர்:** அயர்ந்து தூங்குகிறார், அம்மணி.

**கார்டீலியா:** அருள் நிறைந்த தெய்வங்களே, கொடுமையினால் இவருக்கு ஏற்பட்ட நோயை குணப்படுத்துங்கள். மக்களால் குணம் மாறிப்போன தந்தை இவர். முறுக்கேறாத காரணத்தால் அபஸ்வரத்தோடு பேசுகின்ற புலன்களே, முறுக்கேறி சுருதி சேருங்கள்!

**மருத்துவர்:** தங்களுக்கு விருப்பமிருந்தால், அரசரை எழுப்பலாம். வெகுநேரம் தூங்கிவிட்டார்.

**CORDELIA :** Be govern'd by your knowledge, and proceed
I' the sway of your own will. Is he array'd?

**Gentleman** : Ay, madam; in the heaviness of his sleep
We put fresh garments on him.

**Doctor :** Be by, good madam,
when we do awake him;
I doubt not of his temperance.

**CORDELIA** : Very well.

**Doctor** : Please you, draw near.
Louder the music there!

**CORDELIA :** O my dear father! Restoration hang
Thy medicine on my lips; and let this kiss
Repair those violent harms that my two sisters
Have in thy reverence made!

**KENT :** Kind and dear princess!

**CORDELIA :** Had you not been their father,
these white flakes
Had challenged pity of them. Was this a face
To be opposed against the warring winds?
To stand against the deep dread-bolted thunder?
In the most terrible and nimble stroke
Of quick, cross lightning? to watch--poor perdu!--
With this thin helm? Mine enemy's dog,
Though he had bit me, should have stood that night

**கார்டீலியா:** மருத்துவம் தெரிந்த உங்களுக்குத்தான் என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். உங்கள் யுக்தம்போல் செய்யுங்கள்.

அவர் உடையணிந்திருக்கிறாரா?

**கனவான்:** ஆம், அம்மணி, அவர் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தபோது, அவருக்குப் புது உடைகள் உடுத்தினோம்.

**மருத்து:** அம்மணி, நாங்கள் அவரை எழுப்பும்போது, பக்கத்தில் தாங்கள் இருக்க வேண்டும். அவர் அமைதியோடு துயில் எழுவார் என்பதில் சந்தேகமில்லை.

**கார்டீலியா:** ரொம்ப சரி.

**மருத்து:** தயவுசெய்து பக்கத்தில் வாருங்கள். அங்கு இசை நன்றாக முழங்கட்டும்.

**கார்டீலியா:** ஓ, என் அருமைத் தந்தையே, ஆரோக்கிய தேவதை உங்களுக்குரிய மருந்தை என் உதட்டில் சொரியட்டும். என் தமக்கையர் உங்களுக்குச் செய்த கொடுமையை யெல்லாம் நான் கொடுக்கும் முத்தம் துடைக்கட்டும்!

**கென்ட்:** கருணைமிக்க இளவரசியே!

**கார்டீலியா:** தந்தையென்று பார்க்காவிட்டாலும், பிச்சிப்பூப் போன்ற இந்த வெள்ளை முடியைப் பார்த்தாவது அவர்கள் இரங்கியிருக்கக் கூடாதா! குமுறும் காற்றினோடு போராடுவதற்குரிய முகமா இது? அச்சம் என்ற தாழ்ப்பாழ் போட்டு அலறுகின்ற இடிகளை இந்த முகம் சகிக்குமா? குறுக்கும் நெடுக்குமாக நொசிந்து பாயும் மின்னல் வெட்டுகளுக்கு இடையிலேயா! ஐயோ, பாவம், இந்தப் புன்தலையோடா! என்னுடைய பகைவனுடைய நாய்க்கு என்னைக் கடித்துக் குதறிய நாய்க்குக் கூட அப்பேர்ப்பட்ட

Against my fire; and wast thou fain, poor father,
To hovel thee with swine, and rogues forlorn,
In short and musty straw? Alack, alack!
'Tis wonder that thy life and wits at once
Had not concluded all. He wakes; speak to him.

**Doctor :** Madam, do you; 'tis fittest.

**CORDELIA :** How does my royal lord?
How fares your majesty?

**KING LEAR** : You do me wrong to take me out o' the grave :
Thou art a soul in bliss; but I am bound
Upon a wheel of fire, that mine own tears
Do scald like moulten lead.

**CORDELIA :** Sir, do you know me?

**KING LEAR :** You are a spirit,
I know : when did you die?

**CORDELIA :** Still, still, far wide!

**Doctor** : He's scarce awake :
let him alone awhile.

**KING LEAR :** Where have I been?
Where am I? Fair daylight?
I am mightily abused. I should e'en die with pity,
To see another thus. I know not what to say.
I will not swear these are my hands : let's see;





இரவில் என் அடுப்பனலில் புகலிடம் கொடுத்திருப்பேனே! பாழும் குடிசையிலே, பன்றிகளோடும் திக்கற்ற அகதிகளோடும், மட்கிப் போன வைக்கோல் படுக்கையிலேயா, அப்பா, தாங்கள் படுத்திருந்தீர்கள்? ஐயோ, ஐயோ, உங்கள் அறிவோடு உயிரும் போகாமல் இருந்ததே. விசித்திரந்தான்! அவர் விழிக்கிறார். அவருடன் பேசுங்கள்.

**மருத்து:** அம்மணி, தாங்கள் பேசுங்கள். அதுவே உசிதம்.

**கார்டீலியா:** எங்கள் அரசப்பன் எப்படியிருக்கிறார்? தங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?

**லீயர் :** கல்லறைக்குள் புதைந்து கிடந்த என்னை வெளியிலெடுத்தாயே, அது எனக்கு நல்லதில்லை. நீயோ ஆனந்தத்திலிருக்கும் ஆன்மா. ஆனால், நானோ அக்கினிச் சக்கரத்திலே கட்டுண்டவன். நான் சொட்டும் கண்ணீரே உருகிப்போன ஈயத்தைப்போல் என்னைத் தகிக்கிறது.

**கார்டீலியா:** ஐயா, என்னைத் தெரிகிறதா?

**லீயர் :** நீ ஒரு ஆவியென்று எனக்குத் தெரியும். நீ எப்பொழுது இறந்தாய்?

**கார்டீலியா:** இன்னும் வெகுதூரத்தில் இருக்கிறார்.

**மருத்து:** இன்னும் நன்றாக விழிக்கவில்லை; கொஞ்ச நேரம் அவரைத் தனியாக விட்டுவிடுவோம்.

**லீயர் :** எங்கு போயிருந்தேன்? எங்கே இருக்கிறேன்? அழகிய பகலா இது? மிகுந்த தொந்தரவுக்குள்ளாகிவிட்டேன். இன்னொருவன் என் நிலையிலிருந்தால், அதைக்கண்டு இரக்கத்தால் நான் உயிர் துறந்திருப்பேன். என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. இவைகள் என்னுடைய கைகள்தான் என்றுகூட நிச்சயம்

I feel this pin prick. Would I were assured
Of my condition!

**CORDELIA :** O, look upon me, sir,
And hold your hands in benediction o'er me :

No, sir, you must not kneel.

**KING LEAR :** Pray, do not mock me :
I am a very foolish fond old man,
Fourscore and upward, not an hour more nor less;
And, to deal plainly, I fear I am not in my perfect mind.
Methinks I should know you, and know this man;
Yet I am doubtful for I am mainly ignorant
What place this is; and all the skill I have
Remembers not these garments; nor I know not
Where I did lodge last night. Do not laugh at me;
For, as I am a man, I think this lady
To be my child Cordelia.

**CORDELIA :** And so I am, I am.

**KING LEAR :** Be your tears wet? yes, 'faith. I pray, weep not :
If you have poison for me, I will drink it.
I know you do not love me; for your sisters
Have, as I do remember, done me wrong :
You have some cause, they have not.

**CORDELIA :** No cause, no cause.

**KING LEAR :** Am I in France?





ஏற்படவில்லை. பார்ப்போம். இந்த ஊசியை வைத்துக் குத்தும்போது, எனக்கு உணர்விருக்கிறது என்று தெரிகிறது. என் நிலையைப் பற்றி யாராவது உறுதி சொன்னால் நல்லது.

**கார்டீலியா:** ஒ, அப்பா, என்னைப் பாருங்கள். உங்கள் கையை உயர்த்தி என்னை ஆசீர்வதியுங்கள்.

கூடாது, அப்பா, மண்டிபோடக் கூடாது.

**லீயர் :** என்னை இகழாதே. நான் ஒரு முட்டாள் கிழவன். எண்பது வயதுக்கு மேலாகிவிட்டது. ஒரு மணி கூட அதில் ஏற்றத்தாழ்வில்லை. மனம் திறந்து சொல்லுகிறேன், என்னுடைய மனசு சரியாக இல்லை. உன்னையும் இந்த மனிதனையும் எனக்குத் தெரியும் என்று எண்ணுகிறேன். இருந்தாலும், எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இது எந்த இடம் என்று தெரியவில்லை. எவ்வளவு முயன்று பார்த்தாலும், இந்த ஆடைகளை இனம் கண்டுகொள்ள முடியவில்லை. நான் நேற்றிரவு எங்கு தங்கினேன் என்று கூடத் தெரியவில்லை. என்னைப் பார்த்துச் சிரிக்காதே. நான் மனிதன் என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயம் இந்தச் சீமாட்டி என் குழந்தை கார்டீலியா என்பது.
**கார்டீலியா:** ஆம், நான்தான், நானேதான்.

**லீயர் :** உன் கண்ணில் நீர் ததும்புகிறதல்லவா? நான் கேட்டுக் கொள்ளுகிறேன், அம்மா, அழாதே. உன்னிடம் விஷமிருந்தால், அதை நான் குடிக்க விரும்புவேன். உனக்கு என்னிடம் அன்பிருக்கக் காரணமில்லை. உன்னுடைய தமக்கையர்களோ என்னைத் துன்புறுத்தி விட்டார்கள். துன்புறுத்துவதற்கு, உனக்குக் காரணம் இருக்கிறது, அவர்களுக்கில்லை.

**கார்டீலியா:** ஒரு காரணமுமில்லை, ஒரு காரணமுமில்லை.

**லீயர் :** நான் ப்ரான்ஸ் நாட்டிலா இருக்கிறேன்?

**KENT :** In your own kingdom, sir.

**KING LEAR :** Do not abuse me.

**Doctor** : Be comforted, good madam : the great rage,
You see, is kill'd in him : and yet it is danger
To make him even o'er the time he has lost.
Desire him to go in; trouble him no more
Till further settling.

**CORDELIA :** Will't please your highness walk?

**KING LEAR :** You must bear with me :
Pray you now, forget and forgive : I am old and foolish.

Exeunt all but KENT and Gentleman

**Gentleman :** Holds it true,
sir, that the Duke of Cornwall was so slain?

**KENT :** Most certain, sir.

**Gentleman :** Who is conductor of his people?

**KENT :** As 'tis said, the bastard son of Gloucester.

**Gentleman :** They say Edgar, his banished son,
is with the Earl of Kent in Germany.

**KENT :** Report is changeable. 'Tis time to look about; the powers of the kingdom approach apace.

**கென்ட்:** தங்கள் ராஜ்யத்திலேயே இருக்கிறீர்கள், பிரபு.

**லீயர் :** ஏமாற்றாதீர்கள்.

**மருத்து:** அம்மணி, மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். அவருடைய பெருவெறி அடங்கிவிட்டது. ஆனால், வெறியோடிருந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் அவரிடம் இப்போது சொல்வது அபாயகரமானது. அவரை உள்ளே போகும்படி சொல்லுங்கள். இன்னும் மன அமைதி ஏற்படும் வரையில் அவரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்.

**கார்டீலியா:** பிரபு, நடக்க விரும்புகிறீர்களா?

**லீயர் :** நீ என்னைப் பொறுத்தக் கொள்ள வேண்டும்; என் செயலை யெல்லாம் மன்னித்து மறந்துவிட வேண்டும்; நான் ஒரு கிழட்டு முட்டாள்.
[கென்ட், கனவான்கள் நீங்கலாக மற்றவர்கள் போகிறார்கள்]

**கனவான்:** ஐயா, கார்ன்வால் கோமகன் இறந்து விட்டதாகச் சொல்லுகிறார்களே, அது உண்மைதானா?
**கென்ட்:** முற்றிலும் உண்மை.

**கனவான்:** அவருடைய படைக்குத் தலைமை வகிப்பது யார்?

**கென்ட்:** க்ளாஸ்டரின் வைப்பாட்டி மகன் என்று சொல்லுகிறார்கள்.

**கனவான்:** துரத்தப்பட்ட மகன், எட்கார், கென்ட் பிரபுவோடு ஜெர்மனியிலிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

**கென்ட்:** மாறுபட்ட வதந்திகள் வந்துகொண்டுதானிருக்கும், ஜாக்கிரதையோடு இருக்க வேண்டிய காலம் இது. சுதேசப் படைகள் பக்கத்தில் வந்து விட்டன.

**Gentleman :** The arbitrement is like to be bloody.
Fare you well, sir.

Exit

**KENT :** My point and period will be throughly wrought,
Or well or ill, as this day's battle's fought.

Exit

## ACT V

SCENE I.

The British camp, near Dover.

Enter, with drum and colours, EDMUND, REGAN, Gentlemen, and Soldiers.



**EDMUND :** Know of the duke if his last purpose hold,
Or whether since he is advised by aught
To change the course : he's full of alteration
And self-reproving : bring his constant pleasure.

To a Gentleman, who goes out

**REGAN :** Our sister's man is certainly miscarried.

**EDMUND :** 'Tis to be doubted, madam.

**REGAN :** Now, sweet lord,
You know the goodness I intend upon you :
Tell me--but truly--but then speak the truth,
Do you not love my sister?





**கனவான்:** போர்க்களம் ரத்தக் களரியாயிருக்கப் போகிறது. போய் வருகிறேன்.

[போகிறார்]

**கென்ட்:** இன்று நடக்கப்போகும் போரின் முடிவைப் பொறுத்திருக்கிறது என் சூழ்ச்சியின் வெற்றி.

[போகிறார்]

## அங்கம் V

## காட்சி 1

டோவர் அருகில் பிரிட்டிஷ் பாசறை

[பேரிகை, கொடிகளோடு, எட்மன்ட், ரீகன், கனவான்கள், போர் வீரர்கள் வருகிறார்கள்]



**எட்மன்ட்:** அவருடைய கடைசித் திட்டத்தை அமுல் நடத்தவா அல்லது அதையுமே மாற்றிவிட்டாரா என்று கோமகனிடம் கேளுங்கள். அவர் அடிக்கடி மாறிக்கொண்டே யிருக்கிறார். தன்னைத்தானே கடிந்தும் கொள்ளுகிறார். [ஒரு அதிகாரியைப் பார்த்து] அவருடைய முடிவான தீர்மானம் என்னவென்று தெரிந்து வாரும்!

[அதிகாரி போகிறார்]

**ரீகன்:** நமது அக்காளின் ஆள் வழி தவறிப் போயிருக்க வேண்டும்.

**எட்மன்ட்:** அதை நினைத்து பயப்பட வேண்டியதுதான், அம்மணி.

**ரீகன்:** அருமைப் பிரபு, உங்களுக்கு நன்மை செய்ய உத்தேசித்திருக்கிறேன் என்று தெரியுமல்லவா? ஆகையால், சொல்லுங்கள், உண்மையைச் சொல்லி விடுங்கள்; என்னுடைய தமக்கையை நீங்கள் காதலிக்கிறீர்களல்லவா?

**EDMUND :** In honour'd love.

**REGAN :** But have you never found my brother's way
To the forfended place?

**EDMUND :** That thought abuses you.

**REGAN :** I am doubtful that you have been conjunct
And bosom'd with her, as far as we call hers.

**EDMUND :** No, by mine honour, madam.

**REGAN** : I never shall endure her : dear my lord,
Be not familiar with her.

**EDMUND :** Fear me not : She and the duke her husband!
Enter, with drum and colours, ALBANY, GONERIL, and Soldiers

**GONERIL :** [Aside] I had rather lose the battle than that sister
Should loosen him and me.

**ALBANY :** Our very loving sister, well be-met.
Sir, this I hear; the king is come to his daughter,
With others whom the rigor of our state
Forced to cry out. Where I could not be honest,
I never yet was valiant : for this business,
It toucheth us, as France invades our land,
Not bolds the king, with others, whom, I fear,
Most just and heavy causes make oppose.

**EDMUND :** Sir, you speak nobly.

**REGAN** : Why is this reason'd?





**எட்மன்ட்:** அது தப்பான அன்பல்ல.

**ரீகன்:** அவளோடு ஒன்றி அவளைக் காதலிக்கிறீர்கள் என்று நான் ஐயுறுகிறேன்.

**எட்மன்ட்:** இல்லையென்று நான் ஆணையிடுகிறேன்.

**ரீகன்:** அவளை என்னால் தாங்க முடியாது, அன்புப் பிரபு. அவளோடு நெருங்கிப் பழகாதீர்கள்.

**எட்மன்ட்:** அப்படியொன்றும் பயப்பட வேண்டாம். அவளும் அவளுடைய கணவரும்!

[பேரிகை, கொடிகளோடு ஆல்பனி, கானெரில், போர்வீரர்கள் வருகிறார்கள்]

**கானெரில்:** [தனக்குள்] போரில் தோற்றாலும் பரவாயில்லை, ஆனால் எனக்கும் இவருக்குமுள்ள தளையை என் தங்கை தளர்த்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**ஆல்பனி:** அருமை மைத்துனியே, வணக்கம். அரசர் அவருடைய மகளோடு சேர்ந்து கொண்டார் என்றும், அரசியல் கண்டிப்பால் நமக்கு விரோதமாகி விட்டவர்களும் அவர்களோடு சேர்ந்து கொண்டார்கள் என்றும் கேள்விப்படுகிறேன். நேர்மையில்லாத காரியத்தில் எனக்கு வீரம் வருவதில்லை. ப்ரான்ஸ் நம் நாட்டின் மீது படையெடுத்து வருவதால், அவரை எதிர்க்க வேண்டியதுதான். ஆனால், நம்முடைய அநீதியால் பாதிக்கப்பட்ட அரசரும் மற்றவர்களும் அவருடைய கட்சியில் இருக்கிறார்கள். அதனால் எனக்கு அதைரியம் ஏற்படுகிறது.

**எட்மன்ட்:** ஐயா, பெருந்தன்மையாயிருக்கிறதே உங்கள் பேச்சு.

**ரீகன்:** இதைப் பற்றி ஏன் விவாதம்?

**GONERIL** : Combine together 'gainst the enemy;
For these domestic and particular broils
Are not the question here.

**ALBANY :** Let's then determine
With the ancient of war on our proceedings.

**EDMUND :** I shall attend you presently at your tent.

**REGAN :** Sister, you'll go with us?

**GONERIL :** No.

**REGAN :** 'Tis most convenient; pray you, go with us.

**GONERIL:** [Aside] O, ho, I know the riddle. I will go.

As they are going out,
enter EDGAR disguised

**EDGAR :** If e'er your grace had speech with man so poor,
Hear me one word.

**ALBANY :** I'll overtake you. Speak.

Exeunt all but ALBANY and EDGAR

**EDGAR :** Before you fight the battle, ope this letter.
If you have victory, let the trumpet sound
For him that brought it : wretched though I seem,
I can produce a champion that will prove

**கானெரில்:** பகைவனுக்கு எதிராக ஒன்று சேருங்கள். இந்தக் குடும்பத் தகராறுகளைத் தீர்க்கும் நேரம் இதுவல்ல.

**ஆல்பனி:** அப்படியானால், போர்க்கலையில் அனுபவம் பெற்ற வீரர்களோடு கலந்து திட்டம் போடுவோம்.

**எட்மன்ட்:** உங்கள் கூடாரத்திலே விரைவில் உங்களைச் சந்திக்கிறேன்.

**ரீகன்:** அக்காள், நீங்களும் எங்களோடு வருவீர்களா?

**கானெரில்:** வரமாட்டேன்.

**ரீகன்:** நீங்கள் வருவது நல்லது. கட்டாயம் எங்களோடு வாருங்கள்.

**கானெரில்:** [தனக்குள்] ஒகோ, புதிர் விளங்கிவிட்டது
நானும் வருகிறேன்.

[அவர்கள் வெளியே போகும்போது எட்கார் மாறுவேடத்தில் உள்ளே வருகிறான்]

**எட்கார்:** என்னைப் போன்ற எளியவனிடம் தாங்கள் பேசுவதாயிருந்தால், ஒரு வார்த்தை.

**ஆல்பனி:** சரி, சொல்லு.

[ஆல்பனி, எட்கார் தவிர மற்றவர்கள் போகிறார்கள்]

சொல்லு.

**எட்கார்:** நீங்கள் போரிடப் போவதற்கு முன் இந்தக் கடிதத்தைத் திறந்து பார்த்து விடுங்கள். உங்களுக்கு வெற்றி கிடைத்தால், இந்தக் கடிதத்தைக் கொண்டு வந்தவனை அழைத்து எக்காளம்

What is avouched there. If you miscarry,
Your business of the world hath so an end,
And machination ceases. Fortune love you.

**ALBANY :** Stay till I have read the letter.

**EDGAR :** I was forbid it.
When time shall serve,
let but the herald cry,
And I'll appear again.

**ALBANY** : Why, fare thee well : I will o'erlook thy paper.

Exit EDGAR

Re-enter EDMUND

**EDMUND :** The enemy's in view; draw up your powers.
Here is the guess of their true strength and forces
By diligent discovery; but your haste
Is now urged on you.

**ALBANY :** We will greet the time.

Exit

**EDMUND :** To both these sisters have I sworn my love;
Each jealous of the other, as the stung
Are of the adder.
Which of them shall I take?
Both? one? or neither?

ஒலிக்கட்டும். நான் எளியவனாயிருந்தாலும் கடிதத்திலுள்ள விஷயத்தை மெய்ப்பிக்க ஒரு சாட்சியைக் கொண்டு வந்து நிறுத்துவேன். உங்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால், உங்கள் வாழ்வு முடிவதோடு, உங்கள் உயிருக்குச் சதி செய்கிறார்களே, அவர்களுடைய சதியும் முடிந்து விடும். உங்களுக்கு ஆக்கம் வரட்டும்!

**ஆல்பனி:** நான் கடிதத்தைப் படித்து முடிக்கும்வரை, நீ இரு.

**எட்கார்:** இங்கிருப்பதற்கு எனக்குத் தடையேற்பட்டிருக்கிறது. வேண்டும்போது, தூதன் என்னைக் கூப்பிடட்டும், நான் மறுபடியும் இங்கு வருகிறேன்.

**ஆல்பனி:** அப்படியானால், போய்வா. நீ கொடுத்த கடிதத்தைப் படிக்கிறேன்.

[எட்கார் போகிறான்]
[எட்மன்ட் மறுபடியும் வருகிறான்]

**எட்மன்ட்:** எதிரிகள் நெருங்கிவிட்டார்கள்; உங்களுடைய சேனைகளைத் திரட்டுங்கள். எதிரியின் படைத்திறனைப் பற்றியும் எண்ணிக்கையைப் பற்றியும் வேவு அறிந்த செய்தி இதோ; ஆனால், நீங்கள் கொஞ்சமும் தாமதிக்காமல் காரியங்களை விரைவாகச் செய்ய வேண்டும்; அதுதான் முக்கியம்.

**ஆல்பனி:** தயாராயிருப்போம்.

[போகிறார்]

**எட்மன்ட்:** அக்காளையும் தங்கையையும் காதலிப்பதாக இருவரிடமும் உறுதி கூறிவிட்டேன். ஒருத்தி மற்றொருத்தியைக் கண்டு ஐயுறுகிறாள், கடிபட்டவன் பாம்பைக் கண்டு அஞ்சுவதுபோல்.

Neither can be enjoy'd,
If both remain alive : to take the widow
Exasperates, makes mad her sister Goneril;
And hardly shall I carry out my side,
Her husband being alive. Now then we'll use
His countenance for the battle; which being done,
Let her who would be rid of him devise
His speedy taking off. As for the mercy
Which he intends to Lear and to Cordelia,
The battle done, and they within our power,
Shall never see his pardon; for my state
Stands on me to defend, not to debate.

Exit



## SCENE II

A field between the two camps.
Alarum within. Enter,
with drum and colours, KING LEAR,
CORDELIA, and Soldiers, over the stage; and exeunt
Enter EDGAR and GLOUCESTER

**EDGAR :** Here, father, take the shadow of this tree
For your good host; pray that the right may thrive :
If ever I return to you again, I'll bring you comfort.

**GLOUCESTER :** Grace go with you, sir!
Exit EDGAR

Alarum and retreat within.
Re-enter EDGAR





இருவரில் யாரை நான் ஏற்றுக்கொள்வது? இருவரையுமா? ஒருத்தியையா? அல்லது, இருவரையுமே தள்ளிவிடலாமா? இருவரும் உயிரோடிருந்தால், ஒருத்தியையும் அனுபவிக்க முடியாது. கைம்பெண்ணை ஏற்றுக் கொண்டால், அவளுடைய தமக்கை, கானெரில் அதைத் தாங்கமுடியாமல் பித்தியாகி விடுவாள். அவளுடைய கணவன் உயிரோடிருக்கையில், அவளுக்கு சொன்ன சொல்லையும் நான் காப்பாற்றமுடியாது. போரில் அவரைப் பயன்படுத்துவோம். போருக்குப் பின் எவள் அவரை ஒழிக்கவேண்டும் என்று நினைக்கிறாளோ, அவளே அவரை ஒழிக்கும் வழியைத் தேடட்டும். லீயரிடமும், கார்டீலியாவிடமும் கருணை காட்ட விரும்புகிறார் அவர். ஆனால், போருக்குப் பின் அவர்கள் நம்முடைய கைவசம் வந்துவிடுவார்கள். அவர்களுக்கு இவருடைய கருணை கிடைக்க வொட்டாமல் பார்த்துக் கொள்வோம். என்னுடைய நிலையில், நான் கவனிக்க வேண்டியது ஆராய்ச்சியல்ல, போராட்டந்தான்.

[போகிறான்]



## காட்சி 2

இரு பாசறைகளுக்குமிடையில் ஒரு வயல்
[அபாயச் சங்கு ஊதுகிறது; முரசு கொடிகளோடு லீயர்,
கார்டீலியா, போர்வீரர்கள் வந்து போகிறார்கள்]
[எட்காரும் க்ளாஸ்டரும் வருகிறார்கள்]

**எட்கார்:** அப்பா, இந்த மர நிழலைப் புகலிடமாகக் கொள்ளுங்கள்; அறம் வெல்க என்று வேண்டிக் கொள்ளுங்கள். நான் திரும்பினேனேயானால் உங்களுக்கு ஆதரவு கிடைக்கும்.

**க்ளாஸ்:** இறைவன் உனக்கு அருள் செய்வார், அப்பா.
[எட்கார் போகிறான்]
[அபாயச் சங்கு ஊதுகிறது. படை பின்வாங்குகிறது.
எட்கார் மறுபடியும் வருகிறான்]

**EDGAR :** Away, old man; give me thy hand; away!
KING LEAR hath lost, he and his daughter ta'en :
Give me thy hand; come on.

**GLOUCESTER :** No farther,
sir; a man may rot even here.

**EDGAR :** What, in ill thoughts again? Men must endure
Their going hence, even as their coming hither;
Ripeness is all : come on.

**GLOUCESTER** : And that's true too.

Exeunt



## SCENE III.

The British camp near Dover.
Enter, in conquest, with drum and colours,
EDMUND, KING LEAR and CORDELIA,
prisoners; Captain, Soldiers, & c

**EDMUND** : Some officers take them away : good guard,
Until their greater pleasures first be known
That are to censure them.

**CORDELIA :** We are not the first
Who, with best meaning, have incurr'd the worst.
For thee, oppressed king, am I cast down;
Myself could else out-frown false fortune's frown.
Shall we not see these daughters and these sisters?



**எட்கார்:** பெரியவரே, ஓடிவிடுங்கள். கையைக் கொடுங்கள், ஓடிவிடுவோம். லீயர் அரசர் தோற்று விட்டார். அவரும் அவர் மகளும் பிடிபட்டனர். கொடுங்கள் கையை, போவோம்.

**க்ளாஸ்:** இதற்குமேல் போக வேண்டாம், ஐயா. அழுகிச் சாவதற்கு இந்த இடமே போதும்.

**எட்கார்:** என்ன? கெட்ட நினைப்பு மறுபடியுமா? இங்கு வந்தோமே, அதைப் பொறுத்துக் கொண்டோம்; அதைப்போல, இதை விட்டுப் போவதையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். பக்குவம்தான் முக்கியம்; வாருங்கள்.

**க்ளாஸ்:** அதுவும் உண்மைதான்.

[போகிறார்கள்]



## காட்சி 3

டோவருக்கு அருகில் பிரிட்டிஷ் பாசறை
[வெற்றி முரசு முழங்க, கொடிகளோடு, எட்மன்ட் வருகிறான்;
லீயர், கார்டீலியா, கைது செய்யப்பட்டு வருகிறார்கள்;
தளகர்த்தரும் போர்வீரர்களும் மற்றவர்களும்]

**எட்ம:** வீரர்களே, அவர்களைக் கொண்டு போங்கள்; மெய்காவலனே, மேலிடத்தார் இவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை என்ன வென்று தெரியும் வரை, இவர்களைக் காவலில் வை.

**கார்டீலியா:** நல்லெண்ணம் உடையவர்கள் துன்பத்துக்கு ஆளாகிறார்கள்; நாம் தான் அவ்வாறு துன்பப்படுகிறோம் என்பதில்லை. கொடுந் துன்பத்துக்காளான அரசரே, தங்களை நினைத்துத்தான் நான் வருந்துகிறேன். என்னைப் பற்றிய மட்டில், போலி விதியின் நையாண்டியைக் கண்டு நையாண்டி செய்ய முடியம் என்னால். இந்தப் புதல்வியரையும், சகோதரிகளையும் நாம் சந்திக்க வேண்டாமா?

**KING LEAR :** No, no, no, no!
Come, let’s away to prison :
We two alone will sing like birds i’ the cage :
When thou dost ask me blessing, I’ll kneel down,
And ask of thee forgiveness : so we’ll live,
And pray, and sing, and tell old tales, and laugh
At gilded butterflies, and hear poor rogues
Talk of court news; and we’ll talk with them too,
Who loses and who wins; who’s in, who’s out;
And take upon’s the mystery of things,
As if we were God’s spies :
and we’ll wear out,
In a wall’d prison, packs and sects of great ones,
That ebb and flow by the moon.

**EDMUND :** Take them away.

**KING LEAR :** Upon such sacrifices,
my Cordelia, The gods themselves
throw incense. Have I caught thee?
He that parts us shall bring a brand from heaven,
And fire us hence like foxes.
Wipe thine eyes; The good-years shall devour them,
flesh and fell, Ere they shall make us weep :
we’ll see ‘em starve first. Come.

Exeunt KING LEAR and CORDELIA, guarded

**EDMUND** : Come hither, captain; hark.
Take thou this note;





**லீயர் :** வேண்டாம், வேண்டாம், வேண்டாம். வா, நாம் சிறைச்சாலைக்குப் போய்விடுவோம். கூண்டுக்குள்ளிருக்கும் பறவைகளைப் போல நாம் தனித்திருந்து பாடுவோம். நீ என்னிடம் ஆசீர்வாதம் கேட்கும்போதெல்லாம், நான் மண்டியிட்டு உன்னிடம் மன்னிப்புக் கேட்பேன். தொழுதும், பாடியும், பழங்கதைகள் பேசியும், பசப்பும் வண்ணத்துப் பூச்சிகளைப் பார்த்து நகைத்தும், அரண்மனைச் செய்திகளைப் புல்லோம் சொல்லக் கேட்டும், “யாருக்குத் தோல்வி? யாருக்கு வெற்றி? பதவி யாருக்குக் கிடைத்தது? பதவியை இழந்தவன் யார்?” என்று ஊர் வம்பு பேசியும், பேரண்டத்தின் அற்புதத்தையே நாம் மேற்கொண்டவர்களாய், இறைவனுடைய வேவுகாரர்களைப் போல, நாம் வாழ்க்கை நடத்துவோம். சுவர் சூழ்ந்த சிறையில் இருந்துகொண்டு, மேலிடத்திலிருக்கும் கூட்டுகளும் கட்சிகளும், பிறையோடு, வளர்வதையும் தேய்வதையும் பார்த்துக் காலங்கழிப்போம்.

**எட்ம:** அவர்களைக் கொண்டுபோ.

**லீயர் :** கார்டீலியா, இதைப் போன்ற தியாகங்களைக் கண்டு தெய்வங்களே தூபம் போட்டு வணங்குவார்கள். உன்னை அணைத்துக் கொண்டேனல்லவா? இனி நம்மை மானுடனால் பிரிக்க இயலாது. நம்மைப் பிரித்து வைக்க முனைகிறவன் தேவலோகத்திலிருந்து கொள்ளிக்கட்டை கொண்டுவந்து, நரிகளை வளைகளிலிருந்து மூட்டம் போட்டு விரட்டுவது போல, நம்மை இங்கிருந்து விரட்ட வேண்டும். உன் கண்களைத் துடைத்துக்கொள். நம்மைக் கண்ணீர் சிந்த வைப்பவர்களை வேதாளம் உடலோடு விழுங்கிவிடும். அவர்களைப் பட்டினி போட்டுப் பார்ப்போம், வா.

[காவலர்பின் லீயரும், கார்டீலியாவும் போகிறார்கள்]

**எட்ம:** இங்கு வாரும் தளகர்த்தரே; இந்தச் சீட்டை கவனத்தோடு எடுத்துக் கொள்ளும்.

Giving a paper

go follow them to prison :
One step I have advanced thee; if thou dost
As this instructs thee, thou dost make thy way
To noble fortunes : know thou this, that men
Are as the time is : to be tender-minded
Does not become a sword : thy great employment
Will not bear question; either say thou'lt do 't,
Or thrive by other means.

**Captain :** I'll do 't, my lord.

**EDMUND:** About it; and write happy when thou hast done.
Mark, I say, instantly; and carry it so
As I have set it down.

**Captain :** I cannot draw a cart, nor eat dried oats;
If it be man's work, I'll do 't.

Exit

Flourish. Enter ALBANY, GONERIL, REGAN, another Captain, and Soldiers

**ALBANY :** Sir, you have shown to-day your valiant strain,
And fortune led you well : you have the captives
That were the opposites of this day's strife :
We do require them of you, so to use them
As we shall find their merits and our safety
May equally determine.







[ஒரு தாளைக் கொடுக்கிறான்]

சிறைச்சாலைக்கு அவர்களைத் தொடர்ந்து செல்லும். பதவியில் உம்மை ஒருபடி உயர்த்தியிருக்கிறேன். ஆணையிட்டபடி நீர் நடந்தால் இன்னும் பெரும் பதவி கிடைக்கும். காலத்திற்கேற்ப மனிதர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று உமக்குத் தெரியுமல்லவா. இளக்கமான மனசு வாளொடு பொருந்தாது. உமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மகத்தான பணியைப் பற்றி ஏன் என்று கேட்பதற்கு ஒருவரும் கிடையாது. செய்கிறேன் என்று சொல்லும், அல்லது பிழைப்பதற்கு வேறு வழி தேடிக்கொள்ளும்.

**தளகர்:** செய்து முடிக்கிறேன், பிரபு.

**எட்ம:** அதைப்பற்றி இன்னொரு சொல். காரியத்தை முடித்த பிறகு, நீர் ஓர் அதிர்ஷ்டசாலி என்பது உறுதி. தெரிந்ததா? உடனே முடிக்க வேண்டும்; அதில் எழுதியிருக்கிறபடியே நிறைவேற்ற வேண்டும்.

**தளகர்:** எனக்கு வண்டியிழுக்கத் தெரியாது, காய்ந்து போன ஓட்ஸைத் தின்னவும் தெரியாது. ஆனால், ஆண்மைக்குரிய எந்த வேலையையும் செய்து முடிப்பேன்.

[போகிறான்]

[முழக்கம். ஆல்பனி, கானெரில், ரீகன், சேனைத்தலைவன், போர் வீரர்கள் வருகிறார்கள்]

**ஆல்பனி:** ஐயா, உங்கள் வீர மரபை இன்று மெய்ப்பித்து விட்டீர்கள். அதிர்ஷ்டமும் உங்களுக்குக் கைகொடுத்தது. இன்றைய யுத்தத்தில் நமது பகைவர்களாயிருந்தவர்கள் இப்போது உங்களுடைய கைதிகளாகி விட்டார்கள். அவர்களுடைய தகுதிக்கும், நம்முடைய நன்மைக்கும் உகந்த முறையில் அவர்களை நடத்த வேண்டும்.

**EDMUND :** Sir, I thought it fit
To send the old and miserable king
To some retention and appointed guard;
Whose age has charms in it, whose title more,
To pluck the common bosom on his side,
An turn our impress'd lances in our eyes
Which do command them. With him I sent the queen;
My reason all the same; and they are ready
To-morrow, or at further space, to appear
Where you shall hold your session. At this time
We sweat and bleed : the friend hath lost his friend;
And the best quarrels, in the heat, are cursed
By those that feel their sharpness :
The question of Cordelia and her father
Requires a fitter place.

**ALBANY :** Sir, by your patience,
I hold you but a subject of this war,
Not as a brother.

**REGAN** : That's as we list to grace him.
Methinks our pleasure might have been demanded,
Ere you had spoke so far. He led our powers;
Bore the commission of my place and person;
The which immediacy may well stand up,
And call itself your brother.

**GONERIL** : Not so hot : In his own grace he doth exalt himself,
More than in your addition.

**REGAN :** In my rights, By me invested, he compeers the best.







**எட்ம:** ஐயா, நொந்துபட்ட கிழட்டரசனை சிறைச்சாலைக்கு அனுப்புவதே நலம் என்று அவரை அங்கே அனுப்பிவிட்டேன்; சிறைக்குக் காவலும் போட்டு விட்டேன். இல்லை யென்றால், பொதுமக்களால் நமக்கு அபாயம் ஏற்படும். அரசனுடைய வயதுக்கு இரங்கியும், பதவியை மதித்தும் சாமானிய மக்கள் அவர் பக்கம் திரும்பிவிடுவார்கள். அதோடு கூலிக்காக நம் கட்சியில் போரிட்டவர்கள் நாம் கொடுத்த ஈட்டியைக் கொண்டே நம்மைக் குத்த முனைவார்கள். அவரோடு அரசியையும் அனுப்பிவிட்டேன், அதே காரணத்துக்காக. நாளையோ, பின்னரோ தாங்கள் அரசவை கூட்டும்போது, அவர்கள் தங்கள் முன் வந்து நிற்கத் தயாராயிருப்பார்கள். நாம் வியர்த்துக் கொண்டும், ரத்தம் சிந்திக் கொண்டுமிருக்கும் சமயம் இது; நண்பன் தன் நண்பனை இழந்து நிற்கிறான்; போரினால் அல்லலுற்று நிற்பவர்கள், போரைச் சபித்துக் கொண்டேதான் இருப்பார்கள், அது எவ்வளவு உயர்ந்த அறப்போரானாலும் சரி.
கார்டீலியாவையும், அவள் தகப்பனையும் பற்றி முடிவுக்கு வரவேண்டிய சமயம் இதுவல்ல.

**ஆல்பனி:** ஐயா, பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களை நான் ஒரு பிரஜையாகவே கருதுகிறேன், சகோதரனாக அல்ல.

**ரீகன்:** அது நம்முடைய தயவைப் பொறுத்தது. நீங்கள் இவ்வளவு தூரம் பேசுவதற்குமுன் நம்முடைய கருத்தென்னவென்று தெரிந்திருக்க வேண்டும். அவர் நம்முடைய படைக்குத் தலைமை தாங்கினார். என்னுடைய நிலையிலிருந்து எனக்காக ஆணை செலுத்தினார். இவ்வளவு உயர் பதவியிலிருக்கும் அவர் எழுந்து நின்று உம்மை 'சகோதரனே' எனறு அழைப்பதில் குற்றம் ஒன்றும் இல்லை.

**கானெரில்:** அவ்வளவு சூடாகப் பேச வேண்டியதில்லை. அவர் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவருடைய வெற்றியேயொழிய, அவருக்கு நல்கும் பதவியல்ல.

**ரீகன்:** நான் நல்கிய உரிமைகளைப் பெற்று, மிகச் சிறந்தவர்களுக்கும் நிகராக அவர் விளங்குகிறார்.

**GONERIL** : That were the most,
if he should husband you.

**REGAN :** Jesters do oft prove prophets.

**GONERIL :** Holla, holla!
That eye that told you so look'd but a-squint.

**REGAN** : Lady, I am not well; else I should answer
From a full-flowing stomach. General,
Take thou my soldiers, prisoners, patrimony;
Dispose of them, of me; the walls are thine :
Witness the world, that I create thee here
My lord and master.

**GONERIL :** Mean you to enjoy him?

**ALBANY :** The let-alone lies not in your good will.

**EDMUND :** Nor in thine, lord.

**ALBANY :** Half-blooded fellow, yes.

**REGAN :** [To EDMUND]
Let the drum strike,
and prove my title thine.

**ALBANY :** Stay yet; hear reason.
Edmund, I arrest thee
On capital treason; and, in thine attaint,
This gilded serpent





**ஆல்பனி:** அவர் உனக்குக் கணவரானால், அதைக் காட்டிலும் சிறந்து விளங்குவார்.

**ரீகன்:** விகடப் பேச்சும், பல சமயங்களில் தீர்க்கதரிசியின் பேச்சாக முடிகிறது.

**கானெரில்:** அடடா, அப்படி உனக்குச் சொல்லிக் கொடுத்த கண் மாறுகண் போல விழிக்கிறதே.

**ரீகன்:** அம்மணி, எனக்கு உடல்நலமில்லை. இருந்திருந்தால், ஆத்திரத்தோடு பதில் சொல்லியிருப்பேன்

தளபதியே, என்னுடைய போர்வீரர்கள், கைதிகள், பிதிரார்ஜிதம் எல்லாவற்றையுமே எடுத்துக் கொள்ளுங்கள்; அவற்றையும், என்னையுமே உங்கள் விருப்பம்போல் ஆட்சி செய்யுங்கள். சரணடைந்து கோட்டையை உங்களுக்கே விட்டு விட்டேன். நீங்களே என்னுடைய கணவர், என்னுடைய தலைவர் என்று உலகறிய உங்களை ஏற்றுக் கொண்டேன்.

**கானெரில்:** நீ அவரை சுகிக்க விரும்புகிறாயா?

**ஆல்பனி:** இதைத் தடுப்பதற்கு உன்னால் ஆகாது.

**எட்ம:** உங்களாலும் முடியாது, பிரபு.

**ஆல்பனி:** முடியுமடா, ஜாதி கெட்ட பயலே!

**ரீகன்:** [எட்மன்டைப் பார்த்து] முரசு முழக்கி, என்னுடைய பதவி உங்களுடைய என்று நிலை நாட்டுங்கள்.

**ஆல்பனி:** கொஞ்சம் பொறு. காரணத்தைத் தெரிந்துக் கொள்

Pointing to Goneril
For your claim, fair sister,
I bar it in the interest of my wife :
'Tis she is sub-contracted to this lord,
And I, her husband, contradict your bans.

If you will marry, make your loves to me,
My lady is bespoke.

**GONERIL :** An interlude!

**ALBANY :** Thou art arm'd, Gloucester : let the trumpet sound :
If none appear to prove upon thy head
Thy heinous, manifest, and many treasons,
There is my pledge;



Throwing down a glove

I'll prove it on thy heart,
Ere I taste bread, thou art in nothing less
Than I have here proclaim'd thee.

**REGAN :** Sick, O, sick!

**GONERIL :** [Aside] If not, I'll ne'er trust medicine.

**EDMUND :** There's my exchange : Throwing down a glove
what in the world he is
That names me traitor, villain-like he lies :
Call by thy trumpet : he that dares approach,
On him, on you, who not? I will maintain
My truth and honour firmly.





எட்மன்ட், ராஜதுரோகத்துக்காக உன்னைக் கைது செய்கிறேன். உன்னைத் தண்டிப்பதன் மூலம், [கானெரிலைச் சுட்டிக் காட்டி] மினுக்கும் இந்தப் பாம்பையும் தண்டிக்கிறேன்.

அழகு மைத்துனியே, என்னுடைய மனைவியின் நன்மைக்காக, உன்னுடைய உரிமைக்குத் தடைபோடுகிறேன். அவள் இந்தப் பிரபுவுக்குத் தன்னைச் சித்தொத்தி வைத்திருக்கிறாள்; அவளுடைய கணவன் என்ற முறையில், உன்னுடைய திருமணத்துக்கு ஆக்ஷேபணை தெரிவிக்கிறேன். நீ மணம் செய்ய விரும்பினால், என்னோடு காதல் புரியலாம். என்னுடைய மனைவிக்கும் அவனுக்கும் திருமணம் நிச்சயமாகிவிட்டது.

**கானெரில்:** இது ஒரு குட்டி நாடகமா!

**ஆல்பனி:** க்ளாஸ்டர், நீ ஆயுத பாணியாயிருக்கிறாய். எக்காளம் முழங்கட்டும்! உன்னுடைய பித்தலாட்டமான துரோகங்களை நிலைநாட்ட ஒருவரும் முன்வராவிட்டாலும், இதோ என்னுடைய சபதம்! [ஒரு கையுறையைக் கீழே எறிந்து கொண்டு] உன் நெஞ்சறிய நீ ஒரு துரோகி என்று நிலைநாட்டுகிறேன்; உணவருந்துவதற்குமுன் அதை நிலைநாட்டுகிறேன்; என் குற்றச்சாட்டில் இம்மியும் பிழையில்லை என்று நிலைநாட்டுகிறேன்.



**ரீகன்:** நோகிறதே, ஓ, நோகிறதே.

**கானெரில்:** [தனக்குள்] எனக்கு நோகவில்லையென்றால், மருந்தின்மேல் நான் வைத்த நம்பிக்கை தவறு என்றாகுமே.

**எட்ம:** [கையுறையைக் கீழே எறிந்து கொண்டு] இதோ என்னுடைய பதில். இந்த உலகில் எவன் என்னைத் துரோகி என்று சொல்லுகிறானோ, அவன் ஒரு அயோக்கியப் பொய்யன். உன் எக்காளத்தை முழக்கி அவனைக் கூப்பிடு. நீ வந்தாலும் சரி, எவன் வந்தாலும் சரி, அவனோடு போரிட்டு, என் வாய்மையையும், மானத்தையும் நிலைநாட்டுவேன்.

**ALBANY :** A herald, ho!

**EDMUND :** A herald, ho, a herald!

**ALBANY :** Trust to thy single virtue; for thy soldiers,
All levied in my name, have in my name
Took their discharge.

**REGAN :** My sickness grows upon me.

**ALBANY :** She is not well;
convey her to my tent.

Exit Regan, led



Enter a Herald

Come hither, herald,
Let the trumpet sound,
And read out this.

**Captain :** Sound, trumpet!

A trumpet sounds

**Herald :** [Reads] 'If any man of quality or degree within the lists of the army will maintain upon Edmund, supposed Earl of Gloucester, that he is a manifold traitor, let him appear by the third sound of the trumpet : he is bold in his defence.'





**ஆல்பனி:** ஓ, தூதுவனே, இங்கே வா.

**எட்ம:** தூதன், ஓ, தூதன்.

**ஆல்பனி:** நீ உன்னையே நம்பி நில்.

ஏனெனில், என்னுடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து உன்னிடமிருந்து போர்வீரர்கள் என் ஆணையால் விலக்கப்பட்டுவிட்டனர்.

**ரீகன்:** எனக்கு நோய் அதிகமாகிறதே!

**ஆல்பனி:** அவளுக்கு உடல் நலமில்லை

அவளை என் கூடாரத்துக்குக் கொண்டு போங்கள்.

[ரீகனை நடத்திச் செல்லுகிறார்கள்]
[தூதன் ஒருவன் வருகிறான்]



இங்கே வா, தூதனே, எக்காளம் ஊதட்டும் இதை வாய்விட்டுப் படி.

**தளகர்த்தன்:** எக்காளம் ஊதட்டும்.

[எக்காளம் ஊதுகிறது]

**தூதன்:** [படிக்கிறான்]

“படையிலுள்ளவர்கள் யாராவது க்ளாஸ்டர் பிரபு என்று சொல்லுக்கொள்ளும் எட்மன்ட் பற்பல துரோகங்கள் செய்தவன் என்று நிலைநாட்ட முடியுமானால், எக்காளம் மூன்றாவது முறை ஊதியதும், அவர் இங்கு ஆஜராகவும். தான் துரோகியல்ல என்று துணிவுடன் எட்மன்ட் சொல்லுகிறான்.”

**EDMUND :** Sound!
First trumpet

**Herald :** Again!
Second trumpet

**Herald :** Again!
Third trumpet

Trumpet answers within

Enter EDGAR, at the third sound,
armed, with a trumpet before him

**ALBANY :** Ask him his purposes, why he appears
Upon this call o' the trumpet.

**Herald :** What are you?
Your name, your quality? and why you answer
This present summons?

**EDGAR :** Know, my name is lost; by treason's tooth bare-gnawn and canker-bit : Yet am I noble as the adversary
I come to cope.

**ALBANY :** Which is that adversary?

**EDGAR :** What's he that speaks for Edmund Earl of Gloucester?

**EDMUND :** Himself : what say'st thou to him?

**EDGAR :** Draw thy sword,
That, if my speech offend a noble heart,

**எட்ம:** ஊது!
[முதல் எக்காளம்]

**தூதன்:** இன்னொருதரம்!
[இரண்டாவது எக்காளம்]

**தூதன்:** மறுபடியும்!
[மூன்றாவது எக்காளம்]

[உள்ளிருந்து எக்காளம் பதில் ஊதுகிறது]

[முன்னால் எக்காளம் ஊதி வர, எட்கார் போர் உடை அணிந்து வருகிறான்]

**ஆல்பனி:** எக்காளம் ஊதியதும், அவன் வருகிறானே, என்ன நோக்கத்தோடு வருகிறான் என்று கேள்.

**தூதன்:** நீ யார்? உன் பெயர் என்ன? எந்த வகுப்பைச் சேர்ந்தவன் நீ? எதற்காக இங்கு வந்தாய்?

**எட்கார்:** என்னுடைய பெயரை இழந்துவிட்டேன். துரோகத்தின் பல், மிச்சம் கிச்சம் வைக்காமல், என் பெயரை மென்று விழுங்கி விட்டது. ஆனாலும், என்னோடு மல்லாடப் போகும் எதிரியைப் போல், ஒரு பிரபு வகுப்பைச் சேர்ந்தவன் நான்.

**ஆல்பனி:** உன் எதிரி யார்?

**எட்கார்:** க்ளாஸ்டர் கோமகன், எட்மன்டுக்காக யார் பேசுகிறார்கள்?

**எட்ம:** அவனே, அவனிடம் என்ன சொல்ல விரும்புகிறாய்?

**எட்கார்:** உன் வாளை உருவு, என்னுடைய பேச்சினால் உன் உள்ளம் நோகுமேயானால், உன்னுடைய வாளால் உனக்கே நீதி

Thy arm may do thee justice :
here is mine. Behold, it is the privilege
of mine honours, My oath, and
my profession : I protest,
Maugre thy strength, youth, place, and eminence,
Despite thy victor sword and fire-new fortune,
Thy valour and thy heart, thou art a traitor;
False to thy gods, thy brother, and thy father;
Conspirant 'gainst this high-illustrious prince;
And, from the extremest upward of thy head
To the descent and dust below thy foot,
A most toad-spotted traitor. Say thou 'No,'
This sword, this arm, and my best spirits, are bent
To prove upon thy heart, whereto I speak,
Thou liest.

**EDMUND :** In wisdom I should ask thy name;
But, since thy outside looks so fair and warlike,
And that thy tongue some say of breeding breathes,
What safe and nicely I might well delay
By rule of knighthood, I disdain and spurn :
Back do I toss these treasons to thy head;
With the hell-hated lie o'erwhelm thy heart;
Which, for they yet glance by and scarcely bruise,
This sword of mine shall give them instant way,
Where they shall rest for ever. Trumpets, speak!

Alarums. They fight.
EDMUND falls

**ALBANY :** Save him, save him!

வழங்கிக்கொள். இதோ இருக்கிறது என் வாள். என்னுடைய மானத்தையும், சத்தியத்தையும், தொழிலையும் காக்கும் வாள் இது. உனக்கு பலமிருக்கலாம், பதவியிருக்கலாம், இளமையும் உயர்நிலையும் இருக்கலாம்; உனக்கு வெற்றியும், புத்தம் புதிய மவுசும் கிட்டியிருக்கலாம்; உனக்கு வீரமும் துணிச்சலும் இருக்கலாம். இருந்தாலும், நீ ஒரு துரோகியென்று நான் சொல்லுகிறேன். உன்னுடைய தெய்வங்களுக்குப் பொய்த்தவன் நீ; உன்னுடைய சகோதரனுக்குப் பொய்த்தவன் நீ; உன்னுடைய தந்தைக்குப் பொய்த்தவன் நீ; மாண்புமிக்க இந்த இளவரசருக்கு விரோதமாகச் சூழ்ச்சிசெய்த சதிகாரன் நீ. உன்னுடைய தலையின் உச்சியிலிருந்து, உள்ளங்காலில் இருக்கும் தூசிவரை சொரி பிடித்த துரோகி நீ. இல்லையென்று நீ சொல்லுவாயானால், இந்த வாளும், இந்தக் கையும், என்னுடைய ஆர்வமும் நீ சொல்வது பொய் என்று உன் நெஞ்சில் அடித்துக் காட்டும்.

**எட்ம:** உண்மையில் உன் பெயர் என்ன என்று தெரிவிக்க வேண்டியதுதான் நியாயம். ஆனால், உன் வெளித்தோற்றம் வீரனைப் போலிருப்பதாலும், உன் பேச்சு உயர்ந்த குடிப்பிறப்பைக் காட்டுவதாலும், போர் நெறிக்குரிய தர்க்க நுணுக்கங்களைக் கிளப்பித் தாமதம் செய்ய நான் விரும்பவில்லை. அவ்வாறு செய்வது ஆண்மையல்லவென்று அதை இகழ்ந்து ஒதுக்குகிறேன். நீ என் மேல் சுமத்தின துரோகத்தை யெல்லாம் உன் தலையில் சுமத்துகிறேன். நீ சொன்ன பொய்யைக் கேட்டு நரகமே வெறுப்படையும். அந்தப் பொய் உன் இதயத்தைத் தாக்கி நைக்கட்டும். என்னுடைய வாளால் உன் நெஞ்சைப் பிளக்கிறேன், பிளந்த நெஞ்சுக்குள்ளே உன் பொய்க் குற்றச்சாட்டுகள் சென்று என்றென்றும் இளைப்பாறட்டும்.
எக்காளங்களே, ஊதுங்கள்!

[எச்சரிக்கைச் சங்கு ஊதுகிறது. இருவரும் வாட்போர் நடத்துகிறார்கள். எட்மன்ட் கீழே விழுகிறான்]

**ஆல்பனி:** அவனைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்!

**GONERIL :** This is practise, Gloucester :
By the law of arms thou wast not bound to answer
An unknown opposite;
thou art not vanquish'd,
But cozen'd and beguiled.

**ALBANY :** Shut your mouth, dame,

Or with this paper shall I stop it : Hold, sir :
Thou worse than any name, read thine own evil :
No tearing, lady : I perceive you know it.

Gives the letter to EDMUND

**GONERIL :** Say, if I do,
the laws are mine, not thine :
Who can arraign me for't.

**ALBANY :** Most monstrous! oh!
Know'st thou this paper?

**GONERIL :** Ask me not what I know.

Exit

**ALBANY :** Go after her :
she's desperate; govern her.

**EDMUND :** What you have charged me with, that have I done;
And more, much more; the time will bring it out :
'Tis past, and so am I. But what art thou

**கானெரில்:** க்ளாஸ்டர், இது ஒரு சூழ்ச்சி. இன்னாரென்று தெரியாத ஒரு எதிரியோடு உங்களை வாட்போர் செய்ய வைத்தது போர் முறையல்ல. நீங்கள் தோற்கவில்லை, சூழ்ச்சியினால் மோசம் போனீர்கள்.

**ஆல்பனி:** உன் வாயைமூடு, அம்மணி. இல்லையென்றால், இந்தக் கடிதத்தைக் கொண்டு உன் வாயடைப்பேன்

இரு, ஐயா, இழிவுக்கும் இழிவானவனே, உன்னுடைய தீவினையை நீயே படித்துப் பார்;

பெண்ணே, கிழித்துவிடாதே. உனக்கு அது தெரியும் என்று எனக்குத் தெரியும்.
[கடிதத்தை எட்மன்டிடம் கொடுக்கிறார்]

**கானெரில்:** எனக்குத் தெரிந்திருந்தால்தான் என்ன? சட்டம் என்னுடையது, உன்னுடையதல்ல. என்மீது குற்றஞ்சாட்ட எவனால் முடியும்?

**ஆல்பனி:** ஓ, அபாண்டமான கயமை!

இந்தக் கடிதம் யாருடையது என்று உனக்குத் தெரியுமல்லவா?

**கானெரில்:** எனக்கு என்ன தெரியும் என்பதைப் பற்றி என்னிடம் கேட்க வேண்டாம்.

[போகிறாள்]

**ஆல்பனி:** (ஒரு படைத்தலைவனைப் பார்த்து) அவள் பின்னால் போ. அவள் எதையும் செய்து விடுவாள்; அவளை அமர்த்திவை.
[படைத்தலைவன் போகிறான்]

**எட்ம:** நீ என்மேல் சாட்டிய குற்றம் உண்மைதான், அது மாத்திரமல்ல, அதற்கு மேலும் செய்திருக்கிறேன். காலம் அதை

That hast this fortune on me? If thou'rt noble,
I do forgive thee.

**EDGAR :** Let's exchange charity.
I am no less in blood than thou art, Edmund;
If more, the more thou hast wrong'd me.
My name is Edgar, and thy father's son.
The gods are just, and of our pleasant vices
Make instruments to plague us :
The dark and vicious place where thee he got
Cost him his eyes.

**EDMUND :** Thou hast spoken right, 'tis true;
The wheel is come full circle : I am here.

**ALBANY :** Methought thy very gait did prophesy
A royal nobleness :
I must embrace thee :
Let sorrow split my heart, if ever I
Did hate thee or thy father!

**EDGAR :** Worthy prince, I know't.

**ALBANY :** Where have you hid yourself?
How have you known the miseries of your father?

**EDGAR :** By nursing them, my lord.
List a brief tale;
And when 'tis told, O,
that my heart would burst!
The bloody proclamation to escape,







வெளிக் கொணரும். எல்லாம் முடிந்து போன காரியங்கள். நானும் முடிகிறேன்

ஆனால், எனக்கு இந்தப் பேற்றை நல்கிய நீ யார்? நீ பிரபு வமிசத்தைச் சேர்ந்தவன் என்றால் உன்னை மன்னிக்கிறேன்;

**எட்கார்:** பரிவைப் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வோம். எட்மன்ட், குடிப்பிறப்பிலே நான் உனக்குக் குறைந்தவனல்ல. பிறப்பிலே உன்னிலும் நான் உயர்ந்தவன் என்று வைத்துக் கொண்டால், நீ எனக்குச் செய்த குற்றமும் அந்த அளவுக்குப் பெரியது. எட்கார் என்பது என் பெயர், நான் உன் தந்தையின் மகன். தெய்வங்கள் நீதிமான்கள்; நமக்கு இனிப்பாக இருக்கும் நம் குற்றங்களையே கருவியாகக் கொண்டு, அவர்கள் நம்மைத் தண்டிக்கிறார்கள். இருண்ட புன்னெறியிலே அவர் உன்னைப் பெற்றார், அதனால் கண்களை இழந்தார்.

**எட்ம:** நீ சரியாகச் சொன்னாய். உன் சொல்லில் உண்மையிருக்கிறது. சக்கரம் முழுவட்டமும் சுற்றிவிட்டது; நானும் இருக்கிறேன் இங்கே.

**ஆல்பனி:** உன்னுடைய நடையிலேயே ராஜகம்பீரியத்தைக் கண்டேன். உன்னை நான் தழுவிக்கொள்ள வேண்டும்; உன்னையாவது உன் தந்தையையாவது நான் எப்போதாவது வெறுத்திருந்தேனேயானால், துன்பத்தால் என் நெஞ்சு வெடிக்கட்டும்.

**எட்கார்:** மாண்புமிக்க இளவரசரே, எனக்குத் தெரியாதா.

**ஆல்பனி:** நீ எங்கு ஒளிந்திருந்தாய்? உன் தந்தையின் துயரங்களைப் பற்றி எப்படி அறிந்தாய்?

**எட்கார்:** பிரபு, அவருக்குப் பணிவிடை செய்வதன் மூலம். கதையைச் சுருக்கமாகக் சொல்லுகிறேன். அதைச் சொல்லும்போதே என் இதயம் வெடித்தாலும் வெடித்து விடும்! என்னைக் கொல்ல வேண்டுமென்று பறைசாற்றினார்களே! அந்த அறிக்கைக்குத்

That follow'd me so near,
O, our lives' sweetness!
That we the pain of death would hourly die
Rather than die at once!
taught me to shift
Into a madman's rags;
to assume a semblance
That very dogs disdain'd : and in this habit
Met I my father with his bleeding rings,
Their precious stones new lost :
became his guide,
Led him, begg'd for him, saved him from despair;
Never,--O fault!--reveal'd myself unto him,
Until some half-hour past, when I was arm'd :
Not sure, though hoping, of this good success,
I ask'd his blessing, and from first to last
Told him my pilgrimage :
but his flaw'd heart,
Alack, too weak the conflict to support!
'Twixt two extremes of passion, joy and grief,
Burst smilingly.

**EDMUND :** This speech of yours hath moved me,
And shall perchance do good :
but speak you on;
You look as you had something more to say.

**ALBANY :** If there be more, more woeful, hold it in;
For I am almost ready to dissolve,
Hearing of this.

தப்புவதற்குத்தான் எத்தனை பாடுபட்டேன்! வாழ்க்கை அவ்வளவு இனிப்பாக இருக்கிறது! மரண தண்டனை யடைந்தவன், மரண பயத்தால், மணிதோறும் செத்துக் கொண்டிருப்பானே யொழிய, உடனே சாவதற்கு உடன்பட மாட்டான். அந்த அறிக்கை எனக்குப் பைத்தியக்கார வேஷம் போடச் சொல்லிக் கொடுத்தது. என்னுடைய கந்தல் உருவத்தை நாய்கூட ஏறிட்டுப் பார்க்காது. அந்தக் கோலத்திலிருக்கும் போதுதான் என் தந்தையைக் கண்ணுற்றேன். அவருடைய கண்களினின்றும் குருதி வடிந்து கொண்டிருக்கிறது. வைரக் கற்களை அப்போது தான் இழந்த மோதிரங்களைப் போலிருந்தன அந்தக் கண்கள். அவருக்கு வழிகாட்டியாய் அமைந்தேன். அவரை நடத்திச் சென்றும், அவருக்காகப் பிச்சைக் கேட்டும், அவரை மாற்றொணாத் துயரத்தினின்றும் காப்பாற்றினேன். நான் யார் என்று அவரிடம் காட்டிக் கொள்ளாமலே யிருந்தேன். பெருங் குற்றந்தான் அது. அரை மணி நேரத்துக்கு முன்புதான், நான் படைக்கலம் பூண்டு கொண்டிருக்கும்போது, அவரிடம் உண்மையைச் சொன்னேன். இப்போது எனக்குக் கிட்டியிருக்கும் வெற்றியைப்பற்றி அப்போது எனக்கு நம்பிக்கையில்லை. ஆகையால் நடந்ததை யெல்லாம், ஆதியிலிருந்து அந்தம் வரை அவரிடம் சொல்லி, அவருடைய ஆசியைக் கோரி நின்றேன். ஆனால் உணர்ச்சி முரண்பாட்டைத் தாங்க முடியாமல், பெருமகிழ்ச்சிக்கும் கடுந்துயரத்துக்கும் இடையில் சிக்குண்ட அவரது நொய்ய நெஞ்சம் சிரித்துக் கொண்டே உடைந்து விட்டது.

**எட்ம:** உன்னுடைய பேச்சு என்னை உருக்கி விட்டது. ஒரு வேளை அதனால் நலம் ஏற்படலாம். ஆனால், இன்னும் சொல்லவேண்டியதைத் தொடர்ந்து சொல். ஏதோ சொல்ல விரும்புவது போலத் தெரிகிறதே.

**ஆல்பனி:** சொல்ல வேண்டிய துயரச் செய்தி இன்னும் இருந்தால், சொல்லாமல் நிறுத்திக் கொள். இதுவரையிலும் கேட்ட விஷயமே என்னைக் கரைத்து விடும் போலிருக்கிறது.

**EDGAR :** This would have seem'd a period
To such as love not sorrow; but another,
To amplify too much, would make much more,
And top extremity.
Whilst I was big in clamour came there in a man,
Who, having seen me in my worst estate,
Shunn'd my abhorr'd society; but then, finding
Who 'twas that so endured,
with his strong arms
He fastened on my neck, and bellow'd out
As he'ld burst heaven; threw him on my father;
Told the most piteous tale of Lear and him
That ever ear received : which in recounting
His grief grew puissant and the strings of life
Began to crack : twice then the trumpets sounded,
And there I left him tranced.

**ALBANY :** But who was this?

**EDGAR :** Kent, sir, the banish'd Kent; who in disguise
Follow'd his enemy king, and did him service
Improper for a slave.

Enter a Gentleman, with a bloody knife

**Gentleman :** Help, help, O, help!

**EDGAR :** What kind of help?

**ALBANY :** Speak, man.

**EDGAR :** What means that bloody knife?

**எட்கார்:** இதுவரை நான் சொன்ன செய்தியே துன்பத்தைத் தரத்தக்கது. ஆனால், இன்னும் சொல்ல வேண்டிய செய்தியோ, துன்பத்தின் எல்லைக்கே நம்மைக் கொண்டு போய்விடும். துயரத்தால் நான் வருந்திக் கொண்டிருந்தபோது ஒரு மனிதர் வந்தார்; நான் இழிந்த நிலையிலிருந்ததைக் கண்டு அவர் என் முகத்தையே வெறுத்தார். ஆனால், இப்படியெல்லாம் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருந்தவன் யார் என்று தெரிந்தவுடன், அவர், தன் வன்மைமிக்க கரங்களால், என் கழுத்தை இறுகத் தழுவிக்கொண்டு, வானம் அதிர அரற்றினார். என் தந்தை மேல் விழுந்து, லீயருக்கும், தனக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் எடுத்துச் சொன்னார். செவியினால், இவ்வளவு பரிதாபகரமான கதையைக் கேட்டிருக்க முடியாது. அவர் அந்த சோகக் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தபோது, அவருடைய துயரம் முறுக்கேறியது; அவரது வாழ்க்கைக் கயிறு இற்றுக் கொண்டே வந்தது. அந்தச் சமயத்தில்தான் இரண்டாவது கொம்பொலியைக் கேட்டேன். மயங்கிக் கிடந்த அவரை அப்படியே விட்டுவிட்டு வந்தேன்.
**ஆல்பனி:** அப்படியானால், அது யார்?

**எட்கார்:** கென்ட்தான், ஐயா, நாடு கடத்தப்பட்ட கென்ட்.

மாறுவேடம் தாங்கி, பகைத்துக்கொண்ட அரசனைப் பின்பற்றிச் சென்று, அடிமையும் செய்யக்கூடாத பணிவிடை யெல்லாம் அரசருக்குச் செய்தார் அவர்.

[ஒரு கனவான் ரத்தம் தோய்ந்த கத்தியுடன் வருகிறார்]

**கனவான்:** உதவி, உதவி, ஒ, உதவி!

**எட்கார்:** என்ன உதவி?

**ஆல்பனி:** சொல்லைய்யா?

**எட்கார்:** ஏன், இந்த ரத்தக் கத்தி?

**Gentleman** : 'Tis hot, it smokes;
It came even from the heart of--O, she's dead!

**ALBANY :** Who dead? speak, man.

**Gentleman :** Your lady, sir, your lady :
and her sister
by her is poisoned; she hath confess'd it.

**EDMUND** : I was contracted to them both : all three
Now marry in an instant.

**EDGAR :** Here comes Kent.

**ALBANY :** Produce their bodies, be they alive or dead :
This judgment of the heavens, that makes us tremble,
Touches us not with pity.

Exit Gentleman

Enter KENT

O, is this he?
The time will not allow the compliment
Which very manners urges.

**KENT :** I am come
To bid my king and master aye good night :
Is he not here?

**ALBANY :** Great thing of us forgot!
Speak, Edmund, where's the king? and where's Cordelia?

**கனவான்:** அது சுடுகிறது, புகைகிறது, அவளுடைய நெஞ்சிலிருந்து உருவப்பட்டது அது; ஐயோ, அவள் இறந்துவிட்டாள்!

**ஆல்பனி:** யார் இறந்தது? சொல்லப்பா.

**கனவான்:** தங்கள் மனைவி, ஐயா, தங்கள் மனைவி! அவளுடைய சகோதரிக்கு நஞ்சிட்டுவிட்டாள்; அதை அவளே ஒப்புக்கொள்ளுகிறாள்.

**எட்ம:** அவர்கள் இருவரையும் மணப்பதாக ஒப்புக் கொண்டிருந்தேன்; இப்போதோ நாங்கள் மூவரும் ஒரு கணத்தில் மணந்துகொண்டோம்.

**எட்கார்:** இதோ வருகிறார் கென்ட்.

**ஆல்பனி:** சடலங்களைக் கொண்டு வாருங்கள், உயிர் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி.

வான நாட்டின் தீர்ப்பு இது. இதை நினைக்கும்போது நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது, ஆனால் இரக்கம் ஏற்படவில்லை.

[கனவான் போகிறார்]

[கென்ட் வருகிறார்]

ஓகோ, இதுதானா அவர்? மரியாதைக்காகச் செய்ய வேண்டிய பாராட்டுக்குக்கூட இது தருணம் இல்லை.

**கென்ட்:** எனது அரசருக்கு வணக்கம் செலுத்த வந்திருக்கிறேன். அவர் இங்கு இல்லையா?

**ஆல்பனி:** பெரிய விஷயத்தை மறந்துவிட்டோமே. எட்மன்ட், அரசர் எங்கே? கார்டீலியா எங்கே?

See'st thou this object, Kent?

The bodies of GONERIL and REGAN are brought in

**KENT :** Alack, why thus?

**EDMUND :** Yet Edmund was beloved :
The one the other poison'd for my sake,
And after slew herself.

**ALBANY** : Even so.
Cover their faces.

**EDMUND** : I pant for life : some good I mean to do,
Despite of mine own nature. Quickly send,
Be brief in it, to the castle; for my writ
Is on the life of Lear and on Cordelia :
Nay, send in time.

**ALBANY :** Run, run, O, run!

**EDGAR :** To who, my lord?
Who hath the office? send
Thy token of reprieve.

**EDMUND :** Well thought on : take my sword,
Give it the captain.

**ALBANY** : Haste thee, for thy life.

Exit EDGAR

[கானெரில், ரீகன் இருவருடைய சடலங்களையும் கொண்டு வருகிறார்கள்]

கென்ட், இந்த உருப்படியைப் பார்த்தீர்களா?

**கென்ட்:** ஐயோ, ஏன் இப்படி?

**எட்ம:** இந்த எட்மன்டையும் காதலித்தார்கள் இருவரும்; ஒருத்தி, எனக்காக, இன்னொருத்திக்கு நஞ்சிட்டாள், பிறகு தன்னையும் மாய்த்துக் கொண்டாள்.

**ஆல்பனி:** அதற்காகவே, அவர்களுடைய முகங்களை மூடுங்கள்.

**எட்ம:** என் உயிர் ஊசலாடுகிறது. குணக்கேடனாக நான் இருந்தாலும், ஒரு நன்மை செய்யவேண்டும் என்று நான் எண்ணுகிறேன். காலதாமதம் செய்யாமல் உடனே கோட்டைக்கு ஆள் அனுப்புங்கள். ஏனெனில், லீயரையும் கார்டீலியாவையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டு விட்டேன். உடனே அனுப்புங்கள்!

**ஆல்பனி:** ஓடு, ஓடு, ஓடு, ஓடு!

**எட்கார்:** யாரிடம், பிரபு? கட்டளையை நிறைவேற்ற யாரை நியமித்தீர்கள்? மன்னித்ததற்கு அடையாளமாக எதையாவது கொடுங்கள்.

**எட்ம:** நல்ல வேளை, அதை மறக்காமல் கேட்டாயே; என் வாளைக் கொண்டுபோய், தளபதியிடம் கொடு.

**ஆல்பனி:** உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு விரைந்தோடு!

[எட்கார் போகிறான்]

**EDMUND :** He hath commission from thy wife and me
To hang Cordelia in the prison, and
To lay the blame upon her own despair,
That she fordid herself.

**ALBANY :** The gods defend her!
Bear him hence awhile.

EDMUND is borne off

Re-enter KING LEAR,
with CORDELIA dead in his arms; EDGAR,
Captain, and others following

**KING LEAR** : Howl, howl, howl, howl!
O, you are men of stones :
Had I your tongues and eyes, I'ld use them so
That heaven's vault should crack.
She's gone for ever!
I know when one is dead, and when one lives;
She's dead as earth.
Lend me a looking-glass;
If that her breath will mist or stain the stone,
Why, then she lives.

**KENT :** Is this the promised end

**EDGAR :** Or image of that horror?

**ALBANY :** Fall, and cease!

**எட்ம:** உங்களுடைய மனைவியும், நானும் சிறைச்சாலையிலேயே கார்டீலியாவைத் தூக்கிலிடும்படி கட்டளையிட்டோம். சோகத்தால், அவள் தன்னைத்தானே மாய்த்துக் கொண்டாள் என்று, குற்றத்தை அவள் மேலேயே சுமத்தும்படியும் சொல்லிவிட்டோம்.

**ஆல்பனி:** தெய்வங்கள் அவளைக் காக்கட்டும்! சற்று இவனைத் தூக்கிச் செல்லுங்கள்.

[எட்மன்டைத் தூக்கிச் செல்லுகிறார்கள்]

[லீயர், கார்டீலியாவின் பிரேதத்தைக் கையில் ஏந்திக்
கொண்டு வருகிறார். எட்காரும் தளபதியும்
மற்றவர்களும் வருகிறார்கள்]

**லீயர் :** ஊளையிடு, ஊளையிடு, ஊளையிடு! ஓ, நீங்கள் கல் மனிதர்கள்! உங்களுடைய நாக்கும் கண்ணும் எனக்கிருந்தால், வான்முகடு கீறும் வரை அலறுவேன்.

ஒரே போக்காகப் போய்விட்டாள்! செத்ததும் சாகாததும் எனக்குத் தெரியாதா! அவள் செத்தே போனாள், மண்ணைப்போல, செத்தே போனாள்.

ஒரு கண்ணாடியைக் கொண்டு வாருங்கள். அவளுடைய மூச்சுப்படிந்து கண்ணாடி வியர்த்ததென்றால், அவளுக்கு உயிர் இருக்கிறது என்பது உறுதி!

**கென்ட்:** இதுதான் நாம் எதிர்பார்த்த ஊழிமுடிவா?

**எட்கார்:** அல்லது அதை யொத்த பயங்கர நிகழ்ச்சியா?

**ஆல்பனி:** விழுந்து மடியவேண்டியதுதான்.

**KING LEAR** : This feather stirs; she lives! if it be so,
It is a chance which does redeem all sorrows
That ever I have felt.

**KENT** : [Kneeling] O my good master!

**KING LEAR :** Prithee, away.

**EDGAR :** 'Tis noble Kent, your friend.

**KING LEAR :** A plague upon you, murderers, traitors all!
I might have saved her; now she's gone for ever!
Cordelia, Cordelia! stay a little. Ha!
What is't thou say'st?

Her voice was ever soft,
Gentle, and low, an excellent thing in woman.

I kill'd the slave that was a-hanging thee.

**Captain** : 'Tis true, my lords, he did.

**KING LEAR :** Did I not, fellow?
I have seen the day, with my good biting falchion
I would have made them skip : I am old now,
And these same crosses spoil me.

Who are you?
Mine eyes are not o' the best :
I'll tell you straight.

**லீயர் :** இந்த இறகு அசைகிறதே! ஆம், அவளுக்கு உயிர் இருக்கிறது! அப்படியானால், இதுவரை நான் பட்ட துயரம் எல்லாம் நீங்கப் போகிறது!

**கென்ட்:** (மண்டியிட்டுக் கொண்டு) உத்தம எஜமானே!

**லீயர் :** தயவு செய்து போய்விடு!

**எட்கார்:** அவர் உங்கள் நண்பரல்லவா. மாண்புமிக்க கென்ட் அவர்.

**லீயர் :** பாழாய்ப்போக! நீங்கள் எல்லோரும் கொலைகாரப் பாவிகள், துரோகிகள்! அவளை நான் காப்பாற்றியிருக்கலாமே. இப்போதோ, அவள் போய் விட்டாள். திரும்பி வரமாட்டாள். கார்டீலியா, கார்டீலியா! கொஞ்ச நேரம் இங்கு தங்கியிரு. ஹா! நீ என்னதான் சொல்லுகிறாய்?

அவளுடைய குரல் எப்போதுமே மென்மையாயிருக்கும்; அன்புக் குரல் அது, தணிந்து பேசும் குரல். குரல் என்றால், பெண்ணுக்கு அப்படியல்லவா இருக்க வேண்டும்

அவளைத் தூக்கில் இட்டுக் கொண்டிருந்த புழுக்கையை நான் கொன்றேன்.

**தளபதி:** பிரபுக்களே, அது உண்மைதான்.

**லீயர் :** பயலே, நான் அப்படிச் செய்தேனல்லவா? அந்தக் காலமானால், என் வாளை வைத்துக்கொண்டு அவர்களை ஒரு ஆட்டு ஆட்டி வைத்திருப்பேன். இப்போதோ, வயதாகிவிட்டது. துன்பங்கள் என்னைக் கெடுக்கின்றன

நீ யார்? என் கண்கள் மிகத் தெளிவானவை என்று சொல்ல முடியாது; ஆனால், இதோ சொல்லிவிடுகிறேன்.

**KENT** : If fortune brag of two she loved and hated,
One of them we behold.

**KING LEAR :** This is a dull sight.
Are you not Kent?

**KENT :** The same,
Your servant Kent : Where is your servant Caius?

**KING LEAR :** He's a good fellow, I can tell you that;
He'll strike, and quickly too : he's dead and rotten.

**KENT :** No, my good lord; I am the very man,--

**KING LEAR :** I'll see that straight.

**KENT :** That, from your first of difference and decay,
Have follow'd your sad steps.

**KING LEAR** : You are welcome hither.

**KENT :** Nor no man else : all's cheerless, dark, and deadly.
Your eldest daughters have fordone them selves,
And desperately are dead.

**KING LEAR :** Ay, so I think.

**ALBANY** : He knows not what he says : and vain it is
That we present us to him.

**EDGAR :** Very bootless.
Enter a Captain

**கென்ட்:** விதியன் அன்புக்கும் வெறுப்புக்கும் ஆளான இருவரைத் தேர்ந்தெடுப்பதாயிருந்தால், அவ்விருவருள் ஒருவரை இதோ பார்க்கிறோம்.

**லீயர் :** என் பார்வை மங்கிப் போயிருக்கிறது. நீ கென்ட் அல்லவா?

**கென்ட்:** அதே ஆசாமிதான்; தங்கள் சேவகன், கென்ட்.உங்கள் வேலைக்காரன் கேயுஸ் எங்கே?

**லீயர் :** அவன் நல்ல பயல்; நல்ல போடு போடுவான், தயங்காமல் போடுவான். அவன் செத்து அழுகிப் போனான்.

**கென்ட்:** இல்லை, பிரபு, நான் தான் அவன்.

**லீயர் :** அப்படியா? நன்றாகப் பார்ப்போம்.

**கென்ட்:** கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நிலைகெட்ட காலம் முதற்கொண்டே, தங்களைப் பின் தொடர்ந்தே வந்திருக்கிறேன்.

**லீயர் :** உன்னை வரவேற்கிறேன்.

**கென்ட்:** வரவேற்பதற்கு வேறு யார் இருக்கிறார்கள்! எல்லாம் இன்பமற்று, இருள் சூழ்ந்து, பயங்கரமாயிருக்கிறது. உங்கள் மூத்த புதல்வியர் எல்லை மீறிப் போய், தங்களையே அழித்துக் கொண்டார்கள்.

**லீயர் :** ஆம், அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது.

**ஆல்பனி:** அவர் சொல்லுவது அவருக்கே புரியவில்லை. நம்மை அவரிடம் அறிமுகப்படுத்திப் பயனில்லை.

**எட்கார்:** பயனேயில்லை.
[தளபதி வருகிறான்]

**Captain :** Edmund is dead, my lord.

**ALBANY :** That's but a trifle here.
You lords and noble friends, know our intent.
What comfort to this great decay may come
Shall be applied : for us we will resign,
During the life of this old majesty,
To him our absolute power :

To EDGAR and KENT

you, to your rights :
With boot, and such addition as your honours
Have more than merited. All friends shall taste
The wages of their virtue, and all foes
The cup of their deservings. O, see, see!

**KING LEAR :** And my poor fool is hang'd!
No, no, no life!
Why should a dog, a horse, a rat, have life,
And thou no breath at all?

Thou'lt come no more,
Never, never, never, never, never!
Pray you, undo this button : thank you, sir.
Do you see this?
Look on her, look, her lips,
Look there, look there!
Dies

**EDGAR :** He faints! My lord, my lord!







**தளபதி:** பிரபு, எட்மன்ட் இறந்து போனார்.

**ஆல்பனி:** இங்கிருக்கும் நிலையைப் பார்க்கும்போது, அது ஒரு அற்பச் செய்தி

பிரபுக்களே; அன்பர்களே, நம்முடைய கருத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். அல்லலுற்ற இந்த நிலையில், பெறக்கூடிய அமைதியைப் பெற்றுக் கொள்வோம். நம்மைப் பொறுத்தமட்டில், நம்முடைய பதவியிலிருந்து நாம் விலகிக்கொள்ளப் போகிறோம். முதுபெரும் அரசருக்கே நம்முடைய அதிகாரம் முழுவதையும் விட்டுக் கொடுக்கப் போகிறோம். அவர் உயிரோடிருக்கும்வரையில், அவரே ஆட்சி செலுத்த வேண்டும். (எட்கார், கென்ட் இருவரையும் பார்த்து) உங்களுக்கும், உங்களுக்குரிய உரிமைகள்; அதோடு மதிக்க முடியாத உங்கள் சேவையைப் பாராட்டி உங்களுக்குப் பதவிகள் அளிக்கப்படும். அறச்செயல்களைச் செய்த எல்லா அன்பர்களுக்கும் தகுந்த பரிசுகள் வழங்கப்படும். பகைவர்களுக்கு, அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படும்ஓ, பாருங்கள், பாருங்கள்!

**லீயர் :** என் எளிய பேதை தூக்கிலிடப்பட்டாள்! இல்லை, இல்லை, உயிர் இல்லவே இல்லை. ஒரு நாய்க்கு உயிர் இருக்கிறது, ஒரு குதிரைக்கு உயிர் இருக்கிறது, ஒரு எலிக்கு உயிர் இருக்கிறது. ஆனால், நீ மட்டும் ஏன் மூச்சற்று இருக்கிறாய்? ஒருக்காலும் நீ திரும்பி வரமாட்டாய், ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும்!

தயவு செய்து இந்தப் பொத்தானைக் கழற்றி விடுங்கள். நன்றி, ஐயா.

இதைப் பார்த்தீர்களா? பாருங்கள், அவளை, பாருங்கள், அவள் உதடுகளை, அதோ பாருங்கள்! அதோ பாருங்கள்!
[சாகிறார்]

**எட்கார்:** அவர் மயக்கம்போட்டு விழுகிறார் பிரபு, பிரபு!

**KENT :** Break, heart; I prithee, break!

**EDGAR :** Look up, my lord.

**KENT :** Vex not his ghost :
O, let him pass! he hates him much
That would upon the rack of this tough world
Stretch him out longer.

**EDGAR :** He is gone, indeed.

**KENT :** The wonder is, he hath endured so long :
He but usurp'd his life.

**ALBANY :** Bear them from hence. Our present business
Is general woe.

To KENT and EDGAR

Friends of my soul, you twain
Rule in this realm, and the gored state sustain.

**KENT :** I have a journey, sir, shortly to go;
My master calls me, I must not say no.

**ALBANY :** The weight of this sad time we must obey;
Speak what we feel, not what we ought to say.
The oldest hath borne most : we that are young
Shall never see so much, nor live so long.

Exeunt, with a dead march

**கென்ட்:** இதயமே, வெடித்து விடு; உன்னைக் கெஞ்சுகிறேன், வெடித்துவிடு.

**எட்கார்:** விழித்துப் பாருங்கள், பிரபு.

**கென்ட்:** அவருடைய ஆவிக்குத் தொல்லை கொடுக்காதீர்கள், ஐயோ, அவரைப் போக விடுங்கள்! உலகம் என்ற இந்தத் துன்பக் கட்டிலிலே இன்னுமா அவரை இருத்தி வைக்க வேண்டும்? அப்படிச் செய்கிறவர்களை அவர் வெறுப்பார்.

**எட்கார்:** அவர் உண்மையிலேயே போய் விட்டார்.

**கென்ட்:** இவ்வளவு காலம் இருந்ததே வியப்பாயிருக்கிறது. உயிரை வலுக்கட்டாயமாகப் பிடித்து வைத்திருந்தார் அவர்.

**ஆல்பனி:** அவர்களை இங்கிருந்து தூக்கிச் செல்லுங்கள். இனிச் செய்யவேண்டியது, ஒருமித்து எல்லோரும் துக்கம் கொண்டாட வேண்டியதுதான். (கென்ட்டையும் எட்காரையும் பார்த்து) உயிர்த் தோழர்களே, இந்த அரசை ஆட்சி செய்து, சீர்கெட்டுப் போன இந்த நாட்டைக் காப்பாற்றுங்கள்.

**கென்ட்:** ஐயா, விரைவில் நானும் பயணம் புறப்படவேண்டும்; என் தலைவர் என்னை அழைக்கிறார், மாட்டேன் என்று சொல்ல மாட்டேன்.

**ஆல்பனி:** துயரச் சுமை சுமக்கும் வேளை இது. வேளைக்குகந்தபடி நாம் நடந்துகொள்வோம். ஒப்பனைப் பேச்சை ஒதுக்கிவிட்டு, உணர்ச்சியில் தோன்றுவதையே பேச வேண்டும். வயதினால் மிகுந்தவர், துயரத்தையும் மிகுந்து அனுபவித்துவிட்டார். இளைஞர்களாகிய நாம், அவ்வளவு துயரத்துக்கு ஆளாகப் போவதுமில்லை, அவ்வளவு காலம் வாழப் போவதுமில்லை.

[போகிறார்கள் துயர நடைநடந்து]